# தமிழரசு

திங்கள் இருமுறை நவ 16-1971 35 காசு





பசுமைப் புரட்சி பரவுகிறது!
இலவசக் கல்வி
திட்டங்கள்
நாள்தோறும் நாட்டுக்கும், வீட்டுக்கும் புதிய பிரச்சினைகளை உருவாக்குவது, மக்கள் தொகைப் பெருக்கம்தானே!
அதைக் கட்டுப்படுத்த வேண்டாமா?
நாட்டுக்கும் நல்லது வீட்டுக்கும் நல்லது
குடும்ப நலத் திட்டம்
குடும்ப நலத் துறை
தமிழ்நாடு அரசு





# தமிழரசு

மலர் 2 16-11-1971 இதழ் 10







## இந்த இதழில்

இலட்சியப் பணி புரியும்
இளைஞர் அணி
நேருவின் வாழ்விலே....
கண்ணாடிப் பொருள்கள் செய்ய
முன்னோடிப் பயிற்சி நிலையம்
தமிழ்நாட்டில் வெண்மைப் புரட்சி
வெண்பாப் போட்டி
ஏன் இந்தக் காதல்? (தொடர்கதை)
முந்திரி நாள்-சிறப்புப் பகுதி

முதல்வரின்
சிலை வடிவில்
செந்தமிழ்க் காப்பியம்

அரசுத்துறை ஒப்பந்தப் புள்ளி, வேலை வாய்ப்பு விளம்பரங்கள்
60 ஆம் பக்கத்திலிருந்து.....



# சிலை வடிவில் செந்தமிழ்க் காப்பியம்

உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற வேளையில் தமிழ்ச் சான்றோருக்கும்—தமிழகத்து வீரப் பெருமக்களுக்கும் அண்ணன் தலைமையிலே சிலை வைத்தோம்.

அன்றைக்கே இளங்கோவடிகளின் சிலை வைக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் அதற்கு ஒரு தூண்டுகோல்தேவை என்பதைப்போல்......

சென்னையில் ஆண்டு தோறும் நடைபெறும் இளங்கோவடிகள் விழா ஒன்றில் சிலம்புச் செல்வரும் மற்றவர்களும் இளங்கோவடிகளுக்குச் சிலை அமைக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தினர்கள். நானும் ஒப்புக்கொண்டேன்.

இந்த ஆண்டு நடைபெற்ற விழாவில் இன்னும் சிலை வைக்கப் படவில்லையே என்று அவர்கள் குறிப்பிட்டபோது, நான்—இளங்கோவடிகளின் சிலை தயாராகிவிட்டது; விரைவில் சிலை அமைக்கப் படும் என்று உறுதியளித்தேன்.

அதன்படி இந்த விழா யார் தலைமை ஏற்று நடத்த வேண்டுமோ அவர் தலைமை ஏற்க — யார் சிறப்புரை ஆற்ற வேண்டுமோ அவர் சிறப்புரையாற்றிட, பல்லாயிரக்கணக்காகக் கூடியுள்ள மக்களின் வாழ்த்துக்களோடு நடைபெறுகிறது.

இங்கே பேசிய சிலம்புச் செல்வர் அவர்கள் தமிழ் உணர்ச்சியுடன் தமிழுக்குப் பெருமைசேர்க்கும் விழாவில் பங்கேற்கவேண்டும் என்று குறிப்பிட்டார்.

நான் மேடையிலிருந்தே காண்கிறேன்—கட்சிச் சார்பில்லாமல் பலர் இங்கே வந்து கலந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களது பரந்த உள்ளத்தைப் பாராட்டுகிறேன். அவர்களது பெருந்தன்மையை மெச்சுகிறேன். தனிப்பட்ட முறையில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக,முன்னாள் அமைச்சர் மரியாதைக்குரிய திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் இந்த விழாவில் கலந்து கொண்டிருக்கிறார். கட்சிப் பற்றற்ற முறையில் பெருந்தன்மையோடு இந்த விழாவில் பங்கேற்றதற்காகத் தமிழர்கள் சார்பில் அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சிலப்பதிகாரத்தில் சிலம்புச் செல்வர் அவர்கள் எவ்வளவு ஆர்வமும் எழுச்சியும் கொண்டவர் என்பது நாம் அறிந்ததே !

அதே போன்று தி.மு. கழகத்திலுள்ள நாவலரும் பிற தமிழ் அறிஞர்களும், அவர்களை ஆளாக்கிய அறிஞர் அண்ணா அவர்களும் சிலப்பதிகாரத்தில் அதிக உடன்பாடு கொண்டவர்கள்.

புலவர்கள் மத்தியில் மட்டுமே இருந்த சிலப்பதிகாரத்தை நாடக உருவில்— திரைப்பட உருவில், மக்கள் மத்தியில் கொண்டு வர வேண்டும் எனப் பணியாற்றி அதில் வெற்றியும் பெற்றோம்; பாராட்டுக்களையும் பெற்றிருக்கிறோம்.

இங்கே சீரோடும் சிறப்போடும் இளங்கோவடிகள் சிலை நாட்டப்படும் இதே நேரத்தில் இளங்கோ யாத்த சிலப்பதிகாரம் காட்டும் காவிரிப்பூம் பட்டினத்தில்—கடலில் அமிழ்ந்து போன காவிரிப்பூம்பட்டினத்தில்-பல புதைபொருட்களும் அவற்றில் இறைந்து கிடக்கும் ரோமானிய நாணயங்களும் இருக்கும் காவிரிப்பூம் பட்டினத்தில் — சிலப்பதிகாரக் கலைக்கூடம் ஒன்று அமைக்கும் பணி உருவாக்கப்பட்டு— அந்தப் பணி, வேகமாக நடைபெற்று வருகிறது.

சிலப்பதிகாரக் காவியம்— சிலைகள் உருவத்திலேயே அமைக்கப்படும் கலைக்கூடம் அது.

பூம்புகாரில் தொடங்கும் கதையில், கண்ணகி மணக்கோலம் பூணுவது முதல்....மதுரையில் வீரத்தோடுவழக்குரைத்த காதை தொட்டு—சேரன் செங்குட்டுவன் போர்க்கோலம் பூண்டு வடபுலம் சென்று கனகவிசயர் தலை மீது கல்லேற்றிக் கொண்டு வந்து —வஞ்சி மூதூரில் கண்ணகி சிலை அமைத்து வழிபட்டது வரை, சிலைகளாலேயே சிலப்பதிகாரக் காவியம் சொல்லும் வகையில் அமைக்கப்படும் அந்தக் கலைக்கூடப் பணி வெகு விரைவில் முடியவிருக்கிறது.

அதன் பின்னர் அந்தக்கலைக் கூடத் திறப்பு விழா விரைவில் நடைபெற்று...... வெளிநாட்டினர் சிலம்பு படிக்காமலேயே சிலப்பதிகாரக் கதையை அறிந்து கொள்ளும் அற்புத முயற்சி அந்தக் கலைக் கூடத்தால் நிறைவேறவிருக்கிறது. இப்படிப்பட்ட கலைக்கூடம் இந்தியாவிலேயே இது தான் முதலாவதாக இருக்கும்.



# பூம்புகாரில் சிலப்பதிகாரக் கலைக்கூடம்

உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியும் சொல்ல விரும்புகிறேன். கரந்தைத் தமிழ்க் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருக்கும் கோவிந்தராசன் கல்வெட்டுகளை ஆராய்ந்து வருபவர்-குறிப்பாக இளங்கோவடிகள் புகழ்ந்து வாழ்த்திய கண்ணகி சிலை—சேரன் செங்குட்டுவன் வடித்துத் தந்த கண்ணகி சிலை எது என்று நாடு முழுவதும் சுற்றிச் சுற்றி ஆராய்ந்தார்.

கடைசியில் மதுரை மாவட்டத்து எல்லையில்உள்ள சுருளி மலை என்றோர் மலைக்கு ஒரு கல் தொலைவில்—உயர்ந்த பாறை ஒன்றில் மங்கலத்தேவி கோவிலில் உள்ள சிலையைக் கண்டார்.

அந்தச் சிலை காளியைப் போல்—துர்க்கையைப் போல்— மாரியம்மையைப் போல்—இலக்குமியைப்போல் — சரசுவதியைப் போல் நான்கு கரங்கள் உள்ள சிலையாக இல்லை. இரண்டு கையுள்ள பெண் சிலையாக அது இருக்கக் கண்டார்.

அந்தச் சிலை கூட—இங்கே உள்ள இளங்கோ வடிகள் சிலையைப் போல் பெரிதாக இல்லாமல் இருக்கிறது. இமயத்திலிருந்து கனக விசயர் தூக்கி வந்த கல்— எவ்வளவுஅளவினதாக— சிறியதாக இருந்திருக்குமோ— அந்த அளவில்—சிறிய உருவில் அந்தச் சிலை அமைக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல ; அந்தச்சிலை செய்யப்பட்ட கல் அந்தப் பகுதியிலுள்ள மலைகள்—பாறைகள் இவற்றைச் சாராததாகவும், இமயத்துக் கல்லைப் போன்று இருப்பதாகவும் கோவிந்தராசன் என்ற அந்தப் பேராசிரியர் அறிவித்திருந்தார். இதைக் கேள்விப்பட்டு நானும் நாவலரும் அவரை அழைத்து உரையாடி விவரங்கள் அறிந்து—அந்தக் கோவில் இருக்கும் பகுதி கேரள நாட்டைச் சார்ந்தது என்ற காரணத்தால் இது பற்றிக் கேரள முதல்வர் அச்சுத மேனனுக்குக் கடிதம் எழுதினோம்.

''இந்தச் சிலை பற்றிய ஆராய்ச்சியை உங்கள் பகுதியில் தொடங்க வேண்டும்; அதற்கான அனுமதி எங்கள் ஆராய்ச்சிப் பகுதியினருக்கு வேண்டும்''— எனக் கடிதம் எழுதியிருந்தோம்.

கேரள முதல்வர் அச்சுத மேனன் அதற்குப் பதில் தந்திருந்தார்.

''ஏற்கனவே இதுபற்றி நாங்கள் ஆராய்ந்து வருகிறோம். அதன் தொடர்பாக உங்களது ஆராய்ச்சியை நடத்தலாம்''—என்று அவர் பதில் அனுப்பியிருக்கிறார். விரைவில் நல்ல முடிவு எடுத்து அவர் அறிவிப்பார் என்று நம்புகிறேன்.

இளங்கோவடிகள் வாழ்த்திய அச் சிலையை—கனக விசயர் சுமந்து வந்த அச்சிலையை — தமிழர் தம் வீரம் பேசும் அதே சிலையை—நாம் காணக் கூடிய நாள் வெகுதூரத்தில் இல்லை.

சென்னையில் இளங்கோவடிகளுக்குச் சிலை அமைப்பது பற்றி எழுந்த 'புகார்' பற்றி இங்கே சிலம்புச் செல்வர் குறிப்பிட்டார்.

இளங்கோவடிகளே தமது காப்பியத்தைப் 'புகாரில்' தான் துவக்குகிறார்.

அண்ணா கல்லறைக்குப் பக்கத்தில் கம்பனும், இளங்கோவடிகளும் இருப்பது 'துவார பாலகர்கள்' போல் இருப்பதாகச் சிலர் குறை கூறுகிறார்கள்.

அண்ணாவே இருந்தால் கூட '' என்னைத் தாழ்த்தினாலும் கம்பனையும், இளங்கோவையும் உயர்த்திப் பேசிவிட்டார்களே ! அந்த அளவுக்குப் பாராட்டிவிட்டார்களே! அந்த அளவு தமிழுணர்ச்சி பெற்று விட்டார்களே '' என்றுதான் கூறுவார்.

எங்களைத் தாக்குபவர்கள் ஒரு புதிய முறையைக் கையாளுகிறார்கள்.

எங்களை இறக்கிப் பேசிட — தூக்கிப் பேசிட அண்ணாவை உயர்வாகப் புகழ்ந்து பேசத்தொடங்கியிருக்கிறார்கள்.

ஆனால், இதே ராஜ தந்திரத்தோடு 10 ஆண்டுக் காலம் இருந்தாலாவது பலன் கிடைக்கும். ஆனால் அடுத்த மாதமே சுயரூபத்தைக் காட்டி விடுகிறார்கள் ! அண்ணாவுக்குத் துவார பாலகர்களாகம்பனும்—இளங்கோவும்— என்று கேட்டு விடுகிறார்கள். பாவம் அவர்களது ராஜ தந்திரம் பலவீனமானது !

அண்ணா அவர்கள் இருந்து இந்த விழாவைக் காணவில்லையே என்று வருத்தப்பட்டார் சிலம்புச் செல்வர். நானும் இந்த எழில் மிகுந்த விழாவைப் பார்க்கிறேன். அதில் எழுச்சியோடு வந்து கலந்து கொண்ட உங்களையெல்லாம் பார்க்கிறேன். இந்த விழாவை வாழ்த்த வந்த பைந்தமிழ் மனம் கொண்டோரையும் பார்க்கிறேன் !

ஆனால் எனது நெஞ்சம் — பேதை நெஞ்சம் ஒரு கனவு காண்கிறது ; ஒரே ஒரு கண நேரக் கனவு காண்கிறது !

அந்த வெண் மணற் பரப்பில் நீள் துயில் கொண்ட அண்ணன் ஒரு நிமிடம் எழுந்து வந்து....

'' தம்பிகளே ! நான் நினைத்ததை யெல்லாம் நீங்கள் செய்கிறீர்கள் ''

—என ஒரு வார்த்தை சொன்னால் போதும் !

ஆனால், அண்ணன் எழுந்து வராத துயிலில் இருக்கிறார்....! ஆனால் அண்ணன் வடிவில் இங்கே பல்லாயிரக் கணக்கில் தமிழ் நெஞ்சங்கள்கூடியிருந்து வாழ்த்துகின்றன. அந்த வாழ்த்துக்களில் '' அண்ணன் இருக்கிறார்— அண்ணன் இருக்கிறார் '' என மகிழ்ந்து இந்த விழாவை நடத்துகிறோம் !

# நெடுந்தூரம் பிரிந்தாலும்



அன்புள்ள மக்களே! அமெரிக்க
அரசாங்கத்தின் அழைப்பினையேற்று
சென்று சில நாட்கள் அந்த நாட்டில்
சுற்றுப்பயணம் நடத்திட உங்கள்
இதய வாழ்த்துக்களுடன் புறப்படுகி
றேன். வளமிக்க அந்த நாட்டின்
கவர்ச்சிகரமான அம்சங்கள்
ஒவ்வொன்றும், நமது தாயகத்தை
யும் அதுபோல் செழிப்புக்கொழிக்கும்
பூமியாக ஆக்கிட வேண்டுமே
என்ற ஆர்வத்தைத் தான் என்
னிடம் ஏற்படுத்துமென்பதை
நீங்கள் அறிவீர்கள்.

அமெரிக்க நாட்டின் பல்வேறுபகுதி
களில் தொழில்வளம், வேளாண்மைச்
சிறப்பு, அறிவுத்திறன் வளர்க்கும்
கல்விக் கூடங்கள் ஆகியவற்றைக்
கண்டறிந்து கேட்டுத் தெளிவும்
பெற்றிடவும், அந்த நாட்டின் அரசியல்
தலைவர்களைச் சந்தித்து உரையாடிட
வும், இந்திய நாட்டின் இனிய நண்

# நம் இதயங்களிடையே

பர்களை விளக்கிடவும், உலகத்
தின்பால் இந்தியா கொண்டுள்ள
மனிதாபிமான மிக்க நட்புணர்வுகளைத்
தெளிவாக்கிடவும், தமிழகத்தின் சார்பில்
தமிழ் மக்களின் அன்பு உணர்வினையும்
அடிப்படையில் அளித்திடவும் இந்தப்
பயணத்தைப் பெரிதும் பயன்படுத்
திக் கொள்வேன். பயணத்தி
டையே இங்கிலாந்து நாட்டில் அண்
மையில் நடந்த தேர்தலில் [illegible] அமோ
கமாக வெற்றிபெற்ற தொழிற்கட்சி அந்த
நாட்டின் அமைச்சரவைத் தலைவரிடம்
சிலவற்றை பேச எண்ணியுள்ளேன்.
இவற்றுக்கும் உங்கள் வாழ்த்துக்கள்
பெருந்துணை புரியும் என நம்புகி
றேன்.

நான் தமிழகத்தில் இல்லாத இந்த
சில வாரங்களில் கட்சிக் காரர்கள்
முறையில் தமிழகத்தின் அமைதியைப்
பண்பாட்டைக் காத்து, அமைதி



நாடிட விளைவதும் உதவிட
வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். என்னை ஆளாக்கிய
[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] விளைவதும்
[illegible] பேரறிஞர், நாடு [illegible]
[illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible]
புகழ் பெறவேண்டுகிறேன்.
இவைபோல பல கிராமங்கள்
என்றும், இது நாட்டுக்கு நாடு
உண்மை ஆகவே ஆகிட, நம்
[illegible] [illegible] இவைபோல
உண்மை [illegible]!
உங்களை என்னன்பால்
[illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible]
[illegible] வேண்டுகிறேன்.



அன்பு
[illegible]
8/11/71


தமிழரசு
இதழில்
முதல்வர், டாக்டர் கலைஞர் எழுதும்
அறம்
குறளோவியம்
விரைவில் தொடர்ந்து வெளிவரும்.




# பார்த்தோம் படித்தோம்

### இன்னும் தருக!

நமது நிலை, நமது குரல், நமது விளக்கம் போன்ற கருத்துமிக்க இலவச இணைப்புகளை எங்களுக்குத் தந்த 'தமிழரசு' நமது பரிசுத் திட்டம், நமது சாதனைகள், நமது வேளாண்மை என்ற தலைப்புகளில் தமிழக அரசின் அருந்தொண்டுகளின் விளக்கங்களையும் தந்தால் நாங்கள் பெரிதும் மகிழ்ச்சியுறுவோம்.

—தி. ரா. சாம்பமூர்த்தி.
அந்தமான்.

### ஏங்கவிடாதீர்!

ஐ.நா. மன்றம் பற்றி அறிஞர் அண்ணா அவர்கள் பல வருடங்களுக்கு முன்பு வானொலியில் பேசிய சொற்பொழிவின் ஒரு பகுதியை வெளியிட்டிருந்தீர்கள். முழுப்பேச்சையும் வெளியிட்டிருக்கக்கூடாதா என்ற ஏக்கம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இனிமேலாவது அண்ணா அவர்களின் கட்டுரைகளையோ பேச்சுக்களையோ வெளியிடுங்கால், குறைக்காமல் அப்படியே வெளியிடுவீர்களா?

—இரா. சு. வேலன்
மானாமதுரை.

### முதல்வரின் பரந்த உள்ளம்.

''இருப்பிடம் மாற்றும் பணியல்ல—இனிய வாழ்வுக்கு அடித்தளம்'' என்ற முதல்வரின் கட்டுரையில் அவரது பரந்த மனப்பான்மை தெளிவாகத் தெரிகிறது.

—எம். கண்ணன், கோவை.

### பயனுள்ள கட்டுரை!

'பரனூரில் ஒரு பயனுள்ள இல்லம்' படித்தோம். தொழுநோயாளர்களுக்கும் சங்கம் இருக்கிறது. அவர்களுக்கும் தலைவர் இருக்கிறார் என்ற புதுமையைத் தெரிந்துகொண்டோம். புறக்கணிக்கப்பட்டவர்களுக்குத் தமிழக அரசு எவ்வளவு நன்மைகளைச் செய்து வருகிறது என்பதைக் கட்டுரை விளக்குகிறது.

—கே. செந்தாமரை.
வாலாஜா.

### ஒருமைப்பாட்டின் உயர்வு!

கோவை இளஞ்சேரனின் ''சிலம்பு விளம்பும் தமிழக ஒருமைப்பாடு'' சுவையாக இருந்தது. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று மிகப் பழங்காலத்திலேயே உலக ஒருமைப்பாட்டுக்குப் பாடுபட்ட பூங்குன்றனாரின் பொன்னான தமிழகத்தில் பொன்மணிச் சிலம்பும் ஒருமைப்பாட்டை வலியுறுத்தியதில் வியப்பென்ன இருக்கிறது?

—புலவர் இலக்குவன்,
நெல்லை.

### திரைப்படமா?

'ஏன் இந்தக் காதலில்' திடீர்த் திருப்பம். தேன்மொழியும் மாதவனும் (சென்ற இதழில்) மைசூர் போகிறார்களே, திரைப்படம் போல் டூயட் பாடப் போகிறார்களோ என்று நினைத்தேன். இப்போது மல்லப்பனுடன் மல்யுத்தம் செய்யத் தொடங்கியதும்—என் நினைப்பு உறுதிப்பட்டு விட்டது. திரைப்படமாக்க வேண்டிய கதை தான் 'ஏன் இந்தக் காதல்?'

—ராமமூர்த்தி,
கெங்கை.

### பாடம் புகட்டும் பேருரை!

கல்வியமைச்சர் நாவலர் அவர்களின் பட்டமளிப்பு விழாப் பேருரையைப் படித்தேன். பேருரை வாயிலாக மாணவ சமுதாயத்துக்குப் புதுப்பாடமே போதித்திருக்கிறார் — அவரது உரை பாராட்டுக்குரியது.

—குமாரசாமி,
துடியலூர்.


## பாமணி உரம்

குருணை வடிவில் இருப்பதால்
இதனை நிலத்தில் இடுதல் வெகு எளிது
காற்றில் பறக்காது !
கட்டியாகப் போய்விடாது !
கலப்படமும் செய்ய முடியாது !
முச்சத்தும் அமைந்தது !
எப்பயிர்க்கும் ஏற்றது !

பாமணி உரத்தின் சேவை !
உங்கள் பயிர்களுக்குத் தேவை.

**கூட்டுறவுச் சங்கங்களில் கிடைக்கும் !**

**நாட்டின் உயர்வுக்கு வழிவகுக்கும் !**

# இலட்சியப் பணி புரியும் இளைஞர் அணி



ஏறக்குறையப் பத்து வருடங்களுக்கு முன்பு ... ... ... அதாவது 1961-ஆம் ஆண்டு ... ... ...

காந்தியடிகளின் சீடரும் பூதான இயக்கத்தின் தலைவருமான வினோபா பாவே மத்தியப் பிரதேசத்தில் தனது பாதயாத்திரைப் பணியினைத் தொடர்ந்தார். கிராமங்களுக்கெல்லாம் சென்றார்.

அங்கே ஒரு குக்கிராமம். காந்தியடிகளின் சீடர், பூமிதானம் கேட்டு வருகிறார் என்று அந்தக் கிராமத்தில் அறிவிக்கப்பட்டிருந்ததனால், கிராமத்து விவசாய மக்கள் அவரை ஆவலுடன் வரவேற்றார்கள்.

அந்த விவசாயிகளில் ஒருவர், வினோபா பாவேயின் முன் வந்து நின்றார்.

"காந்தி ஊரிலிருந்து நீங்கள் வருகிறீர்களாமே! நாங்களெல்லாம் காந்தியைப் பார்த்து நீண்ட நாட்களாகிவிட்டன; காந்தி இப்போ சௌக்கியமாக இருக்கிறாருங்களா?'' என்று கேட்டார்.

மறுகணம் வினோபா பாவே திகைத்து விட்டார்.

விவசாயி விடவில்லை. மீண்டும் பேச்சைத் தொடர்ந்தார்.

"என்னங்க, பேசாம இருக்கீங்க? இப்பல்லாம் இந்த ஊருப் பக்கம் காந்தி வர்றதைக் காணோமே..! அதனால்தான் கேக்குறேன். அவரு சௌக்கியமாக இருக்கிறாரா? சொல்லுங்க''—கிராமத்து விவசாயி மிக உருக்கமுடன் கேட்டார்.

பாவே ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டு, காந்தி சௌக்கியமாக இருக்கிறார்'' என்று பதில் சொல்லிவிட்டுத் தலது சொற்பொழிவைத் தொடர்ந்தார்.

இந்த நிகழ்ச்சியிலிருந்து நாம் ஒன்றைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. கிராமத்து மக்கள் மிகவும் பிற்பட்ட நிலையிலேதான் வாழ்ந்து வருகிறார்கள் என்ற செய்திதான் அது. காந்தியடிகள் இறந்து பல வருடங்கள் கழிந்த பிறகும் கூட, அவர் சௌக்கியமாக இருக்கிறாரா என்று ஒருவர் கேட்டால் அதன் பொருள் என்ன? காந்தியடிகள் கொலை செய்யப்பட்டு இறந்துவிட்டார் என்ற செய்தியைக் கூட அவர் அறிந்து கொள்ளவில்லை—அந்த அளவுக்கு அவர் அறியாமையின் வயப்பட்டிருக்கிறார் என்பதுதான்!

...களின் இத்தகைய அறியாமையை நீக்க வேண்டும் என்றுதான் அண்ணல் அரும்பாடுபட்டார். அண்ணலின் கொள்கையைப் பொன்னே போல் போற்றிய அண்ணாவின் வழியில்தான் இன்றைய தமிழக அரசு நடைபோடுகிறது என்பதைத்தான் தமிழகத்தின் முதல்வர் கலைஞர் அவர்கள் தமது நிதிநிலை அறிக்கையில் அண்மையில் குறிப்பிட்டுள்ளார்.

"அறியாமைதான் துயரத்தின் தாய்'' என்பது மேல்நாட்டுத் தத்துவவாதி ஒருவரின் வாசகம். அறியாமைத் துயரத்தை அறவே நீக்கும் அரும் பணியில் நாட்டம் கொண்ட நமது முதல்வர், கண்டுபிடித்த அருமையான திட்டம்தான் இளைஞரணி அமைப்பு.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பார்களே, அதைப் போல ஒரே நேரத்தில் இரண்டு விதமான நன்மைகளை இந்தத் திட்டம் உருவாக்கியிருக்கிறது.

கிராமமக்களிடம் அறிவொளிப் பிரச்சாரமும் நடைபெறுகிறது: படித்துப் பட்டம் பெற்று வேலையின்றித் திரியும் பட்டதாரிகளின் சிலருக்கு ஓரளவு வேலையும் கிடைக்கிறது. அவர்களின் வாழ்க்கைக்குத் தேவைப்படும் பொருளாதாரத்தில் மாதம் ரூ. 175 ஊதியமாகவும் கிடைக்கிறது. இந்த அணியில் தொண்டாற்றுவோருக்கு அரசுப் பணியில் சேரச் சிறப்புச் சலுகைகள் காட்டப்படுகின்றன.

இவ்வணியை உருவாக்கித் தமிழ் மக்களின் இதயத்தில் எல்லாம் நீங்காத இடம் பெற்றிருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்ப...

தமிழக அரசு இளைஞர் அணி
என் கடன் பணிசெய்து கிடப்பதே



15-ஆம் நாளில் இந்த இளைஞர் அணியைத் திருச்சியில் தமிழக முதல்வர் கலைஞர் துவக்கி வைத்தார்கள்.

இளைஞர் அணியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறவர்களுக்கு சத்திய விசய நகரம் (வட ஆர்க்காடு மாவட்டம்), கிருஷ்ணகிரி (தர்மபுரி மாவட்டம்), பவானிசாகர் (கோவை மாவட்டம்), பட்டுக்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்), தே. கல்லுப்பட்டி (மதுரை மாவட்டம்) முதலிய ஐந்து இடங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

சமூகப் பொருளாதாரம், கிராமச் சூழ்நிலை இவைதான் இந்தப் பயிற்சியின் முதற்பாகம். பயிற்சிக் காலம் 28 நாட்கள் தான். முதல் பத்து நாட்கள் வகுப்பறைப் பயிற்சி நடைபெறுகிறது. கிராமவளர்ச்சியைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள் இங்கே கற்றுத்தரப்படுகின்றன. பதினொன்றும் நாளிலிருந்து இருபதாம் நாள் முடியப் பத்து நாட்கள் கிராமத்தில் இடம்பெறுதல் ( Village placement ) என்ற பயிற்சிக் கல்வி நடைபெறுகிறது. கிராமத்தில் உள்ள மக்களுக்கு—பழமையில் ஊறிப்போயிருக்கும் மக்களுக்குப் — புத்துலகத்தைப் பற்றித் தெரிவித்துப்—புதுவித வேளாண்மை முறைகளை எல்லாம் கையாளச் சொல்லிச்—சமூக மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் பயிற்சி இது. அதன் பிறகு இருபத்தொன்றும் நாளிலிருந்து இருபத்தெட்டாம் நாள் முடியப் பயிற்சியின் முடிவுப் பகுதி நடைபெறுகிறது. இதுவும் வகுப்பறைப் பயிற்சிதான். இவ்வாறு 28 நாட்களுக்குள் புதிய உலகத்தைக் காண்கிறார்கள் இளைஞர் அணியினர்.

வடஆர்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த சத்திய விசய நகரத்தில் நடைபெறும் இளைஞர் அணிப் பயிற்சியைப் பார்ப்போம்.

செப்டம்பர் 16-ஆம் நாள் துவக்கப்பட்ட இளைஞரணிப் பயிற்சியில் 62 பேர் கலந்து கொண்டனர். அவர்களில் இருவர், தங்களது பயிற்சிக் காலத்திலேயேஅரசுத்துறையைச் சேர்ந்த வேறு அலுவல் வாய்ப்புக் கிடைத்துவிட்டதால் சென்றுவிட்டனர். தற்போது இரண்டாம் பகுதியினருக்குப் பயிற்சி நடைபெறுகிறது. இந்த இரண்டாம் பகுதியில் 57 பேர் இடம் பெற்றிருக்கிறார்கள். இவர்களது வகுப்பறைப் பயிற்சியின் முதற்கட்டம் முடிவடைந்து—அவர்கள் தாமரைப்பாக்கம், ஆவேனமநல்லூர், காவனூர், மாம்பாக்கம், வேளூர் ஆகிய கிராமங்களில் கிராமத்துக்கு 11 பேர் விதம் சமூகப் பணி செய்யும் பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

கிராமங்களில் அவர்கள் செய்யும் பணிகள் மகத்தானவை; அவற்றை இங்கே பார்ப்போம்.

சுடர் விளக்கு என்றாலும் தூண்டுகோல் வேண்டும்அல்லவா? அந்தத் தூண்டுகோலாகத்தான் இந்த இளைஞர் அணியினர் விளங்குகிறார்கள். கிராமத்து மக்கள் தங்களின் தேவைகளையும் அறியாமல், அந்தத் தேவைகளைப் பெறுவதற்குரிய வழிவகைகளையும் அறியாமல் இருக்கின்ற அவல நிலையை இந்த இளைஞர் அணியினர் போக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

தாமரைப் பாக்கத்தில் பல விவசாயிகள் தங்களின் கால்நடைச் செல்வங்களைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்து வந்தனர். கால்நடைகள் தான்—வேளாண்மைத் தொழிலுக்கு மிகவும் ஒத்துழைப்பாக இருக்கும் மாடுகள் தான்—உழவர்களுக்குப் பெருஞ்செல்வங்கள் என்பதை இந்த இளைஞரணியினர், அவர்களுக்கு எடுத்துக் கூறிக் கால்நடைகளுக்கு நோய்த்தடுப்பு ஊசிகள் போட வைத்தனர். குணப்படுத்துவதைவிடத் தடுத்துக் கொள்வதே சிறந்தது (Prevention is better than Cure) என்று ஆங்கிலத்தில்சொல்வார்கள். கால்நடைகள் நோய்வாய்ப்பட்டால், வேளாண்மைத் தொழிலுக்கு இடையூறு ஏற்படும். வேறு கால்நடைகளைத் தேடவேண்டும். அவை கிடைத்து வேளாண்மைத் தொழிலைச் செய்வதற்குள் பெரும்பாடாகிவிடும். ஒருவரின் வேளாண்மை பாதித்தால் கூட, அது இந்த மொத்த நாட்டின் வேளாண்மையைப் பாதித்து விடும். அதனால்தான் வருமுன் காப்போம் என்ற தத்துவத்தைக் கிராமத்தில் வாழும் வேளாண் குடியினருக்கு எடுத்துக் கூறி, அவர்களுக்கும், நாட்டுக்கும் நன்மையை உருவாக்குகிறார்கள், இளைஞர் அணியினர். ஒரு நாளில் மட்டும் 150-க்கு மேற்பட்ட மாடுகளுக்கு நோய்த் தடுப்பு ஊசி போடும் அருந்தொண்டினைச் செய்தார்கள். தாமரைப்பாக்கத்தில் பாடிவீடு

அமைத்திருந்த இளைஞர் அணிப் பகுதியினர்!

விஞ்ஞான வளர்ச்சி அதிகரித்துள்ள இந்த நாட்களில் வேளாண்மைத் தொழிலில், பழைய முறைகளையே கடைப்பிடித்து வருகிறார்கள் பலர். ஒவ்வொரு பஞ்சாயத்திலும் இரண்டு அல்லது மூன்று விசைத் தெளிப்பான்கள் உண்டு. இவற்றின் முக்கியத்துவத்தை வேளாண் பெருமக்கள் உணருவதில்லை. அதனால் அந்தக் கருவிகள் அனாதைகளாக இருந்துவருகின்றன. அவற்றைப் பயன்படுத்தும்படி வேளாண் குடியினரிடம் எடுத்துரைத்து வருகின்றனர் இளைஞர் அணியினர். மருந்துகளை எப்படித் தெளிக்க வேண்டும் என்பதையும் இளைஞர் அணியினரே, வேளாண் குடியினருக்கு விளக்கிச் சொல்கிறார்கள். தாமரைப் பாக்கத்தில் முகாமிட்டிருக்கும் இளைஞர் அணிக்குழுவில் உள்ள மின்துறைப் பொறியியல் பட்டதாரியான திரு பாலகிருஷ்ணன் விசைத் தெளிப்பானைத் தானே முதுகில் சுமந்துகொண்டு, வயல் வெளியில் அனாயாசமாக நடந்து பயிர்களில் மருந்து தெளித்து ஒரு விவசாயிக்கு விளக்கம் சொல்லிக்கொண்டிருந்தார். சில நிமிட இயக்குதலைப் பார்த்துவிட்டு, அந்த விவசாயி தானும் அவ்வாறே இயக்கக் கற்றுக்கொண்டார்.

இந்த இளைஞரணியினர் சமூகத்தின் பல துறையினரையும் சந்தித்து அவர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டு தங்களின் பணியைத் தொடங்குகின்றனர். பொதுவாக, கிராம அதிகாரி, பஞ்சாயத்து உறுப்பினர், தலைவர் ஆகியோரைச் சந்தித்துத் தங்களின் இலட்சியத்தை எடுத்துக் கூறி, சமூகப் பணிக்குத் தங்களுக்குத் தேவைப்படும் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்கிறார்கள். ஏனென்றால், ஒரு கிராமத்தினுள் நுழைந்து அங்கிருப்போருக்கு நல்வழிகள் சொல்வதற்கு ஓரளவு அறிமுகமானவர்களாக இருக்கவேண்டும். ஆனால், அந்தப் பகுதிக்கு முற்றிலும் புதியவர்களாகச் செல்லும் இளைஞர் அணியினர், பொது மக்களுடன் நல்ல முறையில் உறவு கொள்வதற்குக் கிராம நிர்வாகத்திலுள்ள முக்கியமான பெருமக்கள் பாலங்களாகத் திகழ்கிறார்கள்.

திடீரென்று எந்த ஒரு மாறுதலையும் ஏற்றுக்கொள்வதற்குப் பொதுமக்கள் தயக்கம் காட்டுவது இயல்பு. மிகப் பெரும் நன்மைகளை அவர்களுக்கு உருவாக்கித் தந்தாலும் கூட அவற்றைப் பற்றிக் கிராமத்து மக்கள் ஐயப்படுவது வாடிக்கை. துவக்கத்தில் ஐ. ஆர். நெல்லைப் பயிரிடும்படிச் சொன்னபோது பலர் மறுத்தார்கள். அந்த நெல் சாப்பாட்டுக்கு ஏற்றதல்ல—உடல் நலத்தைக் கெடுத்துவிடும் என்றெல்லாம் சிலர் கூறினார்கள். நாளாக, நாளாக, அவர்களே ஐ.ஆர். 8 நெல்லின் சிறப்பை அறிந்து, ஆர்வத்துடன் பயிரிடத் தலைப்பட்டுவிட்டார்கள். அதைப் போலத்தான் எந்த ஒரு விஷயமும்! அதனால்தான் கிராம நிர்வாகத்துப் பெருமக்களின் உதவியுடனேயே இளைஞர் அணியினர் தங்களின் அருந் தொண்டுகளைச் செய்ய வேண்டியிருக்கிறது.

சுற்றுப்புறச் சுகாதாரம்—இளைஞர் அணியினால் கவனிக்கப்படும் மற்றொரு முக்கியமான குறிக்கோள்.

நவீன உலகத்தில்—நகரங்களில் கழிவு நீரைப் புதைகுழாய்களின் வாயிலாகக் கடத்துகிறோம். ஆனால், கிராமங்களில் இந்த வடிகால் முறைகள் சரிவர உருவாகவில்லை. வடிகால்களினால் ஏற்படுகின்ற நன்மைகளைக் கிராம மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய சூழ்நிலைதான் இருக்கிறது. கிராம மக்கள், கிராமங்களில்—வெளிப் பரப்பில்—மக்கள் நடமாடும் பரப்பில்—மலங்களைக் கழிக்கின்றனர்! பொதுமக்களின் பயனுக்காக இருக்கும் நீர்க்குளத்தையும் அசுத்தப்படுத்திவிடுகின்றனர். இது போன்ற செய்கைகளால் கிராமத்தின் சுகாதாரத்தையே பாதிப்புக்கு ஆட்படுத்திவிடுகிறார்கள்.

இத்தகையவர்களிடம் எல்லாம் சென்று, வீடுகளில் மலம் கழிக்கும் அறையைக் கட்டிக்கொள்ளுமாறு வலியுறுத்த வேண்டியிருக்கிறது. வலியுறுத்தும் இந்தத் தொண்டினையும் இளைஞர் அணியினர் செய்து வருகிறார்கள். கிராம மக்கள் அவரவர்கள் சக்திக்கேற்ற விதத்தில் தங்கள் வீட்டில் கழிவறையை உருவாக்கிக் கொள்ளலாம். மிக மிகக் குறைந்த வசதியுடையவர்கள்



கூடப் பயன்படுத்திக் கொள்வதற்கு வார்தா முறைக் கழிவறை உதவுகிறது. அந்த அறையினால் மற்றொரு பயனும் இருக்கிறது. அதிலுள்ள கழிவுப் பொருள் உரமாகவும் பயன்படுகிறது.

காவனூர் என்ற பகுதியில் பணிபுரியும் இளைஞர் அணியினர் இந்த வார்தா முறைக் கழிவறை ஒன்றை உருவாக்கிப் பொது மக்களுக்குக் காண்பித்தனர். இந்த அணியினரின் தொண்டு, கிராம மக்களின் உள்ளத்தில் ஓரளவு வேலை செய்திருக்கிறது. இளைஞர் அணியினர் வலியுறுத்துவது நியாயம்தான் என்பதைக் காவனூர் மக்கள் ஒப்புக் கொண்டு அதற்குரிய பணிகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

ஆளில்லாமல் 50 ஆயிரம் ரூபாய் தேங்கிவிட்டதாம். பிறகு, தற்போது, இளைஞர் அணியின் முயற்சியால், வேளாண்மையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, வேளாண் குடியினர் கூட்டுறவு வங்கியைப் பயன்படுத்துவதற்கு முன் வந்திருக்கிறார்கள்.

ஆனைமநல்லூரில் தங்கியிருந்த இளைஞர் அணியினரின் தொண்டு—ஓயாத தொண்டு என்றுதான் குறிப்பிட வேண்டும்.

குழாய்களிலிருந்து வெளியேறும் தண்ணீர் தெருவெல்லாம் பெருகாமல் இருப்பதற்காகக் குழி வெட்டினார்கள். தினமும் ஒவ்வொருவரும் குறைந்தது எட்டு விவசாயிகளைச் சந்தித்து அவர்களின் உள்ளக் கிடக்கையை அறிந்து பணிபுரிகிறார்கள்.



இளைஞர் அணியின் மற்றொரு இலட்சியம் — கூட்டுறவு வங்கிகளைப் பயன்படுத்துவதற்குக் கிராம மக்களைத் தூண்டும் அருந் தொண்டாகும்.

கூட்டுறவுச்சங்கம், தொடக்கப் பள்ளி, ஊராட்சி முறை இவை மூன்றும் கிராமத்தின் அடிப்படை அமைப்புகள் என்று, மறைந்த நேரு அவர்கள் சொல்லியிருப்பது இங்கே குறிப்பிடத் தக்கது.

எத்தனையோ கூட்டுறவு வங்கிகளில் உள்ள பணம், விவசாயப் பெருமக்களால் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. திமிரி வட்டாரத்தைப் பொறுத்த அளவில் இந்தச் செய்தி உண்மைதான் என்பது தெளிவாகியிருக்கிறது. அந்த ஒன்றியத்தைச் சேர்ந்த கூட்டுறவு வங்கியில், கடன்கேட்க

மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்துக் கல்வி வளர்ச்சியை உருவாக்குவது இளைஞர் அணியின் மற்றொரு நோக்கமாகும்.

வேளூர் பகுதியில் தங்கியிருந்த இளைஞர் அணியினர், புது வகை அனுபவத்தைச் சந்தித்திருக்கிறார்கள்.

முதியவர்களுக்குக் கல்வி கற்றுத் தரும் பணியில் ஈடுபட்ட அவர்களைக் கண்டு, முதலில் கிராம மக்கள் பயந்துவிட்டார்களாம். இளைஞர் அணியினர் அவர்களை நெருங்கி அவர்களது அச்சத்தைப் போக்கி, அவர்களுக்குக் கல்வியைக் கற்றுத் தந்திருக்கிறார்கள். அன்றைய நாளிதழில் வெளியாகியுள்ள செய்திகளில் குறிப்பிடத்தகுந்தவற்றைக் கரும் பலகையில் எழுதிக் காண்பித்து—அன்றாட நிகழ்ச்சியுடன் அவர்களை இணைத்து வைத்துக் கல்வியைக் கற்றுத் தந்தபோது அந்த முதியவர்களின் இதயங்கள் மகிழ்ச்சியடைந்தன.

இளைஞர் அணியினர் இவ்வாறு உன்னதமானகுறிக்கோள்களுடன் பணி புரிந்து வருகின்றனர். அனைவருமே இந்தப் பணியில் அகம் நிறைந்த மகிழ்ச்சியுடனும் அன்பு நிறைந்த தொண்டுணர்ச்சியுடனும் ஈடுபட்டிருக்கின்றனர்.

"நீங்கள் எல்லாம் கல்லூரியில் இருந்து வெளிவந்தவர்களாயிற்றே? கிராம மக்களுடன் தொடர்பு கொண்டுள்ள இந்தப் பணி உங்களுக்குச் சுவையாக இருக்கிறதா, அல்லது அலுப்புத் தட்டுகிறதா" என்று கேட்டபோது அனைவரின் முகங்களும் மாறுதல் அடையத் தொடங்கிவிட்டன.

"சமூக முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் இந்தப் பணியில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். நகரங்களில் நவீன நாகரிகத்தில் மோகம் கொண்டு வாழ்ந்த எங்களுக்கு இந்தக்கிராம வாசிகளுடன் பழகுவது இனிமை தருகிறது. அது மட்டுமல்ல—அறியாமை என்ற இருளில் இருப்பவர்கள் நல்வாழ்வு பெறுவதற்கு அறிவொளிப் பிரச்சாரத்தைச் செய்வதற்கு எங்களுக்கு வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்"

—அனைவரும் ஒரே குரலில் தெரிவிக்கத் தொடங்கிவிட்டனர்.

இந்த இளைஞர் அணியின் இத்தனை உற்சாகத்திற்கும் காரணம் இவர்களுக்குப் பயிற்சி தரும் தலைமைப் பயிற்றுவிப்பாளர் திரு பிரான்சிஸ் அவர்கள்தான் என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

இந்த இளைஞர் அணியினரையும் இவர்களது அருந்தொண்டுகளையும் நாம் காணும்போது, நாம் இளைஞர்களாக இருந்த காலத்தில் இப்படி அருமையான திட்டம் ஏற்படாது போய்விட்டதே என்ற ஏக்கம் ஏற்படுகிறது. என்ன செய்வது? புதிய சமுதாயத்தைப் பார்த்து மன மகிழ்ச்சி கொள்வதன் வாயிலாகவாவது நமது ஏக்கத்தைக் குறைத்துக் கொள்வோமாக!



# விண்வெளி ஜீப்

விஞ்ஞானிகள் எதையும் கண்டு பிடித்துக் கொண்டே இருக்கிறார்கள். 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்று பொதுவாகச் சொல்லப்படும் கருத்து, விஞ்ஞானிகள் விஷயத்தில் கடைப்பிடிக்கப்படக் கூடாது. விஞ்ஞானிகள் எப்போதும் பேரவாக்கொண்டவர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் விஞ்ஞானம் வளர முடியும்! இயற்கையின் நுட்பங்களை எல்லாம் ஆராய்ச்சி செய்து, மனிதகுலத்திற்கு முன்னேற்றத்தை உருவாக்க முடியும். அந்த வகையில் உருவானதுதான் டர்போ—போர்ட்டர் என்ற புதுவகை விமானம்.

இந்த விமானம் சுவிஸ் நாட்டுத் தயாரிப்பு. ரூபாய் 10 இலட்சம் மதிப்புள்ளது. இந்த விமானத்தில் 10 பேர் பயணம் செய்யலாம்.

இந்த விமானத்தை எளிதாக இயக்கலாம். மிகக்குறைந்த தூரத்திற்குள்ளேயே செங்குத்தாக உயரே செல்லும். மலைப்பகுதியானாலும் அங்கே இந்த விமானம் இறங்கும். நீர்ப் பரப்பிலும், மிதப்புகளில் இணைக்கப்பட்டு, மிதக்கவல்லது. ஏரிகளில் இறங்கக் கூடியது. பனிப் பாறைகளிலும் கூட இந்த விமானம் இறங்கும் இதனால்தான் இந்த விமானத்தை விண்வெளி ஜீப் (The Jeep of the air) என்று கூறுகிறார்கள்.

பலவகையிலும் இந்த விமானம் பயன்படுகிறது. பறக்கும் ஆம்புலன்சாகப் பயன்படுகிறது. ஆபத்துக் காலங்களில் உணவுப் பொட்டலங்களையும் மருந்துப் பொட்டலங்களையும் போடுவ[illegible] பயன்படுகிறது. தீயணைக்கும் பணிக்கு இந்த விமானம் தக்க சாதனமாகத் திகழ்கிறது. மற்றும் சர்வே வேலைகள் நடத்த, விமானத்திலிருந்தே முக்கிய இடங்களைப் படம் எடுக்க இந்த விமானத்தில் வசதி செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறைக்கும் இந்த விமானம் மிகவும் பயன்படுகிறது. இந்தோனேஷியா-தாய்லாந்து-போன்ற நாடுகளில் வயல்களில் மருந்து தெளிக்க இந்த விமானத்தை அதிக அளவில் பயன்படுத்துகிறார்கள்.

இது எந்தவிதமான பருவ நிலையிலும் பறந்து செல்லும். 25,000 அடி உயரம் வரை பறக்க வல்லது. மணிக்கு 280 கிலோ மீட்டர் வேகம் செல்லும் இந்த விமானத்தின் பெட்ரோல் தொட்டி முழுதாக நிறைக்கப்பட்டால், சுமார் 1,100 கி.மீட்டர் வரை செல்ல முடியும்.

எல்லா விமானங்களும் பறப்பதற்கு முன்பு நீண்ட தூரம் ஓடிச்செல்ல வேண்டும்; ஆனால் இந்த விமானம் மிகக் குறைந்த அளவு தூரம் ஓடினாலே போதும். எளிதில் எழும்பி விடுகிறது. மிகக் குறைந்த அளவு தூரத்துக்குள்ளேயே இதைத் திருப்பிவிடலாம். சிறு குழந்தைகள் நடைவண்டியைத் திருப்புவதுபோல, இந்த விமானத்தைத் திருப்புகிறார் இதன் ஓட்டுநர் ஜே.விக்.






**வேளாண்மை வினாக்களே கேட்கப்படவேண்டும்!**

பதில் பகுதியில் கூட்டுறவு 'இப்கோ' உரம் பற்றிய தகவல் வந்தது. இப்பொழுது அந்த உரம் எங்கள் பகுதிக்கும் வந்துள்ளது. ஆனால் அதன் விலை 15:15:15 காம்ப்ளெக்ஸ் விலையை விட அதிகமாக உள்ளது. அதாவது 15:15:15 காம்ப்ளெக்ஸ் 50 கிலோ மூட்டை ரூபாய் 48.00 தான். ஆனால் 'இப்கோ' 10:26:26 உரம் 50 கிலோ மூட்டை ஒன்று ரூபாய் 58.10 ஆகிறது. அதாவது ஒரு மூட்டைக்கு ரூபாய் 10.10 அதிகம். ஆனால் ஏதோ பயிர்ச்சத்து அடிப்படையில் அது 15:15:15-ஐ விட விலைக் குறைவு என்று கூறுகிறார்கள். தயவு செய்து இதுபற்றிய உண்மையை என்போன்ற விவசாயிகளுக்கு 'தமிழரசு' பத்திரிகை மூலம் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக ஐ.ஆர். 8 நெல்லிற்கு எந்தஉரம் உபயோகித்தால் எவ்வளவு செலவு மிச்சம் என்றுகூறுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

—கே. ராஜு,
திருவள்ளூர்.

**விடை:**—தாங்கள் கூறியுள்ள விலை விவரம் சரியானவையாக இருக்குமானல், 15:15:15 காம்ப்ளெக்ஸ் உரத்தை விட, இப்கோ 10:26:26 உரமே குறைந்த செலவில் உரமிடுவதற்கு ஏற்றது என்பது உண்மையாகும். இவ்வுண்மையை பின்கண்ட விவரங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். 15:15:15 காம்ப்ளெக்ஸ் என்றால் 100 கிலோ உரத்தில் 15 கிலோ தழைச்சத்து, 15 கிலோ மணிச்சத்து, 15 கிலோ சாம்பல் சத்து உள்ளதாக பொருள்படும். அது போலவே 10:26:26 'இப்கோ' உரமென்றால், 100 கிலோவில் 10 கிலோ தழைச்சத்து, 26 கிலோ மணிச்சத்து, 26 கிலோ சாம்பல் சத்து உள்ளதென்று பொருள்.

உதாரணமாக ஐ. ஆர். 8 நெல்லிற்கு அடியுரமிடுவதாக வைத்துக்கொள்ளுங்கள். ஒரு ஏக்கரில் ஐ. ஆர். 8 நெல் பயிரிட 35 கிலோ தழைச் சத்து, 35 கிலோ மணிச்சத்து, 35 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாக இடவேண்டும் என்று வேளாண்மைத் துறையால் பரிந்துரைக்கப்படுகிறது. இந்த அளவு சத்துக்களை 15:15:15 காம்ப்ளெக்ஸ் உரம் மூலம் அளிக்க 15:15:15 காம்ப்ளெக்ஸ் உரத்தில் 233-½ கிலோ அல்லது 234 கிலோ இட வேண்டும். ஆனால் 'இப்கோ' 10:26:26 உரம் மூலம் அடியுரமிடுவதென்றால் மேற்கூறிய அளவு சத்துக்களைக் கொடுக்க, 'இப்கோ' 10:26:26 உரத்தில் 134.6 கிலோ அல்லது 135 கிலோவும், யூரியா உரத்தில் 47·3 கிலோ அல்லது 48 கிலோவும் இட வேண்டும்.

50 கிலோ மூட்டை ரூபாய் 48.00 வீதம், 234 கிலோ 15:15:15 காம்ப்ளெக்ஸ் உரத்தின் விலை ரூபாய் 224.64 ஆகக் கூடும். ஒரு ஏக்கர் ஐ. ஆர். 8 நெல்லிற்கு 15:15:15 காம்ப்ளெக்ஸ் உரத்தின் மூலம் அடியுரமிடுவதென்றால் ரூபாய் 224.64 செலவு ஆகிறது.

50 கிலோ மூட்டை ரூபாய் 58.10 வீதம், 135 கிலோ இப்கோ 10:26:26 உரத்தின் விலை ரூபாய் 156.87 ஆகக்கூடும். இத்துடன் 48 கிலோ யூரியாவுக்கு, 1 கிலோ 98 பை வீதம் ரூபாய் 47.04 ஆகக்கூடும். ஆக 135 கிலோ 10:26:26 இப்கோ உரமும், 48 கிலோ யூரியாவும் கொண்டு ஒரு ஏக்கர் ஐ. ஆர். 8 நெல் பயிரிடுவதற்கு அடியுரமிட ரூபாய் 203.91 (ரூபாய் 156.87 + ரூபாய் 47.04) தான் ஆகிறது.

எனவே ஐ. ஆர். 8 நெல்லிற்கு 15:15:15 காம்ப்ளெக்ஸ்உரத்தை அடியுரமாக இடுவதை விட, 'இப்கோ' 10:26:26 உரமும், யூரியாவும் கொண்டு அடியுரமிடுவதால் ரூபாய் 20.73 (ரூபாய் 224.64—ரூபாய் 203.92) மீதமாகிறது.

எனவே 'இப்கோ' 10:26:26 உரத்தின் மூலம் அடியுரமிடுவதைச் சிக்கனமான முறை என்பது தெளிவாகிறது.

**வினா:**—எங்கள் தோப்பில் 100 தென்னை மரங்கள் உள்ளன. இவற்றின் வயது சுமார் 35 ஆண்டுகள் இருக்கும். இம்மரங்கள் நல்ல தடிப்புடனும், ஓங்கி வளர்ந்தும், நல்ல தளர்ச்சியுடனும் உள்ளன. இம் மரங்கள் 10 ஆண்டுகளுக்கு முன், நல்ல மகசூல் கொடுத்துக் கொண்டிருந்தன. ஆனால் இப்போது 30 மரங்களில் மகசூலே கிடையாது. மற்ற மரங்கள் சிறிதளவு காய்ப்புடன் உள்ளன. எல்லா மரங்களின் பாளை விடும் தன்மை குட்டையாகவும், பிஞ்சுகள் பிடிக்காத தன்மையுடனும், பாளை போடுகின்றன. அவ்வாறு போடும் பாளையில் பிஞ்சுகள் பெரிதாகி வந்தவுடன் உதிர்ந்து விடுகின்றன. மரங்களைப் பார்த்தால் வெறும் பாளையாகத்தான் உள்ளன. நாங்கள் நல்ல முறையில் தண்ணீர் பாய்ச்சியும், உழவு முதலியவைகள் போட்டு நல்ல முறையில் கவனித்து வருகிறோம்.

இவ்வாறு உள்ள மரங்கள் நல்ல மகசூல் கிடைக்க என்ன செய்ய வேண்டும்? என்பதை தயவு செய்து தெளிவான முறையில் பதில் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

—த. இரகுபதி,
குச்சனூர்.

**விடை:**—பத்து ஆண்டுகளுக்கு முன்பு நன்கு காய்த்து வந்த தென்னை மரங்கள் தற்போது காய்க்கவில்லை என்றால், அவைகளுக்குப் போதிய சத்துக்களைக் கொடுக்காததே காரணமாகும். உங்கள் தென்னை மரங்களுக்கு இரசாயன உரமிட்டால், மீண்டும் நன்கு காய்க்கத்தொடங்கும். தங்கள் தென்னை மரங்களுக்கு 35 வயதிற்கு மேல் ஆகிவிட்டதால் ஒவ்வொரு மரத்திற்கும் 5 கிலோ 3-ஆம் எண் தரப்படுத்தப்

கலப்பு உரம் (Standard Mixture No—2.) (6:6:12) இட வேண்டும். இவ்வுரத்தை பருவமழை ஆரம்பித்தவுடன், பெருமழை தொடங்குவதற்கு முன்பாக இட வேண்டும். ஒவ்வொரு மரத்தைச் சுற்றிலும் 3 அடி தூரம் விட்டு வட்டமாக 1 அடி ஆழ, அகல குழி தோண்ட வேண்டும். அதில் 50 கிலோ தொழு எரு அல்லது தழை எரு இட்டு, அத்துடன் மேற்கூறிய அளவு கலப்பு உரத்தையும்இட்டு, மண்ணால் மூடி, தண்ணீர் விட வேண்டும். இவ்வாறு ஆண்டு தோறும் செய்து வந்தால் மீண்டும் உங்களுடைய தென்னை மரங்கள் நன்கு காய்க்க ஆரம்பிக்கும். இந்த ஆண்டுஇரசாயன உரமிட்ட தன்பலனை அடுத்த ஆண்டில்தான் நீங்கள் நன்கு காண இயலும்.

வினா:—எனது வீட்டுத் தோட்டத்தில் மஞ்சள் பயிரிட்டுள்ளேன். நன்கு வளர்ந்து குருத்து இலை மஞ்சள் நிறத்தில் அழுகிப்போய் விடுகிறது. இதற்கு என்னமருந்து இடவேண்டும்?

—பி. கே. சுகுமார்,
தோணிமுடி, 2-வது பிரிவு,
மூடீஸ்.

விடை:—குருத்து இலை மஞ்சள் நிறத்தில் அழுகிப்போய்விடுகிறது என்றால், இலைப்புள்ளி நோய் தாக்குதலாக இருக்கக்கூடும். இந்நோய் தாக்கியிருந்தால் இலைகளில் கருமையான முட்டை வடிவமுள்ள புள்ளிகளும் காணப்படும். இப்புள்ளிகள் விரைவில் நீண்டு பெரியதாகி இலையின் பெரும் பாகத்திலும் பரவிவிடும். அதன் பின் இலைகள் வாடிவிடும். இவ்வறிகுறிகள் எல்லாம் காணப்பட்டால், இலைப்புள்ளி நோய் தாக்கியுள்ளது என்று முடிவு செய்து கொண்டு, ''டைத்தேன்'' மருந்தை, (ஏக்கருக்கு 1 கிலோ மருந்தும் 500 லிட்டர் தண்ணீரும் என்ற விகிதத்தில் கலந்து) தெளிக்கலாம். மேற்கூறிய அறிகுறிகள் காணப்படாவிட்டால், உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர்(வளர்ச்சி) அவர்களையோ அல்லது ஊர் நல ஊழியரையோ அழைத்து வந்து நேரில் காட்டி, அவர்கள் பரிந்துரைக்கும் மருந்தைத் தெளிக்க முயற்சிசெய்யுங்கள்.

வினா:—தற்பொழுது இறைவையாக என் விதைக்க எந்த ரகத்தை [illegible] என்ன இரசாயன உரம் இட வேண்டும்? ஒரு ஏக்கர் நிலத்தில் என் சாகுபடி செய்ய வேண்டிய முறைகளைப் பற்றி ஆரம்பம் முதல் கடைசி வரை தெரிவிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

—செல்வி கோ. ஞானம்பிகை,
கன்வீனர், மகளிர் வானொலி
விவாதக்குழு, சென்னைக்கல்
பாளையம்.

விடை:—நவம்பர் – டிசம்பர் மாதங்களில் இறைவையாக என் சாகுபடி செய்ய டி.எம். வி. 2 என் ரகமும், டிசம்பர்-ஜனவரி மாதங்களில் விதைக்க டி.எம்.வி. 8 அல்லது [illegible] ஆர். ஆர். [illegible] அல்லது கே. ஆர். ஆர். 8 ரகமும் சிறந்தது. ஒரு ஏக்கரில் இறைவையாக என் சாகுபடிச் செய்ய 10 வண்டி தொழு எரு, 66கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 29 கிலோ யூரியா, 55 கிலோ சூப்பர் பாஸ்பேட், 15 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடி உரமாக இடவேண்டும். அத்துடன் ஏக்கருக்கு 2 கிலோ மாங்கனீஸ் சல்பேட்டையும் அடியுரமாக இட்டால் மகசூல் பெருகும். என் சாகுபடிச் செய்ய வேண்டிய முறைகளைப் பற்றி ஆரம்பம் முதல் கடைசி வரை தெரிந்து கொள்ள ''தமிழரசு'' டிசம்பர் 1, 1970 இதழில் பக்கம் 35 முதல் 36—வரை படித்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

**கொடுக்கப்படும்!**

வினா:—நான் தென்னம் பிள்ளை நட்டு 3 ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் மண்டை வரவில்லை. வீட்டுத் தோட்டத்தில் வைத்திருக்கிறேன். என்ன உரம், எவ்வளவு வைக்க வேண்டும்?

—டி. வீரமுத்து,
டி.என். பாளையம், புதுவை.

விடை:—தமிழ்நாடு வேளாண்மைத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட தரப்படுத்தப்பட்ட கலப்பு உரம் எண் 3-ல் (6:6:12) ஒவ்வொரு மரத்திற்கும் 3 முதல் 4 வயது வரை 1½ கிலோவும், 5 முதல் 6வயது வரை 3½ கிலோவும் 7 முதல் அதற்கு மேற்பட்ட வயதிற்கு 5 கிலோவும் இடவேண்டும்.

வினா:—''கருணை'' நெல்லும், ஐ. ஆர். 8 நெல்லும் பயிரிட விதைப்பது முதல் அறுவடைக் காலம் வரை நாம் செய்ய வேண்டிய கடமைகளைச் சுருக்கமாகக் கூற வேண்டுகிறேன்.

—இ. சுப்பிரமணியன்,
திருமலையப்புரம்.

விடை:—தங்கள் வினாவிற்கு விடையளிக்கக் குறைந்தது 8 பக்கம் தேவைப்படும். முன்பே ''கருணை'', '' ஐ.ஆர். 8'' நெல். பற்றி வெளியிடப்பட்டுள்ளது. எனவே, கருணை நெல் சாகுபடி முறைப் பற்றி அறிய "தமிழரசு" ஜூன் 16, 1971 இதழையும், ஐ. ஆர். 8 நெல் சாகுபடிக்கு ''தமிழரசு'' ஜூலை 1, 1971 இதழையும் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

## உறுதியான கட்டடங்கள்: *கிராமங்களில்-1*


SANKAR I C CEMENT




கால்நடைகளுக்கும் நவீன கொட்டில்கள் தேவை

# சங்கர் சிமெண்ட்

IS:269 ISI

பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது
ISI மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், தன் பில்டிங், சென்னை-2
25 ஆண்டுகள் நிலைத்து — இன்னும் வளர்ந்துகொண்டே போகிறது!

இலவச தொழில் நுட்ப ஆலோசனைக்கு: சிமெண்ட் சர்வீஸ் பீரோ, 'குரோவ்', சென்னை-18

FDSIC-1446TM-R

# ஏன் இந்தக் காதல் ?

அ. மறைமலையான்

" அந்தக் கதையைச் சொல்வதற்கு முன்னாலே இதைக்கொஞ்சம் தின்று விடுங்களேன் !''

—என்றவாறே தேன்மொழி எழுந்தாள்.

அங்கே கிடந்த ' டீபாயை '——சிறு மேசையை—அவன் எதிரே இழுத்துப் போட்டு, அதன் மீது இட்லி, சப்பாத்தி, பால், மூன்றும் அடங்கிய சிற்றுண்டித் தட்டைக் கொண்டு வந்து வைத்தாள்.

'' எனக்குப் பசியே, இல்லையே தேன்மொழி எப்படித் தின்பது?''

—அலுத்துக் கொண்டான் மாதவன்.

''பசி இருக்கிறதோ, இல்லையோ இரவிலே வெறும் வயிற்றோடு படுக்கவே கூடாது என்று என் அப்பா அடிக்கடி சொல்வார். தயவு செய்து எனக்காக....''

—அவளது கெஞ்சும் குயிலோசை—கிறங்கும் மதுப்பார்வை—அவன் பிடிவாதத்தைக் கரையச் செய்துவிட்டன.

'' நீ சாப்பிட்டு விட்டாயா?'' —என்றுகேட்டான் மாதவன்.

''இன்னும் இல்லை ''

—புன்னகையினூடே பல்லிடுக்கில் மென்று விழுங்கினாள் தேன்மொழி.

'' அப்போ என்னை மட்டும் ஏன் வற்புறுத்துகிறாய் ? ''

'' எனக்கு வழக்கமாக இரவிலே சாப்பிட்ட உடனேயே கண்ணைச் சுழற்றிக் கொண்டு தூக்கம் வந்து விடும். இப்போது சிற்றுண்டியை உள்ளுக்குத் தள்ளினேனானால், பிறகு நீங்கள் சொல்லப் போகிற கதையை என்னாலே கவனமா கருத்தா—கேட்க முடியுமா என்கிற சந்தேகந்தான் ''.

"ஆமா, இப்போ மணி என்ன?"

'' பதினொன்றைத் தாண்டி விட்டது ''

'' இதற்கு மேலே நீ எப்போது சிற்றுண்டியைத் தின்பது ? எப்போது தூங்கப் போவது ? இன்றைக்குக் கடுமையாக '' டேபிள் டென்னிஸ் ' வேறே ஆடி இருக்கிறாய் ; அதுவே உடம்பெங்கும் ஒரே அலுக்கையைக் கொடுக்காதா ?''

'' எனக்கு அப்படியெல்லாம் எதுவுமே இல்லைங்க ; உங்க பேச்சையே கேட்டுக் கொண்டு—உங்கள் முகத்தையே பார்த்துக் கொண்டு—உங்கள் பக்கத்திலேயே இருக்கிறபோது அலுக்கையாவது—அசதியாவது — பசியாவது—களைப்பாவது? ''

—சொல்லும் பொழுதே தேன்மொழியின் இதழ்கள் கொஞ்சின; இமைகள் கொஞ்சின ; அவளது பறங்கிப்பூ முகமே கொஞ்சியது.

மீண்டும் கட்டில் மெத்தையருகே சென்று மாதவனோடு ஒட்டி உட்கார்ந்தாள் அவள். தன் கைவிரல்களைப் பின்னிக் கொண்டு மலர்க்கரங்களையே மாலையாக்கி அவனது இடப்புறத் தோளிலே தொங்கவிட்டு அவன் பரந்த முகத்தையே ஆசை பொங்கப் பார்க்கவும் பார்த்தாள் அவள்.

சந்தடிகள் அடங்கிவிட்ட இரவின் அந்த நடுக்கண்டமான வேளையில் எங்கோ புகை வண்டி எழுப்பிச் செல்லும் ஓங்காரக் கூவல் தெளிவாக ஒலித்தது.

'' என்ன இருந்தாலும் தேன்மொழி ! இனிமேலும் நீ உண்ணாமல் — ஓய்வெடுக்காமல் —விழித்துருப்பது உன் உடம்புக்கு ஆகாது. என் கதைக்கு என்ன? அதை எப்போது வேண்டுமானாலும் கேட்டுக் கொள்ளலாம். அதோடு, எனக்கு வேறொரு யோசனையும் தோன்றுகிறது.''

## 9. மாதவனின் வேதனைக் கதை

—சிற்றுண்டித் தட்டில் கை வைத்த நிலையிலும் எங்கோ சிந்தனையில் ஆழ்ந்தவனாகக் கூறினான் மாதவன்.

'' என்னங்க, அது ?''

''ம்.. ...சிலசமயம் நம் நெஞ்சில் சுரக்கின்ற நினைவு ஊற்றுக்களை வாயினால் சொல்வதைவிட கையினால் எழுத்திலே வடிக்கும் பொழுது அவைகளுக்கு என்று புது வடிவம்—புதுமெருகு—முழுமை— நிறைவு —எல்லாமே கிடைக்கலாம் இல்லையா ? அதனாலே உனக்கு நான் எழுதியே கொடுத்துவிடுகிறேனே !''

''அதுவும் சரிதாங்க.''

'' அப்போ நீ உடனே உன் அறைக்குப் போய்த் தூங்கு.''



—மாதவனின் குரலில்தெறித்த அழுத்தம் தேன் மொழியை அங்கிருந்து விரட்டியே அடித்தது.

* * * * *

மறு நாள் காலை.

கதிரவனின் ஒளிக்கதிர்கள் சன்னல் வழியே அறையினுள் நுழைந்து தன் கன்னக் கதுப்பை வருடிய பிறகே தேன்மொழி படுக்கையை விட்டு எழுந்தாள்.

குளித்து முழுகிக் கூந்தலின் நுனியை முடிந்து போட்டுக்கொண்டு, இரண்டு நாட்களுக்கு முன்னர் வாங்கிய புதுவகையான மைசூர் பட்டுப் புடவையையும், அதற்கு இணையான சோளியையும் அணிந்து கொண்டு, மாதவனைச் சந்திப்பதற்காக அவள் அறைக் கதவைத் திறப்பதற்கும், அவனே அவளை நோக்கி வருவதற்கும் சரியாக இருந்தது.

அவன் கையிலே நாட்குறிப்பு—'டயரி'— தென் பட்டது.

இருவருமே இதமான முறுவலுடன் இமைக்காத பார்வை விருந்தைப் பரிமாறித் திளைத்தனர்.

"என்னை முந்திக் கொண்டுவந்து விட்டீர்களே!" —என்று இதழ்களை அசைத்தாள் தேன் மொழி.

"என்னுடைய நண்பர் அமலன் என்பவர் இங்கே புகை வண்டி நிலையத்திலே அலுவல் பார்ப்பதாகச் சொன்னேன் இல்லையா? அவரைப் போய்ச்சந்திப்பதற்குத்தான் இவ்வளவு விரைவில் கிளம்பி விட்டேன். நான் திரும்பி வருவதற்குள்ளே நீ இந்த நாட்குறிப்பிலே நேற்றைய தேதிக்குக் கீழேநான்எழுதி இருப்பதைப் படித்துவிடு. வரட்டுமா?"

—என்று விடை பெற்றுச் சென்றான் மாதவன்.

அறைக் கதவைச் சாத்தி உள் தாழ் போட்டுக் கொண்ட தேன் மொழி சோபாவில் வந்து சாய்ந்த வாறே அவன் கொடுத்துச் சென்ற

நாட்குறிப்பைப் பரபரப்பான உள்ளத்தோடே படிக்கத் தொடங்கினாள்.

* * *

'....இன்று கண்ணம்பாடி அணைக்கட்டிலே ஒரு கன்னடக் காரியைக் கண்டுவிட்டு அவளை 'அக்கா! அக்கா'—என்று நான் அழைத்துக் கொண்டு ஓடியதையும்—அதனாலேயே அடி வாங்க நேர்ந்ததையும் — நினைக்கும் பொழுது என்மீதே எனக்குச் சிரிப்புத்தான் உண்டாகிறது.

என்னுடைய அந்தத் தடுமாற்றத்திற்கு—மனமயக்கத்திற்குப்—பின்னணி இல்லாமலும் இல்லை.

அதனை விளக்குவதற்கு முன்னர், நான் பிறந்து வளர்ந்த சூழ்நிலைகளையும் சிறிது தொட்டுச் செல்வதே நல்லது.

தங்கத் தொட்டிலிலே தவழ்ந்து விளையாடி, வெள்ளிக் கரண்டியிலே பாலைப் பருகுகின்ற வாய்ப்பு எல்லாருக்குமா எளிதில் அமைகிறது? மண் தரையிலே உருண்டு புரண்டு, சாதாரண வெண்சங்கைக்கூடக் காணாத எத்தனையோ ஏழைப் பிள்ளைகள் நித்தம்நித்தம் செத்துப் பிறக்கவில்லையா? பிறந்தும் செத்திடவில்லையா? இந்த இரண்டாவது படுபாதாளத்திலேதான் நானும் பிறவியெடுத்தேன்.

நான் பிறந்த ஊர் என்று பெருமை பேசிக்கொள்ள முடியாவிட்டாலும் என் முன்னோர்கள் வாழ்ந்து சலித்த என் சொந்த ஊரிலே என் அப்பா மட்டும் ஒரு விந்தையானமனிதர்; வேறுபட்ட தனிமரம்!

சித்தர்கள் பாடல்களையும், இராமலிங்க அடிகளின் திருவருட்பாவிலே ஆறுந்திருமுறையையும் இன்னும் சில ஞானிகளின் அமுத மொழிகளையும் கரைத்துக் குடித்துவிட்டு, அந்த 'அறிவுச் செருக்கிலே'—ஆலயங்களுக்கே போகமாட்டேன் என்று அடம்பிடித்தவர் அவர்; சிறு தெய்வ வணக்கத்தையெல்லாம் உதறித்தள்ளியவர் அவர்; அதே சமயம், மார்க்கோனி, மைக்கேல் பாரடே, தாமஸ் ஆல்வா எடிசன் முதலான விஞ்ஞானிகளின் படங்களையெல்லாம் எங்கோ நகரத்திற்குப் போய் வாங்கி வந்து அவற்றுக்குக் கண்ணாடி போட்டுச் சுவரிலே மாட்டி, பூமாலைகளும் சூட்டி அந்த வித்தகர்களை விழுந்து விழுந்து வணங்கியவரும் அவரே! சுருங்கச் சொன்னால் எங்கள் ஊரிலே முளைத்தெழுந்த முதல் பகுத்தறிவுப் பகலவன் என் அப்பாதான்!

தமக்குச் சரியென்றுபட்ட சீர்திருத்தத் தென்றலைத் தம்மைச் சுற்றி மட்டுமே அவர் தவழவிட்டுக் கொண்டு நின்றிருக்கக் கூடாதா? சாதியின் பெயராலும் சமயத்தின் பெயராலும் நடைபெறும் அட்டூழியங்களைக் காணப் பொறுக்காமல், பேதமற்ற சமுதாயத்தைத் தோற்றுவிக்கத் துடித்த அவரது 'பெரிய உள்ளம்' தாழ்த்தப்பட்ட மக்கள் நெளியும் சேரிவரை அவரைக் கொண்டுபோய்த் தள்ளிற்று; அந்தத் தோழர்களைத்தம் வீட்டுக்கே அழைத்து வந்து விருந்துவைக்கும் அளவுக்கும் அது விரிந்துபோயிற்று.

அவருடைய புரட்சிப் போக்கு, சாதியென்னும் சப்பாத்திக் காட்டுக்குத் தங்களையே குத்தகைதாரர்கள் ஆக்கிக் கொண்டுவிட்ட எங்களூர்ப் 'பெரிய மனிதர்'களுக்கு எப்படிப் பிடிக்கும்? அதுவும் ஊர் நடுவிலேயே அந்தத் தாழ்த்தப்பட்ட தோழர்களைத் தலைநிமிர்ந்து நடக்கவைத்துவிட்டார் என்றபோது அவர்கள் அடைந்த ஆத்திரத்திற்கு அளவே இல்லை.

எனவே—

என் அப்பாவை ஒரு சிறைக் கைதியினும் கீழாகத் தனிமைப் படுத்தி ஒதுக்கி வைத்தனர்; அவரால் தெருவிலே நடக்க முடியாதபடி, கொச்சைமொழிகளால் குத்திக் குத்திப் பேசினர்; உயிரோடு வைத்து அவரைக் கொலையே செய்தனர்; நாலைந்து பேராகக் கூடிக்கொண்டு குடித்துவிட்டு வந்து அவர்மீது வேண்டுமென்றே விழுந்தனர்; கால்களைத் தட்டிவிட்டு அவரைத் தடுமாறி விழவும் வைத்தனர்; தோளிலே கிடந்த துண்டையும் உருவிக்கொண்டு பொல்லாத கேலியெல்லாம் புரிந்து அவரைப் புண் படுத்தியும் சிரித்தனர்.

எத்தனை நாழிகைக்குத்தான் அவரும் பொறுமைக் கடலாகத் தம்மை ஒடுக்கிக் கொண்டு—நாவை அடக்கிக்கொண்டு கிடக்க முடியும்? அவரும் ஆத்திரந் தாங்காமல் தம்மை வதைப்பவர்களை வசைபாடத் தொடங்கி விட்டார்.

அநியாயத்தையே நியாயமாகவும் அநீதியையே நீதியாகவும் சாதிக்கக் கூசாதவர்கள் தங்களுடைய கத்திக்குத்தைவிட எதிரியின் குச்சிக்குத்து தானே பெரியது என்று பேசுவார்கள்?





தமிழ்நாடு
கதர்ப்பட்டு
விற்பனை
10 சதவிகிதம்
தள்ளுபடி
கொடுக்கப்படும்
உங்கள் தேவைக்கு
கதர் கிராமத்தொழில்
விற்பனை
நிலையங்களுக்கு
வருகை தாருங்கள்!



எனவே என் அப்பா திட்டியதையே செய்யக் கூடாத குற்றமாக்கி அவரை ஓர் ஆலமரத்தின் விழுதிலே கட்டி வைத்துத் திருக்கை வாலினாலேயே அடி அடியென்று அடித்திருக்கிறார்கள்; முகத்திலே காறிக்காறி உமிழ்ந்திருக்கிறார்கள்; காலணிகளாலும் அவரது மேனியைப் பதம் பார்த்திருக்கிறார்கள்.

ஏதன்சு நகர இளைஞர்களிடையே அறிவொளியைப் பாய்ச்சினார் என்னும் ஒரே குற்றத்திற்காக நாடாண்டவர்களிடம் நச்சுக்கோப்பையையே பரிசாகப் பெற்றாரே சாக்ரட்டீஸ். அந்த ஒருவரைப் பற்றித்தான் இந்த உலகம் இன்று அறிந்து வைத்திருக்கிறது. ஆனால், இந்தத் தமிழ் மண்ணிலே சாதி வெறியர்கள் சாட்டையடிகளுக்கு — சவுக்கடிகளுக்கு — இரையாகி எத்தனைபேர் ஊர்—பேர் தெரியாத 'சாக்ரட்டீசுகள்' எல்லாரும் உயிரைக் கொடுத்திருக்கிறார்கள் தெரியுமா? அவமானத்தை — அபாண்டப் பழியைத்— தாங்கவே முடியாமல் சவமாகிச் சாம்பலாகியிருக்கிறார்கள் தெரியுமா?

பழைமைவாதிகளின் அகங்கார வெறிக்கு — அகோரப்பசிக்கு — உணவான அந்த அப்பாவிகளின் பட்டியலிலேதான் இறுதியிலே என்னுடைய அப்பாவுக்கும் இடம் கிடைத்தது.

ஆம்; ஆலமர விழுதோடு சேர்த்து அடிபட்ட அவர் நெடுநாட்கள் உயிரோடு வாழவில்லை.

அவர் இறந்த பொழுது என் அக்காள் வள்ளியம்மைக்கு இரண்டு வயது; நானோ என் அம்மாவின் வயிற்றில்.

எங்கள் சிற்றூருக்குப் பதினைந்து கல் தொலைவில் ஒரு பெரிய நகரம். அங்கே என் அப்பாவுடன் நெருங்கிப் பழகிய கிறித்துவ 'உபதேசியார்' ஒருவர் வாழ்ந்து கொண்டிருந்தார். தம் நண்பர் இறந்துவிட்ட செய்தி அவருக்கு எப்படியோ எட்டியிருக்கிறது. உடனே துக்கம் கேட்பதற்காக எங்கள் சிற்றூருக்கு அவர் வந்திருக்கிறார். எங்களுடைய குடும்பம் ஒதுக்கப்பட்டு — ஒடுக்கப்பட்டு துயரப்படும் அவநிலையை அறிந்து கொண்ட அவர், பிள்ளைப்பேற்றுக்காகவாவது தம்மோடு நகரத்திற்கு வருமாறு என் அன்னையை வற்புறுத்தி அழைத்திருக்கிறார். அண்டை அயலில் உள்ளவர்கள் எல்லாரும் பகைவர்களாகிவிட்ட பிறகு, அவர்களிடமிருந்து எத்தகைய இரக்கத்தையும் எதிர்பார்க்க முடியாது என்று தெரிந்து கொண்டுவிட்ட என் அம்மா, அந்த உபதேசியார் சொற்படியே என் அக்காளைக் கூட்டிக்கொண்டு நகரத்திற்கு வந்துவிட்டார்.

கணவனைப் பிரிந்த அதிர்ச்சியைத் தாங்கமுடியாமல் சாவைத் தழுவுவது பற்றியே எந்நேரமும் ஆவலை வளர்த்துக்கொண்டிருந்த ஒரு தாய்க்கு நானும் ஒரு தேவையில்லாத பிறவியாகவே அப்போது வந்து பிறந்தேன்.

அந்த 'உபதேசியார்'— கிழவர் மிகவும் தங்கமானவர். என் தாயைத்தம் சொந்த மகளைப் போலவே கவனித்துக் கொண்டார். நானும் என் அக்காளும் எந்தக் குறையும் இல்லாமல் வளர்வதற்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்தார். அவரைப் போன்ற ஒரு கருணைக் கடவுளை இதுவரை நான் கண்டதே இல்லை.

'கருணை வாழும் உள்ளம்—அது
கடவுள் வாழும் இல்லம்.'

—என்னும் கவிஞர் கண்ணதாசனின் திரைப்படப்பாடல் என் காதில் வந்து மோதும்போதெல்லாம், நான் அந்த உபதேசியாரைத்தான் இன்றும் நினைத்துக் கொள்கிறேன்.

ஐந்து ஆண்டுகள் ஆவியாகப் பறந்து சென்றன.

கால மாறுதல் என்னும் தென்றல் காற்று பகுத்தறிவு என்னும் மணத்தை—குளிர்ச்சியைச்—சுமந்து கொண்டு எங்கள் ஊரிலும் வேகமாக வீசத் தொடங்கிவிட்டது.

தாழ்த்தப்பட்ட மக்கள் தலை நிமிர்ந்து நடைபோடக் கிளம்பிவிட்டனர். அதுவும், தங்களால் அவமானப்பட்ட என் தந்தையின் இறப்பே அவர்கள் இதயங்களில் மாபெரும் எழுச்சித் தீயை மூட்டியிருக்கிறது.

உயர்ந்த சாதிக்காரர்களிடம் தங்கள் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள முற்பட்ட அவர்கள், எங்களுக்குச் சொந்தமான நில புலன்களையெல்லாம் யார்யாரோ அனுபவித்துக் கொண்டிருந்ததையெல்லாம் தடுத்து நிறுத்துவதிலும் ஈடுபட்டிருக்கின்றனர்.

பிறகு நகரத்திற்கு வந்து என் அம்மாவை ஊரோடு வந்துவிடுமாறு அழைத்திருக்கின்றனர்.

உபதேசியாரும் இசைவுதரவே என் அம்மா ஊருக்குப் போய்ச் சேர்ந்தார் என் அக்காளைக் கூட்டிக்கொண்டு. ஆனால் என்னை மட்டும் அனுப்புவதற்கு மறுத்து விட்டார் உபதேசியார். எனக்குக் கல்விச் செல்வத்தை வழங்கி என்னைப் பெரிய மனிதன் ஆக்கி விட வேண்டும் என்னும் அவரது பேரார்வமே அதற்குக் காரணம்.

படிக்கும் பொருட்டு நகரத்திலேயே நான் தங்க நேர்ந்த போதிலும் விடுமுறை நாட்களில் நான் தவறாமல் எங்கள் ஊருக்குச் செல்வேன். என் அருமைத் தமக்கையோடு விளையாடிக் களிப்பேன்.



# பசுமைப் புரட்சிக்கும் பச்சைச் சீருடைக்கும்...

என்பீல்டு இந்தியாவின் தயாரிப்புகளான வில்லியர்ஸ் என்ஜின்கள் வேளாண்மைத் துறையில் நீர்ப்பாசனத்துக்கும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைத் தெளிக்கவும் உழவுப் பெருங்குடி மக்களின் உற்ற நண்பனாக உதவுகின்றன.

நாட்டின் எல்லைப் பகுதிகளில் பணிபுரியும் படைவீரர்களுக்கும் மற்றவர்களுக்கும் போக்குவரத்து ஊர்திகளாகப் பணி புரிகின்றன, என்பீல்டு இந்தியாவின் புல்லெட் மற்றும் குருசேடர் மோட்டார் சைக்கிள்கள்.

வேளாண்மை, தொழில், போக்குவரத்து ஆகிய துறைகள் வளம் பெற அரும்பணி ஆற்றும் நிறுவனம் என்பீல்டு இந்தியா.



தி என்பீல்டு இந்தியா லிமிடெட்
சென்னை-19

FDSEI-1513TM

---

# நெய்வேலியும்...நமது நாடும்

**நெய்வேலி யூரியா:**
விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரொஜன் கூட்டப்பட்ட உரம் தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது

யூரியா பார்மால்டிஹைடு போன்றவற்றைத் தயாரிக்கத் தேவையான தரமுடைய யூரியாவும் உற்பத்தியாகிறது.

**மின்விசை:**
இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கீழ்த்திசையிலேயே இந்நிலையம்தான் முதலாவது.

**சுட்டுக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லீக்கோ**
வீடுகள், ஓட்டல்கள், பல்வேறு தொழில்களில் பயன்படுவதற்கு ஏற்ற எரிபொருள் புகையாத இந்தக் கரி சிக்கனமானது, திறம் மிக்கது—தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.





**தார்ப்பொருள்கள்:**
பல ரசாயன, பிளாஸ்டிக் தொழில்களில் உபயோகிக்கப்படும் கார்பாலிக் அமிலம், ஆர்த்தோ கிரிஸால், மற்றும் எம் பி கிரிஸால், ஸைலினால், பாலியாலென்ட் ஃபினால் கலவை.

**நெகோலின:**
சானிடரி சாதனங்கள், பீங்கான் பாண்டங்கள், எந்த சக்தி மின்விசையையும் ஏந்தித் தர வல்ல இன்ஸுலேட்டர்கள் முதலியவற்றை உருவாக்க உதவும் உயர்தரமான வெள்ளைக் களிமண் ஜவுளி, ரப்பர் மற்றும் தயாரிப்பு, காகிதத் தொழில்களிலும் இது பயன்படுகிறது.

நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட், நெய்வேலி 1

நான் அப்படி என் தாயையும் தமக்கையையும் காணப்போகும் பொழுதெல்லாம், நான் அவர்களுக்குக் கொண்டு செல்லக் கூடிய பரிசுகள் என்ன தெரியுமா?

உபதேசியார்—கிழவர் உவப்போடு வாங்கிக் கொடுக்கும் ஆறு சாத்துக்குடி அல்லது கமலா ஆரஞ்சுகள், இரண்டு ரொட்டிப் பொட்டலங்கள், மூன்று முழத்தில் மல்லிகை அல்லது கதம்பச் சரம் !

அந்தப் பூச்சரங்களையோ நானேதான் என் பிஞ்சுக்கைகளால் என் அக்காவின் தலையிலே பாசத்தோடு சூட்டி விடுவேன்.

சின்ன வயதிலிருந்தே என் அக்காளின் கைகளில் எப்போதுமே சொறி பிடித்திருக்கும்; அல்லது கட்டி வந்திருக்கும்.

அதனால் தான் நான் அதற்குப் பூச்சூட்டி விடுகின்ற பழக்கம் முதன் முதல் உண்டாயிற்று ; அதுவே பிறகு வழக்கமான செயலாக—வாஞ்சையின் அடையாளமாக—வளரலாயிற்று.



எனக்கு ஏன் பொசுக்கென்று கோபம் வந்துவிடுகிறது தெரியுமா ? நான் இந்திய மக்களிடமிருந்து பெரிய சாதனைகளை எதிர்பார்க்கிறேன். அவர்கள் திறமையில் எனக்கு அபார நம்பிக்கை உண்டு. பணிகள் விரைவாக நடக்கவேண்டும் ; நாடு விரைவில் வளர்ச்சியடைய வேண்டுமென்று துடித்துக்கொண்டிருக்கிறேன். எவராவது மந்தமாக நடந்துகொண்டால் என்னையும் மீறி எனக்குக் கோபம் வந்துவிடுகிறது. ஆனால், அவர்கள் நண்பர்கள், தோழர்கள் என்ற உணர்ச்சி என்னை உரிமையுடன் கோபம் கொள்ளச் செய்கிறது.

நான் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் பொழுது எனக்காக வேறொரு ஏற்பாடு செய்து விட்டார் உபதேசியார். தமக்குத் தள்ளாமை மிகுதியாகி விட்டதால் தம்மை நம்பியே நான் எந்தக் காலமும் இருக்கக் கூடாது என்கிற எண்ணம் வந்துவிட்டது போலும் அவருக்கு. தமது செல்வாக்கைப் பயன்படுத்திப் பள்ளிக் கூடத்தோடு ஏழைப்பிள்ளைகளுக்கு உணவு-உடை-எல்லாம் இலவசமாக அளிக்கக் கூடிய ஒரு கல்வி நிலையத்திலே என்னைச் சேர்த்துவிட்டுவிட்டார். எனினும் மாதந்தோறும் என்கைச் செலவுக்கு என்று சிறிது பணம் அனுப்பவும் அவர் தவறவில்லை.

அந்தப் பணத்திலும் நான் கொஞ்சம் மிச்சப் படுத்தி விடுவேன். விடுமுறை வந்ததும், என் அக்காளுக்கென்று பூ, பழம் எல்லாம் வழக்கம் போல் வாங்கிக் கொண்டு செல்வேன்.

நான் பள்ளி இறுதி வகுப்பிலே அடிவைக்கப் போகும் சமயம் ஒரு திடுக்கிடும் விபத்து ஏற்பட்டது என் அக்காளுக்கு. பசுங் கன்றுக்குப் புல் பறிக்கப் போயிருந்த இடத்தில் அதைப் 'புடையன் பாம்பு' கடித்து விட்டதாம்! நல்ல வேளையாகச் சாவிலிருந்து தப்பி விட்டது என் அக்கா.

உயர் நிலைப் பள்ளிப் படிப்பின் இறுதியில் தேர்வுகள் முடியுந்தறுவாயில் என்னை வளர்த்து ஆளாக்கிய உபதேசியாருக்கு ஒரு 'யோகம்' அடித்தது ; அந்த யோகத்தின் குளிர் நிழல் என் மீதும் குடை விரித்தது.

உபதேசியாரின் சமயத் தொண்டைக் கண்டு உள்ளம் பறிகொடுத்த சுவீடன் நாட்டுப் பாதிரியார் ஒருவர், தம்முடைய விருந்தினராகத் தம் நாட்டுக்குத் தம்முடைய செலவிலேயே அவரை அழைத்திருந்தார். தமது முதுமையை முன்னிட்டுத் துணைக்கு என்னையும் கூட்டிக் கொண்டு செல்வதற்குப் பாதிரியாரிடம் அனுமதி கேட்டார் உபதேசியார். பெருந்தன்மை மிக்க அந்தப் பாதிரியார் என்னுடைய பயணத்திற்கும் ஏற்பாடு செய்து விட்டார்.

உலக இயக்கத்தில் இந்தியா ஓர் அங்கமாகவே விளங்குகிறது. நம் முன்பு நமது பிரச்சினைகள் இருக்கின்றன என்பது உண்மைதான் ! ஆனால், உலகில் நடைபெறும் நிகழ்ச்சிகளைப் புறக்கணித்து நாம் வாளாவிருக்க முடியாது. அப்படி நாம் செய்தால் அது நம் அழிவிலேதான் முடியும். நாகரிகம் என்பது எல்லா நாடுகளும் சேர்ந்தேதான் உருவாக்கியது. இந்தியா பிற நாடுகளுக்கு வழி காட்ட முடியும் என்றால், அது பிற நாடுகளிடமிருந்தும் சில படிப்பினைகளைத் தெரிந்து கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

—நேரு

ஏறத்தாழ ஓராண்டுக் காலம் சுவீடன் நாட்டிலேயே எனக்கு இன்பமாக பொழுது கழிந்தது. பசுமையான மரங்களும், பாலாடை போன்ற பனிப் படலங்களும், கவினழகுமிளிரும் கலைச் செல்வங்களும், விட்டுக் கொடுத்து ஒப்புரவோடு வாழ்கின்ற அந்நாட்டு மக்களின் உயரிய பண்பாடும் என் உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்தன.

அங்கிருந்து உபதேசியாருடன் நான் தமிழகத்திற்குத் திரும்பி, எங்கள் சிற்றூருக்குச் சென்ற போதோ—

எங்கள் வீட்டிலே நான் கண்ட காட்சி என் இதயத்தை அப்படியே இடிந்து நொறுங்கிச் சிதையச் செய்தது !

என் கையிலிருந்த பூச்சரமோ என்னைப் பார்த்து ஏளனமாய்ச் சிரித்தது !

''அக்கா ! அக்கா !''—என்று நான் கதறிக் கதறி அழுதேன்.

(வளரும்)



சிறுசேமிப்பு
இன்றைய சேமிப்பு
நாளைய பாதுகாப்பு!
நாட்டுக்கும் வீட்டுக்கும்
நலந்தரும் திட்டம்
காற்றுள்ளபோதே
தூற்ற வேண்டும்
காசுள்ளபோதே
சேர்க்க வேண்டுமல்லவா?
இன்றே உங்கள் அருகிலுள்ள அஞ்சலகத்துடன் தொடர்பு கொள்க!
இயக்குநர்
சிறுசேமிப்பு நிறுவனம்
சென்னை-9



# "முந்திரி நாள்"

## (சிறப்புப் பகுதி)

சத்தற்ற சாமானிய நிலத்தில் சாகுபடி செய்யப்படுவது முந்திரி. சாமானிய நிலத்தில் சாகுபடி செய்யப்படுவதுதான் என்றாலும், ஆண்டு தோறும், இந்தியாவிற்குப் பல கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதில் முந்தி நிற்பது முந்திரியே! ஆனால் முந்திரிச் சாகுபடி செய்துவரும் உழவர்கள் சராசரியாக ஒரு ஏக்கரிலிருந்து பெறும் மகசூல் ஒரு மூட்டைக்கும் (80 கிலோ) குறைவாகவே உள்ளது! இந்தக் குறைந்த மகசூலைக் கொண்டு வாழ்வை நடத்திவரும் உழவர்கள் தமிழ்நாட்டில் ஏராளம்! ஏராளம்! சமுதாயத்தின் அடித் தளத்தில் உள்ள சாமானிய மக்களின் வாழ்வை வளப்படுத்திச் சமதர்ம சமுதாயம் அமைக்க விழையும் தமிழ்நாடு அரசு, முந்திரி உற்பத்தியைப் பெருக்குவதற்குள்ள வழி முறைகளை உழவர்களிடையே பரப்புவதற்காக ஆண்டு தோறும் முந்திரி நாள் (Cashew Day) விழா நடத்தி வருகிறது. முந்திரித் தோப்பில் ஊடு உழவு செய்தல், உரமிடுதல், பயிர்ப் பாதுகாப்புச் செய்தல் ஆகியவைகளின் மூலம், முந்திரி உற்பத்தியை மும்மடங்கிற்கும் மேலாக உயர்த்த முடிகிறது. இம் முறைகளை முந்திரிச் சாகுபடி செய்யும் உழவர்களிடையே பரப்புவதற்காகவும் முந்திரிச் சாகுபடி செய்ய அரசு அளிக்கும் உதவிகளை விளக்கிடுவதற்காகவும், மேலும் புதிதாக முந்திரித் தோப்புகளை ஏற்படுத்தி முந்திரி உற்பத்தியைப் பெருக்க வேண்டிய இன்றியமையாமையை வலியுறுத்துவதற்காகவும், இந்த ஆண்டில் தென்னார்க்காடு, திருச்சி, திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களில் மூன்று இடங்களில் "முந்திரி நாள்" விழாக் கொண்டாடத் தமிழ்நாடு அரசு ரூபாய் 1,500 நிதி வழங்கியுள்ளது. அவ் விழாக்களை யொட்டி, இச் சிறப்புப் பகுதியைச் சாமானிய மக்களின் வாழ்வை வளப்படுத்துவதற்கு வழிகாட்டிவரும் "தமிழரசு" பெருமையுடன் அளிக்கிறது.

# முந்திரி பேசுகிறது!



“என் தாயகம் தென் அமெரிக்கா. நான் நானூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் குடியேறினேன். போர்த்துக்கீசியர்கள் என்னைத் தென் அமெரிக்காவிலிருந்து கொண்டு வந்து இந்தியாவின் மேற்குக் கடற்கரையோரத்தில் மண்ணரிப்பைத் தடுப்பதற்காகப் பயிரிட்டனர்.

எந்தப் பயிரும் சாகுபடி செய்ய முடியாத, சத்தற்ற, சாமானிய நிலத்திலும்—வறட்சி வாட்டிய போதிலும்— நான் நன்கு வளர்ந்து மகசூல் தருவதால், உழவர்கள் என்னை மிகவும் விரும்பிப் பயிரிட ஆரம்பித்தனர். அதனால் நான் இந்தியாவின் மேற்குக் கடற்கரையோரங்களிலும், கிழக்குக் கடற்கரையோரங்களிலும் பெருமளவில் பரவியுள்ளேன்.

பொதுவாகப் பழங்களின் உள்ளேதான் கொட்டை இருக்கும். ஆனால் நான் தரும் பழத்தில் கொட்டை வெளியே நீட்டிக் கொண்டிருக்கும். இந்த அமைப்பைக்கண்ட இந்திய மக்கள் வியப்புற்றனர்! அதுமட்டுமா? எதிலும் முந்திக் கொண்டு பேசுகின்றவர்களை ‘‘ முந்திரிக் கொட்டை ’’ என்றே அழைக்க ஆரம்பித்தனர்.

நான் தரும் பழத்தில் வைட்டமின் ‘‘சி’’ சத்து நிறைந்துள்ளது. பழச் சாற்றிலிருந்து ஒயின்கார், ஊறுகாய், பழப்பாகு (ஜாம்), சர்பத், மற்றும் ‘ பெனி ’ போன்ற பானங்கள் தயாரிக்கலாம்.

சிப்பியின் உள்ளே முத்து இருப்பதுபோல, முந்திரிக் கொட்டையின் உள்ளே முந்திரிப் பருப்பு உள்ளது. இது சுவையும், மணமும் கொண்டிருப்பதுடன் மிகுந்த ஊட்டச் சத்துக்களைக் கொண்டுள்ளது. முந்திரிப் பருப்புகளில் மாவுப் பொருள் (Carbohydrates), கொழுப்புச் சத்து (Fats) காரத் தன்மை (Alkalinity) ஆகியவை குறைந்த அளவிலேயே இருப்பதால் உலகெங்கிலும் முந்திரிப் பருப்புக்கே பெருஞ் சிறப்பு உண்டு. முந்திரிப் பருப்பில் குறிப்பிடத் தகுந்த அளவில் சுண்ணாம்புச் சத்து, இரும்புச் சத்து, பாஸ்பரஸ் சத்து, வைட்டமின் ‘‘ஏ’’, வைட்டமின் ‘‘பி’’ ஆகியவைகள் உள்ளன. இப்பருப்பு பச்சையாகவோ, வறுத்தோ, உப்பிட்டோ அல்லது சர்க்கரை சேர்த்தோ சிறந்த சிற்றுண்டியாக உலகெங்கணும் உண்ணப்படுகிறது. ரொட்டி, கேக் முதலியவைகளின் தயாரிப்பில் மணம் கூட்டும் பொருளாகவும் முந்திரிப் பருப்புகள் உபயோகமாகின்றன.

எனது ஓடுகளிலிருந்து ஒருவித எண்ணெய் எடுக்கலாம். இந்த எண்ணெய் பல்வேறு வகைகளில் பயன்படுகிறது. தண்ணீரினால் ஏற்படும் சேதத்தைத் தடுக்கும் பொருளாகவும் (Water-proofing agent) படகுகள், மீன்வலைகள், மரச் சாமான்கள் ஆகியவற்றைப் பாதுகாக்கும் பொருளாகவும் (preservative) பயன்படுகிறது. இந்த எண்ணெய்யிலிருந்துசெயற்கைப் பிசின்கள் (Synthetic Resins) தயாரிக்கப்படுகின்றன. இப்பிசின்கள் ‘‘பெயிண்ட்’’ மற்றும் பிளாஸ்டிக் தொழில்களில் மூலப் பொருளாகப் பயன்படுகின்றன.

பல்வேறு வகைகளில் பயன்படும் நான், இந்தியாவின் அயல் நாட்டு வாணிபத்தில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளேன். உலகத்தின் முந்திரிப் பருப்புத் தேவையில் 84 சதவீதத்தை இந்தியாவே வழங்கி வருவதால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவதில் எனக்குப் பெரும் பங்குண்டு என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தியாவிலிருந்து முதன் முதலாக 1923-ஆம் ஆண்டில் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு 45டன் முந்திரிப்பருப்பு ஏற்றுமதி செய்யப்பட்டது. அதன் பின், முந்திரிப் பருப்பு ஏற்றுமதி ஆண்டிற்காண்டு பெருகி வருகிறது. 1968–69-ஆம் ஆண்டில் முந்திரிப் பருப்பு ஏற்றுமதி செய்த வகையில் 60.9 கோடி ரூபாயும், முந்திரி ஓடு எண்ணெய் ஏற்றுமதி செய்ததன் மூலம் 1.23 கோடி ரூபாயும் கிடைத்துள்ளது. ஆக மொத்தம் 62.13 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி இந்தியாவிற்கு என்னால் கிடைத்துள்ளது.

இந்தியாவில் உற்பத்தியாகும் முந்திரிப் பருப்பின் அளவு உலகத்தின் தேவையை ஈடு செய்ய முடியாத அளவுக்கு இருப்பதால், இந்தியா ஆண்டுதோறும் பல கோடி ரூபாய் மதிப்புள்ள முந்திரிக் கொட்டைகளைக் கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து வரவழைத்து, அவைகளை நம் நாட்டுத் தொழிற்சாலைகளில் உடைத்துப் பதப்படுத்தி மீண்டும் வெளி நாடுகளுக்கு அனுப்பி வைக்கிறது. இவ்வாறு முந்திரிக் கொட்டைகளை இறக்குமதி செய்வதனால்

நமது நாட்டிற்குக் கிடைக்கும் அந்நியச் செலாவணி பாதியாகக் குறைந்து விடுகிறது.

எடுத்துக் காட்டாகச் சொல்ல வேண்டுமானால், 1969–70-ஆம் ஆண்டில் 60,627 டன் முந்திரிப் பருப்பும், 8,644 டன் முந்திரி ஓடு எண்ணெய்யும் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டதால், இந்தியாவிற்கு 58·44 கோடி ரூபாய் கிடைத்தது. ஆனால் அந்த ஆண்டில் டான்சானியா, கென்யா, மற்றும் இதர கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து 27·60 கோடி ரூபாய் மதிப்புள்ள, 1,63,426 டன் முந்திரிக் கொட்டைகளை இறக்குமதி செய்துள்ளது இந்தியா. இதனால் இந்தியாவிற்குக் கிடைத்த நிகர அந்நியச் செலாவணி 30·84 கோடி ரூபாயாகக் குறைந்து விடுகிறது. எனவே இந்த இழப்பைத் தவிர்க்க நம் நாட்டிலேயே முந்திரிப்பருப்பு உற்பத்தியைப் பெருக்க வேண்டியது அவசியமாகிறது.

அடுத்து டான்சானியா, கென்யா, மற்றும் இதர கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளிலேயே தற்பொழுது முந்திரிக் கொட்டைகளை உடைத்துப் பதப்படுத்தும் நிலையங்கள் துவக்கப்பட்டு வருவதால், அந்த நாடுகள் தற்பொழுது இந்தியாவிற்கு முந்திரிக் கொட்டைகளை வழங்குவதில் சுணக்கம் காட்டுகின்றன. அத்துடன் அந்த நாடுகளே இந்தியாவிற்குப் போட்டியாக முந்திரிப் பருப்பு வியாபாரத்தில் நேரடியாக ஈடுபட்டு வருகின்றன. இதனாலும் இந்தியாவின் முந்திரிப் பருப்பு ஏற்றுமதி குறைந்து வருகிறது. சோவியத் ரஷ்யா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி, ஆஸ்திரேலியா, யூகோஸ்லேவியா, பிரான்சு முதலிய நாடுகள் இந்தியாவிலிருந்து முந்திரிப் பருப்பு இறக்குமதி செய்யும் அளவைக் குறைத்துக் கொண்டுள்ளன. இதற்கு, முற்கூறப்பட்டுள்ள நாடுகளின் போட்டியும் மூல காரணமாக இருக்கிறது.

முந்திரி எண்ணெய் தந்திடும் பெரும் பயன்



நான் சொல்லுவதை நீங்கள் நம்பாமல் இருக்கலாம். ஏற்றுமதி செய்யப்பட்ட புள்ளி விவரங்களைத் தயவு செய்து படித்துப் பாருங்கள். அப்போதாவது நான் சொல்லுவது உண்மையென்று நம்புவீர்கள்.

50 நாடுகளுக்கு முந்திரி ஏற்றுமதியாகிறது



1970–71-ஆம் ஆண்டில் வெளி நாடுகளுக்கு 52·02 கோடி ரூபாய் மதிப்புள்ள 50,292 டன் முந்திரிப் பருப்புகளையும், 78 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள ஓடு எண்ணெய்யும் ஏற்றுமதி செய்யப்பட்டு, இந்தியாவிற்கு மொத்தத்தில் 52·80 கோடி ரூபாய்தான் கிடைத்துள்ளது. முந்திரிப் பருப்பு மற்றும் முந்திரி ஓடு எண்ணெய் வியாபாரம் மூலம் 1968–69-ஆம் ஆண்டில் 62·13 கோடி ரூபாயாக இருந்த வருவாய், 1969–70-ஆம் ஆண்டில் 58·44 கோடி ரூபாயாகக் குறைந்து, 1970–71 ஆம் ஆண்டில் மேலும் குறைந்து 52·80 கோடி ரூபாய் மட்டுமே கிடைத்துள்ளது.

எனவே, இதே நிலை நீடிக்க விடக்கூடாது. இதைத் தவிர்க்க



இந்திய முந்திரிக்கு எங்கும் சிறப்பு

வேண்டுமானால், இந்தியாவில் முந்திரி உற்பத்தியைப் பெருக்க வேண்டியது உங்களுடைய தலையாய கடமை என்று வலியுறுத்த விரும்புகிறேன். முந்திரி உற்பத்தியைப் பெருக்கத் தமிழ்நாடு அரசும், இந்திய அரசும் பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றன. அந்த உதவிகளையெல்லாம் பயன்படுத்தி முந்திரிப்பருப்பு உற்பத்தியையும், முந்திரி ஓடு எண்ணெய் உற்பத்தியையும் பெருக்கிட முன்வர வேண்டுமென்று உழவர் பெருமக்களை அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்.

முந்திரி உற்பத்தி பெருகினால், உங்கள் வருவாய் அதிகமாகும். அதே நேரத்தில் இந்தியாவிற்குத் தேவையான அந்நியச் செலாவணியும் கிடைக்கும்.

யாரோ ஒருவர் இதற்கு என்ன செய்வதென்று கேட்பது என் காதில் விழுகிறது. தற்பொழுதுள்ள தோட்டங்களில் உழவு செய்தல், உரமிடுதல், பயிர்ப்பாதுகாப்புச் செய்தல் ஆகியவைகளை மேற்கொள்ளுங்கள் என்றும் மேலும் புதிதாக முந்திரித் தோப்புகளைத் தரமான முந்திரிக் கொட்டைகள் அல்லது விண்பதியங்கள் கொண்டு ஏற்படுத்துங்கள். இவைகளே முந்திரி உற்பத்தியைப் பெருக்குவதற்குள்ள வழி வகைகளாம்.

இம்முறைகளை மேற்கொண்டு முந்திரி உற்பத்தியைப்பெருக்கிட முன்வாருங்கள் என்று மீண்டும் அன்புடன் வேண்டிக் கொண்டு விடை பெறுகின்றேன்.

வணக்கம்.

...று பருவ நிலையிலும் பயிரிடுவதற்கு ஏற்றதாக முந்திரி இருப்பதனாலேயே முந்திரிச் சாகுபடி செய்யும் பரப்பு, தமிழ் நாட்டில் ஆண்டுதோறும் அதிகமாகி வருகிறது. தமிழ் நாட்டில் 1951—52-ஆம் ஆண்டில் முந்திரி சாகுபடியாகிய பரப்பு 27,000 ஏக்கர்கள் தான்! ஆனால் தற்பொழுது தமிழ்நாட்டில் சற்றேறக்குறைய 1,77,000 ஏக்கர்களில் முந்திரி சாகுபடியாகிறது. நான்காவது திட்டக் காலத்தில் தமிழ்நாட்டில் 26,000 ஏக்கர்களில் புதிதாக முந்திரி பயிரிடத் திட்டமிட்டு, அதைச் செயல்படுத்தி வருகிறது தமிழ்நாடு அரசு.




முந்திரிச் சாகுபடியாகும் பரப்பை மேலும் விரிவு படுத்தத் தமிழ் நாட்டில் பெரும் வாய்ப்பு உள்ளது. கடலோரப்பகுதிகளிலும், கடலிலிருந்து சுமார் 60 முதல் 70 மைல் தூரம் வரை உள்ள பகுதிகளிலும் முந்திரிச் சாகுபடிக்கு ஏற்ற நிலங்கள் இருப்பதால், அப்பகுதிகளை முந்திரி பயிரிடப் பயன்படுத்தலாம்.

...தமிழ்நாடு அரசு அளிக்கும் சலுகைகள்.

1. புதிதாக முந்திரித் தோப்பு ஏற்படுத்தத் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத்துறை மூலம் ஏக்கருக்கு ரூபாய் 150 (முதல் தவணை ரூபாய் 100; இரண்டாம் தவணை ரூபாய் 50). வீதம், தனிப்பட்ட ஒருவருக்கு உச்ச அளவாக ரூபாய் 3,000 வரை நீண்ட காலக் கடன் (Long term loan) கொடுக்கப்படுகிறது. இக்கடனை முந்திரி நட்ட 6-ஆம் ஆண்டிலிருந்து ஆண்டிற்கொரு தவணை வீதம் 5 தவணைகளில் 5½ சத வட்டியுடன் சேர்த்துத் திருப்பிச் செலுத்த வேண்டும். இக்கடன் ஊராட்சி மன்றங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கோயில்கள் ஆகியவைகளுக்கும் வழங்கப்படுகிறது.

2. திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும், முந்திரி-தென்னை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், முந்திரி, தென்னை பயிரிடுவதற்காக ஏக்கருக்கு ரூபாய் 370 வீதம் தனிப்பட்ட ஒருவருக்கு உச்ச அளவாக ரூபாய் 3,500 வரை நீண்டகாலக்கடன் வழங்கப்படுகிறது.

3. விதைகளாகப் பயன் படுத்துவதற்காகத் தரமான முந்திரிக் கொட்டைகளைத் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை வழங்கி வருகிறது.

4. பூச்சி, பூஞ்சாள மருந்துகளை 15 சத மானிய விலையில் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை வழங்கி வருகிறது.

5. முந்திரித் தோப்பில் பயிர்ப் பாதுகாப்பு மேற்கொள்வதற்காகத் தெளிப்பான்களும் (Sprayers) தூவான்களும் (Dusters) பாதி விலையில் தனிப்பட்ட உழவர்களுக்கு, ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் வழங்கப் படுகின்றன. அது போலவே ஊராட்சி மன்றங்களுக்கும், கூட்டுறவு நிறுவனங்களுக்கும் சலுகை விலையில் தெளிப்பான்களும் தூவான்களும் வழங்கப்படுகின்றன.

6. முந்திரி மரங்களுக்கு மருந்து தெளிப்பதற்குத் தேவையான தெளிப்பான்களையும் தூவான்களையும் குறைந்த வாடகைக்கு வேளாண்மைத் துறை கொடுத்து உதவுகிறது. அது போலவே ஊராட்சி ஒன்றியங்களும் கொடுத்து உதவுகின்றன.

மேற்கூறிய உதவிகளைப் பயன்படுத்திப், புதிதாக முந்திரித் தோப்புகளை ஏற்படுத்தி, முந்திரி உற்பத்தியைப் பெருக்குமாறு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

## மகசூலைப் பெருக்குவதற்குரிய வழிமுறைகள்

முந்திரி உற்பத்தியைப் பெருக்க முந்திரிச் சாகுபடியாகும் பரப்பை விரிவு படுத்துவதுடன் தற்போதுள்ள முந்திரி மரங்களின் காய்க்கும் தன்மையையும் அதிகப்படுத்த வேண்டியது அவசியமாகும். ஏனெனில், தற்போதுள்ள முந்திரி மரங்களின் காய்ப்பு மிகவும் குறைவாக உள்ளது. பெரும்பாலான முந்திரித் தோப்புகளில், ஒவ்வொரு மரமும் ஆண்டிற்கு 1 கிலோ முந்திரிக் கொட்டை என்ற அளவில்தான் மகசூல் கொடுக்கிறது.

நன்கு பராமரித்து வந்தால், தனியொரு முந்திரி மரமே ஆண்டிற்கு 80 கிலோ முந்திரிக் கொட்டைகளைக் கொடுக்கும் என்பது சோதனைகளின் மூலம் தெளிவாகியுள்ளது. ஏக்கருக்குச் சராசரியாக 80 கிலோ முந்திரிக் கொட்டைகளைப் பெற்றுவரும் உழவர்கள், ஒரு முந்திரி மரத்திலிருந்தே 80 கிலோ முந்திரிக் கொட்டைகள் பெற முடியும் என்பதை நினைவில் கொண்டு பழைய முந்திரித் தோப்புகளைக் கவனிப்பதில் பராமுகமாக இருக்காமல், நன்கு பராமரிக்க முன்வர வேண்டும்.

## முந்திரிச் சாகுபடிக் குறிப்புகள்

**மண் அமைப்பு—**

முந்திரிச் சாகுபடி செய்வதற்குச் செம்மண், சரளை கலந்த செம்மண், மணற்பாங்கான நிலம் மிகவும் ஏற்றது.

மண் ஆழமாகவும், ஒரே சீராகவும், ஈரப் பிடிப்புள்ளதாகவும் இருக்க வேண்டும். மண் கண்டம் 4 அடிக்குக் குறையாமல் 6 அடி ஆழம் வரை இருக்க வேண்டும்.

களி மண், உவர் மண், களர் மண் முந்திரிச் சாகுபடிக்கு ஏற்றதல்ல.

**நிலத்தைச் சீர்திருத்துதல்—**

முந்திரிச் சாகுபடி செய்யவிருக்கும் நிலத்திலுள்ள செடிகள், கொடிகள், முட்புதர்கள், மரங்கள் ஆகியவைகளை வெட்டி அப்புறப்படுத்த வேண்டும்.

சரிவான நிலங்களில் மண்ணரிப்பைத் தடுப்பதற்குச் சம மட்ட வரப்புகளை அமைக்க வேண்டும்.

முந்திரித்தோப்பில் சுலபமாக வேலை செய்வதற்கும், மேற்பார்வையிடுவதற்கும் ஏற்றவாறு நிலத்தை 5 அல்லது 10 ஏக்கர் துண்டுகளாகப் பிரித்துக் கொள்ளவேண்டும்.

ஆடு, மாடுகளாலும், இதர விலங்குகளாலும் சேதமுறா வண்ணம் இருக்க முந்திரித் தோப்பு அமைக்க விருக்கும் நிலத்தைச் சுற்றி வேலி அமைத்தல் வேண்டும். வேலிச் செடிகளை வளர்த்து உயிர் வேலி அமைத்தல் சிறந்தது.

**இடைவெளி விடுதல்—**

முந்திரி பயிரிடச் செடிக்குச் செடியும் வரிசைக்கு வரிசையும் 22 அடி இடை வெளி விடுதல் நல்லது.

மண்வளத்தையும், ஆழத்தையும் பொறுத்து 20 முதல் 50 அடி வரையும் செடிக்குச் செடி இடைவெளி தேவைப்படும்.

முந்திரி பயிரிட முதலில் 12 அடி × 12 அடி அல்லது 15 அடி × 15 அடி இடைவெளியில் நட்டு சுமார் 10 முதல் 12 ஆண்டுகளில் மரங்களின் வளர்ச்சிக்குத் தக்கவாறு 24 அடி அல்லது 30 அடி இடைவெளிவிட்டு, ஊடேயுள்ள மரங்களைவெட்டி விடுவது நல்லது. இதனால் ஆரம்பக் காலத்தில், அதிக எண்ணிக்கையுள்ள மரங்களிருப்பதனால், அதிகமகசூல் கிடைக்கும். ஆரம்பக் காலத்தில் அதிக இடைவெளி தேவையில்லாததாலும், அதன் பின் அதிக இடைவெளி தேவைப்படுவதாலும், இம்முறையை மேற்கொள்வதன் மூலம் ஒவ்வொரு ஏக்கரிலிருந்தும் அதிக அளவு மகசூல் அடைய முடியும்.

### குழி எடுத்தல்

முந்திரி நடுவதற்கு முன்பே $1\frac{1}{2}$ அடி × $1\frac{1}{2}$ அடி × $1\frac{1}{2}$ அடி அளவுள்ள குழிகளை வெட்டி ஆறவிட வேண்டும். 22 அடி × 22 அடி இடைவெள்ளியில் ஏக்கருக்கு 82 குழிகள் தோண்ட வேண்டும்.

குழி[illegible] ணுடன் குழிக்கு ஒரு கூடை வீதம் நன்கு மக்கிய தொழு எரு அல்லது கம்போஸ்ட்டு எருவைச் சாம்பலுடன் கலந்து போட வேண்டும். இவ்வாறு செய்தால் முந்திரிக் கொட்டைகள் நன்கு முளைத்து, வேர் விட்டு வளரப் பயன்படும்.

**விதை அல்லது கன்று நடுதல் :—**

வேளாண்மைத்துறை வழங்கும் விதைகளையே உபயோகிக்க வேண்டும். ஒரு கிலோ எடையில் நன்கு முதிர்ந்த முந்திரிக் கொட்டைகள் 125 இருப்பின், அவை நல்ல விதைகளாகக் கருதப்படும். ஏக்கருக்கு $1\frac{1}{2}$ கிலோ விதை தேவைப்படும்.



முந்திரிக் கொட்டைகளைக் குழிகளில் நடுவதற்கு முன்பு, தண்ணீரிலோ அல்லது சாணப் பாலிலோ 24 மணி நேரம் ஊற வைப்பதால், சீக்கிரம் முளைக்கும்.

குழிக்கு 2 அல்லது 3 முந்திரிக் கொட்டைகளை ஆவணி, புரட்டாசி மாதங்களில் ஊன்ற வேண்டும்.

விதையின் காம்புப் பக்கம் மேல் நோக்கியும், சற்றுச் சாய்வாகவும் இருக்கும்படி வைத்துக் குழியில் ஒரு அங்குல ஆழத்தில் ஊன்ற வேண்டும். இவ்வாறு செய்வதால் நேராக முளைவந்து, செடியும் நேராக வளரும்.

விதைகளைக் குழிகளில் நடுவதைக் காட்டிலும், முந்திரிக்



கன்றுகளை பாலித்தீன் பைகளில் வளர்த்து நடுவதே சிறந்தது. 9 அங்குலம் × 5 அங்குலம் அளவுள்ள பாலித்தீன் பைகளில் 6 அங்குல உயரத்திற்கு மக்கிய தொழு எரு அல்லது கம்போஸ்ட் எருக் கலந்த, செம்மண்ணை நிரப்ப வேண்டும். பாலித்தீன் பையின் அடியில் இரு நுனிகளிலும், நடுவிலும் சிறு துவாரங்கள் ஏற்படுத்த வேண்டும். தரமான முந்திரி விதைகளைப் பைக்கு ஒன்ருக ஒரு அங்குல ஆழத்தில், விதையின் காம்பு மேலே இருக்கும்படி வைத்துப் பதிக்க வேண்டும். நிழற்பாங்கான இடத்தில் விதைகள் பதிக்கப்பட்ட பைகளை வரிசையாக வைத்துத் தண்ணீர் விடவேண்டும். இவ்வாறு பாலித்தீன் பைகளில் வளர்க்கப்பட்ட, 2 மாத வயதுடைய கன்றுகளை மழைக்கால ஆரம்பத்தில் (ஆடி-ஆவணி அல்லது ஐப்பசி மாதத்தில்) நடுவதே சிறந்தது.



பாலித்தீன் பையை அகற்றிவிட்டுக் குழியில் முந்திரிக் கன்றை மிகவும் கவனத்துடன் நட வேண்டும்.

### இளங்கன்றுகளுக்குப் பாதுகாப்பு

முந்திரிக் கன்றுகள் 15 அல்லது 20 நாட்களில் முளைத்து வரும்: முளைத்து வந்ததும் அதிக சூரிய வெளிச்சத்தினுல் பாதிக்கப்படாமலிருக்கப் பனைஓலைகள் கொண்டு மூடுதல் வேண்டும்.

பாலித்தீன் பைகளில் வளர்க்கப்பட்ட கன்றுகளாயின், நட்டவுடன் செடியைச் சுற்றி மண் அணைத்துச் செடிகள் ஆடாது இருக்கக் கொம்புகள் நட்டுக் கட்டுதல் வேண்டும்.

இளங்கன்றுகள் பூச்சிகளினுல் தாக்கப்பட்டால் பி.எச்.சி. 10 சதத் தூள் தூவ வேண்டும்.

### பின்செய் நேர்த்தி

கன்று முளைத்து 2 மாதம் ஆகிய பின்பு, நன்கு திடமாக வளர்ந்துள்ள ஒரு கன்றை மட்டும் ஒவ்வொரு குழியிலும் விட்டு விட்டு, மற்றவைகளைப் பிடுங்கி விடவேண்டும்.

ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் கன்று முளைக்காமல் உள்ள குழிகளில், 30 அல்லது 40 நாள் வயதுள்ள முந்திரிக் கன்றுகளை நட வேண்டும். இதற்காக முந்திரிக் கொட்டைகளை முதலில் நடும் பொழுது, சில தொட்டிகளில் தனியாக முந்திரிக் கொட்டைகளை நட்டு கன்று வளர்த்து வைக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இளம் முந்திரிக் கன்றுகளைச் சுற்றிக் காய்ந்த சருகுகளைப் பரப்பி ஈரம் காய்ந்து போவதைத் தடுக்கவேண்டும். மழை இல்லாவிட்டால், கன்று நன்கு வளரும் வரை, வாரம் ஒருமுறை கன்றுகளுக்குத் தண்ணீர் ஊற்ற வேண்டும்.

முந்திரித் தோப்பில் முதல் 3 அல்லது 4 ஆண்டுகளுக்கு நிலக்கடலை, பயறு வகைகள் ஆகியவைகளை ஊடு பயிராகச் சாகுபடி செய்யலாம். இவ்வாறு ஊடுபயிர் செய்தால் ஊடு பயிருக்குப் போதிய உரமிட வேண்டும். இல்லாவிட்டால் ஊடு பயிர் முந்திரி வளர்ச்சியைத் தடைப்படுத்தும். ஊடுபயிர் செய்வதனுல், ஆரம்பக் காலத்தில்—முந்திரி பலன் கொடுப்பதற்கு முன்பாக—ஓரளவு வருவாய் கிடைப்பதுடன், முந்திரிச் செடிகளுக்கு மறைமுகமாகப் பயன் கிடைக்கும்.

கடற்கரையோரங்களில் முந்திரி, புயல் காற்றினுல் பாதிக்கப்படுவதைத் தடுக்க முந்திரித் தோப்புகளின்ஓரத்தில் 3 முதல் 5 அடி இடைவெளியில் 3 வரிசைச் சவுக்கு நடுதல் வேண்டும்.

### உரமிடுதல்

இளம் முந்திரி மரங்களின் வளர்ச்சிக்குத் தொடர்ந்து சத்துக்கள் தேவைப்படுவதால், இளம் முந்திரித் தோட்டங்களுக்கு ஆண்டுதோறும் உரமிட வேண்டும். வெவ்வேறு வயதுடைய இளம் முந்திரி மரங்களுக்குக் கீழே குறிப்பிட்ட அளவில் உரமிட வேண்டும்.

கன்று முளைத்த அல்லது கன்று நட்ட மூன்று மாதங்களுக்குப் பிறகு ஒவ்வொரு கன்றுக்கும் $\frac{1}{4}$ கிலோ அமோனியம் சல்பேட், $\frac{1}{4}$ கிலோ சூப்பர் பாஸ்பேட் இடவேண்டும்.

2 அல்லது 3 ஆண்டு வயதுடைய மரங்களுக்கு ஒவ்வொரு மரத்திற்கும் $\frac{1}{2}$ கிலோ அமோனியம் சல்பேட், $\frac{1}{2}$ கிலோ சூப்பர் பாஸ்பேட், 100 கிராம் மூரியேட் ஆப் பொட்டாஷ், 10 கிலோ பசுந்தழை அல்லது பசுந்தாளுரம் வீதம் இட வேண்டும்.

4 முதல் 10-வது ஆண்டு வரை ஒவ்வொரு மரத்திற்கும் 1 கிலோ அமோனியம் சல்பேட், $\frac{3}{4}$ கிலோ சூப்பர் பாஸ்பேட், 200 கிராம் மூரியேட் ஆப் பொட்டாஷ், 20 கிலோ பசுந்தழை அல்லது பசுந்தாளுரம் இட வேண்டும்.

10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வயதுடைய ஒவ்வொரு மரத்திற்கும் $1\frac{1}{4}$ கிலோ அமோனியம் சல்பேட், 1 கிலோ சூப்பர் பாஸ்பேட், $\frac{1}{4}$ கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ், 50 கிலோ தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு அல்லது பசுந்தழை அல்லது பசுந்தாளுரம் இடவேண்டும்.

* இளம் முந்திரிச் செடியின் அடிப்பாகத்தைச் சுற்றிலும் 3 முதல் 4½ அடி இடைவெளியில் 1 அடி அகலமும், 9 அங்குல ஆழமும் உள்ள வட்ட வடிவக் கிடங்கு வெட்டி அதில் உரங்களை இட்டு நிரப்பி மண்ணால் மூட வேண்டும்.

* முந்திரிச் செடி வளர்ந்து கிளைத்து மரமாகிய பின்பு, கிளை பரவியுள்ள தூரத்திற்கு 1 அடி தூரம் உள்ளே தள்ளி 1 அடி அகலமும், 9 அங்குலம் ஆழமும் உள்ள கிடங்கு வெட்டி உரங்களை நிரப்பி மண்ணால் மூட வேண்டும்.

* உரமிடுவதற்கு ஐப்பசி (அக்டோபர்-நவம்பர்) மாதமே ஏற்றது.

* காய்க்கும் நிலையில் உள்ள மரங்களுக்கு, பூ பூப்பதற்கு 2 அல்லது 3 மாதங்களுக்கு முன்பே உரமிட வேண்டும்.

### பயிர்ப்பாதுகாப்பு

* பொதுவாக முந்திரி மரங்கள் நவம்பர், டிசம்பர் மாதங்களில் புதிய துளிர் விடும். அப்பொழுது பூச்சிகளும், நோய்களும் முந்திரியைத் தாக்கி, முந்திரிச் சாகுபடியாளர்களுக்குப் பெரும் நட்டத்தை ஏற்படுத்துகின்றன. இந்த நட்டத்தைத் தவிர்க்க வருமுன் தடுப்பாக மருந்து தெளிப்பதே நல்வழியாகும். ஒரு ஏக்கர் முந்திரித் தோப்பிற்கு 250 மில்லி லிட்டர் என்ட்ரின் மருந்தையும், 500 கிராம் தாமிர பூஞ்சாளக் கொல்லி மருந்தையும் (Copper Fungicide) 250 லிட்டர் தண்ணீரில் கலந்து புது துளிர் வரும் சமயத்தில் விசைத் தெளிப்பான் மூலம் தெளிப்பது சிறந்தது.

* முந்திரிப்பூக்கள் மலர்ந்த பின்பு 2—வது முறையாக மேற்கண்டவாறு மருந்து தெளிக்க வேண்டும்

*2-வதுமுறை மருந்து தெளித்த 20 நாட்களுக்குப் பிறகு, 3-வது முறையாக மேற்கண்டவாறு மருந்து தெளிக்க வேண்டும்.

* முந்திரி நட்ட 3-வது ஆண்டு முதல் பூத்துக் காய்க்க ஆரம்பிக்கும். ஆனால் அவ்வாறு காய்க்க விடக்கூடாது. 5 ஆண்டு முடிந்த பிறகு காய்க்க விடுதலே நிறைந்த மகசூல் கிடைக்க வழியாகும். எனவே 5-வது ஆண்டுவரை பூங்கொத்துகளை ஒடித்து விடுதல் வேண்டும்.

* முந்திரி நட்ட 6-வது ஆண்டு முதல் முந்திரி கொட்டை அறுவடை செய்ய முடியும். ஆனால் நட்ட 10 ஆண்டுகளுக்குப் பிறகே பெருமகசூல் கிடைக்கும்.

* ஆரம்ப பூக்களிலிருந்து உருவாகும் முந்திரிக்கொட்டைகள் முற்றிட 60 நாட்கள் ஆகும். பிந்திய பூக்களிலிருந்து உருவாகும் முந்திரிக் கொட்டைகள் முற்றிட 45 நாட்கள் ஆகும். கோடை காலத்தில் முந்திரிக் கொட்டைகள் குறுகிய காலத்தில் முற்றிவிடும்.

* ஆரம்பத்தில் முந்திரிக் கொட்டைகள் இளஞ்சிவப்பாகவோ, அல்லது பச்சையாகவோ இருக்கின்றன. முந்திரிக் கொட்டைகள் 45 நாட்களில் முழு வளர்ச்சி பெறுகின்றன. அதன்பின் அவைகள் உறுதி பெற்று சுருங்குகின்றன. முந்திரிப்பழம் 60 நாட்களில் பழுக்கின்றது. பழங்கள் முழுவதும் பழுத்தவுடன்கீழே விழுந்து விடுகின்றன. கீழே விழுந்தப் பழங்களைச் சேகரித்து கொட்டைகளைத் தனியே பிரித்து எடுக்க வேண்டும். இவ்வாறு எடுக்கப்பட்ட முந்திரிக் கொட்டைகள் சாம்பல் நிறமாகவும், வழவழப்பாகவும் பருப்புகள் ஆடாமல் நிறைந்தும் இருக்கும். முந்திரிக்கொட்டைகளின் ஈரத்தை 10 முதல் 12 சத அளவிற்குக் குறைத்திட 1 முதல் 3 நாட்கள் வரை காயவைக்க வேண்டும். நன்கு காயவைக்கப்பட்டு, ஆல்கத்தீன் உள்ளுறையுள்ள கோணிகளில் சேமிக்கப்பட்ட முந்திரிக் கொட்டைகள் 6 மாதங்களுக்குக் கூட கெடாமல் இருக்கும்.

### வரவும் செலவும்

* முந்திரிச் சாகுபடி செய்ய 5 ஆண்டு வரை ஏக்கருக்கு ரூபாய் 150 செலவு ஆகும்.

* ஆனால் இச்செலவு இடத்திற்கேற்ப ரூபாய் 125 முதல் 175 வரையும் ஆகலாம்.



* காய்ப்பிற்கு வந்த பின் (6—வது ஆண்டு முதல்) ஒரு ஏக்கரிலிருந்து குறைந்தது 150 கிலோ முந்திரிக்கொட்டைகள் கிடைக்கும். அதிலிருந்து குறைந்தது ரூபாய் 150 வருவாய் கிடைக்கும். உழுதல், உரமிடுதல் போன்ற திருந்திய முறைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தால், ஆண்டு தோறும் ஒரு ஏக்கரிலிருந்து ரூபாய் 500 முதல் ரூபாய் 1,000 வரை நிகர லாபம் பெறலாம்.

### வேண்டுகோள்

முந்திரியின் உற்பத்தி பெருகினால், உங்கள் வாழ்வு வளமடைவதுடன், இந்தியாவின் வளர்ச்சிக்குத் தேவையான அந்நியச் செலவாணியைப் பெருமளவில் ஈட்டவும் வழிபிறக்கும். எனவே, மேற்கூறப்பட்ட சாகுபடி முறைகளை மேற்கொண்டு முந்திரித் தோப்புகளை ஏற்படுத்தி, முந்திரி மகசூலைப் பெருக்கிட முந்தி வருவீர் என்று உழவர் பெருமக்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.



# முந்திரி செயல் விளக்கம் தந்தது பெரு மகசூல்

முந்திரி மரங்களுக்கு இரசாயன உரமிட்டு, பூச்சி, பூஞ்சாள மருந்துகளைத் தெளித்தால் உயர்ந்திடும் முந்திரி மகசூல்! இதை முந்திரிச் சாகுபடி செய்து வரும் உழவர்களுக்கு விளக்கிட வேண்டுமென்பதற்காக, முந்திரி கட்டுக்கோப்பு சாகுபடி திட்டத்தின் (Cashew Package Scheme) கீழ், 1970–71-ஆம் ஆண்டில் தென்னார்க்காடு மாவட்டத்தில் 140 செயல் விளக்கத் தளைகளும், திருச்சி மாவட்டத்தில் 100 செயல் விளக்கத் தளைகளும் அமைக்கப்பட்டன.

ஒவ்வொரு செயல் விளக்கத் தளையும் (Demonstration Plot) 160 முந்திரி மரங்களைக் கொண்டு அமைக்கப்பட்டது. அதற்கு அருகிலேயே 160 மரங்களைக் கொண்ட தடுப்புத் தளையும் ( Control Plot ) அமைக்கப்பட்டது. செயல் விளக்கத் தளையில் உள்ள ஒவ்வொரு மரத்திற்கும் 250 கிராம் தழைச்சத்து, 150 கிராம் மணிச்சத்து, 150 கிராம் சாம்பல் சத்து அளிப்பதற்காக, $1\frac{1}{4}$ கிலோ அமோனியம் சல்பேட், 1 கிலோ சூப்பர் பாஸ்பேட், $\frac{1}{4}$ கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய இரசாயன உரங்கள் அளிக்கப்பட்டன.

செயல் விளக்கத் தளையில் உள்ள முந்திரி மரங்களுக்குக் கீழே கொத்தி விடப்பட்டது. மரங்களுக்கு இடையேயுள்ள இடைவெளிகளில் ஊடு உழவு செய்யப்பட்டது.

ஒவ்வொரு செயல் விளக்கத் தளையிலும், பூச்சிகள் மற்றும் நோய்களின் தாக்குதலைத் தடுப்பதற்காக, வருமுன் தடுப்பு முறையாக ( Prophylactic measures), 250 மில்லி லிட்டர் என்ட்ரின் மருந்தையும், 500 கிராம் பைட்டலான் மருந்தையும், 250 லிட்டர் தண்ணீரில் கலந்து, நன்கு கலக்கி விசைத் தெளிப்பான் மூலம் 3 முறை தெளிக்கப்பட்டது.

தடுப்புத் தளையில் இரசாயன உரமிடுதல், கொத்திவிடுதல், ஊடுஉழவு செய்தல், மருந்து தெளித்தல் ஆகிய எதுவுமே செய்யப்படவில்லை.

செயல் விளக்கத் தளையில் உள்ள மரங்கள் தடுப்புத் தளையில் உள்ள மரங்களை விட நன்கு பூத்து, காய்த்து, அதிக மகசூல் கொடுத்தன. இதனால் தடுப்புத் தளைகளில் கிடைத்த மகசூலைவிட செயல் விளக்கத் தளைகளில் சராசரியாகக் கீழ்க்கண்டவாறு அதிக மகசூல் கிடைத்துள்ளது.

| ஊராட்சி ஒன்றியப் பெயர். | அமைக்கப் பெற்ற செயல் விளக்கத் தளைகள். | அதிகம் கிடைத்த மகசூல் சதவீதம். |
|---|---|---|
| கடலூர் | 18 | 135 |
| விருத்தாசலம் கம்மாபுரம். | 36 | 105 |
| குறிஞ்சிப்பாடி. | 18 | 77 |
| பண்ணுருட்டி | 68 | 70 |
| தென்னார்க்காடு. | 140 | 85 |
| ஆண்டிமடம் | 56 | 76 |
| செந்துறை | 29 | 60 |
| செயங்கொண்டம். | 15 | 45 |
| திருச்சிராப்பள்ளி | 100 | 74 |

மேற்கூறப்பட்ட 240 செயல் விளக்கத் தளைகளில் தென்னார்க்காடு மாவட்டம், கடலூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த தொண்டமாநத்தம் ஊரில், திரு கே. தேவநாத ரெட்டியார் அவர்கள்செயல்விளக்கத் தளையில் 160 முந்திரி மரங்களிலிருந்து 1,575 கிலோ முந்திரிக் கொட்டைகள் கிடைத்துள்ளன. அவருடைய தடுப்புத் தளையில் 977 கிலோ முந்திரிக் கொட்டைகள் மட்டுமே கிடைத்தன. எனவே இரசாயன உரமிட்டு மருந்து தெளித்ததால் 160 மரங்களிலிருந்து 598 கிலோ முந்திரிக் கொட்டைகள் அதிகமாகக் கிடைத்துள்ளன.

இந்த ஆண்டில் தென்னார்க்காடு மாவட்டத்தில் 180 செயல் விளக்கத் தளைகளும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 180 செயல் விளக்கத் தளைகளும் அமைக்க, இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அமைக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு அமைக்கப்படும் செயல் விளக்கத் தளைகள் 3 ஆண்டு காலத்திற்கு தொடர்ந்து இருக்கும். ஒவ்வொரு செயல் விளக்கத் தளைக்கும், ஒவ்வொரு ஆண்டும், இந்திய அரசு அளிக்கும் நிதியிலிருந்து கீழ்க்கண்டவாறு ரூபாய் 300·00 மானியம் வழங்கப்படும்.

| | ரூபாய் |
|---|---|
| இரசாயன உரம் | 220 |
| பயிர்ப்பாதுகாப்பு | 70 |
| செயல் விளக்கத் தளைக்குரிய விளம்பரப் பலகை. | 10 |
| மொத்தம் | 300 |

செயல் விளக்கத் தளைகளில் மேற்கொள்ளப்பட்ட, மேற்கூறிய சாகுபடி முறைகளை முந்திரிச் சாகுபடி செய்யும் உழவர் பெருமக்கள் அனைவரும் மேற்கொள்ளவேண்டும் என்று அன்புடன் வேண்டுகின்றோம்.

# சூழ்நிலைச் சீர்கேடு...

அ. இரா. இராமராசு

மனித குலம் பகுத்தறிவின் துணை கொண்டு நாள்தோறும் முன்னேறிக் கொண்டே உள்ளது. அறிவியலிலும், தொழிலியலிலும் இன்றையக் கண்டுபிடிப்புகள் நாளை பழையனவாகிக் கழிய, புதியன புகுந்து கொண்டே உள்ளன. அதன் விளைவாகப் பல வாழ்க்கை வசதிகள் பெருகி வந்துள்ளன; மக்கள் தொகைப் பெருக்கத்தையும் சமாளிக்க வேண்டிய நிலையிலிருக்கிறோம். தொழில் துறையில் எல்லையில்லாத புதுமைகள், உணவுத் துறையில் பசுமைப் புரட்சி, போக்குவரத்துத் துறையில் மறுமலர்ச்சி இவ்வாறு முன்னேற்றங்கள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. காட்டை அழித்து நவநாகரிக நகரங்கள் பல தோன்றியுள்ளன. இத்தகைய வியத்தகு முன்னேற்றப் பாதையிலே முன்னேறும் நாம், நம்மை அறியாமல் ஒரு நச்சுக் சூழலை நாமே உண்டாக்கி வருகிறோமென்பது வருந்தத்தக்க ஒன்று. சான்றாக, வாழ்க்கைக்கு உயிர் நாடிகளான முப்பொருளாம் நிலம், நீர், காற்று ஆகியவற்றின் தூய்மை நஞ்சாகிக் கொண்டேவருகிறது. அது மட்டுமல்ல உலகில் திட, திரவ, வாயு என்ற நிலைகளில் அடங்கும் பொருள்கள் யாவும் தூய்மை கெட்டு வருகின்றன. மிகப் பெரிய ஆபத்து நம்மைச் சூழ்ந்து வருகிறதென்பது இதனால் சொல்லாமலேயே புலனாகும். இவ்வாறு உருவாகும் நச்சுச் சூழலைத் தடுத்து நிறுத்த வழி வகைகளைச் செய்யாவிடில் 'யானை தன் தலையில் தானே மண்ணைப் போட்டுக் கொண்ட' கதையாகத்தான் முடியும். மனித குலமே இதனால் மாய வழியுண்டு. மனிதன் தன்னை அழிக்கத் தானே வழி தேடியவனாகிவிடுவான்.

எத்துணையோ முன்னேற்றத்திற்குக் காரணமான மனிதனே இந்நச்சுச் சூழலுக்குக் காரணமாகின்றானென்பதை நினைக்கும்போது '' தீதும் நன்றும் பிறர்தர வாரா '' என்ற புறநானூற்றுத் தொடரின் பொருட்செறிவு நமக்குப் புலனாகின்றது. காற்றின் நச்சுத் தன்மை பற்றி இங்கு எடுத்துக் கொள்வோம். காற்றின்கண் நச்சுச் சூழலின் தோற்றம், விளைவு, அதனைக் குறைக்க, தடுக்க, நீக்க வழிகள் ஆகியன குறித்து ஈண்டு விரிவாகக் காணலாம்.

### இயற்கையின் விந்தைச் சமநிலை

மனிதன் பல வழிகளில் கரியமில வாயுவை வெளிப்படுத்துகிறான். சுவாசிக்கும் பொழுது கரியமில வாயு வெளியிடப் பெறுகிறது. மனிதனால் ஆக்கப்பட்ட பல விந்தைச் சாதனங்கள் இடைவிடாது கரியமில வாயுவை உமிழ்ந்து கொண்டேயிருக்கின்றன.

தாவரங்களை நாம் நன்கு கூர்ந்து நோக்கினால் அதுவும் ஓர் ' இயற்கைத் தொழிற்சாலை ' என்பது நன்கு புலனாகும். சூரிய ஒளியில் பச்சைத் தாவரங்கள் உணவைத் தயாரிக்கும்போது நமக்கு வேண்டாத கரியமில வாயுவை உட்கொண்டு நமக்கு வேண்டிய ஆக்ஸிஜனை வெளிவிடுகின்றன. செடி, கொடி, மரங்கள் மண்ணில் புதையுண்டு எரிபொருளாக மீண்டும் நமக்குப் பயன்படுகின்றன. இவ்வெரிபொருள் மடியும்போது ஆக்ஸிஜனைப் பயன்படுத்திக் கொண்டு கரியமில வாயுவைத் தான் வெளியிடுகின்றன. இவ்வாறு தாவரங்களின் வாழ்க்கையின் தொடக்கத்தில் உட்செல்லும் கரியமில வாயு அவற்றின் முடிவு நிலையின்போது—மடிவு நிலையின்போது அவ்வாயு வெளிவரக் காண்கிறோம். இப்படி ஒரு சமநிலை இருக்கிறது.

மனிதனின் முன்னேற்றம் இச்சமநிலையைத் தற்பொழுது நன்கு கெடுத்து விட்டது. ஆகவே நச்சுக் சூழல் அதிகரித்துக் கொண்டேயுள்ளது.

### காற்றின் நச்சுத்தன்மை அதிகரிப்பதேன்?

1. தொழிற்சாலைகளின் பெருக்கத்தால் காற்றில் புகை, புகைக்கரி, கரியமில வாயு, தூசிகள், ஹைட்ரோகார்பன்கள் அதிகப்படுத்தப்படுகின்றன.

2. போக்குவரத்துச் சாதனங்களின் முன்னேற்றச் சின்னங்களான ஜெட் விமானங்கள், பேருந்து வண்டிகள், பஸ், லாரி, ஆட்டோ, ஸ்கூட்டர் ஆகியவற்றின் அதிகரிப்பால் இவை வெளிவிடும் கழிவுகள் கூடுதலாகிக் காற்றின் தன்மையைக் கெடுக்கின்றன.

3. தாவரங்கள் நாள்தோறும் குறைந்து வருகின்றன. காட்டை அழித்து நாடாக்குவதில் பெருமிதம் கொள்ளும் காலமிது. ஆகவே, இயற்கையிலேயே ஏற்படுத்தப்பட்ட நச்சுத் தன்மையைக் குறைக்கும் கருவிகளை நாம் குறைத்து வருகிறோம். எனவே நச்சுச் சூழல் அதிகரித்த வண்ணமிருக்கின்றன.

4. தரம் குறைந்த எரிபொருள்களைப் பயன்படுத்துதல், தாவரங்களுக்குப் பயன்படுத்தும் நச்சுக் கொல்லிகளின் அதிகரிப்பு ஆகியவற்றாலும் காற்றின் நச்சுத் தன்மை கூடுதலாகின்றது.

5. புதிய அணு ஆற்றல் அளப்பரிய அளவில் பயன்படுத்தப்படுவதாலும் காற்றின் நச்சுத் தன்மை ஓரளவு அதிகரிக்கின்றது.

6. மக்கட்தொகைப் பெருகுவதாலும் புகை பிடிப்போரின் எண்ணிக்கை அதிகரிப்பதாலும் காற்றின் நச்சுத் தன்மை கூடுதலாகி வருகின்றது.

இவ்வாறு பல முனைகளிலிருந்தும் நச்சுச் சூழலைப் பெருக்கி வருகிறோம்.

### நச்சுச் சூழலால் விளையும் கேடுகள்

1. உடல் நலம் கெடுகின்றது. இரத்தத்தின் தன்மை கெடுகிறது. '' நோயற்ற வாழ்வே

குறைவற்ற செல்வம் '' என்ற மொழிக்கே எடுத்துக் காட்டு இல்லாத நிலை இதனால் உருவாக்கப்படலாம்.

2. உடல் நலமில்லாதோர் இந்நச்சுக் காற்றைச் சுவாசிப்ப தால் அவர்கள் வாழ்க்கையின் எல்லையை விரைவில் எட்டிப் பிடித்து விடுவார்கள்.

3. காற்றின் வெப்ப தட்ப நிலை மாறுபடுகின்றது. இதனால் மழை, நீரின் தன்மை, நிலத் தின் தன்மை ஆகியன சீர்கேடு அடைகின்றன. தாவரங்களின் வளர்ச்சியும் தடைப்படுகின்றன.

4. காற்றிலேற்படும் களங் கங்கள் பல திசைகளிலும் பரவி அதன் கேடுகளைப் பரப்பிய வண்ணமிருக்கின்றன.

5. காற்றின் இயற்கைச் சம நிலை கெட்டுவிடுகிறது. இதனால் விளையும் இன்னல்கள் எண்ணிலடங்கா.

6. நமது செயல்களெல் லாம் சீர்கெட்டு, செம்மைகெட்டு இழிநிலை அடையும்.

7. 'இப்பூவுலகின் முடிவு வெகு தொலைவிலில்லை' என்ற ஒரு கற்பனைக் கெட்டாத கனவு நினைவாக மாறலாம். மனித சமுதாயமே வேறொடு அழிந்து படலாம் என்ற பேரறி ஞர்கள், கருத்து விரைவில் செயலாகலாம்.

8. புகை பிடிப்போர் தங்கள் உடல் நலனைக் கெடுத்துக் கொள்வதோடு ஓரளவு காற்றின் தன்மையைக் கெடுத்துப் பிறர் உடல் நலனுக்கும் தீங்கிழைக் கின்றனர்.

9. நச்சுக் காற்று, கட்டடங் களையும், தொழிற்சாலைக் கருவி களையும் சேதப்படுத்துகின்றன.

இத்துணை அழிவாற்றல் கொண்ட சிக்கலை அறவே ஒழிக்க வழிகள்தாம் என்ன ? அல்லது அதனைத் தடுத்து நிறுத்த நாமென்ன செய்தல் வேண்டும் ?

## நச்சுச் சூழலைத் தடுத்து நிறுத்தும் வழிகள்

1. தொழிற் சாலையிலிருந்து வெளிவரும் புகையினை வடி கட்டிச்சுத்தமாக்கி வெளிவிடுதல்

2. பேருந்து வண்டிகள் வெளி யிடும் புகையினை வடிகட்டுதல் அல்லது ஒருகுறிப்பிட்ட அளவினை வரையறுத்து அதற்குமேல் வெளிவிடும் வண்டிகளை நடமாட விடாமல் இருக்கச் செய்வது.

3. முடிந்த அளவுத் தாவரங் களையும், காடுகளையும், அழிக்கா திருத்தல்.

4, தாவரங்களையும், காடுகளை யும் உயர்ந்த அளவு உண்டாக்கி வளர்த்துப் பாதுகாத்தல்.

5. நம்மைச் சுற்றியுள்ள காற்றின் நச்சுத் தன்மையை அடிக்கடி கணக்கிட்டறிதல். நச்சுத் தன்மை கூடிய இடத் தில் அதனைக் குறைப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ளுதல்.

6. தொழிற்சாலை நிறைந்த நகரங்களில் மேலும் மேலும் அதிகமான தொழிற்சாலைகளை ஏற்படுத்தாதிருத்தல். புதிய தொழிற்சாலைகளைப் போதிய இட வசதி உள்ள இடங்களில் மட்டும் நிறுவுதல் ஆகிய வற்றால் நகரங்களில் உள்ள காற்றின் நச்சுத் தன்மை கூடுதலாகாமல் காக்க இயலும்.

7. தற்போது பேருந்து வண்டி கள் இயங்குவதற்கான எரி பொருள்களுக்கு (பெட்ரோல்) சிறிது தற்காலிகத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. லாரி உரிமை யாளர்கள் கூடுதல் விலை கொடுக்க இயலாத நிலையில் தரம் குறைந்த எரிபொருளைப் (மண்ணெண்ணெய்) பயன்படுத்தி இயந்திரத்தையும் சுற்றுச் சூழலையும் கெடுத்து வருகிறார் கள். இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பது மிகவும் இன்றியமையாதன.

8. எரிபொருள் குறித்து ஆராய்ச்சிகள் பல இன்னும் நடைபெற வேண்டும். குறைந்த விலையில் சிறந்த எரி பொருள் கண்டுபிடிக்க வழி வகைகள் செய்யலாம். சிறந்த புகை வடிகட்டிகளை மென் மேலும் கண்டு பிடித்தல். காற்றின் நச்சுத் தன்மையைக் கண்டுபிடிக்கச் சிறந்த எளிய முறைகளைக் கண்டு பிடிக்கலாம். தாவரங்களின் செயலை ஊக்கு வித்து நச்சுத் தன்மையைப் போக்கப் புதிய தாவரங்களைக் கண்டு பிடிக்கலாம்.

9. மக்கட்தொகைப் பெருக் கத்தை வேண்டிய அளவில் நிறுத்துதல் வேண்டும். புகை பிடிப்போரின் எண்ணிக்கையை ஓரளவு குறைக்க வேண்டும்.

10. மேற் கூறியவற்றைச் செயல்படுத்துவது மிக எளிது.



அரசியல்வாதியோ, விஞ்ஞானியோ, ஆளுநர்களோ தனித்தனியாக இப்பிரச்சினையை நோக்கினால் அது ஒரு தீராத தலைவலியாக இருக்கும். இம்மூவரும் சேர்ந்து இப்பிரச்சனையின் உண்மையான உருவத்தைக் கண்டு பிடித்து, அதன் தொல்லைகளை அலசிப் பார்த்து, அதற்கு ஓர் முடிவு கட்ட, இடைவிடாத முயற்சி எடுத்தலே சாலச் சிறந்ததாகும். ஒன்று பட்டால்தானே உண்டு வாழ்வு! எனவே இப்பிரச்சினையை இருந்த சுவடு தெரியாமல் செய்ய ஒன்றுகூடிச் செயல்பட வேண்டும்.

நமது நாட்டில் நாகபுரியில் மத்திய பொதுநல்வாழ்வுத் துறை பொறியியல் ஆராய்ச்சிக் கழகமும், பம்பாயில் பாபா அணு ஆராய்ச்சிக் கழகமும் காற்றின் நச்சுத் தன்மையைப் பற்றிய ஆய்வு நடத்தி வருகின்றன. பம்பாய், கல்கத்தா, டில்லி, சென்னை ஆகிய இடங்களில் காற்றின் தன்மையைக் கண்டறிந்துள்ளார்கள். காற்றின் குறைகளைக் கண்டு நிறைவு செய்ய அவை பயன்படும் என்று எதிர் நோக்கப்படுகிறது.

மெக்சிகோ நகரத்தில் உள்ள (5,000) தொழிற்சாலைகள் அந்நகரத்தையே நச்சுக் சூழலில் மிதக்க வைக்குமளவுக்கு மிக அதிகமாக உள்ளனவென்று கண்டுள்ளார்கள். பல வடிகட்டிகள் மூலம் அதனைத் தூய்மைப் படுத்தினர். இருப்பினும் அந்நச்சுத் தன்மையினால் விளையும் இன்னல்களைக் கண்டு அதிர்ந்து போய் இயற்கையை நாடி உள்ளனர். அந்நாட்டு அரசினர் 1,00,000 சிறிய மரங்களை ஹாலந்து நாட்டிலிருந்து பெற்றுப் பயிர் செய்ய உள்ளார்கள். மேலும், 4,00,000 மரங்களை நடுவதற்கான திடமான தீவிர திட்டத்தையும் கையாண்டுள்ளனர். இம்மரங்கள் காற்றில் ஆக்ஸிஜன் அளவை அதிகப்படுத்தி நச்சுத் தன்மையைத் திட்டவட்டமாகக் குறைத்துத் துன்பச் சூழலை நீக்கி இன்பச் சூழலை நல்கும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறார்கள்.

நாமும் ஏன் ஒரு சிறு புரட்சியை ஈண்டு நம் நாட்டில் கொண்டு வருதல் கூடாது? 'தனி மனிதன் ஒவ்வொருவனும் ஒவ்வொரு மரம் வைத்து நாள்தோறும் காக்கவேண்டும்' என்ற முறை அமைவது சிறந்ததோர் ஆக்கப் பணியாகும். மனித சமுதாயத்திற்கென நாம் செய்யும் இக்கடுகளவுத் தொண்டு கடலினும் பெரிதாகும்.

இப் பிரச்சினையை உலக நாடுகள் சபை நன்கு ஆராயத் தொடங்கியுள்ளது. அச்சபை இவ்வழியில் சில நாடுகளில் சோதனைகளை நடத்திக் காற்றின் தன்மையை ஆராய்ந்து வருகிறது. இம் முயற்சி ஒரு சீரிய முயற்சியேயாகும். நச்சுச் சூழலைக் குறைப்பதற்கு இதனால் விளையும் தொல்லைகளைப் பல நாடுகளும் உணரும் வகையில் அறியச் செய்தல் வெண்டும். இப்பிரச்சினையை மேலும்வளர விடாமல் இருப்பதற்கான வழி வகைகளையும் இது செய்ய இருப்பது வரவேற்கத்தக்கது. நம் நாட்டில் சென்னை போன்ற நகரங்களிலும் இவர்களது திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நம் நாட்டில் சென்னை நகரம்தான் குறைவான நச்சுச் சூழலையுடைய நகரமென்று கணக்கிட்டுள்ளனர். ''வருமுன் காப்பது நல்லதல்லவா!'' ஆகவே மிகவும் எச்சரிக்கையாயிருந்து சிறந்த வழி முறைகளைக் கையாண்டு நச்சுச் சூழலால் வரும் ஆபத்தை வருமுன்னர் களைதல் வேண்டும்.

நாமும் நமது நாட்டினரும் இப்பிரச்சினையை ஒழிக்க வழி முறைகளைப் பின்பற்றுதல் தலையாய கடமையாகும். இப்பிரச்சினை ஒரு பெரிய மலையாக வளர்ந்தொரு சில நாடுகளில் சிலர் ஆக்ஸிஜனை விலைக்கு வாங்கி நுகரும் நிலையை ஏற்படுத்தி உள்ளது. தொழில் துறையில் சிறந்து விளங்கும் சில நாடுகளில் மூக்கிற்கு மூடி அணிந்துதான் வெளிச் செல்ல வேண்டுமென்ற நிலையும் உருவாகியுள்ளது. இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது நம்நிலை இறும்பூதெய்தவேண்டிய ஒன்றேயாயினும், மேற்சொன்ன நிலை நமக்கும் வந்து விடாமல் காப்பதில் நாம் மிகவும் கவனம் செலுத்துவது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.



கடந்த 1969–70-ஆம் ஆண்டில் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள தியாக துர்க்கம் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் இந்தியாவிலேயே அதிகம் பேருக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. 2,849 பேர் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள். இத்தனை அறுவைச் சிகிச்சைகளையும் செய்த டாக்டர் கே. தட்சிணாமூர்த்திக்கு, ரூபாய் 5 ஆயிரம் பரிசு வழங்கியுள்ளது மைய அரசின் குடும்ப நலக் குழு.



16-11—5எ

# அவசரமான காலைவேளையில் ஐந்து செகண்டு ஒதுக்குங்கள்






## புத்துயிரளிக்கும் நெஸ்கா:பே ஒரு கப் தயாரித்து அருந்துங்கள் !

முற்றிலும் சுத்தமான காப்பி—தென்னிந்திய காப்பி விதைகளிலிருந்து தயாரிக்கப்பட்டது

# நெஸ்கா:பே




**உணர்ச்சி ஊட்டும் நெஸ்கா:பே**
**ஊக்கமளித்திடும் நெஸ்கா:பே !**

NCE 6367

ஒரு நெஸ்லெ தயாரிப்பு




# வழங்கியோர் பட்டியல்

| | ரூ. | காசு |
|---|---|---|
| முந்திய இதழின்படி தொகை | 23,17,394 | 53 |
| டாக்டர் எஸ். மகாதேவன், எம்.பி., பி.எஸ்., மாவட்டச் சுகாதார அதிகாரி, சேலம். | 42 | 00 |
| தலைமையாசிரியர், கழக உயர்நிலைப் பள்ளி, கீரனூர், | 30 | 00 |
| மாவட்ட ஆட்சித் தலைவர் .. .. | 8,844 | 00 |
| தாசில்தார், மேலூர் .. .. | 1,100 | 00 |
| நிர்வாக அலுவலர், ஆலத்தூர், டி. பி. மேலக்கால் கண்டார் கோட்டை, திருச்சி. | 101 | 00 |
| அரசினர் உயர்நிலைப்பள்ளி, திருப்போரூர். | 50 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், எல்லாபுரம், பெரியபாளையம் அஞ்சல். | 100 | 00 |
| மாவட்டக் கல்வி அதிகாரி, கோவில்பட்டி. | 37 | 00 |
| துணைப்பதிவாளர், (பால்பண்ணை), காஞ்சிபுரம். | 190 | 00 |
| தாசில்தார், திருச்செந்தூர் .. .. | 1,109 | 00 |
| மருத்துவ அதிகாரி, ஆரம்பச் சுகாதார நிலையம், ஆலங்குளம், தென்காசி. | 20 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், பாபநாசம். | 1,945 | 00 |
| நிர்வாகப் பொறியாளர், பொதுப்பணித் துறை, தூத்துக்குடி. | 550 | 00 |
| ஆதரைஸ்டு ஆபீசர், நிலச்சீர்திருத்தம், திருநெல்வேலி. | 595 | 00 |
| முத்திப்பாளையம் அரிஜன குடியிருப்பு, நிர்வாக அதிகாரி, பேரூராட்சி, கோவை மாவட்டம். | 10 | 11 |
| கூட்டுறவுப் பால் விநியோக ஒன்றியம் .. | 10,525 | 75 |
| தமிழ்நாடு முக்கிய சேவிகை, கிராம சேவிகைகளிடமிருந்து. | 10 | 00 |
| திரு ஸி. டி. நடராஜன், செயலாளர், தமிழ்நாடு சட்டசபைத் துறை. | 75 | 00 |
| ,, கே. புஜங்கராவ், துணைச் செயலாளர் .. | 20 | 00 |
| ,, டி. ராதாகிருஷ்ணன், உதவிச் செயலாளர், சட்ட மன்றத் துறை. | 20 | 00 |
| ,, ஜி. ராகவன், உதவிச் செயலாளர், சட்ட மன்றத் துறை. | 20 | 00 |
| ,, சி. கே. ராமசாமி, உதவிச் செயலாளர், சட்ட மன்றத் துறை. | 20 | 00 |
| ,, ஆர். மாணிக்கம், உதவிச் செயலாளர், சட்ட மன்றத் துறை. | 20 | 00 |
| ,, கே. சுந்தரராஜன், சட்ட மன்றத் துறை துறை விவாதக் குறிப்பேடாசிரியர். | 20 | 00 |
| ,, வி. ராஜமாணிக்கம், சட்ட மன்றத் துறை கண்காணிப்பாளர், | 10 | 00 |
| ,, பி. கே. கந்தசாமி, கண்காணிப்பாளர், சட்ட மன்றத் துறை. | 10 | 00 |
| ,, பெஞ்சமின் நெல்சன், கண்காணிப்பாளர், சட்ட மன்றத் துறை. | 10 | 00 |
| ,, டி. எஸ். துளசிராம், கண்காணிப்பாளர், சட்டமன்றத் துறை. | 10 | 00 |
| ,, ஆர். பாலகுரு, கண்காணிப்பாளர், சட்ட மன்றத் துறை. | 10 | 00 |
| ,, சி. ரங்காராம், கண்காணிப்பாளர், சட்ட மன்றத் துறை. | 10 | 00 |
| ,, சி. எஸ். ஜானகிராம், கண்காணிப்பாளர், சட்ட மன்றத் துறை. | 10 | 00 |

| | ரூ. | காசு |
|---|---|---|
| திரு பி. எம். பத்மநாபன், கண்காணிப்பாளர், சட்ட மன்றத் துறை. | 10 | 00 |
| ,, பி. பாலகிருஷ்ணன், கண்காணிப்பாளர், சட்ட மன்றத் துறை. | 10 | 00 |
| ,, பி. எஸ். கனகசபாபதி, கண்காணிப்பாளர், சட்ட மன்றத் துறை. | 10 | 00 |
| ,, டி. ஜே. சைமன், கண்காணிப்பாளர், சட்ட மன்றத் துறை. | 10 | 00 |
| ,, பி. கே. லட்சுமி நாராயணன், நிருபர், சட்ட மன்றத் துறை. | 10 | 00 |
| ,, பி. சி. ஜெயதேவ், நிருபர், சட்ட மன்றத் துறை. | 10 | 00 |
| ,, ஆர். வெங்கடேசன், நிருபர், சட்ட மன்றத் துறை. | 10 | 00 |
| ,, கே. டி. சுந்தரமூர்த்தி, நிருபர், சட்ட மன்றத் துறை. | 10 | 00 |
| ,, வி. ராமச்சந்திரன், நிருபர், சட்ட மன்றத் துறை. | 10 | 00 |
| ,, எம். முருகேசன், நிருபர், சட்ட மன்றத் துறை. | 10 | 00 |
| ,, ஜி. எஸ். அனந்தநாராயணன், நிருபர், சட்ட மன்றத் துறை. | 10 | 00 |
| ,, ஏ. எஸ். பாலசுப்ரமணியம், நிருபர், சட்ட மன்றத் துறை. | 10 | 00 |
| ,, கே. ஸ்ரீகண்டன், நிருபர், சட்ட மன்றத் துறை. | 10 | 00 |
| ,, எம். சந்திரசேகரன், நிருபர், சட்ட மன்றத் துறை. | 10 | 00 |
| ,, எஸ். நம்பி ஐயங்கார், நிருபர், சட்ட மன்றத் துறை. | 10 | 00 |
| ,, ஏ. கண்ணப்பன், நிருபர், சட்ட மன்றத் துறை. | 10 | 00 |
| ,, பி. ராஜமாணிக்கம், நிருபர், சட்ட மன்றத் மன்றத் துறை. | 10 | 00 |
| செல்வி கே. கலாவதி, நூலகர், சட்ட மன்றத் துறை. | 10 | 00 |
| திரு பி. கோதண்டராமன், அவைத்தலைவர், நுணுக்க உதவியாளர். | 10 | 00 |
| ,, ஆர். ராமன், உதவியாளர் .. .. | 5 | 00 |
| ,, எப். வி. சைமன், உதவியாளர் .. .. | 5 | 00 |
| ,, வி. சி. ஜான், உதவியாளர் .. .. | 5 | 00 |
| செல்வி வி. என். உமா, உதவியாளர் .. | 5 | 00 |
| திரு கே. கண்ணன், உதவியாளர் .. | 5 | 00 |
| ,, வி. சி. இராஜேந்திரன், உதவியாளர் .. | 5 | 00 |
| ,, ஜி. வெங்கடராமன், உதவியாளர் .. | 5 | 00 |
| ,, என். அரிச்சந்திரன், உதவியாளர் .. | 5 | 00 |

| | ரூ. | காசு |
|---|---|---|
| திரு கே. தியாகராசன். உதவியாளர் .. | 5 | 00 |
| ,, எம். கே. ஜோசப், உதவியாளர் .. | 5 | 00 |
| ,, எம். ஆர். சீனிவாசன். உதவியாளர் .. | 5 | 00 |
| ,, எஸ். கேசவராம் .. .. .. | 5 | 00 |
| ,, ஜெ. ரெஜினல்டு ஜான் .. .. | 7 | 00 |
| ,, எம். கோபாலன் .. .. .. | 5 | 00 |
| ,, சி. ஏ. சண்முகம் .. .. .. | 5 | 00 |
| ,, சாலமன் ஜெயபால் .. .. .. | 5 | 00 |
| ,, டி. சேக்கப் ஆர்தர், பண்டகசாலைக் காப்பாளர். | 5 | 00 |
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், உதவியாளர். | 5 | 00 |
| முனீர் உன்னிசா .. .. .. | 5 | 00 |
| திரு சி. கோபாலகிருஷ்ணன், பேரவைத் தலைவரின் அணுக்க உதவியாளர். | 5 | 00 |
| ,, கே. பி. ராஜன், உதவியாளர் .. | 5 | 00 |
| ,, கே. சி. சுந்தரராஜன், உதவியாளர் .. | 5 | 00 |
| ,, வி. ராஜாராமன், உதவியாளர் .. | 5 | 00 |
| ,, எஸ். கணேசன், இளநிலை உதவியாளர் .. | 3 | 00 |
| ,, சி. கே. ராஜசேகரன், இளநிலை உதவியாளர். | 3 | 00 |
| ,, ஆர். ராமசுப்ரமணியம், இளநிலை உதவியாளர். | 3 | 00 |
| ,, திருமதி பவானி சுப்பையா, இளநிலை உதவியாளர். | 3 | 00 |
| திரு எல். ஆர். தேசிகாச்சாரி, இளநிலை உதவியாளர். | 3 | 00 |
| ,, எஸ். சிங்காரவேலு பாபு, இளநிலை உதவியாளர். | 3 | 00 |
| ,, நடராஜ சுந்தரம், இளநிலை உதவியாளர். | 3 | 00 |
| ,, வி. எஸ். கிருஷ்ணகுமார், இளநிலை உதவியாளர். | 3 | 00 |
| ,, எஸ். பெரியசாமி, இளநிலை உதவியாளர். | 3 | 00 |
| ,, எஸ். குருநாதன், இளநிலை உதவியாளர். | 3 | 00 |
| ,, எம். ஜே. பாய், இளநிலை உதவியாளர். | 3 | 00 |
| ,, எஸ். ராஜசேகரன், இளநிலை உதவியாளர். | 3 | 00 |
| ,, ஆர். சீனிவாசராகவன், சுருக்கெழுத்தாளர். | 3 | 00 |
| ,, என். தண்டாயுதபாணி, சுருக்கெழுத்தாளர். | 3 | 00 |
| ,, ஆர். பாலசுப்பிரமணியம், ஏ.டி.ஏ., | 3 | 00 |
| செல்வி என். துளசிபாய், சுருக்கெழுத்தாளர். | 3 | 00 |

| | | |
|---|---|---|
| திருமதி எஸ். ரேவதி, சுருக்கெழுத்தாளர் | 3 | 00 |
| திரு ஆர். பாலன், சுருக்கெழுத்தாளர் .. | 3 | 00 |
| ,, என். கிருஷ்ணன், தட்டெழுத்தர் .. | 3 | 00 |
| ,, ஆர். அனந்தகிருஷ்ணன், தட்டெழுத்தர். | 3 | 00 |
| செல்வி பி. சரஸ்வதி, தட்டெழுத்தர் .. | 3 | 00 |
| ,, ஜே. லலிதா, தட்டெழுத்தர் .. | 3 | 00 |
| ,, எஸ். ஸாலமன் ஜான்சன், தட்டெழுத்தர் | 3 | 00 |
| திருமதி சின்னசாமி, தொலைபேசி ஆப்ரேட்டர் | 3 | 00 |
| திரு பி.கே சுந்தரராஜ், எழுத்தர் .. .. | 3 | 00 |
| ,, பி. டி. சம்பத்குமார், எழுத்தர் .. | 3 | 00 |
| ,, ஏ. டி. மூர்த்தி, எழுத்தர் .. .. | 3 | 00 |
| ,, பி. சுப்பிரமண்யன், எழுத்தர் .. .. | 3 | 00 |
| ,, ஏ. குப்பன், எழுத்தர் .. .. .. | 3 | 00 |
| ,, வி. மதிவாணன், எழுத்தர் .. .. | 3 | 00 |
| ,, எம். வி. கோவிந்தன், நூலக உதவியாளர். | 3 | 00 |
| ,, டி. நந்தீசன், சுகாதார ஆய்வர் ... | 3 | 00 |
| ,, வி. பச்சையப்பன், தொலைபேசி ஆப்ரேட்டர். | 3 | 00 |
| ,, டி. மனோகரன், தொலைபேசி ஆப்ரேட்டர் | 3 | 00 |
| ,, எம். ஆர். சுந்தரம், தொலைபேசி ஆப்ரேட்டர். | 3 | 00 |
| ,, கே. செல்லப்பன் பிள்ளை, தொலைபேசி ஆப்ரேட்டர். | 3 | 00 |
| ', ஏ. நடேசன், தொலைபேசி ஆப்ரேட்டர் | 3 | 00 |
| ,, ஏ. நடனசேகர், தொலைபேசி ஆப்ரேட்டர். | 3 | 00 |
| ,, ஆர். கிருபானந்தம், தொலைபேசி ஆப்ரேட்டர். | 3 | 00 |
| ,, கே. சீனிவாசன், தொலைபேசி ஆப்ரேட்டர். | 3 | 00 |
| ,, சிவராஜ், தொலைபேசி ஆப்ரேட்டர் .. | 3 | 00 |
| ,, சாரங்கபாணி, தொலைபேசி ஆப்ரேட்டர். | 3 | 00 |
| ,, ஐ. ராமதாஸ், தொலைபேசி ஆப்ரேட்டர். | 3 | 00 |
| ,, ரங்கநாதன், தொலைபேசி ஆப்ரேட்டர். | 2 | 00 |
| ,, ராஜேந்திரன், தொலைபேசி ஆப்ரேட்டர். | 1 | 00 |
| ,, ஜி. ஜோசப், சார்ஜண்டு .. | 3 | 00 |
| ,, பெருமாள்சாமி, துணைப் பேரவைத் தலைவரின் அணுக்க உதவியாளர். | 5 | 00 |
| செல்வி ஆர். கிருஷ்ணவேணி, இளநிலை உதவியாளர். | 3 | 00 |
| நாகர்கோவில் தி.மு.க. பொதுக்கூட்ட வசூல். | 5 | 01 |
| குற்றாலம் தி.மு.க. பொதுக்கூட்ட வசூல். | 15 | 00 |
| தொட்டியம் அரசினர் உயர்நிலைப்பள்ளி .. | 10 | 00 |
| திரு எஸ். ஆர். நடராஜன், மணமேடு .. | 5 | 00 |
| ,, கே. எஸ். ராஜா சண்முகவேல், கூத்தனூர். | 101 | 00 |
| கிருஷ்ணா அண்டு கம்பெனி, ஒயின் மெர்ச்சண்டு, சென்னை. | 101 | 00 |
| திரு பெரியசாமி, தலைவர், கோவில்பட்டி நகராட்சி. | 101 | 00 |
| திரு தேவராசன், அறிவகம், ராயபுரம் .. | 101 | 00 |
| ,, எம். எஸ். பாண்டியன், பள்ளத்தூர், காவல்நிலையம். | 5 | 05 |
| தென்னிந்திய பரிசுச் சீட்டுச் சங்கம், அண்ணா சாலை, சென்னை-2. | 201 | 00 |
| தமிழ்நாடு இளநிலை உதவியாளர் சங்கம், சென்னை. | 51 | 00 |
| தி.மு.க. கிளை பெரியபட்டிணம், இராமநாதபுரம் மாவட்டம். | 51 | 00 |
| திரு தேவநாதன், (கோடம்பாக்கம் பொதுக்கூட்டம்). | 3 | 00 |
| ,, பாலகிருஷ்ணன், (கோடம்பாக்கம் பொதுக்கூட்டம்). | 1 | 00 |
| ,, நடேசன், (கோடம்பாக்கம், பொதுக்கூட்டம்). | 2 | 00 |
| ,, மருதாசலம், கோடம்பாக்கம் பொதுக்கூட்டம்). | 2 | 00 |
| ,, ரங்கநாதன், (கோடம்பாக்கம் பொதுக்கூட்டம்). | 5 | 00 |
| ,, மயில்வாகனன், (கோடம்பாக்கம் பொதுக்கூட்டம்). | 1 | 00 |
| ,, சுயம்புராமன், (கோடம்பாக்கம் பொதுக்கூட்டம்). | 10 | 00 |
| ,, ஆர். பிரகாஷ் (கோடம்பாக்கம் பொதுக்கூட்டம்). | 20 | 00 |
| அண்ணா சமூகப்பணி மன்றம் .. | 25 | 00 |
| திரு பாலன், அண்ணா சமூகப் பணி மன்றம் ... | 2 | 00 |
| ஆட்சியாளர், வட ஆர்க்காடு மாவட்டம், | 700 | 00 |
| செண்பகம் தியேட்டர், பொன்னமராவதி, | 104 | 27 |
| நிர்வாக அலுவலர், பெரம்பலூர் பேரூராட்சி. | 45 | 00 |
| நிர்வாக அலுவலர், குரும்பலூர் டி. பி. திருச்சி மாவட்டம். | 101 | 00. |
| மொத்தத் தொகை .. | 23,45,131 | 72 |

# பெரியவனானதும் நான் ஒரு டாக்டர் ஆவேன்

அவனது ஆசை நியாயமானது. உங்கள் சிறுவனும் அதைப்போல் ஆசைப் படலாம். ஆசை நிறை வேறத் தேவையான பணத்திற்கு நீங்கள் இப்பொழுதே எல்.ஐ.சி. யின் 'கல்வி ஆண்டுத் தொகை பாலிசி' மூலம் வகை செய் யுங்கள்.

ஆயுள் இன்சூரன்சு போல
ஆதரவு தருவது எதுவுமே இல்லை.



EP-LIC-5/71

# நேருவின் வாழ்விலே...



நேருவின் சமையற்காரர்; இருதய நோய்க்கு ஆளாகிவிட்டார். நீண்ட காலமாக இருந்து வரும் சமையற்காரர் அவர். அதனால் அவரிடம் மிகுந்த அன்பு செலுத்திவந்தார் நேரு. "இருதய நோய்க்கு ஆளானதால், மாடிப்படிகளில் ஏறி வரவேண்டாம். நான் பயன்படுத்தும் லிப்டிலேயே ஏறி வர வேண்டும்" என்று அவருக்குக் கட்டளையிட்டிருந்தார் நேரு. அதன்படியே அந்தச் சமையற்காரர் நடந்து கொண்டார். ஆனால் எப்படியோ ஒருநாள் லிப்டை மறந்துவிட்டு, மாடிப் படிகளில் ஏறிச் சென்றார் அந்தச் சமையற்காரர். அதனைப் பார்த்துவிட்டார் நேரு.

"இன்னொரு முறை மாடிப் படிகளில் ஏறி வந்தால் உன்னைக் கூண்டில் அடைத்து, திஹார் சிறைச் சாலைக்குள் தள்ளுவேன்"—என்றார்.

மற்றொரு சமயம்:

சமையற்காரர் விடுமுறையில் தனது சொந்த ஊருக்குப் புறப்பட்டார். நேருவிடம் விடை பெற்றுக் கொள்ளச் சென்றார். அப்போது "பணம் இருக்கிறதா" என்று நேரு கேட்டார். "போதிய பணம் இல்லை" என்று இழுத்தவாறே பதிலுரைத்தார் சமையற்காரர்.

உடனே அவருக்கு அறுபது ரூபாய் கொடுத்தார் நேரு.

"இதை இந்துவிடம் (இந்திரா காந்தி) சொல்ல வேண்டாம். சொன்னால் உன் சம்பளத்தில் பிடித்துக் கொண்டு விடுவார்" என்று ஓர் எச்சரிக்கையும் கொடுத்தார் அவர் சமையற்காரருக்கு.

* * *

ஒருநாள் புதுடெல்லி புத்தகக் கடை ஒன்றினுள் சென்றார் நேரு. அங்குள்ள புத்தகங்கள் எல்லாம் அவரைக் கவர்ந்தன. எதை வாங்குவது என்பதறியாமல் திகைத்தார். எப்படியோ ஒரு சில புத்தகங்களை மட்டும் தேர்ந்தெடுத்துவிட்டார். அவைகளை வாங்கிக் கொண்டு வெளியே வந்தார்.

வெளியே பொது மக்கள் கூட்டம் அவரைக் காண்பதற்குக் கூடி விட்டது. அந்த மக்கள் வெள்ளத்தைத் தாண்டித் தனது ஊர்திக்கு எப்படிச் செல்வது என்று சிந்தித்தார். அங்கு பலூன் விற்றுக் கொண்டிருந்த ஒருவனிடம் ஒரு கொத்து பலூன்களை வாங்கிக் கொண்டார். பிறகு அதைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு நடந்தார். அந்த பலூனை அடையாளம் வைத்துக்கொண்டு அவரைப் பின் தொடர்ந்தார்கள் பொதுமக்கள். கையிலிருந்த பலூனைச் சட்டென்று அருகிலிருந்த ஒருவரிடம் கொடுத்துவிட்டு, நேரு, வேறு பக்கம் திரும்பி நடந்து தமது ஊர்தி இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். பொது மக்கள், பலூன் வைத்திருந்தவரையே பின் தொடர்ந்து சென்று கொண்டிருந்தார்கள். நேரு அதுதான் சமயம் என்று தனது ஊர்திக்குள் ஏறிக் கொண்டார். மறுவினாடி, ஊர்தி புறப்பட்டு விட்டது. ஊர்தி புறப்படும் ஒலியைக் கேட்ட பிறகுதான், நேரு தங்களை ஏமாற்றிச் சென்று விட்டார் என்பது பொது மக்களுக்குப் புரிந்தது.



* * *

நேருவும் ஜெயப்பிரகாஷ் நாராயணனும் நெருங்கிய நண்பர்கள். ஒருவர்க்கொருவர் உடன் பிறப்பாகக் கருதிக் கொண்டவர்கள். ஒருவர்க்கொருவர் கடிதம் எழுதிக் கொள்ளும் போதெல்லாம் "அன்புச் சகோதரா" என்று தான் இருவருமே குறிப்பிட்டு வருவார்கள்.

ஒரு சமயம் நேரு அவர்கள் வெளியிட்டிருந்த ஒரு கருத்துப் பற்றி, ஜெயப்பிரகாஷ் ஆத்திரம்

# முன்னேற்றத்திலும் செழிப்பிலும் எமது பங்கு

# TANSI

நன்கு நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழிற்கூடங்களோடு தனது முழு உழைப்பைக் கொண்டு நாட்டிற்கும் தொழிலுக்கும் பல துறைகளில் பணிபுரிகிறது

## தொழில்

* கட்டுமான கட்டமைப்புகள்
* தரமான வார்ப்பு இரும்பு வார்ப்படங்கள்
* எஃகு, பித்தளை ஆகியவற்றில் வடிக்கப்பட்ட உறுப்புகள்
* மின் தடுப்புச் சாதனங்கள்
* விஞ்ஞான வகை கண்ணாடி உபகரணங்கள்
* இனாமல், டிசிசி கம்பிகள்

## விவசாயம்

* வேளாண்மைக் கருவிகள்
* பயிர் பாதுகாப்பு கருவிகள்
* டிராக்டர் தொடர்பு வண்டி
* மோட்டார் விசையேற்றங்கள்
* கரும்பாலை
* வடிமுனைக் குழாய்கள்

## அன்றாட உபயோகப் பொருட்கள்

* எஃகு, மரமேஜை, நாற்காலிகள்
* மருத்துவமனை சாமான்கள்
* கதவுகளுக்கான பூட்டு
* தாழ்ப்பாள்கள்
* சுகாதார வசதி பொருட்கள்
* பீங்கான் பொருட்கள்
* காலணிகள்
* தோலணிப் பொருட்கள்

## ஏற்றுமதி

* பல வண்ண சாதாரண தோல்கள்
* நீலநிற ஈரமான குரோம் தோல்கள்
* கட்டுமான கட்டமைப்புகள்

தகவல்களுக்கு அணுகவும்
நிர்வாக இயக்குநர்

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)

35/2 உட்ஸ் சாலை, சென்னை-2.

கொண்டு விட்டார். அதன் பிறகு நேருவுக்கு, அவர் கடிதம் எழுத வேண்டி வந்தபோது, வழக்கமான ''அன்புச் சகோதரா'' என்ற வாசகத்தை ஒதுக்கி வைத்துவிட்டு ''அன்புள்ள இந்தியத் தலைமை அமைச்சர் அவர்களே'' என்று குறிப்பிட்டிருந்தார் ஜெயப்பிரகாஷ்.

இந்தக் கடிதத்தைப் படித்தவுடன் நேரு உடனடியாக ஜெயப்பிரகாஷுக்குப் பதில் கடிதம் எழுதினார்.

''அன்புச் சகோதரா!

நம்முடைய சகோதர பாசத்தைக் கருத்து மாறுபாடுகள் ஏன் பிரிக்க வேண்டும்? என்றும் நாம் சகோதரர்களாகவே இருப்போம். அரசியல் அபிப்பிராய பேதங்கள் நம் அன்புக்குக் குறுக்கே நிற்க வேண்டாம்''—இவ்வாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார் நேரு.

அதனைப் படித்த ஜெயப்பிரகாசர் நேருவின் அன்புள்ளத்தை எண்ணி வியந்தார்; ஆத்திரத்தில் நிதானம் தவறிவிட்ட தனது கோப உள்ளத்தை எண்ணி வேதனையடைந்தார்.

* * *

**1946**-ஆம் ஆண்டு; நேரு அவர்கள் லாகூரிலிருந்து அமிருதசரசுக்குப் போய்க் கொண்டிருந்தார். வழியில் அவரது ஊர்தி பழுதடைந்துவிட்டது. அப்போது அந்த வழியிலே வந்த ஒருவர் அந்தக் காட்சியைப் பார்த்தார். தனது ஊர்தியை நேருவுக்குக் கொடுத்துதவினார். நேருவும் குறித்த நேரத்தில் அமிருதசரசுக்குப் போய்ப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

சில வருடங்கள் கழித்து அதே நபர் அலகாபாத்துக்குச் செல்ல நேர்ந்தது. அப்போது நேரு அங்கே இருந்தார்; எனவே, அவரைக் காண விரும்பினார். வழக்கமான ஆங்கிலப் பாணியில் உடையணிந்திருந்த அந்த நண்பர், தனது இல்லத்தரசியின் தூண்டுதலால் புதிதாகக் கதர் ஆடை வாங்கி அணிந்து கொண்டு ஆனந்தபவனத்துக்குச் சென்றார். அங்கே நேருவைச் சந்தித்தார்.

''என்னை உங்களுக்கு அடையாளம் தெரிகிறதா? நான் [illegible] என்று இழுத்தார்.

உடனே நேரு குறுக்கிட்டார்.

''உங்களை எனக்கு அடையாளம் புரியவில்லை. அமிருதசரசுக்குப் போவதற்கு ஊர்தி கொடுத்துதவிய நண்பர் ''சூட்'' அணிந்திருந்தார். அவர் என்னை மீண்டும் பார்க்க வரும்போது தனக்குப் பழக்கமில்லாத உடையை அணிந்து இப்படி ''பபூன்'' போல வருவார் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை'' என்றார்.

ஒருமுறை ஒருவரைப் பார்த்திருந்தாலும் கூட, அவரைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் திறமை நேருவிடம் இருந்தது என்பதற்கு இந்நிகழ்ச்சி சான்று.

* * *

இந்திய விடுதலைக்குப் பின்னர் ... ... ..

ஒருநாள். . . . . . . . . . . . .காலை! நேரு தனது அலுவலகத்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். ரோஜா மலரை அவருக்கு அணிவிப்பதற்காக, ஒரு சிறுமி, அவரது இல்லத்தில் காத்திருந்தாள். ஆனால் அவளால் அம்மலரை அவரிடம் சேர்ப்பிக்க முடியவில்லை. ஏமாற்றத்துடன் வீடு திரும்பினாள். என்றாலும் அவள் தனது முயற்சிக்கு ஓய்வு கொடுத்துவிடவில்லை. ஒவ்வொருநாள் காலையிலும், அன்று மலர்ந்த புது ரோஜா மலருடன் நேருவின் இல்லத்து வாயிலில் காத்திருந்தாள். ஒருநாள்! அவள் ரோஜா மலரை ஏந்திக் கொண்டு காத்திருந்ததைக் கண்டுவிட்டார் நேரு. புன்னகை புரிந்தவாறு அம்மலரை வாங்கிக் கொண்டார். மிகுந்த விருப்பமுடன் தனது அங்கியில் பொருத்திக் கொண்டார். அந்தச் சிறுமியின் இதயம் கொள்ளை மகிழ்ச்சியடைந்தது. வீடு திரும்பினாள். அந்தக் காட்சியைக் கவனித்த அவர் வீட்டுத் தோட்டக்காரன், நேருவுக்கு ரோஜாவென்றால் பிடிக்கும் என்பதை அறிந்து கொண்டான். அன்றிலிருந்து ஒவ்வொரு நாளும் அன்றலர்ந்த ரோஜா மலரைப் பறித்து அவருக்கு அளித்துவந்தான். அவரும் தொடர்ந்து, அங்கியில் அணிந்து வந்தார். டெல்லியில் இருந்த போது மட்டுமல்ல — அவர் எங்குச் சென்றாலும் ரோஜா மலரை அணிந்து வந்தார்.

—தொகுப்பு: **எஸ். எஸ். சுந்தரம்.**



"ரோகிணி—125" என்ற தலைப்பைக் கண்டதும், இது ஒரு நட்சத்திரமோ என்று எண்ணிவிடாதீர்கள்! "ரோகிணி-125" என்பது கேரளாவில் உள்ள 'தும்பா' ராக்கெட் நிலையத்தில் தயாரிக்கப்பட்ட ராக்கெட்டின் பெயராகும்.

"ரோகிணி—125" என்ற இந்தியாவின் முதல் ராக்கெட், 9-10-1971 அன்று, சென்னையிலிருந்து 50 மைல் தொலைவில் உள்ள 'சிகரி கோட்டா' (ஆந்திர மாநிலம்) ராக்கெட் தளத்திலிருந்து பறக்க விடப்பட்டது. பரிசோதனை வெற்றிகரமாக முடிந்தது. அதைப் பார்வையிட வந்த அணுசக்திக் குழுவின் இயக்குநர், திரு விக்ரம்சாராபாய் அவர்கள் "இன்னும் 10 ஆண்டுகளில் மற்ற நாடுகள் வான வெளி ஆராய்ச்சியில் எந்த அளவு முன்னேறி இருக்கிறதோ அந்த அளவு இந்தியாவும் முன்னேறி விடும்" என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

10-10-1971 அன்று காலை மேலும் 2 ராக்கெட்டுகள் சிகரி கோடா தீவில் இருந்து பறக்க விடப்பட்டன. இரண்டு ராக்கெட்டுகளும் வெற்றிகரமாகப் பறந்து சென்றன. கடல் மட்டத்திலிருந்து 13 கிலோ மீட்டர் உயரம் பறந்து சென்றன. ராக்கெட்டில் பொருத்தப்பட்டிருந்த இயந்திரங்கள் தொடர்ந்து பூமிக்குச் செய்தி அனுப்பிக் கொண்டிருந்தன. இந்த ராக்கெட் ஒவ்வொன்றும் $2\frac{1}{2}$ மீட்டர் உயரமும், 40 கிலோ எடையும் கொண்டது.

# அந்நியச் செலாவணிக்கு இந்தியக் காஃபி!

இந்திய காபி என்றாலே, இன்னும் கொஞ்சம் அருந்த வேண்டும் என்ற ஆசை ஏற்படுகிறது !''

இப்படிக் கூறுகிறார்கள் அயல்நாட்டார் பல.

இந்திய காபி மேற்கு ஜெர்மனி, பெல்ஜியம், நெதர்லாந்து, பிரான்சு, பிரிட்டன், ஸ்வீடன், நார்வே, கிழக்கு ஜெர்மனி, யூகோஸ்லேவியா, சோவியத் யூனியன், போலந்து, ஹங்கேரி முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்திய காபியின் தரம் வெளி நாட்டில் பெரும் புகழ் பெற்றுள்ளது.

அயல் நாடுகளிலும் பெரும் புகழ் பெற்றுள்ள இந்திய காபி, சென்ற ஆண்டில் ஏற்றுமதியின் மூலம் 22·41 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை இந்தியாவுக்கு ஈட்டிக் கொடுத்துள்ளது !

ஆனால், அந்நியச் செலாவணியை அள்ளித் தரும் இந்திய காபியில், 99 சதம் தென்னகத்தில் தான் விளைகிறது என்பது பலருக்குத் தெரியாது.

நம்நாட்டில் 1,28,475 ஹெக்டேர் நிலப்பரப்பில் காபி பயிரிடப்படுகிறது. இப்பரப்பில் 60 சதம் மைசூர் மாநிலத்திலும், 21 சதம் கேரள மாநிலத்திலும் 13 சதம் தமிழ்நாட்டிலும் தான் உள்ளது. ஆந்திரம், மராட்டியம், ஒரிசா, அசாம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களிலும், அந்தமான்-நிக்கோபார் தீவுகளிலும் மிகவும் குறைந்த பரப்பில்தான் காபி பயிராகிறது. எனவே, இந்தியாவின் வளர்ச்சிக்குத் தேவையான அந்நியச் செலாவணியை இந்திய காபி மூலம் ஈட்டித் தருவதில் தமிழ்நாடும் கணிசமான அளவில் துணை நிற்கிறது என்பது நமக்கெல்லாம் பெருமையளிக்கும் செய்தியாக உள்ளது.

இந்தியாவில் 47,882 காபித் தோட்டங்கள் உள்ளன. இந்தியாவில் 'அராபிகா' என்ற ரகமும், 'ரொபாஸ்டா' என்ற ரகமும் தான் முக்கியமாகப் பயிரிடப்படுகின்றன. 'அராபிகா' ரகம் 76,739 ஹெக்டேரிலும், 'ரொபாஸ்டா' ரகம் 51,736 ஹெக்டேரிலும் பயிரிடப்படுகின்றன.

நம் நாட்டில் காபி உற்பத்தி ஆண்டிற்காண்டு அதிகரித்து வருகிறது. காபி வாரியம் 1970–71 ஆம் ஆண்டில் 1,08,000 டன் காபி விதைகளைப் பெற்றுள்ளது. இதில் 58,000 டன் 'அராபிகா' ரகமும் 50,000 டன் 'ரொபாஸ்டா' ரகமும் அடங்கியுள்ளன. இந்திய காபித் தொழில் கணிசமான முன்னேற்றம் அடைய காபி வாரியமே காரணம் என்றால் மிகையாகாது.

காபி வாரியம் வெளிநாட்டு வர்த்தக அமைச்சகத்தின்கீழ், சுய அதிகார நிறுவனமாக இயங்கி வருகிறது. காபி வாரியம் பின்கண்ட பணிகளைச் செய்கின்றன.



(1) காபிச் சாகுபடியாளருக்கு உதவி வழங்குவது.

(2) காபிச் சாகுபடி பற்றிய ஆராய்ச்சிக்கு உதவுவது.

(3) காபித் தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு நல்வாழ்வுப் பணிகளைச் செயல்படுத்துவது.

(4) காபி விற்பனை செய்வது.

(5) இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் காபி உபயோகத்திற்கு உதவுவது.

இந்திய காபித் தொழில் உறுதி பெற்றுள்ளது ! இந்தியாவில் உள்ளவர்களுக்கு மட்டுமின்றி உலகின் மற்ற பகுதிகளிலும் உள்ள காபி பிரியர்களுக்கு இந்திய காபி ஊக்கத்தை ஊட்டுகிறது !

# கண்ணாடிப் பொருள்கள் செய்ய முன்னோடிப் பயிற்சி நிலையம்



கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்று நான்கு யுகங்கள் உண்டென்றும் தற்போது நடப்பது கலியுகம் என்றும் நமது நாட்டில் சிலர் சொல்லி வருகிறார்கள். மூன்று யுகங்கள் போய்விட்டன என்பதை நாம் வாதத்திற்காக ஒப்புக் கொண்டாலும் கூட இந்த யுகத்தைக் கலியுகம் என்று ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. காரணம் இந்த யுகம், விஞ்ஞான யுகம் என்பதை அகில உலகமே உணர்ந்து வருகிறது.

முன்பெல்லாம் வாழ்க்கையைப் பற்றி எவரும் அக்கறை கொண்டது கிடையாது; ஆனால் இப்போது ....... அப்படியில்லை. முன்பெல்லாம் எதைச் சொன்னாலும் நம்பி வந்த காலம் ஒன்றிருந்தது. இப்போது எதையும் சாரண காரியம் கொண்டு அலசிப் பார்த்துத் தெளிவடையத் தொடங்கி விட்டனர் மக்கள். மக்களின் இந்தத் தெளிவுக்குக் காரணம், பகுத்தறிவாளர்களின் பகுத்தறிவுப் பிரச்சாரம் மட்டுமல்ல—விஞ்ஞான மேதைகளின் விஞ்ஞானமெய்ம்மைகளும் ஆகும்.

விஞ்ஞானத் துறையில் நமது இந்திய நாடு, வியத்தகு முன்னேற்றம் அடையவில்லை என்றாலும் கூட, விரும்பிப் பாராட்டத்தக்க அளவுக்கு முன்னேறியிருக்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது.

நமது தமிழ்நாடு அண்மைக் காலமாக, விஞ்ஞானத்தில் ஓரளவு முன்னேற்றம் கண்டு வருகிறது. பழைமைக் கருத்துக்களும், மடமைக் கருத்துக்களும் நம்மை விட்டு விலகிச் செல்வதே ஒரு வகை முன்னேற்றம் என்றுதான் சொல்ல வேண்டும். எத்தனையோ ஆண்டுகளாக மூட நம்பிக்கை என்னும் இருளில் தன்னை ஒப்படைத்துக் கொண்ட தமிழ்நாடு, விஞ்ஞானக் கதிரவனின் கதிரொளிபட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக விழிப்படைவதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அதற்குச் சான்றுதான் கிண்டி தொழிற்பேட்டையில் உள்ள ''விஞ்ஞானக் கண்ணாடிப் பொருள்கள் உருவாக்கும் பயிற்சி நிலையம்.''

இந்தியாவிலேயே இது போன்ற பயிற்சிப் பள்ளி இதைத் தவிர வேறேதும் கிடையாது என்பதிலிருந்து நமது தமிழ் நாட்டின் விஞ்ஞான முன்னேற்றம் தெளிவாகப் புலப்படும்.

இங்கே தயாரிக்கப்படும் கண்ணாடிப் பொருள்களை டெல்லி பம்பாய், ஆந்திரம், கேரளம் முதலிய மாநிலங்கள் போட்டி போட்டுக் கொண்டு வாங்குகின்றன என்ற உண்மையை அறியும் போது, தமிழ்நாடு விஞ்ஞானத் துறையில் முன்னேறி வருகிறது என்ற கருத்து உறுதியாகிறது.

தேவைப்படும் கண்ணாடிச் சாதனங்களைத் தயாரிப்பதற்குரிய பயிற்சியைத் தரும் இந்தப் பயிற்சி நிலையம் 1950-ஆம் ஆண்டிலே துவக்கப்பட்டது. ஒவ்வோர்ஆண்டும் 10 மாணவர்கள் பயிற்சி பெற்று வந்தனர். அவர்களது பயிற்சிக் காலம் ஓராண்டு.

1965-ஆம் ஆண்டிலிருந்து, பயிற்சிக் காலம் இரண்டாண்டுகளாக மாறியிருக்கிறது. இதில் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கையும் 20 ஆக உயர்ந்திருக்கிறது.

இந்தப் பயிற்சி நிலையத்தில் மாணவர்கள் மட்டும்தான் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். மாணவியர் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர்த் திங்களில் பயிற்சி தொடங்குகிறது. கல்லூரியில் சேர்வதற்குத் தகுதி படைத்த வகையில் பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்ற பதினாறு வயதிலிருந்து 20 வயது வரை உள்ளவர்கள் தான் இந்தப் பயிற்சி நிலையத்தில் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள். எல்லாப் பயிற்சியாளர்களுக்கும் முதல் ஆண்டு நாற்பது ரூபாயும், இரண்டாம் ஆண்டு ஐம்பது ரூபாயும் உதவித் தொகை தரப்படுகிறது. பயிற்சி அனைத்தும் செயல் முறைப் படிப்புத்தான்.

இது போன்ற பயிற்சிப் பள்ளி இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. நமது தமிழ் நாட்டில்தான் இருக்கிறது. டெல்லியில் உள்ள தேசீய இயல்பியல் ஆய்வுச் சாலையிலும் (National Physics Laboratory) பம்பாயில் உள்ள டாடா அடிப்படை ஆராய்ச்சி நிலையத்திலும் (Tata Institute of Fundamental Research) இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அவை நமது பயிற்சி நிலையத்தைப் போல அல்ல. பயிற்சியாளர்கள் (Trainees) சிலரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். நான்கு அல்லது ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் ''தொழில் கற்றுக் கொள்வோர்'' (Apprentices என்ற முத்திரையைத் தந்து விடுகிறார்கள். இந்த

[illegible] பார்க்கும் போது நமது சென்னைப் பயிற்சி நிலையம் சிறந்த பயிற்சி நிலையம் என்பது தெளிவாகிறது.

அண்மையில் அறிஞர் அண்ணு வின் 63-வது பிறந்த நாள் விழாவின் போது, கோவையி லும் இது போன்ற பயிற்சி நிலையம் ஒன்று சிறிய அளவில் துவக்கப்பட்டிருக்கிறது.

சென்னைப் பயிற்சி நிலை யம் 10 இலட்ச ரூபாய்த் திட்டத்தில் பெரிய அளவில் உருவாவதற்குத் திட்டமிடப் பட்டுள்ளது. இயந்திரங்கள் மற்றும் துணைக் கருவிகள் அனைத்துக்கும் அனுமதி கிடைத்துவிட்டது. 1972-க்குள் இந்தத் திட்டம் நிறைவேறி விடும். தற்போது நிலையம் அமைந்திருக்கும் இடத்திற்கு அருகிலேயே 4,880 ச.அடி பரப்பில் கட்டடம் உருவாக இருக்கிறது.

இங்குள்ள இயந்திரங்களில் பல, இங்கிலாந்து நாட்டிலி ருந்து இறக்குமதியானவை. வர இருக்கும் இயந்திரங்களில் சில இங்கிலாந்திலும், சில, ஜெர்மனியிலும் தயாரானவை.

இங்கு உருவாக்கப்படும் விஞ் ஞானக் கண்ணுடிப் பொருட் கருவிகள் தரம் மிகுந்தவை. வணிகச் சந்தையில் முதல் தரமாகக் கருதப் படுபவை. ‘ ஏ ’ சான்றிதழ் கொண்டவை. இந்த நிலையத்தைத் தவிர வேறு எந்த நிலையமும் தனது தயாரிப்புகளுக்கு ‘ ஏ ’ சான்றி தழ் தருவதில்லை.

திரவங்களின் கனபரி மானத்தை அளவிடுவதற்குப் பயன்படும் கருவி, இங்கே மிகமிகச் சரியான முறையில் —துல்லிதமான முறையில் தயா ரிக்கப்படுகிறது. தரம் இங்கே கடுமையாகக் கடைப்பிடிக்கப் படுகிறது. இந்தச் சிறப்பினுல் தான் இவை ‘ ஏ ’ சான்றிதழ் பெறுகின்றன.

சூரத்தின் அருகில் உள்ள உத்ஞ என்ற ஊரில் உள்ள பரோடா ரேயான் கழகம் என்னும் நிறுவனம், சென்ற ஆண்டு, இந்தப்பயிற்சி நிலையத் தின் ‘ ஏ ’ சான்றிதழ் பெற்ற கண்ணுடிப் பொருள்களை ஏரா ளமான அளவில் வாங்கிப் பயன் படுத்தியிருக்கிறது.

அளவை உருளைகள் (Measuring Cylinder ) முன்பெல்லாம் வெளி நாட்டிலிருந்து வரவழைக்கப் பட்டு வந்தது. அந்தக் கருவியை நமது சென்னைப் பயிற்சி நிலையம் சிறந்த விதத்தில் தயாரிப்பதால் அனைவரும் தங்கள் தேவைக்கு இந்தப் பயிற்சி நிலையத்தையே நாடுகிருர்கள்.

கிரோசின் வாயுவின் உதவியினுலும் வாயினுல் ஊதுவதின் மூலமும் கண்ணுடிப் பொருட்கள் தயாரிக்கப்படும் காட்சி



கண்ணுடிப் பொருள்கள் அழு கும் பொருள்களல்ல ; ஆகவே அவற்றைத் தயாரித்துக் குவித்து வைத்துக் கொள்ளலாம். ஆனுல் இந்தப் பயிற்சி நிலையம் அப்படிச் செய்வதில்லை. தேவைக் கேற்பவே இங்கே தயாரிப்பு நடைபெறுகிறது. உணவுக் கடைகளில் உத்தரவு கொடுத்ததும் சூடாக உரு வாக்கித் தரும் உணவுப் பொருள்களைப் போலவே, வெளி யாரின் தேவைக் கடிதங்களைக் கண்டதும் உடனடியாகக் கண் ணுடிப் பொருள்களை உருவாக்கி அனுப்புகிருர்கள்.

விஞ்ஞானத் துறை—தொழில் நுணுக்கத் துறை—தொழில் துறை ஆகிய துறைகளில் பயன் படும் கண்ணுடிக் கருவிகள் இங்கே தயாரிக்கப்படுகின்றன.

கண்ணுடிப் பொருள்களை உரு வாக்குவதற்குச் சில மூலப் பொருள்கள் தேவை. அவற்றை உலைகளில் போட்டு உருக்கவும் வேண்டும். ஆனுல் விஞ்ஞானப் பொருள்கள் செய்யும் இந்தப் பயிற்சி நிலையம் இது போன்ற மூலப் பொருள்களைத் தேடு வதில்லை. அரை அங்குலம், முக்கால் அங்குலம், ஓர் அங்கு லம் இப்படிப் பலவகைச் சுற்ற ளவுகள் கொண்ட கண்ணுடிக் குழாய்களைப் (Tubes) பம்பாயி லிருந்து வரவழைத்து, அவற் றைக்கொண்டு உருவாக்குகிறது.

முன்பெல்லாம் இந்தக் கண் ணுடிக் குழாய்கள் கூட, வெளி நாட்டிலிருந்து தான் வரவழைக் கப்பட்டன. தற்போது, நமது இந்தியாவிலேயே தரமான கண் ணுடிக் குழாய்கள் தயாரிக்கப் படுவதால் அவற்றையே இந்தப் பயிற்சி நிலையம் வாங்கிப் பயன் படுத்துகிறது.

கிரோசின்—ஆக்சிஜன் இரண் டையும் இணைத்து கிரோசின் வாயு உருவாக்கப்படுகிறது. இந்த வாயுவின் உதவியினுல் கண்ணுடிப் பொருள்கள் செய் யப் படுகின்றன. இதன் உருகு நிலை 1,000 டிகிரி சென்டிகிரேட் ஆகும்.



பயிற்சி நிலையத்தில் தயாரிக்கப்பட்டுள்ள பலவித விஞ்ஞானக் கண்ணாடிக் கருவிகள்

கிரோசின் வாயுவை வாயினால் ஊதுவதன் மூலம் கண்ணாடிப் பொருள்களை உருவாக்குகிறார்கள். இது மிகவும் நுணுக்கமான கலை.

பொதுவாக, அரசினர் தொடர்புள்ள நிறுவனம் என்றால், அதில் நட்டம் ஏற்படும் என்ற கருத்து பரவலாக உள்ளது. அந்தக் கருத்து இங்கே பொய்யாக்கப்பட்டிருக்கிறது. நல்ல இலாபத்துடன் நடைபோடுகிறது இந்தப் பயிற்சி நிலையம்.

20 தொழிலாளர்கள்தான் இங்கே பணிபுரிகிறார்கள். அதிலும் 10 பேர்தான் தொழில் நுணுக்கம் அறிந்தவர்கள் ( Skilled ) என்ற பெயரைப் பெற்றவர்கள். அவர்களைக் கொண்டே ஆண்டொன்றுக்கு 2 இலட்ச ரூபாய் மதிப்புள்ள பொருள்களை இந்தப் பயிற்சி நிலையம் தயாரித்து வருகிறது என்றால், இது மகத்தான பணி என்றுதான் கூற வேண்டும்.

இதில் இன்னொரு சிறப்பும் இருக்கிறது. இங்கே பணிபுரியும் தொழிலாளர்கள் தொழிலாளர்களாக மட்டும் பணிபுரிவதில்லை ; பயிற்சி பெறும் மாணவர்களுக்கு வழி காட்டிகளாகவும் பணிபுரிகிறார்கள். பயிற்சியாளர்கள், நவீன வணிகச் சந்தைக் கேற்ற பொருள்களைத் தயாரிப்பதற்கு இந்த வழிகாட்டிகள் உதவுகிறார்கள்.

கலை நுணுக்க உதவியாளர் நால்வர், பயிற்றுவிப்போர் நால்வர் இங்கே பணிபுரிகிறார்கள். அவர்களெல்லாம் ஏறக்குறைய 12 ஆண்டு அனுபவங்களுக்குச் சொந்தக்காரர்கள். அவர்களின் அனுபவம்தான் இந்தப் பயிற்சி நிலையத்திற்கு அடித்தளமாக அமைந்திருக்கிறது. இவர்களில் சிலர், இதே பயிற்சி நிலையத்தின் முன்னாள் பயிற்சியாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையத்தில் பயிற்சி பெற்றுத் தேர்ந்து வெளியேறும் மாணவர்கள் உண்மையிலேயே பட்டை தீட்டப்பட்ட வைரங்களாகத் திகழ்கிறார்கள். அவர்களில் சிலர், சொந்தத்தில் தயாரிப்பு நிறுவனங்களைத் திறம்பட நடத்தி வருகிறார்கள். சிலர், புகழ் பெற்ற நிறுவனங்களான இந்தியத் தொழில் நுட்பக் கல்வி நிலையம், அணு ஆராய்ச்சித் துறை, பாரத் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் விஞ்ஞானத் தொழில் ஆராய்ச்சிக் கழகத்தின் கீழ் இயங்கி வரும் தேசிய ஆய்வுச் சாலை போன்ற ஆராய்ச்சி நிலையங்களிலும் பணிபுரிகிறார்கள். சுருக்கமாகச் சொன்னால், இங்கே பயிற்சி பெற்றுத் தேர்ந்தவர்கள் இந்தியா முழுவதும் பணிபுரிகிறார்கள்.

இந்தப் பயிற்சி நிலையம் ஓரளவு புகழ் பெற்றுக் கொண்டு வருகிறது. ஏனென்றால் இங்குத் தயாரிக்கப்படும் கண்ணாடிப் பொருள்கள் பயன் படாத துறையே இல்லை.

கோவை வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையம், மதுரை வேளாண்மைக் கல்லூரி, சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஏனைய மருத்துவக் கல்லூரிகள், பள்ளிக் கல்வி இயக்குநரின் கீழ் உள்ள பள்ளிகள், மாநில அரசின் கீழ் உள்ள சின்கோனாத் துறையில் இணைக்கப்பட்ட ஆய்வுக் கூடங்கள், வருவாய் ஆராய்ச்சி ஆய்வுச் சாலைகள், புது டெல்லியிலுள்ள மைய அரசின் அகில இந்திய விஞ்ஞான நிலையம், அரவங்காட்டிலுள்ள கார்பைட் தொழிற்கூடம் போன்ற அரசுத் துறைகளின் தேவைகளை நிறைவேற்றி வைக்கிறது.

பெரும் பெரும் முதலீட்டுடன் நடத்தப்பெறும் சில தனியார் தொழிலகங்களான மதராஸ் ரீபைனரி லிமிடெட் நிறுவனம், திருச்சி பாரத் ஹெவி எலெக்ட்ரிக்கல்ஸ் நிறுவனம், மேட்டூர் கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன், தூத்துக்குடி சால்ட் அண்ட் மெரின் கெமிக்கல்ஸ் நிறுவனம் போன்றவைகளுக்கும், இந்தப் பயிற்சி நிலையம் கண்ணாடிப் பொருள்களை அனுப்பி வருகிறது.

வளர்ச்சித் திட்டம் உருவாகத் தொடங்கி விட்டால்—நிறைவேறிவிட்டால்—இந்தப் பயிற்சி நிலையத்தின் புகழ் ஓங்கிவிடும் என்பது உறுதி. இந்தியாவின் முழுத் தேவையையும் நிறைவேற்றும் வகையில்—தன்னிறைவு பெற்று ஒளி வீசும் நிலையமாக இந்தப் பயிற்சி நிலையம் திகழப் போவது திண்ணம். இந்த இலட்சியத்தை நோக்கித்தான் இந்தப் பயிற்சி நிலையம் நடைபோடுகிறது.

இங்கே நடைபெறும் மற்றொரு நுணுக்கமான கலைப் பயிற்சி—நிறமிகு மின் விளக்குத்(Neon Sig Light) தயாரிப்பாகும். இதைப் பற்றிய சுவைமிகு செய்திகளை அடுத்த இதழில் பார்ப்போம்


குறளகம்
சென்னை.1
உங்களுக்கு வேண்டிய எல்லாமே இங்கே கிடைக்கும்
20461
20462
20463
20464. 20465
கதர்-
கைத்தொழில்
அங்காடி
கைவண்ணப்
பொருள்களின்
களஞ்சியம்



# மாவட்டச் செய்திகள்

### செங்கை மாவட்டத்தின் முப்பெரும் சாதனைகள்

செங்கற்பட்டு மாவட்டம் மூன்று அரும் பெரும் சாதனைகளைச் செய்துள்ளது. அந்தச் சாதனைகளின் விவரம் வருமாறு:—

### மின்சாரம்

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டு, மின்சாரம் பெறாத கிராமம் 'செங்கையில் இனி இல்லை' என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

### குடிநீர்

செங்கற்பட்டு மாவட்டத்தின் எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

### குழந்தைகள் சேர்ப்பு

செங்கற்பட்டு மாவட்டத்தில் பள்ளிக்கூடத்திற்குச் செல்லும் வயது வந்த எல்லாக் குழந்தைகளும் பள்ளிக்கூடங்களில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

மேற்கூறிய முப்பெரும் சாதனைகளைச் செய்து செங்கற்பட்டு மாவட்டம், மற்ற மாவட்டங்களைவிட முன்னணியில் நிற்கிறது. இந்தத் தகவல்களைச் செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சீத்தாராமதாஸ், ஐ. ஏ. எஸ். அவர்கள் தெரிவித்துள்ளார்.

### முதலிடம்

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்காகக் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 3,00,000 பட அட்டைகள் மூலம் ரூபாய் 1,50,000-மும், ரொக்க நன்கொடை வசூல் மூலம் ரூபாய் 1,00,000-மும் ஆக ரூபாய் 2½ இலட்சம் வசூலிக்க வேண்டுமென்று குறிக்கோள் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், கோவை மாவட்டம் 26-9-71 அன்று காலை 10-00 மணிவரை ரூபாய் 8,19,000 ரூபாயைப் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு வழங்கியுள்ளது. இத்தகவலைக் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எச். பி. என். ஷெட்டி, அவர்கள் சுண்டப்பாளையத்தில் நடைபெற்ற பட்டா வழங்கு விழாவில் அறிவித்தார்.

தமிழகத்திலேயே கோயம்புத்தூர் மாவட்டந்தான் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி வசூலில் முதன்மை வகிக்கிறது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

### நிருவாகத் திறமை

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பாபநாசம் ஊராட்சி ஒன்றியம், வரிகள் அனைத்தையும் நிலுவை ஏதுமின்றி இரண்டாண்டுகளாக வசூலித்து ஒரு சாதனையை ஏற்படுத்தியுள்ளது.

பாபநாசம் ஊராட்சி ஒன்றியத்தில் 34 ஊராட்சிகள் அடங்கியுள்ளன. பாபநாசம் ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள், பாபநாசம் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சேரவேண்டிய மொத்த வரித்தொகை ரூ. 65,266-12 யும் வசூலித்துள்ளனர். இத்தொகையை வசூலிப்பதற்கென எவ்வித வழக்கு மன்ற நடவடிக்கையோ, சொத்துக்களைக் கைப்பற்றி வரி திரட்டும் முறைகளையோ மேற்கொள்ளாமல், பொது மக்களைப் பன்முறை அணுகி, வரி செலுத்துவதன் இன்றியமையாமையைப் பற்றி எடுத்துக் கூறி, வரிகள் அனைத்தையும் இரண்டே திங்களில் வசூலித்துள்ளது மிகவும் குறிப்பிடத் தகுந்த செயலாகும்.

பாபநாசம் ஊராட்சி ஒன்றியம் சென்ற ஆண்டிலும் இதே போன்று மொத்த வரித்தொகையான 61,321-36, ரூபாயை நிலுவை ஏதுமின்றி வசூலித்துள்ளது.

### இனிக்கும் தகவல்

செங்கற்பட்டு, நீலகிரி மாவட்டங்களைத் தொடர்ந்து, திருநெல்வேலி மாவட்டத்தின் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி அளிக்கப்பட்டுவிட்டது என்று கிடைத்துள்ள செய்தி, 1972-ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டில் மின்சார வசதி பெறாத கிராமமே இல்லையென்று கூறும் நிலையை இன்றைய தமிழ்நாடு அரசு உருவாக்கிவிடும் என்பதை உறுதிப்படுத்துவதாக உள்ளதுடன், தமிழ்நாடு மின்சார வாரிய ஊழியர்களின் அயராத முயற்சியையும், ஓயாத உழைப்பையும் எடுத்துக்காட்டுகிறது.

# பசுமைப் புரட்சியைத் தொடர்ந்து இன்னொரு புரட்சி

# தமிழ்நாட்டில்

இன்றையத் தமிழ்நாடு அரசின் இடைவிடா முயற்சியால் ''பசுமைப் புரட்சி'' (Green Revolution) தமிழ்நாட்டின் பட்டி தொட்டிகளிலும் வெகு வேகமாகப் பரவி வருகிறது. இதன் பயனாக, நந்தமிழ் நாட்டில் நீண்ட நெடுங்காலமாக நிலவி வந்த உணவுப் பற்றுக்குறை மறைந்து, பசிப்பிணி அகன்று, உணவு உற்பத்தியில் தன்னிறைவு ஏற்பட்டுள்ளதுடன், அண்டை மாநிலங்களுக்கும் அரிசி அனுப்பி வரும் உன்னத நிலை மலர்ந்துள்ளது.

பசுமைப் புரட்சியைத் தொடர்ந்து, இன்றையத் தமிழ்நாடு அரசு அளித்து வரும் ஊக்கத்தாலும், ஆக்கத்தாலும் தமிழ்நாட்டில் தற்பொழுது ''வெண்மைப்புரட்சி'' (White Revolution) அரும்பியுள்ளது. பருத்தி உற்பத்தியில் ஏற்பட்டுள்ள விரைவான முன்னேற்றங்களையே ''வெண்மைப் புரட்சி'' என்று பருத்தித் தொழில் நுட்பக்கலைஞர்களும், வேளாண்மை வல்லுநர்களும் வர்ணிக்கின்றார்கள். தற்பொழுது அரும்பாக உள்ள ''வெண்மைப் புரட்சி'' மலர்ந்து விடுமானால், தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவிற்கே ''பணம்'' என்னும் 'மணம்' அதாவது 'பொருளாதார மணம்' கிடைக்கும்.

## செயற்கை நூலிழைகளின் போட்டி

இன்றைய நாகரிக உலகில் செயற்கை நூலிழைகள் (Synthetic Fibres) கண்டுபிடிக்கப் பட்டுப் புகழ் பெற்றிருந்தாலும், பலகோடி மக்களுக்கு வாழ்வளிக்கும் பருத்தியே, இந்தியாவின் வணிகப் பயிர்களில் அரசனாகவும் (King), பருத்தித் துணிகளே இந்தியத் தொழிற்பொருள்களில் அரசியாகவும் (Queen) விளங்குகின்றன. 'டெரின்', 'நைலான்', 'ஆர்லான்' முதலிய செயற்கை நூலிழைகளுடன், பருத்தி நூலிழைகள் கடும் போட்டியிட்டு வருகின்றன. நூலிழைகளில் முக்கிய இடத்தைப் பெற்று வரும் பருத்தியின் நிலைமைசீர்குலையாதிருக்கப் பருத்தி நூலிழைகள் விலை மலிவானதாகவும், தரம் மிகுந்ததாகவும் இருக்க வேண்டும். எனவே, மிகு பயன் தரக்கூடிய, தரம் மிகுந்த, அதி நீள இழைகொண்ட பருத்தி ரகங்களை உருவாக்கி, உழவர் பெருமக்களுக்கு வழங்கிடவும், பருத்திச் சாகுபடி செய்வதற்குத் தேவையான இரசாயன உரம்,பூச்சி-பூஞ்சாள மருந்துகள், கருவிகள், கடன் தொகைகள் ஆகியவை காலத்தில் கிடைத்திடவும் தமிழ்நாடு அரசு ஆவன செய்து வருகிறது.

## பருத்தி உற்பத்தியில் பற்றுக்குறை ஏன் ?

இந்தியாவில் தற்பொழுது ஆண்டுதோறும் 80 இலட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பில் பருத்தி பயிரிடப்படுகிறது. இதில் 82 சதம் மானாவாரியாகச் சாகுபடி செய்யப்படுகிறது. தமிழ் நாட்டில் ஆண்டுதோறும் 4.2 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பருத்தி பயிரிடப்படுகிறது. இப்பரப்பளவில் 59 சதம் மானாவாரியாகப் பயிரிடப்படுகிறது.

பருத்திச் சாகுபடியாகும் பரப்பளவைப் பொறுத்த வரையில், உலகிலேயே இந்தியாதான் முதலிடம் வகிக்கிறது. பருத்தி உற்பத்தியைப் பொறுத்த வரையில், உலகிலேயே இந்தியா இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. ஆனால் பருத்தியின் சராசரி ஹெக்டேர் விளைச்சலைப் பொறுத்த வரையில், பருத்தி உற்பத்தி செய்யும் பெரிய நாடுகளில் இந்தியாதான் கடைசியாக உள்ளது என்பதைப் பின்கண்ட புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

| நாடு. | சராசரி ஹெக்டேர் மகசூல் பஞ்சு (கிலோவில்). |
|---|---|
| ஐக்கிய அரபுக் குடியரசு. | 747.5 |
| சோவியத் நாடு. | 733.5 |
| சிரியா .. | 615.2 |
| அமெரிக்க ஐக்கிய நாடுகள். | 581.0 |
| சூடான் .. | 339.8 |
| சைனா .. | 269.2 |
| பாகிஸ்தான் .. | 257.2 |
| இந்தியா .. | 123.7 |
| தமிழ்நாடு .. | 207.0 |

இவ்வாறு சராசரி ஹெக்டேர் மகசூலில் பின் தங்கி இருப்பதனாலேயே நமது தேவையை ஈடு செய்து கொள்ள வெளிநாடுகளிலிருந்து பருத்தியை இறக்குமதி செய்ய வேண்டிய இக்கட்டான நிலையில் இருக்கிறோம்.



## இறக்குமதியால் ஏற்படும் இழப்பு

இந்தியாவில் உள்ள பருத்தி ஆலைகள் ஆண்டு தோறும் சுமார் 58 இலட்சம் பேல் பஞ்சிலிருந்து நூலையும், துணிகளையும் உற்பத்தி செய்து வருகின்றன. ஆனால் இந்தியாவில், ஆண்டு தோறும் சராசரியாக 50 அல்லது 51 இலட்சம் பேல் பஞ்சு மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, இந்தியா ஆண்டு தோறும் சுமார் 7 அல்லது 8 இலட்சம் பேல் பஞ்சை, வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து வருகிறது. இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் பஞ்சில் ஏறத்தாழ 3 இலட்சம் பேல் 1–6/32 அங்குலமும், அதற்கு மேற்பட்ட நீள இழையும் கொண்ட அதி நீள இழைப் பருத்தி ( Extra-long staple cotton ) வகையைச் சார்ந்ததாகும். இவைகள், தற்பொழுது முக்கியமாக ஐக்கிய அரபுக் குடியரசு, சூடான் ஆகிய நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் 3 இலட்சம் பேல் அதி நீளஇழைப் பஞ்சின் மதிப்பு ஆண்டிற்குச் சுமார் 40 கோடி ரூபாய் ஆகிறது. மீதி 4 அல்லது 5 இலட்சம் பேல் பஞ்சு, 1-2/32 முதல் 1-6/32 அங்குல இழை நீளமுள்ள பருத்தி ரகத்தைச் சேர்ந்ததாகும்; இவ்வகைப் பஞ்சை, இறக்குமதி செய்வதற்காக இந்தியா ஆண்டு தோறும் சுமார் 45 கோடி ரூபாயைச் செலவிட்டு வருகிறது. ஆகவே, இந்தியா ஒவ்வொரு ஆண்டும் சுமார் 85 கோடி ரூபாயை அந்நியச் செலாவணியாக இழந்து வருகிறது. இந்தப் பேரிழப்பைத் தவிர்க்க வேண்டுமானால், நம் நாட்டுப் பருத்தி உற்பத்தியைப் பெருக்க வேண்டியதும், அதுவும் குறிப்பாகத் தரம் மிகுந்த அதி நீள இழைப்பருத்தி ரகங்களின் உற்பத்தியை உடனடியாகப் பெருக்க வேண்டியதும் நமது தலையாய கடமையாகும்.

## வாழ்வளிக்கும் பருத்தி

பருத்தி, பல கோடி மக்களுக்கு வாழ்வளித்து வருவதால், பருத்தியை நம்பியுள்ள மக்களின் வாழ்வு வளம்பெற, நமது நாட்டில், தரம் மிகுந்த அதி நீள இழைப் பருத்தி ரகங்களின் உற்பத்தியைப் பெருக்க வேண்டியதும் இன்றியமையாததாகிறது.

கிறிஸ்து பிறப்பதற்குநெடுநாட்களுக்கு முன்பே, நமது நாட்டின் நெசவுத் தொழில் தனித்திறமை பெற்றுச் சீரோடும் சிறப்போடும் விளங்கி வந்திருந்தாலும், இந்த நூற்றுண்டின் துவக்கத்திலேயே பருத்திச் சாகுபடியிலும், பருத்தி பற்றிய தொழில் நுட்பவியலிலும் அறிவியல் அடிப்படையான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. அத்தகைய முயற்சிகளை மேற்கொண்டதில் தமிழ் நாட்டிற்கே பெரும்பங்கு உண்டு என்பதை நாம் பெருமையோடு கூறிக்கொள்ளலாம்.

## வெண்மைப் புரட்சி அரும்பிய காரணம்

1929 ஆம் ஆண்டில் 950 கிலோவாக இருந்த பாசனப் பருத்தியின் சராசரி ஹெக்டேர் மகசூல், தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறையைச் சார்ந்த ஆராய்ச்சியாளர்கள் எடுத்துக் கொண்ட அரு முயற்சியின் விளைவாக, 1968-ஆம் ஆண்டில் 1,350 கிலோவாக உயர்ந்துள்ளது. இதே காலத்தில் 28/32 அங்குலமாக இருந்த பருத்தியின் இழைநீளம் 1-6/32 அங்குலமாகவும், 33 சதமாக இருந்த அரைவைச் சதவீதம் 37 சதமாகவும் உயர்த்தப் பட்டுள்ளது. இதுபோலவே, மானவாரி கருங்கண்ணிப் பருத்தியின் சராசரி ஹெக்டேர் மகசூல் 300 கிலோவிலிருந்து 470 கிலோவாகவும், இழை நீளம் 25/32 அங்குலத்திலிருந்து 31/32 அங்குலமாகவும், அரைவைச் சதவிகிதம் 28-லிருந்து 36ஆகவும் உயர்த்தப் பட்டுள்ளது. எனவே, இந்தியாவில் "வெண்மைப் புரட்சி" அரும்புவதற்குத் தமிழ்நாடே மூல காரணம் என்றால் மிகையல்ல !

## தமிழ்நாட்டின் மாபெரும் சாதனை

தமிழ் நாட்டில் 1968-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் 165 நாட்கள் வயதுடைய எம்.சி.யூ.5(M.C.U.5)என்ற பருத்திரகம் வெளியிடப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைத் துறை ஆராய்ச்சியாளர்களால் கண்டு பிடிக்கப் பட்ட இந்த ரகம் ஒரு மாபெரும் சாதனையாகும். இந்தியாவில் அமெரிக்கப் பருத்தியின் தரம் மேம்படுத்தும் பணியில், எம்.சி.யூ. 5 ரகப் பருத்தி வெளியிடப் பட்டது யாராலும் அழிக்க முடியாத ஒரு அடையாளச் சின்னமாக அமைந்துள்ளது. உண்மையிலேயே, இந்த ரகம் 3 அல்லது 4 ஆண்டுகள் முன்பாகவே வெளியிடப்பட்டுள்ளது.




தமிழ்நாடு வேளாண்மைத் துறைஆராய்ச்சியாளர்கள் காலத்தைப் பொன்னாகக் கருதி, ஒரே ஆண்டில் 2 தடவை இந்த ரகத்தைப் பயிரிட்டு, அதே நேரத்தில் பல்வேறு நிலைச் சோதனைகளையும் தவறாமல் நடத்தியதாலேயே இந்தரகப் பருத்தியை, 3 அல்லது 4 ஆண்டுகள் முன்கூட்டியே வெளியிட முடிந்தது. இந்த அரும் பணியை மேற்கொண்ட ஆராய்ச்சியாளர்களையும், அதற்கு வேண்டிய நிதி உதவி செய்த இன்றைய தமிழ்நாடு அரசையும், பருத்திச்

சாகுபடி செய்யும் உழவர்கள் என்றும் மறக்க மாட்டார்கள் என்பது உறுதி.

எம். சி. யூ. 5 ரகப் பருத்தியின் இழைநீளம் 1-6/32 அங்குலம் இருப்பதாலும், இழைகள் வலிமையாகவும், நுண்ணியதாகவும் இருப்பதாலும், இந்த ரகப்பருத்தியைக் கொண்டு 70-ஆம் எண் நூல் நூற்க முடிகிறது. எனவே எம்.சி.யூ. 5 ரகப் பருத்திச் சாகுபடியாளர்களுக்கு ஹெக்டேருக்கு ரூபாய் 1,000 கூடுதல் இலாபம் கிடைக்கிறது. அத்துடன் இந்த ரகம், பருத்தி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், நெசவு ஆலைகளுக்கும் பயன் தரக்கூடியதாக உள்ளது.

இவ்வாறு பருத்திச் சாகுபடியாளர்கள், வியாபாரிகள், நெசவு ஆலையினர் ஆகிய முத்தரப்பினருக்கும் பெரும் பயனளிப்பதாக இருப்பதனாலேயே, வெளியிடப்பட்ட இரண்டாம் ஆண்டிலேயே (1970–71), இந்த ரகம் ஆந்திர மாநிலத்திலும், மகாராட்டிர மாநிலத்திலும் குறிப்பிடத் தகுந்த பரப்பளவில் பரவியுள்ளதுடன், தமிழ் நாட்டில் 50,000 ஹெக்டேர் பரப்பில் பரவியுள்ளது. இந்த ஆண்டு (1971–72) குளிர் காலத்தில், தமிழ்நாட்டில் குளிர்காலப் பருத்திச் சாகுபடியாகும் 80,000 ஹெக்டேர் பரப்பு முழுவதும் எம்.சி.யு. 5 பரவிவிடும் என்று எதிர்பாக்கப் படுகிறது.

இதன் பயனாய், இந்த ஆண்டின் குளிர் காலப் பருத்தியிலிருந்து மட்டும் ஏறத்தாழ 3 இலட்சம் பேல் 1-6/32 அங்குல இழை நீளமுள்ள பஞ்சு உற்பத்தியாகி விடும். இதனால், ஏறத்தாழ 3 இலட்சம் பேல் 1-6/32 அங்குல இழை நீளமுள்ள பஞ்சு இறக்குமதியைக் குறைத்துவிடக் கூடுமாதலின், 40 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை மீதப்படுத்த முடிவதுடன், தமிழ் நாட்டில் எம்.சி.யு. 5 பருத்திச் சாகுபடி செய்யும் உழவர்களுக்கும் ஏறத்தாழ 8 கோடி ரூபாய் கூடுதல் இலாபம் கிடைக்கும்.

## "சுஜாதா" தோன்றியது

எம்.சி.யு. 5 ரகப் பருத்தி வெளியிடப்பட்டதற்கு அடுத்தாற்போல், தமிழ்நாட்டில் வெண்மைப் புரட்சி அரும்புவதற்கு முக்கிய காரணமாக உள்ளது ''சுஜாதா'' என்று பெயரிடப்பட்ட எகிப்திய 'பார்படென்ஸ்' பருத்தி வெளியிடப் பட்டதேயாகும்.




சுஜாதா பருத்தியின் இழை நீளம் $1\frac{1}{4}$ அங்குலம் உள்ளதாலும், அதன் இழைகள் அதிக வலிவுள்ளதாக இருப்பதாலும் 80 முதல் 100-ஆம் எண் நூல் வரை நூற்க முடிகிறது. இந்த அதிநீள இழைப் பருத்தியை ஆராய்ச்சி மூலம் உருவாக்கியவர்கள் தமிழ்நாட்டு ஆராய்ச்சியாளர்களே என்பதும், அந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டதும் தமிழ் நாட்டில் தான் என்பதும் இந்திய ''வெண்மைப் புரட்சி'' வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப் பட வேண்டியவைகளாகும். இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின், கோயம்பத்தூர் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் ''சுஜாதா'' உருவாக்கப்பட்டு, 1969-ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் பகுதியில் சாகுபடி செய்ய வெளியிடப்பட்டது. இந்த ரகம், ஐக்கிய அரபுக் குடியரசு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ''கிசா-68'', ''மெனூபி'' என்ற ரகங்களை விடச் சிறந்தது.

## முன்னோடித் திட்டம்

எம்.சி.யு. 5, சுஜாதா ஆகிய இரு ரகங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பருத்தியை, நெசவு ஆலைகளின் தேவையுடன் ஈடுபடுத்திடவும், இந்த ரகங்களைக் கொண்டு இறக்குமதி செய்யும் பஞ்சின் அளவைக் குறைத்திடுவதற்குள்ள வாய்ப்பை விளக்கிடவும் வேண்டி, கோயம்புத்தூர் பகுதியில், ஒரே இடத்தில் அவைகளைப் பயிரிடும் ஒரு முன்னோடித்திட்டம் செயல்படுத்தப் படுகிறது. புதிய முயற்சிகளில் துணிவுடன் ஈடுபட்டு உழவர்களுக்கு நலம் பயக்கும் பணிகளைச் செய்யும் கூட்டுறவுச் சங்கமாக விளங்கும் துடியலூர் கூட்டுறவு வேளாண்மைச் சங்கம் இம்முன்னோடித் திட்டத்தைச் செயல்படுத்துகிறது. இத்திட்டத்தின்கீழ், இந்த ஆண்டு குளிர் காலத்தில் (ஆகஸ்ட்—செப்டம்பர் விதைப்பு) எம்.சி.யு. 5, சுஜாதா ரகங்கள் ஒவ்வொன்றிலும் 2,000 ஏக்கர் பயிரிடும் திட்டம் துவக்கப்பட்டுள்ளது.

இவ்விரு ரகப் பருத்திகளுக்கும் உறுதியான விற்பனை வசதியை ஏற்படுத்தவேண்டுமென்பதற்காக துடியலூர் கூட்டுறவு வேளாண்மைச் சங்கம், இறக்குமதி செய்யப்படும் பஞ்சில் பெருமளவைத் தற்சமயம் பயன்படுத்தி வரும் பம்பாயிலுள்ள, முற்போக்கு நெசவு ஆலை ஒன்றுடன் (கட்டாவ் நெசவு ஆலை) ஒப்பந்

தம் செய்து கொண்டுள்ளது. அந்த நெசவு ஆலை, உழவர்களுக்குப் பயன் தரக்கூடிய அடிப்படை விலை கொடுப்பதாக உறுதியளித்துள்ளது. கூட்டுறவுச்சங்க உறுப்பினராக உள்ள, பருத்தி சாகுபடி செய்யும் உழவர்களால் உற்பத்தி செய்யப்படும் எம்.சி.யு. 5, சுஜாதா ரகங்களின் மகசூல் முழுவதையும் அடிப்படை விலையிலோ அல்லது அதற்கும் அதிகமான விலையிலோ, அந்த நெசவு ஆலை வாங்கிக் கொள்ளும். இவ்விரு ரகங்களையும் பயிரிடுவதற்குத் தேவையான விதை, இரசாயன உரம், பூச்சிப் பூஞ்சாள மருந்துகள், கருவிகள், கடன் தொகைகள் ஆகியவற்றைக் கூட்டுறவுச் சங்கம் வழங்கி வருகிறது.

இந்த முன்னோடித் திட்டம் இந்த ஆண்டில் (1971–72) வெற்றிகரமாக நிறைவேறிவிடுமானால், நம் தமிழ் நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட எம்.சி.யு. 5, சுஜாதா ரகங்கள் தற்பொழுது இறக்குமதி செய்யப்படும் நீண்ட இழைப் பஞ்சுகளுக்கு மாற்றுப் பொருளாக (import substitution) விளங்கவல்லது என்பது புலனாகிவிடும். அத்துடன் தமிழ் நாட்டில் வெண்மைப் புரட்சியும் மலர்ந்து மணம்வீசத் தொடங்கிவிடும்.

இவ்விரு அதிநீள இழைப் பருத்திகளின் உற்பத்தியும், அவைகளின் விற்பனையும் திறமையாக இணைக்கப்படுமானால், இன்னும் 2 அல்லது 3 ஆண்டுகளில், தமிழ் நாட்டில் கோடையிலும் குளிர் காலத்திலும் பாசனப் பருத்தியாகச் சாகுபடி செய்யப்பட்டு வரும் பரப்பளவு முழுவதிலும் எம்.சி.யு. 5 பரவிடக்கூடும்; அதுபோலவே, சுஜாதா ரகமும் குறைந்தது 10,000 ஹெக்டேரிலாவது பரவிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்பொழுது மாற்றுப் பொருள்களின் உற்பத்திப் பெருக்கத்திற்கும், தற்பொழுது ஆண்டு தோறும் இந்தியா இழந்து வரும் அந்நியச் செலாவணியைச் சிக்கனப்படுத்துவதற்கும் வழி பிறக்கும்.

## மைய அரசின் உதவி

மைய அரசின் மூன்றாண்டுத் திட்டப்படி, கோவை மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்திலும் முறையே பாசன, மானாவாரிப் பருத்தி உற்பத்தியைப் பெருக்குவதற்காகப் புதிய ரகப் பருத்தி விதைகள் பிரபலமாக்கப்படுகின்றன. அத்துடன் தேவையான அளவு உரமிடுதலும், பயிர்ப் பாதுகாப்பு முறைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இவைகளுக்கு மைய அரசு நிதியளித்து வருகின்றது.




## மேலும் ஒரு புதிய பருத்தி

தற்பொழுது இறக்குமதி செய்யப்படும் எகிப்தியப் பருத்தியில் சிறந்து விளங்கும் ''கிசா-45'' என்ற ரகத்திற்குச் சமமாக உள்ள ''சூவின்'' (Suvin) என்ற புதிய ரகமும், இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் கோயம்புத்தூர் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சுஜாதாவின் சாகுபடி, விற்பனை, பயன்படுத்தல் ஆகியவற்றிற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னோடித் திட்டம் வெற்றியளித்த பின், ''சூவின்'' என்ற புதிய ரகத்தையும் வெளியிட்டுத் தமிழ் நாட்டில் தகுந்த இடங்களில் சாகுபடி செய்யப்படும்.

புதிதாகத் துவக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின், வேளாண்மைத் தாவர இயல் பிரிவில், தமிழ்நாட்டின் பல்வேறு பருத்தி சாகுபடியாகும் பகுதிக்கும் ஏற்ற புதிய பருத்தி ரகங்களை உருவாக்க மிகவும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்களும், இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் கோயம்புத்தூர் மண்டல ஆராய்ச்சி நிலைய ஆராய்ச்சியாளர்களும் ''வெண்மைப் புரட்சி'' விரைவில் மலர்வதற்குப் பெருந்துணை புரிந்து வருகின்றார்கள்.

பசுமைப் புரட்சியைத் தோற்றுவித்துத் தானும் உயர்ந்து, இந்தியாவின் நிலையையும் உயர்த்திவரும் தமிழ்நாடு, வெண்மைப் புரட்சியை விரைவில் மலரச்செய்து இந்தியாவிற்கே வழிகாட்டியாக விளங்கப் போவதுடன், பருத்தித் தொழிலில் இந்தியா இன்று அனுபவித்துவரும் இடர்ப்பாடுகளையெல்லாம் அகற்றி, அனைத்துலகத்தோடும் பருத்தித் தொழிலில் போட்டியிடும் நிலைக்கு இந்தியாவை உயர்த்திவிடும் என்பதில் ஐயமில்லை.

எனவே, தமிழ் நாட்டில் அரும்பியுள்ள ''வெண்மைப் புரட்சி'' மலர்ந்து ''பொருளாதார மணம்'' வீச அனைவரும் பாடுபடுவோமாக.




## 20. நாளும் விளையும் நலம்

இன்னகத்தி னின்றும் எழுந்துவரும் இன்சொற்கள்
புன்னகையி னூடே புகுந்துவரும்—நன்சொல்லால்
ஆளுந் திறனுடைய ஆரணங்கின் இல்லறத்தில்
நாளும் விளையும் நலம்.

—ஆர். லலிதா, II பி. எஸ்ஸி., கடலூர்-1.

சொல்லைச் சுருக்கியே தூய செயல்பெருக்கி
எல்லாரும் வாழ இனிமுயல்வோம்! —முல்லையே!
தாளாண்மை கொண்டு தளரா துழைத்திட்டால்
நாளும் விளையும் நலம்.

—புலவர் முத்துவேங்கடேசன், திருமயம்.

இடைநோக இன்னுயிரும் எங்கெங்கோ ஏக
இடையறு(து) ஈனல் இனிதோ?—இடையிடையே
மூளும் அவாவினை முற்றெச்ச மாக்கிவிட்டால்
நாளும் விளையும் நலம்.

—புலவர் இரா. வெற்றிவேற்செழியன், சென்னை.

நாடுயர வேண்டுமெனில் நாமெல்லாம் ஒன்றுபட்டு
வாடுகின்ற ஏழையர்க்கு வாழ்வளிப்போம்—பீடுமலைத்
தோளுடைய சீரணியின் தொண்டால் தமிழகத்தில்
நாளும் விளையும் நலம்.

—து. ம. இராமசாமி, துடியலூர்.

கொடுப்பாரும் இல்லாமல் கொல்பசியால் பிச்சை
எடுப்பாரும் இல்லாநாள் எந்நாள்?—துடித்தெழுந்தால்
மாளுந் தனியுடைமை, மாண்புசம தர்மத்தால்
நாளும் விளையும் நலம்.

—சண்முக. தாயுமானவன், பொன்மலை.

உழைப்பைப் பெரிதாக்கி உண்ணும் வயிற்றுப்
பிழைப்பைக் கருதாமல் பீடு—தழைப்பதற்கே
தோளுயர்த்திக் கொள்கை துவளாமல் வாழ்ந்துவந்தால்
நாளும் விளையும் நலம்.

—பாவலவன், நாட்டார்மங்கலம்.

கச்சிப் பதிக்கொருவன் கண்டவிடந் தோயமுதன்
கச்சிதனக் காமாட்சி கைப்பிடித்தான்—இச்சையிலான்
நீளுசிவன் அண்ணாவும் நேர்கலைஞர் ஆட்சியினால்
நாளும் விளையும் நலம்.

—அ. அண்ணாமலையார், அவளூர்ப்பேட்டை.

ஓடாதே தம்பி! உடலுழைப்போ டூக்கத்தால்
கூடாத செல்வமில்லை; கூரறிவு—கோடாது
தோளும் மனமும் தொழில்விரைந்து செய்தால்தான்
நாளும் விளையும் நலம்.

—இரா. ஜனார்த்தனம், ஞானஒளிவுபுரம்.

கோளுங் குளிர்மழையும் கொஞ்சிக் குலவுவதால்
நாளும் விளைகின்ற நந்நெல்லைத்—தாளுடனே
தோளில் சுமக்கின்ற தோகையே! உன்னுழைப்பால்
நாளும் விளையும் நலம்.

—பெ. அறகேசவன், பி.ஓ.எல்., குடியேற்றம்.

பாலற்ற வீடுகளில் பைங்குழந்தை ஏராளம்
தோலும் எலும்புமாய்த் துன்புறவோ?—சீலமுடன்
கோலக் குழந்தை இருவருடன் வாழ்வதனால்
நாளும் விளையும் நலம்.

—பழ. கோவிந்தன், பழவேற்காடு

மாசற்ற வள்ளுவனார் மாமறையைக் கற்றுநீ
ஆசற்ற வாழ்வில் அகமகிழ்க ! —பாசநெஞ்சில்
ஆளும் பகைமை அழிந்திவ் வுலகினில்
நாளும் விளையும் நலம்.

—இரா. பழனிச்சாமி, சிங்காநல்லூர்.

நோய்க்கு மருந்தாம்போல் நொந்தார்க்கே நம்முதவி
வாய்க்கு மெனக்கூறி வாழ்வளிக்கும்—தாய்போலே
நாட்டஞ் செலுத்திப் பணியாற்றும் நம்மரசால்
நாளும் விளையும் நலம்.

—த. இராசரத்தினம், பொள்ளாச்சி.

கொஞ்சும் விழிகளால் கொவ்வை இதழ்களால்
மிஞ்சுஞ் சிரிப்பை விளைவித்தே—நெஞ்சத்தை
ஆளுங் குழந்தை அளவாய் அமைத்திட்டால்
நாளும் விளையும் நலம்.

இரா.உமா, மேட்டுப்பட்டி.

நாமணக்க நாடோறும் நற்றமிழைப் பேசியுயர்
பாமணக்கத் தண்டமிழில் பாவியற்றிப்—பூமணக்க
ஆளுகின்ற நம்கலைஞர் ஆட்சியில் தோழனே
நாளும் விளையும் நலம்.

—சு. துளசிங்கம், சென்னை-1.

தென்றல் தவழ்ந்தாடுந் தென்பொதிகைச் சாரலெனும்
மன்றத்தில் நின்றாடும் மாமயிலே ! —இன்றமிழே !
ஆளுந்திறமுடையோய் ! அன்பே ! உனைப்போற்றின்
நாளும் விளையும் நலம்.

—செ. நாச்சிமுத்து, ஓடையகுளம்.

''உயிர்தமிழ் ! நாட்டின் உயர்வே குறிக்கோள் !
அயரா துழைத்தல் அறமென்''—றுயர்நோக்கில்
ஆளுங் கலைஞர் அருந்திறத்தா லன்றோவெந்
நாளும் விளையும் நலம்.

—புலவர் ச. சுப்பையா, மங்களம்கொம்பு.

தாழும் வினைநீக்கித் தாழ்வில்லா ஊக்கமுடன்
வாழும் மனிதயினம் வாழ்வாங்கு—வாழ்ந்துயரச்
சூழுந் துயரெல்லாம் மாளும் வகைகண்டோம் ;
நாளும் விளையும் நலம்.

—புலவர் அ. ரீத்தாமேரி, கிருட்டிணகிரி.

வறுமை துடைக்கும் வலிமையால் வந்த
சிறுமை அகற்றும் செயலால்—அறிவுவழி
ஆளுந் துணிவால் அருந்தமிழர் ஆட்சிக்கு
நாளும் விளையும் நலம்.

—கே. டி. அரசு, மணமேடு

பொன்னிப் புனலதனின் போக்கைத் தடுக்கின்றார்
கன்னித் தமிழகத்தைக் காடாக்க ; என்னுயிரே!
மூளுந் துயர்துடைக்க முந்துந் தமிழரசால்
நாளும் விளையும் நலம்.

—புலவர் இல. கிருட்டிணன், திங்களூர்.

கோள்பார்த்துக் கையின் குறிபார்த்துச் சோம்பலினால்
நாள்பார்த்து வாழ்வோரே ! நல்லகுறிக்—கோள்பார்த்துத்
தோளும் மனமும் துயர்வரினும் சேர்ந்துழைப்பின்
நாளும் விளையும் நலம்.

—சி. சௌ. கருப்பன்செட்டி, திருச்சி-15.

நேர்மை வழிநின்று நேயமனப் பான்மையுடன்
ஓர்மை உணர்வோ(டு)உலகினர்தாம்—பார்மீதில்
மூளும் பகைமறந்து முற்றச் செயலாற்றின்
நாளும் விளையும் நலம்.

—ந. இராமசாமி, குன்னுவாரன்கோட்டை.

சித்திரத்துப் பூவழகே ! செங்கனியே ! உன்னைநான்
முத்தமிட எத்தனிக்கும் போழ்திலே—கொத்துவதுன்
கோல நுதலின்முக் கோணப்பொட் டாம் ; உணரில்
நாளும் விளையும் நலம்.

—புலவர் அரசு, வெண்ணந்தூர்.

தெள்ளமுதே ! தேன்சுவையே ! தித்திக்குந் தீங்கனியே !
விள்ளரிய ஞான விளக்கொளியே ! —உள்ளமதை
ஆளுந் தமிழணங்கே ! அன்புருவே ! உன்சிரிப்பில்
நாளும் விளையும் நலம்.

—அ. வெ. அழகுசுந்தரம், குளமங்கலம்.

தேரோட்டங் கண்ட தெருவெங்கும் நல்வாழ்வின்
நீரோட்டங் காணலாம் ; நின்றதமிழ்—ஏரோட்டி
ஆளுங் கலைஞர் அழைப்பில் அணிவகுப்பில்
நாளும் விளையும் நலம்.

—கதிரவன், சென்னை-14

சாதிமதம் நீக்கிச் சமதர்மத் தத்துவத்தால்
தீதின்றி வேற்றுமையைச் சீர்திருத்தி—நீதியுடன்
ஆளும் கழக அரசமைந்த இந்நாட்டில்
நாளும் விளையும் நலம்.

—பொ. தங்கம், கேரளா

---

● பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:—
செல்வி ஆர். லலிதா, II பி.எஸ்ஸி.,
கந்தசாமி நாயுடு பெண்கள் கல்லூரி,
கடலூர்—1.

சொல்லைச் சுருக்கிச் சுறுசுறுப் பைப்பெருக்கிப்
பிள்ளை சுருக்கிப் பயிர்பெருக்கிக்—கல்வி, தொழில்
கேளிர் பெருக்கிக் கிளர்ந்துழைப் பின்கேளீர் !
நாளும் விளையும் நலம்.

—புலவர் கோம்பைச்சிரான், கோம்பை.

ஏதேதோ கேட்பதுபோல் ஏங்கி யெனைப்பார்ப்பாள்
தீதேதும் எவ்வுயிர்க்கும் செய்தறியாள்—கோதையாள்
பாலைச் சிரிப்பினிலே பன்னூறு முத்துதிர
நாளும் விளையும் நலம்.

—சிலி. செம்பியன், திருவண்ணாமலை.

கைம்பெண் மறுமணத்தில் கற்றோர் பணிவாய்ப்பில்
பைம்புனல் காணும் பயிர்வளத்தில்—ஐம்புலனில்
மீளும் உணர்வதனில் மீறாக் குடும்பமதில்
நாளும் விளையும் நலம்.

—வலங்கொண்டான், திருவண்ணாமலை.

இல்லாத மக்களுக் கெல்லாங் கிடைத்திடவே
நல்லபல திட்டங்கள் நாட்டியிங்கு—வல்லமையாய்
ஆளுந் தமிழ்மகனின் ஆட்சியிலே தட்டாமல்
நாளும் விளையும் நலம்.

—செ. தங்கவேல்சாமி, இராமேச்சுரம்.

யாண்டும் தொழில்பெருக்கி யாவரும் ஓரினமாய்
ஆண்டான் அடிமைத் தளையறுத்து—மீண்டுமிங்குச்
சூளுரைத்தே மேலாம் பொதுமைப் பயிர்வளர்த்தால்
நாளும் விளையும் நலம்.

—மா. சிவப்பிரகாசம், குரும்பேரி.

எங்குந் தொழிற்சாலை இன்பத் திருநாட்டில்
திங்களுக் கொன்று திறந்துவைக்கும்—நங்கலைஞர்
ஆளும் திறத்தில் அனைவரும் ஒத்துழைப்போம்
நாளும் விளையும் நலம்.

—கலைநம்பி, சீர்காழி.

பெற்றதைக் காக்கப் பெறுவதை நாம்தடுக்கும்
உற்ற வழியை உறுதியாய்ப்—பற்றிடுவோம்
ஆளுந் தமிழரசின் ஆக்கவழி நற்பணியால்
நாளும் விளையும் நலம்.

—என்.சி. கிருட்டிணசாமி, பொன்மலை.

பொய்யால் விளையும் புகழின்மை ; சூதுபல
செய்தால் விளையும் சிறப்பின்மை—மெய்யாகக்
கோளால் விளையும் கொடியபகை ; நற்குணத்தால்
நாளும் விளையும் நலம்.

—நாகு. ஆறுமுகம், அரிக்காரன்வலசு.

வாட்டி வதைக்கின்ற வன்முறையை நாடாமல்,
நாட்டின் நலமுயர்த்தும் நல்லவற்றில்—போட்டிகொண்டு
ஆளுங் குடியரசை ஆக்கமுறச் செய்துவிட்டால் !
நாளும் விளையும் நலம்.

—பாலதண்டபாணி, ரெட்டியாரூ

ஓடெடுத்தால் எவ்விடத்தும் உய்திடலா மென்றெண்ணிப்
பாடெடுத்த வாழ்வில்லாப் பாமரரின்—கேடெடுக்கச்
சூளுரைத் தாற்றும் சுறுசுறுப் பாட்சியினால்
நாளும் விளையும் நலம்.

—நா. இளங்கோவன், பி.எஸ்ஸி., சென்னை-1

உருசியாவோ டிந்தியாசெய் ஒப்பந்தந் தன்னால்
வருமிங்கு நல்லவைதாம் ; வாழும்—பெருமையினி
மூளும் பகைமடியும்; முன்னேற்றந் தான்சிறக்கும்
நாளும் விளையும் நலம்.

—புலவர் சு. முத்துக்கருப்பன், நகரம்

நெற்றி வியர்வை நிலத்தில் விழநீயும்
பற்றுடனே பாடுபடின் பைந்தமிழா—தெற்றெனவே
மாளுமுன்தன் நல்குரவு ; மாநிலமு மின்பமுற
நாளும் விளையும் நலம்.

—க. முத்துக்கருப்பன், பேரையூர்

கற்கண்டே ! தேனே ! கனியமுதே ! காவியமே
பொற்குடமே ! பூங்குயிலே ! புத்தமுதே —நற்கலைஞர்
ஆளுந் தமிழகத்தில் ஆக்கத்திற் கென்னகுறை ?
நாளும் விளையும் நலம்.

—எஸ்.சி. சுப்ரமணியம், எம்.ஏ.பி.டி.,
வேம்படிதாளம்.

இருகுழந்தை போதும் ; எதிர்கால வாழ்வின்
இருளகலச் சேமிப்போம் ; ஏற்றம்—உருவாக
ஆளுகின்ற நம்மரசின் ஆக்கமிகும் திட்டத்தால்
நாளும் விளையும் நலம்.

—க.ச. சூசை, சம்புகுட்டப்பட்டி.

நாட்டிற்கென் செய்வோம் நவிலென்று கேட்டவளே
வேட்டையிட்டு வன்முறையை வேரறுக்கப்—பாட்டெழுதி
ஆளுந் தலைவன் அழைத்தான் ; இனிமேலே
நாளும் விளையும் நலம்.

—செல்வி ஞா. சித்திரை, சோழன்பட்டி.

நாமிருவர் ஆசையாய் நற்குழந்தை ஓரிரண்டைப்
பூமியினில் பெற்றெடுத்துப் போற்றிடுவோம்—நாமிருவர்
ஆளும் உடலாசை ஆர்வமுடன் நீக்கிவிட்டால்
நாளும் விளையும் நலம்.

—செ. அ. உசைனி, பி.எஸ்ஸி., பி.டி.,
அலங்காநல்லூர்.

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காக்கும் என்னருமைச் சுந்தரியே—அற்புதமாய்
ஆளுந் தமிழரசின் ஆணைவழி நாம்நின்ருல்
நாளும் விளையும் நலம்.

—புலவர் எ. மாணிக்கம், விசூர்.

பசுமைப் புரட்சிதான் பைந்தமிழர் நாட்டில்
விசும்பின் நிலக்கு விரைய—வசையில்லா
வேளாண்மை மேன்மையுடன் வெற்றிக் கனியீந்தால்
நாளும் விளையும் நலம்.

—புலவர் செம்பியன், கெசல்நாயக்கன்பட்டி.

வாழுங் குடிகள் வளமை அடைந்திட
வீழுங் கொடிய செயலெல்லாம்—தோழியே
ஆளும் பெரியோர் அருகிருக்க அஞ்சாதே
நாளும் விளையும் நலம்.

—சு. நீலாவதி, கோவை-14.

ஊன்றிப் பயின்றுணர்ந் தூக்கா துழைத்துயர்ந்
தீன்ருேர் மகிழ, விருமக்கள்—ஈன்றுகுறிக்
கோளாய்த் தமிழர் குடும்பநலம், பேணிவர,
நாளும் விளையும் நலம்.

—ச. பன்னீர்ச்செல்வன், பெருமாள்பேட்டை.

வருவாய்க்குத் தக்க வகையறிந்து வாழ்ந்தால்
ஒருபோதும் ஏழ்மையுனக் கில்லை—சிறுமுதலை
நாளும்நீ சேர்க்கின்ற நற்பழக்கம் வைத்துக்கொள்
நாளும் விளையும் நலம்.

—அரங்க. வேலுச்சாமி, சூரியநல்லூர்.

பிற்பட்டோர் வாழப் பெருந்திட்டம் கண்டுநிதம்
உற்பத்தி கூட்டும் உயிர்கஞ்சாச்—சொற்கொண்டல்
மூளுமிடர் நீக்கும் முதல்வர்பண் டாரகர்க்கு
நாளும் விளையும் நலம்.

—உலகத் தமிழ்க் கழகம், (கிளை), இரும்புதலை.

நன்ருன திட்டங்கள் நாட்டில் நடைபெறவே
ஒன்ருகி எல்லோரும் ஒத்துழைத்தால்—அன்ருடம்
ஆளும் அரசுடையார் ஆக்கிவரும் நல்வினையால்
நாளும் விளையும் நலம்.

—புலவர் க. ஆ. இராசன், திருச்செங்கோடு.

உண்ண உணவும் உடுக்க உடையும்நல்
எண்ண உயர்வும் எழிற்குடிலும்—மண்மீதில்
வாழும் மனிதகுலம் வற்ருமல் பெற்ருல்எந்
நாளும் விளையும் நலம்.

—ப. வெங்கடாசலன், கருகாடிப்பட்டி.

ஆட்சி புரிவோர் அறநெறியில் நின்ருெழுக
மாட்சியுடன் மக்கள் மனமொன்றிக்—காட்சிதரின்
வாளும் விளக்காத வண்ணமிகு வெற்றிகளால்
நாளும் விளையும் நலம்.

—பசுமலை வீர. முருகேசன், எம்.ஏ.,பி.டி.,
மதுரை-20.

கோளுங் குறைமனமும் கொண்டோர் மனந்திருந்தி
ஆளுந் தமிழரசை ஆதரித்தால்—நீளும்
வேளாண்மை நன்கு விளையுங்கால் நம்நாட்டில்
நாளும் விளையும் நலம்.

—முத்து-ரெங்கராசன், கோம்பை.

எவ்வா றெழுதினுலும் என்''பா'' தமிழரசைக்
கவ்வா திருப்பதேன் ? கண்டிலேன்!—கவ்வுகின்ற
தேளுங் கடித்தால் சுகந்தெரியும் கண்டிடுவீர் !
நாளும் விளையும் நலம்.

—த. இளங்கண்ணன், மதுரை-2.

நாட்டுக் குடிதழுவும் நற்றமிழே கோலோச்சிக்
காட்டுங் கலைவிரிக்கக் கற்றவராம் !—கூட்டுறவாய்
ஆளும் அமுதரசின் ஆக்கம் உலகறிய
நாளும் விளையும் நலம்.

—எழிற்கோவன், ஒசூர்.

ஏடெடுத்துப் பாட்டெழுதும் ஏற்றமிகு பாவலரே !
நாடெடுத்துப் போற்றிடுமே நன்றில்லாக்—கேடெல்லாம்
நாளும் விரைந்தோட நற்கவிதை யாப்பீரேல்
நாளும் விளையும் நலம்.

—ஆ. சாக்ரடீஸ், மட்டப்பாறை.

வற்ருப் பெருவளத்தால் வன்பசிபோம் ; கல்லாமை
இற்ருெழியும், கற்ருேர் இனம்பெருகும்—நற்றமிழால்
ஆளும் எழிலரசால் ஆக்கம் பெருகும்; எந்
நாளும் விளையும் நலம்.

—மு. அ. முகில்வண்ணன், செய்துங்கநல்லூர்

காடுங் கரம்பும் களர்நிலமும் சீராக்கிப்
பீடுடனே பாடுபடும் பெற்றியினுல்—நாடுதனில்
மாளும் வறுமை மதிப்போங்கும் மற்றுமிவண்
நாளும் விளையும் நலம்.

—க. கிருட்டிணமூர்த்தி, பி·ஏ.,பி.டி, அரியூர்

காராளர் சிந்துங் கடும்வியர்வை நீர்த்துளியால்
ஏராள மாய்விளையும் நெல்மணிகள்—நீராலே
மூளும் நெருப்பணையும் ; மூன்ருல் குடும்பத்தில்
நாளும் விளையும் நலம்.

—எஸ். சுந்தரம், பாலையூ

[நீலகிரி] கூட்டுறவு மைய வங்கி லிமிடெட்
நெ. ஜே. 90 "கூட்டுறவு மத்திய வங்கி கட்டடம்" உதகமண்டலம்

தந்தி: நில்போபாங்க் தொலைபேசி எண் 2420
கிளைகள்: கோத்தகிரி, குன்னூர், கூடலூர்
தொலைபேசி எண்: 332, 2684, 24

| | (லட்சம்) |
|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் .. | 40·00 |
| வழங்கப்பட்ட பங்கு மூலதனம் .. | 29·87 |

வட்டி விகிதம்

| | |
|---|---|
| (1) சேவிங்ஸ் பாங்கு கணக்கு .. | 4% |
| (2) பிராவிடண்ட்பண்டு டெபாசிட்டு | 5% |

நிரந்தர டெபாசிட்டுகள்

| | |
|---|---|
| (1) 1 மாதம் முதல் 3 மாதங்களுக்குள்ளாக | 3½% |
| (2) 3 ,, ,, 6 ,, | 4¾% |
| (3) 6 ,, ,, 12 ,, | 5¼% |
| (4) 12 ,, ,, 24 ,, | 6¼% |
| (5) 24 ,, ,, 36 ,, | 6¾% |
| (6) 36 ,, ,, 60 ,, | 7¼% |
| (7) 60 ,, ,, 84 ,, | 7½% |
| (8) 84 மாதங்களுக்குமேல் | 7¾% |

36 மாதங்களுக்கும் அதற்கும் மேற்பட்ட காலத்திற்கும் போடப்படும் டெபாசிட்டுகளுக்கு (அசலுக்கும், வட்டிக்கும்) தமிழ்நாடு அரசு உத்திரவாதம் அளித்துள்ளது.

விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

ஜே. மாதாகவுடர், எம் பி., பெருந்தலைவர். இரா. சு. வேலாயுதம். பி.எ. துணைப்பதிவாளர் செயலாளர்.



உறுதிக்கும்
உழைப்பிற்கும்

CHETTINAD BRAND

## செட்டிநாடு சிமெண்ட்

எங்கும் கிடைக்கிறது

தயாரிப்பாளர்கள்:

செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்

6, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1.
தந்தி: 'BESTCEMENT' போன்: 27256
பாக்டரி: புலியூர் (கரூர்), திருச்சி மாவட்டம்.
தந்தி: 'CEMENT' போன்: 144.



## நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ் பிரைவேட் லிமிடெட்

1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, சூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண்: 52670 - 52671
52672 - 52673

தந்தி: MONARCH

Sarath


## வெண்பாப் போட்டி-23

ஈற்றடி: மாண்பதனைக் காத்தல் மரபு

முடிவுத் தேதி: 1—12—1971

பரிசு: ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),

"தமிழரசு" அலுவலகம்,

அரசினர் தோட்டம்,

சென்னை-2.

குறிப்பு: அஞ்சலட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.


அண்ணன் காட்டிய வழி
10
முத்துவின் வீட்டில்
முத்துவை விருப்பமில்லாமல்தான் நான் ராஜினாமாச் செய்யச் சொன்னேன்
அவன் அந்தச் சங்கத்திலே இருக்கிறதாலே நமக்கு என்ன கெடுதல்?
அம்மா! அப்பா சொன்னால் நல்லதுக்குத்தான் சொல்வாங்க!
அப்பா சொல்லைத் தட்டாத பிள்ளை
உன் சொல்லைத்தான் மீறி நடப்பானா முத்து?
முத்துவைத் தேடி இளங்கோ வருகிறான்
முத்து! உனக்காக எல்லாரும் அங்கே காத்திருக்கிறார்கள்
நான் வரலை இளங்கோ!
முத்து! உன்னை மன்றச் செயலாளர் பதவியை ராஜினாமாச் செய்யச் சொன்னேனே தவிர.... எங்கேயும் வெளியே போகாதே என்று சொன்னேன்
இல்லை அப்பா... நான் அங்கே போனால் என் ராஜினாமாவைத் திரும்பப் பெறணும்னு கட்டாயப் படுத்துவாங்க
அப்ப.. கட்டாயம் நீ அங்கே போக வேண்டாம்
அப்பா சொன்ன பிறகு மீறி எப்படி வருவது? எல்லாரும் என்னை மன்னிச்சுக்கங்க! ஆனால்.... ஆண்டுவிழா நிகழ்ச்சிகளிலே நிச்சயமா நான் கலந்து கொள்வேன்!
கலந்து கொள்ளக் கூடாது என்று முடிவு எடுக்கத்தான் நாங்க கூப்பிடுறோம்!
அது தவறு இளங்கோ நமது மன்ற ஆண்டுவிழாவை நாமே வெறுத்து ஒதுங்கிக் கொள்வது....
அண்ணனை அவமானப்படுத்தியதாகும்
அண்ணா மாதிரி நீயும் எங்கேயோ போயிட்டு இருக்கே! எங்க முடிவு வேறு மாதிரி இருக்கும்! நான் வர்றேன்!
இளங்கோ! இளங்கோ!
கதை-நம்பியின் தம்பி * படம்: குமார்
தொடரும்

# ஒப்பந்தப் புள்ளிகள் வேலைவாய்ப்பு விளம்பரங்கள்

## தொழில் வணிகத்துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கீழ்க்கண்ட வேலைகளை மேற்கொள்வதற்காகத் தொழில்துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச்சார்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப்பகுதி, தொழில் வணிகத்துறை அவர்களால் கீழே குறிப்பிடப்பட்ட தேதிகளில் மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-10 மணிக்கு அந்த சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப்பகுதி, தொழில்துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

| தொடர் எண்ணும், வேலையின் பெயர். | கட்டுத் தொகை. ரூ. | ஒப்பந்தப் பத்திரங்கள் ரூ. | வேலையை முடிக்க வேண்டிய காலம். | ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்கும் தேதி. | ஒப்பந்தப் புள்ளிப் பெற கடைசித் தேதி. |
|---|---|---|---|---|---|
| 1. திருச்சி திருவெறும்பூர் துணைத் தொழில்கள் பேட்டையில் ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள் உள்ளதாக, தொழிலாளர்களுக்கான மூன்று பிளாக்குகள் கட்டுதல். | 3,300 | 10·40 | 8 மாதங்கள். | 19—11—71 | 6—12—71 |
| 2. கும்பகோணம் தொழில் பேட்டையில் ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள் உள்ளதாக தொழிலாளர்களுக்கான ஒரு பிளாக் கட்டுதல். | 1,100 | 10·40 | 6 மாதங்கள். | 22—11—71 | 7—12—71 |

ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 63, ரங்கநாதபுரம், புத்தூர், திருச்சி என்ற முகவரியில் உள்ள நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) திருச்சி கோட்டம் அவர்களது அலுவலகத்தில் மேலே குறிப்பிட்ட தேதி முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை அதற்குரிய விற்பனை வரி உட்பட்டத் தொகையான ரூபாய் 10·40-ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படாது) அரசு கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XXIX Industries and other receipts" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), திருச்சி கோட்டம், 63, ரங்கநாதபுரம், புத்தூர், திருச்சி அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத் தொகையை சலான் வடிவிலோ, 'கால் டிபாசிட்' ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), திருச்சி டிவிஷன் அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசு கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்து கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகைச் செலுத்தப்படுமானால் ஏற்றுக் கொள்ளப்படாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகிறவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்,
(கட்டுமானப் பகுதி)

(த. 31)

## வேலை வாய்ப்பு

மாநிலத்திலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சுகாதாரப் பார்வையாளர்களாக நியமிக்கப்படுவதற்காக, பயிற்சி பெற்ற நர்சுகளிடமிருந்து மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

மனுதாரர்கள் சென்னை நர்சுகள் மருத்துவக் கவுன்சிலில் நர்சாக செக்ஷன்—ஏ சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். தமிழில் பேச, படிக்க, எழுத தெரிந்திருக்க வேண்டும். இவர்கள் மூன்று மாதப் பயிற்சியை மேற்கொள்வது அவசியம். (சென்னை எழும்பூரில் உள்ள வட்டார குடும்ப நலத் திட்டப் பயிற்சி நிலையத்தில் ஒரு மாதம்; சென்னை-5 சுகாதாரப் பார்வையாளர்கள் பள்ளியில் 2 மாதங்கள்) பயிற்சிக் காலத்தில் முழுச் சம்பளமும் படிகளும் தரப்படும். பெண் சுகாதாரப் பார்வையாளர்களாக, துறையில் குறைந்த பட்சம் மூன்று ஆண்டுக் காலம் பணியாற்ற பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டும். இதில் தவறினால் பயிற்சி செலவுகளையும், பயிற்சிக் காலத்தில் பெற்ற சம்பளம், படிகள் ஆகியவைகளையும் அரசாங்கத்துக்குத் திருப்பித் தரவேண்டியவர்களாவர்.

இந்த வேலைக்குச் சம்பள விகிதம் ரூ. 250—10—400. தொடக்கச் சம்பளம் மாதம் ரூ. 270-ம் அத்துடன் பர்சனல்பே ரூ. 5-ம் இந்த வேலைக்குரிய படிகளும் அளிக்கப்படும்.

மனுக்களைத் தங்கள் கைபட எழுதி அனுப்ப வேண்டும். அத்துடன் சான்றிதழ்களின் நகல்களை அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரின் சான்றொப்பத்துடன் வைத்து இயக்குநர், மக்கள் நல்வாழ்வு குடும்ப நலத் திட்டம், மாநில குடும்ப நலத் திட்ட பீரோ, எண், 49, பாந்தியன் சாலை, சென்னை-8'' அவர்களுக்கு அனுப்ப வேண்டும்.

மனுக்களைப் பெற கடைசித் தேதி 22-11-71. அத்தேதிக்குப் பின் வரும் மனுக்கள் ஏற்கப்படமாட்டாது.

டாக்டர் பி. ஆர். பால
கிருஷ்ணன்.

(து. 24)

## ஒப்பந்தப் புள்ளி

### வீட்டு வசதி வாரியம்

சென்னை கிழக்குக் கோட்டம்

கோப்பு எண். எம்.இ. 6/978/71, நாள் 26—10—1971.

10 அங்குலம் 250 எம்.எம். சி. ஐ. பைப்புகள், பெண்டுகள் ஆகியவைகளைப் பட்டினப்பாக்கம் 'சைட்' அலுவலகத்தில் வழங்க பார்வை எண், கெடு தேதி, வழங்கப்படும் பொருட்கள் ஆகியவைகளை உறையின் மீது குறிப்பிட்டு, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 2—12—71 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

பொருள்கள் அளவு, வரை அளவுகள் விவரம், நிபந்தனைகள் முதலிய விவரங்களை ரூ. 10-ம் விற்பனை வரியும் செலுத்தி (இது திருப்பித் தரப்படமாட்டாது) அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

கட்டுத் தொகை ரூ. 1,750 ஒப்பந்தப் புள்ளிகள் 2—12—71 அன்று மாலை 3-05 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

டி. ஜெகதீசன்,

நிர்வாகப் பொறியாளர் (கிழக்கு)

(து. 36)

## ஒப்பந்தப் புள்ளி

### மத்தியச் சிறை

1,000 காலன் தண்ணீர் கொள்ளத்தக்க நீர்த் தொட்டி இணைக்கப்பட்ட நான்கு சக்கர டிரைலர் வழங்குவதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், கண்காணிப்பாளர், மத்தியச் சிறை, கோயம்புத்தூர் அவர்களால் 30—11—71 பிற்பகல் 3 மணி வரையிலும் வரவேற்கப்படுகின்றன.

1,000 காலன் தண்ணீர் கொள்ளத்தக்கதாய், 4 சக்கரங்களையுடைய டிராக்டர் டிரெயிலர், பிரேக்கிங் கருவியுடனும் அபாய விளக்குடனும் மற்றும் டிராக்டருக்குள்ள துணைக்கருவிகள் பொருத்தப்பட்ட நிலையில் நீர்த்தொட்டி 5 m.m. M. S. தகட்டில் செய்யப்பட்டதாய் ஒரு ஆள் செல்லத் தக்க துவாரத்துடன் ( a man hole ) உள்ள மூடியுடனும் 2'' ஜி.எம். கேட்வால்வு அமைந்ததாய், பின்பக்கம் வளைந்ததாய், உள்ளே தேவையான பாபிள் தகடு அமைக்கப்பட்டு இரு முறை எனமல் வண்ணம் ( Enamal paint ) பூசப்பட்டதாய் இருக்க வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரமும், நிபந்தனைகளும், கண்காணிப்பாளர், மத்தியச் சிறை, கோயம்புத்தூர்—அவர்களிடமிருந்து ரூ. 1·04 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மூடி முத்திரையிட்ட உறையில் பதிவு அஞ்சல் ஒப்பத்துடன் ஒப்பந்தப் புள்ளி, நான்கு சக்கர டிரெயிலர் தண்ணீர்த் தொட்டி இணைப்புடன் 30—11—71 என எழுதி திரு வாசுதேவன், பி.ஏ. கண்காணிப்பாளர், மத்தியச் சிறை, கோயம்புத்தூர் அவர்கள் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

கண்காணிப்பாளர்,

மத்தியச் சிறை, கோயம்புத்தூர்.

(து. 35)

## ஒப்பந்தப் புள்ளி

### சின்கோனுத் துறை

அலுமினியம், அலுமினியம் அல்லாய் பைப்புகள் தேவை

பாசன வேலைகளுக்காக அலுமினியம், அலுமினியம் அல்லாய் குழாய்கள், ஃபிட்டிங்குகள் வழங்குவதற்காகத் தமிழ்நாடு ஆளுநர் சார்பில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 15—12—1971 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களைப் பெறப் பத்திரங்கள் விலைத் தொகை விற்பனை வரி உள்பட ரூ. 2·07 உடன் கீழ்க்கண்டவருக்கு மனுச் செய்க.

இயக்குநர்,

சின்கோனுத் துறை,
உதகமண்டலம், நீலகிரி.

(து. 23)

# ஒப்பந்தப் புள்ளி

## தொழில் வணிகத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளை மேற்கொள்வதற்காக, தொழில்துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத்துறை அவர்களால் கீழே குறிப்பிடப்பட்ட தேதிகளில் மாலை 3–00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3–10 மணிக்கு அந்த சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2, அவர்களால் திறக்கப்படும்.

1. ஒப்பந்தப் புள்ளி எண் 1:—காட்பாடி தொழிற்பேட்டையில் பிளாக் ஒன்றில் 6 குடியிருப்புகள் உள்ளதாக தொழிலாளர்களுக்கான ஒரு பிளாக் கட்டுதல்.

2. ஒப்பந்தப் புள்ளி எண் 2:—அரக்கோணம் தொழிற்பேட்டையில் பிளாக் ஒன்றில் 6 குடியிருப்புகள் உள்ளதாக, தொழிலாளர்களுக்கான ஒரு பிளாக் கட்டுதல்.

இவை ஒவ்வொன்றுக்கும் கட்டுத் தொகை ரூ. 1,000.

இந்த ஒப்பந்தப் புள்ளிகளில் ஒவ்வொரு வகைப் பத்திரத்திற்கும் விலை ரூ.10.40.

இந்த வேலைகள் ஒவ்வொன்றையும் முடிக்க வேண்டிய காலம் 6 மாதங்கள்.

இவ்வொப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் தேதி 18–11–1971.

இந்த ஒப்பந்தப் புள்ளிகள் ஒவ்வொன்றையும் பெறுவதற்கு கடைசித் தேதி : 4–12–1971.

ஒப்பந்த படிவம் : மொத்தத் தொகை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் எண். 4, தியாகராஜபுரம், வேலூர், வட ஆர்க்காடு மாவட்டம் என்ற முகவரியில் உள்ள நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) மேற்குக் கோட்டம் அவர்களது அலுவலகத்தில் மேற்குறிப்பிட்ட தேதி முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற்பனை வரி உட்பட்டத் தொகையான ரூபாய் 10.40-க் (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ XXIX Industries other receipts என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர் (கட்டுமானம்) மேற்குக் கோட்டம் எண். 4 தியாகராஜபுரம், வேலூர், வட ஆர்க்காடு மாவட்டம் அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத் தொகையை சலான் வடிவிலோ, 'கால் டிபாசிட்' ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ தான் ஏற்றுக்கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), மேற்குக் கோட்டம், 4, தியாகராஜபுரம், வேலூர், வட ஆர்க்காடு மாவட்டம் அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்டு டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின் வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்துக் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசீய சேமிப்புப் பத்திரங்களும் சம்மந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு வகையில் கட்டுத் தொகை செலுத்தப்படுமானால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகிறவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்,
கட்டுமானப்பகுதி.

சென்னை-2.

(த. 33)

---

## ஏல அறிக்கை.

## வனத்துறை

### கடலூர் வனக் கோட்ட முந்திரி மகசூல் ஏல விளம்பரம்

கடலூர் வனக்கோட்டத்தைச் சார்ந்த விருத்தாசலம், உளுந்தூர்ப்பேட்டை, திருக்கோவிலூர், திண்டிவனம் வனச்சரகங்களில் உள்ள முந்திரித் தோப்புகளில் விளையும் முந்திரி மகசூல்களைச் சேகரித்து அப்புறப்படுத்தும் 1972 ஆம் ஆண்டுக்கான உரிமையின் ஏலம் 15—12—1971 முதல் 17–12–1971 முடிய தினசரி காலை 10–30 மணிக்கு கடலூர் மாவட்ட வன அலுவலகத்தில் பகிரங்கமாக நடத்தப்பெறும்.

இது தொடர்பான இதர விவரங்களை நெ. 25, முதல் கிராஸ் தெரு, சீத்தாராம் நகர், கடலூர் 1-லிருக்கும் மாவட்ட வன அலுவலரிடமாவது அல்லது சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலரிடமாவது தெரிந்து கொள்ளலாம்.

சி. பவித்திரன்,
மாவட்ட அலுவலர்.

(த. 39)

## ஒப்பந்தப் புள்ளி

### தொழில் வணிகத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கீழ்க் கண்ட வேலைகளை மேற்கொள்வதற்காகத் தொழில் துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற் பார்வைப் பொறியாளர், கட்டுமானப்பகுதி, தொழில் வணிகத்துறை அவர்களால் கீழே தரப்பட்டுள்ள தேதிகளில் மாலை 3—00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3—10 மணிக்கு, அந்தச் சமயத் தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் திறக் கப்படும்.

1. **ஒப்பந்தப் புள்ளி எண்** : 1:—கக்கலூர் தொழிற் பேட்டையில் ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள் உள்ளதாக தொழிலாளர்களுக்கான பிளாக் ஒன்று கட்டுதல், இந்த வேலைக்குக் கட்டுத் தொகை ரூ. 1,100.

2. **ஒப்பந்தப்புள்ளி எண்** 2:—மாதவரம் தொழிற் பேட் டையில் ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள் உள்ளதாக, தொழி லாளர்களுக்கான இரண்டு பிளாக்குகள் கட்டுதல். இந்த வேலைக்குக் கட்டுத் தொகை ரூ. 2,100.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை ஒவ்வொரு இனத் துக்கும் ரூபாய் 10—40.

இந்த வேலையை முடிக்க வேண்டிய காலம், ஒவ்வொன் றுக்கும் 6 மாதங்கள்.

இந்த இரண்டு வேலைகள் வகையிலும் ஒப்பந்தப் பத்தி ரங்கள் கிடைக்கும் தேதி 17—11—1971.

இந்த இரு வேலைகளிலும் ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறு வதற்குக் கடைசித் தேதி 3—12—1971.

ஒப்பந்தப் படிவம் : மொத்தத் தொகை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், சென்னை-32, கிண்டி, தொழிற்பேட்டை, வடக்குச் கோட்டம் நிர்வாகப் பொறியா ளர் (க) அலுவலகத்தில் மேலே குறிப்பிட்ட தேதியிலிருந்து அலுவல் நேரத்தில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற் பனை வரி, உட்பட்ட தொகையான ரூபாய் 10.40-ஐ (எக் காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ XXIX Industries—Other Receipts என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), வடக்குக் கோட்டம், தொழிற் பேட்டை, கிண்டி, சென்னை-32 அவர்களது கணக்கில் செலுத் தப்பட வேண்டும்.

கட்டுத் தொகையை சலான் வடிவிலோ, 'கால் டிபாசிட்' ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப் டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்)வடக்குக்கோட்டம்,தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-32 அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட் யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ் நாடு மின்சார வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்து கட்டுத் தொகையாக ஏற்றுக்கொள் ளப்படும். தேசிய சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட் டுடைமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளி அளிக்க விரும்புகின்றவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**சி. பி. மாத்யூ,**

சென்னை-2. மேற்பார்வைப் பொறியாளர்,
(த. 32) கட்டுமானப் பகுதி.

---

## ஒப்பந்தப்புள்ளி நீட்டிப்பு

### மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம்

வீராணம் திட்டவட்டம்
சேப்பாக்கம், சென்னை-5

அறிக்கை எண் 14166/71-2.

நாள் : 23—10—71.

வேலையின் பெயர் :

சென்னை, நேப்பியர் பாலத் துக்குக் கீழே கூவம் ஆற்றின் வலக்கரையில் நீச்சல் குள அமைப்புக்காக நீர் வடிகட்டு இயந்திரங்கள் எல்லாத் துணை உறுப்புகளுடனும் வழங்குதல், நிர்மாணித்தல் (இயந்திரங்களை இயக்கி வைத்தல் உள்பட).

பார்வை : இந்த அலுவலகத் தின் 17—9—1971 தேதியிட்ட அறிவிப்பு எண் 14166/டி. 8/71.

மேலே கண்ட வேலைக்கு ஒப் பந்தப் புள்ளிகள் பெறுவதற்கு கடைசித்தேதி 26—10—1971 என அறிவிக்கப்பட்டிருக்கிறது. அத் தேதி 26—11—71 மாலை 3·00மணி வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 22—11—1971 வரை கிடைக்கும்.

ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 4-00 மணிக்கு மேல் மேற்பார்வைப் பொறியாளரால் பிரிக்கப்படும்.

ஏற்கனவே விற்கப்பட்ட ஒப் பந்தப் பத்திரங்களும் செல்லும்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
**வீராணம் திட்ட வட்டம்,**
**சென்னை-5.**

**(த. 25)**

## ஒப்பந்தப் புள்ளி

### தொழில் வணிகத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கீழ்க் கண்ட வேலைகளை மேற்கொள்வதற்காக தொழில்துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத்துறை அவர்களால் கீழே குறிப்பிட்ட தேதிகளில் மாலை 3—00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3—10 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

1. ஒப்பந்தப் புள்ளி எண் : 1:—அம்பத்தூர் தொழிற் பேட்டையில், பிளாக் ஒன்றுக்கு 6 குடியிருப்புகள் வீதம் உள்ள தொழிலாளர்களுக்கான 2 பிளாக்குகள் கட்டுதல்.

2. ஒப்பந்தப் புள்ளி எண் 2:—அம்பத்தூர் தொழிற் பேட்டையில் பிளாக் ஒன்றுக்கு 6 குடியிருப்புகள் வீதம் உள்ள தொழிலாளர்களுக்கான 2 பிளாக்குகள் கட்டுதல்.

3. ஒபபந்தப் புள்ளி எண் 3:— அம்பத்தூர் தொழிற் பேட்டையில், பிளாக் ஒன்றுக்கு 6 குடியிருப்புகள் வீதம் உள்ள தொழிலாளர்களுக்கான 2 பிளாக்குகள் கட்டுதல்.

4. ஒப்பந்தப் புள்ளி எண் 4:—அம்பத்தூர் தொழிற் பேட்டையில் பிளாக் ஒன்றுக்கு 6 குடியிருப்புகள் வீதம் உள்ள, தொழிலாளர்களுக்கான 2 பிளாக்குகள் கட்டுதல்.

இந்த வேலைகள் ஒவ்வொன்றுக்கும் கட்டுத் தொகை ரூ. 2,100.

ஒவ்வொரு ஒப்பந்தப்புள்ளி விஷயத்திலும், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் ரூ. 10.40.

இந்த நான்கினுள் ஒவ்வொரு வேலையையும் முடிக்க வேண்டிய கால அளவு 6 மாதங்கள்.

இவற்றுள் முதலாவது, இரண்டாவது ஒப்பந்தப் பள்ளிகள் விஷயத்தில் ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் தேதி 15—11—1971. மூன்றாவது, நான்காவது ஒப்பந்தப் புள்ளிகள் விஷயத்தில் ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் தேதி 16—11—1971.

இந்த ஒப்பந்தப் புள்ளி ஒவ்வொன்றும் கிடைக்க வேண்டிய கடைசித் தேதி 2—12—1971.

ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிர்வாகப் பொறியாளர் (கட்டுமானம்) அம்பத்தூர் கோட்டம் 35/2 உட்ஸ் ரோடு சென்னை என்ற முகவரியில் உள்ள அவர்களது அலுவலகத்தில், மேல் குறிப்பிட்ட தேதிகளிலிருந்து அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற்பனை வரி உட்பட்ட தொகையான ரூபாய் 10·40-ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XXIX Industries—Other Receipts" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) அம்பத்தூர் கோட்டம் 35/2 உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத் தொகையைச் சலான் வடிவிலோ : "கால் டிபாசிட்" ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) அம்பத்தூர் கோட்டம் 35/2 உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்து, கட்டுத் தொகையாக ஏற்றுக்கொள்ளப்படும். தேசீய சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும். வேறு வகையில் கட்டுத் தொகை செலுத்தப்படுமானல் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளி அளிக்க விரும்புகின்றவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்கவேண்டும்.

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்,
(கட்டுமானப் பகுதி.)

சென்னை-2.

(த.12)

# ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

## குடிநீர் வடிகால் வாரியம்

எண். 1372/எஸ்.டி. 1/தேதி 21—10—71.

தமிழ்நாடு, குடிநீர், வடிகால் வாரியம் சார்பாக கீழ் வரும் வேலைக்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 22—11—1971 மாலை 3-00 மணிக்குள் கோவை பொதுச் சுகாதார மேற்பார்வைப் பொறியாளரால் அவரது அலுவலகம் 25-1, மூன்ருவது வீதி, டாட்டாபாட், கோவை-12-ல் வரவேற்கப்படுகிறது. மேற்படி ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலை 4-00 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட அதிகாரியாலோ, வரப்பெற்ற ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1. | வேலையின் பெயர் ... | கோயம்புத்தூர் சாக்கடைத் திட்டம். மண்டலம் 3 பகுதி நான்கு—முதல் கட்டம்—சாக்கடை நீர் கொண்டு செல்லும் குழாய் போடுதலும் இணைத்தலும், அது சம்பந்தப்பட்ட வேலைகளும். |
| 2. | ஒப்பந்த முறை ... | மொத்தத் தொகை (2.5). |
| 3. | முன் வைப்புத் தொகை: | ரூபாய் 8,855 (ரூபாய் எட்டாயிரத்து எண்ணூற்று ஐம்பத்தைந்து மட்டும்). |
| 4. | பணி முடிக்க வேண்டிய காலம்.. | 12 மாதங்கள். |
| 5. | ஒப்பந்தப் பத்திரங்கள் விலை .. | ரூபாய் 10.35 (விற்பனை வரி உட்பட). |
| 6. | ஒப்பந்தப் பத்திரங்கள் விற்கப்படும் தேதி | 20—10—71 முதல் 20—11—71 முடிய) |

மேற்படிப் பணிக்கான ஒப்பந்தப் பத்திரங்களை, நிர்வாகப் பொறியாளர், 11/8, பாசியகாரளு ரோடு கிழக்கு, ர. ச. புரம், கோயம்புத்தூர்-2 விலாசத்திற்கு மணியார்டர் மூலமாகவோ அல்லது நேரில் பணம் செலுத்தியோ பெற்றுக் கொள்ளலாம்.

முன் வைப்புத் தொகையை மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் 'கேட்பு வரைஒலை' (Demand Draft) கோயம்புத்தூர் நிர்வாகப் பொறியாளரின் பெயரில் செலுத்தவோ அல்லது கஜானுவில் கோயம்புத்தூர் நிர்வாகப் பொறியாளரின் பெயரில் "பி. டபிள்யூ III O.R." தலைப்பில் செலுத்தவோ செய்யலாம். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் பொறுப்புறுதிகளையும் முன் வைப்புத் தொகைக்காக ஒப்புக்கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை இணைக்கப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளருக்கு ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது எல்லா ஒப்பந்தங்களையோ காரணம் காட்டாமல் நிராகரிக்க உரிமையுண்டு.

**மேற்பார்வைப் பொறியாளர்**

(த. 7)

## நிலநீர் இயக்ககம்

அறிக்கை எண் 4/71—72.

ஒப்பந்தப் புள்ளிகள் விற்பனைக்கும், பெறுதலுக்குமான கால வரம்பு நீடிப்பு.

வேலையின் பெயர்: 36 அங்குலம் உள் விட்டம் அளவுள்ள முன்னதாக அழுத்த மேற்பட்ட கான்கிரீட் குழாய்களும், தனி அமைப்புகளும் (Pre-stressed concrete pipes and specials) தயாரித்து, அவற்றை வேலை இடத்திற்குக்கொண்டு சென்று சரியான வரிசைப்படியும், சரிவுப்படியும் வைத்து, ரப்பர் வளைய இணைப்புகளால் பொருத்துதல்.

மேற்குறித்த வேலைக்காக, நிலநீர் இயக்குநர் அலுவலகத்தில், முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்கான கால வரம்பு 20—12—1971 மாலை 3-00 மணிவரை நீடிக்கப்படுகிறது.

ஒப்பந்தப் புள்ளிகள் நிலநீர் இயக்குநரால் அவருடைய அலுவலகத்தில் 20—12—1971 அன்று மாலை 4-00 மணிக்கு, அச்சமயம் வந்திருக்கும், ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்குறித்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 16—12—1971 வரை கிடைக்கும். நிலநீர் இயக்குநர் அலுவலகம் 1—11—1971 முதல் எண் 10-ஏ, தண்டபாணி தெரு, தியாகராயநகர் சென்னை-17 என்ற முகவரியில் செயல்படும். மற்ற நிபந்தனைகளில் மாற்றம் ஏதுமில்லை.

**சா. பஞ்சநதம்,**
நிலநீர் இயக்குநர்,

நிலநீர் இயக்குநர் அலுவலகம்,
82, இராயப்பேட்டை
நெடுஞ்சாலை, சென்னை-4.

(த. 3)



16-11—9

## ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் கீழே குறிப்பிட்டுள்ள பணிகளைச் செய்வதற்கான, தனித்தனியான மூடி அரக்கு முத்திரையிட்ட உறைகளில் சாற்றுக் குறிப்பெண்ணும், தவணை நாளும் குறிப்பிட்ட விலைப்பட்டியல்கள் 30–11–1971 பிற்பகல் 2–00 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

விலைக் குறிப்புகளைக் குறித்தனுப்புவதற்குரிய நமூனு படங்கள் அடங்கிய குறிப்புப் பிரதிகள் (Copies of specification) வேண்டுவோர், சாற்றுக் குறிப்புப் பிரதி ஒவ்வொன்றுக்கும் ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்) தலைமைக் கணக்காயர், செலவினப் பகுதி, திருநெல்வேலி மின்சார அமைப்பு, திருநெல்வேலி-3 என்ற முகவரிக்கு பண அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிலோ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் தொகை எந்த காரணத்தை முன்னிட்டும் திருப்பித்தரப்படமாட்டாது. சாற்றுக் குறிப்புப் பிரதிகள் 11–11–1971 முதல் 27–11–1971 முடிய விலைக்குக் கிடைக்கும்.

பண அஞ்சல்கள் 19–11–1971 வரை பெற்றுக்கொள்ளப்படும். பண அஞ்சல் அனுப்புவோர், தமது முகவரியையும், சாற்றுக் குறிப்பெண்ணையும் தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.

சாற்றுக் குறிப்புப் பிரதிகள் மற்றவருக்கு மாற்றத்தக்கதல்ல. சாற்றுக் குறிப்புப் பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அவை உரியவருக்கு சேராவிட்டாலும், அல்லது தாமதமாகக் கிடைத்தாலும் அதற்கு மின் சார வாரியம் பொறுப்பில்லை.

கட்டுத் தொகை (Earnest Money Deposit) செலுத்தாமல் அனுப்பப்படும் விலையொப்பங்களும், குறிப்பிட்ட நமூனுக்களில் அனுப்பப்படாத விலையொப்பங்களும், காலதாமதமாக வரும் விலையொப்பங்களும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மிகவும் விலை குறைந்த ஒப்பந்தத்தையோ அல்லது வேறு எந்த ஒப்பந்தத்தையோ ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் வாரியத்திற்குக் கிடையாது.

எந்த விலையொப்பந்தத்தையும் காரணம் காட்டாமல் தள்ளுபடிச் செய்யவும், அல்லது குத்தகையை இரண்டு அல்லது மேற்பட்ட விலையொப்பதாரர்களுக்கு இடையே பிரித்துக் கொடுப்பதற்கும் கீழ்க்கையொப்பமிட்டவருக்கு முழு உரிமையுண்டு.

விலையொப்பங்கள் அனைத்தும் 30–11–1971 அன்று மாலை 3–00 மணிக்கு வந்திருக்கும் விலையொப்பந்ததாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

| வரிசை எண். | சாற்றுக் குறிப்பு எண். | வேலைக்குறிப்பு. | சேர்ப்பிடம். |
|---|---|---|---|
| 1 | ஒ.டி. 7/71-72. | பார்கோ 4191 எம்.எம். (165'') W.B. 5 டன் உள்ள நான்கு லாரிகளுக்குக் கம்பம் ஏற்றிச் செல்லும் கருவிகளோடு பாடி கட்டுதல். | தாழையூத்து. |
| 2 | ஒ.டி 8/71-72 | இந்துஸ்தான் பெட்போர்டு 4547 எம்.எம். (179'') W.B. 5 டன் உள்ள நான்கு லாரிகளுக்குக் கம்பம் ஏற்றிச் செல்லும் கருவிகளோடு பாடி கட்டுதல். | |

**மேற்பார்வை மின் பொறியாளர்,**
திருநெல்வேலி மின்சார அமைப்பு.

வண்ணாரப்பேட்டை,
திருநெல்வேலி-3
(த. 4)

## ஒப்பந்தப் புள்ளி

### பொள்ளாச்சி நகராட்சி

பொள்ளாச்சி நகராட்சி அம்பராம்பாளையம் தலைமை நீர் ஏற்று நிலையத்திலுள்ள 85 குதிரை வேகமுள்ள ஜி.இ.சி. மின் மோட்டாரில் ''ரீவைண்டிங்'' செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 30—11—71 மாலை 4-00 மணி வரை ஆணையர் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படும். அவை அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். முழு விவரம் அடங்கிய ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை விண்ணப்பங்களின் பேரில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கட்டுத் தொகை ரூ. 250 செலுத்த வேண்டும்.

**ஆணையர்,**
பொள்ளாச்சி நகராட்சி.

(த.16)

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப்புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச்சுகாதாரப் பொறியியல் துறை(குடிநீர், வடிகால் வாரியம்)பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண் 17, சர். பி.டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 24–11–1971 புதன் கிழமை பிற்பகல் 3–00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3–30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கபடும்.

வேலையின் பெயர் : சங்கரன்கோவில்—புளியங்குடி நீர் வழங்கும் திட்டம்—ஐந்தாம் நிலை, இரண்டாம் பாகம்—2,27,300 லிட்டர் கொள்ளளவுள்ள உயர் மட்ட உறுதி பெறு கற்காரை நீர்த் தொட்டி கட்டுதல்.

ஒப்பந்த வகை : மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை : ரூ. 1,250 (ரூபாய் ஆயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்).

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசியவங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருநெல்வேலி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிர்வாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்படவேண்டும்.

வேலையிலே முடிப்பதற்குரிய கால அளவு: நான்கு மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை: ரூ. 5.18 (விற்பனை வரி உள்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் திருநெல்வேலி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிர்வாகப் பொறியாளரிடமிருந்து 15/2, பிரசன்ன விநாயகர் கோவில் தெரு, திருநெல்வேலி–2 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 22–11–1971 திங்கட்கிழமை மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர் (பொ.சு.)**

(த.9)

## ஒப்பந்தப் புள்ளி

சேலம் மாவட்டம் கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம்

கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு ½ டன் எடையும் 5 குதிரைகள் விசையும் உள்ள ஒரு மண் லாரி இயந்திரம் (கிரேன்) வாங்க முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப் படுகிறது. வைப்புத்தொகையாக மண்வாரி இயந்திரத்தின் விலையில் 5 சதவீதத்தை இவ்வலுவலக கஜானாவில் 23–11–71-ஆம் தேதிக்குள் கட்டி விடவேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் 25—11—71-ஆம் தேதி மாலை 4 மணிக்குள் கிடைக்கப் பெற வேண்டும். வைப்புத் தொகைக் கட்டப்படாத ஒப்பந்தப் புள்ளிகளும், குறித்த தேதிக்குள் கிடைக்கப்பெறாத ஒப்பந்தப் புள்ளிகளும் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது. இது குறித்து மேற்கொண்டு தகவல் வேண்டுதலின், கீழ் குறிப்பிட்ட விலாசத்துடன் தொடர்பு கொள்க.

**ஆணையர்,**

ஊராட்சி ஒன்றியம்,
கொங்கணாபுரம்,
சேலம் மாவட்டம்.

(த.14)

## ஏல விற்பனை

### மாயூரம் நகராட்சி

இந் நகராட்சிக்குச் சொந்தமான பழைய கெஸ்டட்னர் டுப்ளிகேட்டர் மிஷின் ஒன்றும் பழைய பெரிய அளவு " அண்டர்வுட் " தட்டெழுத்து இயந்திரம் ஒன்றும் பழைய ரெமிங்டன்-12 தட்டெழுத்து இயந்திரம் ஒன்றும் நகராட்சி அலுவலகத்தில் 30—11—71 மாலை 4 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும். ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே ரூ. 50 வீதம் கட்டுத் தொகைச் செலுத்தி ஏலம் கேட்க வேண்டும். மற்ற விவரங்கள் அலுவலகத்தில் நேரிலோ கடிதங்களின் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

**சி. வீரைய்யன்,**

ஆணையர்.

(த.21)

## மதுரை பால் திட்டம், மதுரை-20

அறிவிப்பு எண் 29567/71எச் 1.

மதுரை பால் திட்டத்துக்கு 1–1–1972 முதல் 31–12–1972 முடிய கீழ்க்கண்ட தற்போதைய வழிகளில் தனியார் லாரிகளில் பால் எடுத்து வர மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தமிழ்நாடு அரசு ஆளுநர் அவர்களின் சார்பாக மதுரை பால் திட்ட மேலாளர் அவர்களால் வரவேற்கப்படுகின்றன.

வரிசை எண்ணும் வழிகளின் விவரமும்.

1 திண்டுக்கல்—பாப்பம்பட்டி வழி.
2 திண்டுக்கல்—வத்தலக்குண்டு, கணவாய்ப்பட்டி வழி.
3 மதுரை—திண்டுக்கல் வழி.
4 மதுரை—சாப்டூர் வழி.
5 மதுரை—உசிலம்பட்டி வழி.
6 மதுரை—மானாமதுரை வழி.
7 மதுரை—திருப்புவனம் வழி.
8 மதுரை—அலங்காநல்லூர், காரியாபட்டி வழி.
9 கோயில்பட்டி—கலிங்கபட்டி, விருதுநகர் வழி.
10 ஸ்ரீவில்லிப்புத்தூர்—வத்திராயிருப்பு வழி.
11 ஸ்ரீவில்லிப்புத்தூர்—சங்கரன்கோவில் வழி.
12 மதுரை—மேலூர் வழி.
13 மதுரை நகருக்குள் பால் விநியோகம்( 5 வழிகளில்).

ஒவ்வொரு ஒப்பந்தப் புள்ளியுடனும், ரூ. 1,000 மதுரை அரசாங்கக் கருவூலத்தில் 'ரெவின்யூ டிபாசிட்' என்ற தலைப்பில் மதுரை பால் திட்ட அதிகாரி அவர்களுக்காகக் கட்டி செல்லுச் சீட்டு ஒப்பந்தப் புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும். ஒப்பந்தப் புள்ளிகளுக்கான விண்ணப்பப் பத்திரங்கள் மதுரை பால் திட்ட அலுவலகத்திலிருந்து ரூபாய் 5-ம் அதற்கான விற்பனை வரி 19 காசும் ரொக்கமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிகள் வழிகளின் மீதல்லாது மைலுக்கு மொத்த அடிப்படையில் கொடுக்கப்படல் வேண்டும்.

மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 29–11–1971-ஆம் தேதி மாலை 3 மணிக்குள்ளாக இவ்வலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 4-00 மணிக்கு வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் பிரிக்கப்படும்.

**திட்ட மேலாளர்,**

மதுரை பால் திட்டம்,
மதுரை-20.

(த.5)



## பொதுப்பணித் துறை

வேலையின் பெயர் : கோடிக் கரையில் ஓர் ஆய்வாளர் மாளிகைக் கட்டுதல் பற்றி.

மேற்படி வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிக்கைகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை, தஞ்சாவூர் வட்டம் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரில் இருக்கும் அவரது அலுவலகத்தில் 16–12–1971 மாலை 3–00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| 1 ஒப்பந்த வகை | .. | மொத்தத் தொகை. |
| 2 பிணைப்பணம் | .. | ரூ. 4,000. |
| 3 ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (அரசினர் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் ''பொ. ப.—செலுத்துத் தொகை-மற்றைய செலுத்துத்தொகை'' எனும் தலைப்பில் நிர்வாகப் பொறியாளர் வெண்ணாறுக் கோட்டம், தஞ்சாவூர், அவர்களின் பெயரில் செலுத்தப்படவேண்டும்.) | | ரூ. 30 (முப்பது மட்டும்.) |
| 4 விற்பனை வரி (அரசினர் கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் விற்பனை வரி (பி) பற்றுச் சீட்டு-மாநில விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் பொது விற்பனை என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.) | | ரூ. 1.05 (ரூபாய் ஒன்று காசு ஐந்து மட்டும்.) |
| 5 கால அளவு | .. | 10 மாதங்கள். |
| 6 ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் நாள். | | 25–11–1971. |

**ஆர். வேணுகோபால்,**

மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த.10)

## அச்சக எழுது பொருள் துறை

தமிழ்நாட்டிலுள்ள பதின்மூன்று மாவட்டங்களின் மாவட்ட மக்கள் தொகைக் கையேடுகள் '' அச்சிடுவதற்குரிய ஒப்பந்தப் புள்ளிகள் 30—11—1971 பிற்பகல் 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறையில் பெறு சான்று ரசீது (Acknowledgement) இணைக்கப்பட்ட பதிவுத் தபாலில் அச்சக எழுதுபொருள் துறை இயக்குநர், தங்கசாலைக் கட்டடம், சென்னை-1 அவர்கள் பெயரில் அனுப்பப்பட வேண்டும். வேறு எவ்விதத்திலும் அனுப்பப்படும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப் படமாட்டா. உறையில் '' மாவட்ட மக்கள் தொகைக் கையேடுகள் அச்சிடுவதற்குரிய ஒப்பந்தப்புள்ளி—இறுதி நாள் 30—11—1971 '' என்று குறிப்பிட வேண்டும்.

அச்சிட வேண்டிய பணியின் முழு விவரங்களும் விதி முறைகளும், ஒப்பந்ததாரர்களின் வேண்டுகோளின் பின்னர் அனுப்பி வைக்கப்பெறும்.

**ஜி. ரங்காராவ்,**
இயக்குநர்,
அச்சக எழுது பொருள் துறை, சென்னை-1.

(த.1)

## குடிநீர் வடிகால் வாரியம்

எண் 941/எஸ்.டி. 2/71,
நாள் 23–10–1971.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பாக கீழ் வரும் பணிக்குக், கோவை பொதுச் சுகாதார வட்ட மேற்பார்வைப் பொறியாளரால் அவரது அலுவலகம், 25–1, மூன்றுவது வீதி, டாட்டாபாட், கோவை-12-ல் 27-11-1971 மாலை 3 மணி முடிய அரக்கு முத்திரைப்பட்ட ஒப்பந்தப் புள்ளியுடன் வரவேற்கப்படுகின்றன. மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 4 மணி அளவில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட அதிகாரிகளாலோ, வரப்பெற்ற ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

பணியின் பெயர் : மேட்டூர் நகர அமைப்புக் கமிட்டி—தண்ணீர் அபிவிருத்தித் திட்டம்—(பகுதி 2) கட்டம் 1—கீழ்மட்டப் பகுதிக்குத் தண்ணீர்ப் பகிர்வு முறை, குழாய்கள் பதித்தல் (மேட்டூர் கேம்ப்)—(குழாய்கள் பதித்தலும், இணைத்தலும்).

ஒப்பந்த முறை : கே. 2.
பிணைப்பணம் : ரூ. 2,520 (ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூற்றிருபது மட்டும்).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை : ரூ. 10.35(விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விற்கப்படும் தேதி : 1–11–1971 முதல் 25–11–1971 முடிய.

மேற்படி பணிக்கான ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதாரக் கோட்டம், 28, ஔவையார் தெரு, சுப்பிரமணிய நகர், சேலம்-5, அலுவலகத்தில் நேரில் பணம் செலுத்தியோ அல்லது பண அஞ்சல் மூலமாகவோ பெறலாம்.

பிணைப்பணம் மத்திய அரசால் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கேட்பு வரைவோலை மூலமாகவோ. அல்லது மேற்படி வங்கிகளின் பொறுப்புறுதி மூலமாகவோ சேலம் நிருவாகப் பொறியாளரின் சார்பில் செலுத்தலாம் ; மேற்படி பிணைப்பணம் அரசுக் கருவூலத்தில் பி.டபிள்யூ. 3 ஓ.ஆர். சேலம் பொது நிருவாகப் பொறியாளரின் தலைப்பிலும் செலுத்தலாம். பிணைப் பணம் இணைக்கப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளருக்கு எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்த புள்ளிகளையும் காரணம் கூறாமல் நிராகரிக்க உரிமை உண்டு.

**எஸ். எம். சாகுல் அமீது,**
மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 6)

## சங்கரன் கோவில் நகராட்சி

இந்நகராட்சி உபயோகத்திற்கு வாங்கியுள்ள ஜே. 6 பெட்போர்டு லாரிக்கு பாடி கட்டுவதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் ஆணையரவர்களால் 9—11—1971 மாலை 4 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்பட்டு 4-30 மணிக்கு ஆஜராயுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். நகராட்சியில் ரூ. 1 செலுத்தி குறிப்பிட்ட நமூனாவில் ஒப்பந்தம் எழுதி அனுப்புவதுடன் கட்டுத் தொகையாக ரூ. 250 அனுப்பவேண்டும். லாரி கட்டுவதற்கான ஸ்பெஸிபிகேஷன் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**வெ. ஜானகிராமன்,**
ஆணையர்,

நகராட்சி அலுவலகம்,
சங்கரன் கோவில்,
23—10—1971.

(த.19)

## திருவள்ளூர் நகராட்சி

1971–72-ஆம் ஆண்டுக்கு திருவள்ளூர் நகராட்சிக்குத் தேவைப்படும் 100 குப்பை தொட்டிகள் வழங்க 27—11—71-ஆம் தேதி மாலை 4-00 மணி வரையில் நகராட்சி ஆணையராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். ஒவ்வொரு ஒப்பந்தத்துடன் வைப்புத் தொகை ரூ. 100 நகராட்சி கஜானாவில் செலுத்தப்பட்ட ரசீதுடன் கொடுக்கப்பட வேண்டும். மற்ற விபரங்களுக்கு வேலை நேரங்களில் நேரிலோ அல்லது கடித மூலமாகவோ நகராட்சி அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்துக் கொள்ளலாம்.

**ஜி. சுப்ரமணியன்,**
ஆணையர் (பொறுப்பு).

(த.17)

## ஒப்பந்தப்புள்ளி

### ஆத்தூர் நகராட்சி (சேலம் மாவட்டம்)

அடியிற்கண்ட வேலைகளுக்கு மூடி முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்கள் 26—11—71-ஆம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 4-00 மணிவரை நகராட்சி ஆணையர் அவர்களாலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அன்று மாலை 4-15 மணிக்கு திறக்கப்படும். ஒப்பந்த ஷெட்யூல்கள் 25—11—71-ந் தேதி மாலை 5-00 மணிவரை தான் விற்பனை செய்யப்படும். ஒப்பந்த கட்டுத் தொகை ரொக்கமாக நகராட்சி கஜானாவில் செலுத்த வேண்டும்.

| வேலையின் பெயர். | மதிப்பீட்டுத் தொகை. | கட்டுத் தொகை. | காப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1. ஆத்தூர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து காந்திநகர் ஓவர் ஹெட் டேங்க் வழியாக அரசினர் உயர் நிலைப்பள்ளி வரை செல்லும் பாதைக்கு தார் போடுதல். | 10,943 | 275 | 275 |
| 2. கோரித் தெரு தார் போடுதல். | 5,451 | 140 | 140 |

கே. வி. லட்சுமிநாராயணன்,
ஆணையர்.

(த. 15)

## வேலை வாய்ப்பு

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

தமிழ்நாடு வனத்துறையில் வனத்துறை உதவிக் காப்பாளர் பணியில் நேரடி நியமனம் செய்ய (மூன்று நியமனம்) பி.ஏ. பட்டதாரிகளின் தகுதியில் போட்டித் தேர்வுக்கும், எழுத்துத்துறைத் தேர்வுக்கும், வாய்மொழித் தேர்வுக்கும் (பேட்டி) பி.ஏ. பட்டம் பெற்றவர்களிடமிருந்து 25—11—1971 மாலை 5 மணி வரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

சம்பளம்: மாதம் ஒன்றுக்கு 575—25—600—40—1,000

கல்வித் தகுதிகள்:—பல்கலைக் கழக மானியக் குழுவினால் அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகம் அல்லது நிறுவனம் ஒன்றில், தாவர இயல், விலங்கியல், இயல்பியல், இரசாயன இயல், கணித இயல், புள்ளி விவர இயல், புவி இயல், பொருளாதார இயல் இவற்றில் ஏதேனும் ஒன்றில் மாஸ்டர் டிகிரி (குறைந்தது - இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள்), அல்லது வேளாண்மை, பொறியியல் (இயந்திர இயல், சிவில், அல்லது இரசாயனப் பொறியியல்) துறையில் பேச்சிலர் பட்டத்தில் இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் அல்லது பட்டமேல் படிப்புப் பெற்றவர்களாக இருப்பின் புகுமுகத் தேர்வில் (அ) உயிரியல், (ஆ) இயல்பியல், (இ) இரசாயன இயல் பாடங்களில் ஏதேனும் ஒன்றை எழுதியவர்களாக இருக்க வேண்டும்.

உடற்கூறுத் தகுதிகள்:

(அ) 163 செ. மீட்டருக்குக் குறையாத உயரம்.

(ஆ) மார்புச் சுற்றளவு 79 செ. மீட்டருக்குக் குறையக் கூடாது.

(இ) 5 செ. மீட்டராவது, மூச்சிழுக்கும்போது மார்பளவு விரிவடைய வேண்டும்.

வயது: 1972 ஏப்ரல் முதல் நாளன்று 19 வயதிற்கு மேலும் 24 வயதுக்குக் கீழும் இருக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட பழங் குடியினர், பிற்பட்ட வகுப்பினர் விஷயத்தில் உச்ச வயது 29. தங்கக் கட்டுப்பாடுச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்களின் மகன்கள், மணமாகாத மகள்கள், 1—1—1963-ல் அல்லது அதற்குப் பிறகு முழு நேர அடிப்படையில் அண்டர் ஆபீஸ் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜண்ட் மேஜர் இன்ஸ்ட்ரக்டராகப் பணிபுரிந்த முன்னாள் தேசீய மாணவர் படையைச் சேர்ந்தவர்களாக இருந்தால் வயது விஷயத்தில் சலுகை உண்டு. இராணுவம், கடற்படை, விமானப்படை, ஆகியவற்றிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1—4—72 அன்று 40 வயதுக்குக் குறைவானவர்கள், 1—1—64-ல் அல்லது அதற்குப் பிறகு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடி பெயர்ந்து வந்தவர்கள் விஷயத்திலும் இலங்கை, பர்மா முதலிய நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விஷயத்திலும் வயது வரம்பு உட்பட தகுதிகள் தளர்த்தப்படும்.

மனு வடிவங்களையும் இதர விவரங்களையும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்கு—பதவிப் பெயரைக் குறிப்பிட்டு கடிதம் எழுதி, 23 செ. மீட்டர் உள்ள தன் முகவரி குறிப்பிடப்பட்ட 0.35 காசு அஞ்சல் வில்லை ஒட்டப்பட்டு நூல் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

(த.2)

## கோயம்புத்தூர் வீட்டு வசதிப் பிரிவு

(வீட்டுவசதி வாரியத்தின் கிளை)
கோவைப்புதூர்—கோயம்புத்தூர்

எண்.42/71—72.

கீழ்க்கண்ட வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட தனித்தனி ஒப்பந்தப்புள்ளிகள் 24—11—1971-ஆம் நாள் பிற்பகல் 3-00 மணி வரை அடியிற் கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன. இதற்கான ஒப்பந்தப்புள்ளி நமூனுக்களைக் கோட்டக் கணக்காயரிடமிருந்து அலுவலக நாட்களில் அதாவது 8—11—1971-ஆம் நாளிலிருந்து 23—11—1971-ஆம் நாள் வரை 10·30 மணி முதல் பிற்பகல் 3-00 மணி வரை கீழே குறிப்பிட்டுள்ள தொகையினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். கட்டுத் தொகை ஒப்பந்தப்புள்ளிகள் வந்து சேரவேண்டிய நாளான 24—11—1971-ஆம் நாள் பிற்பகல் 1·00 மணி வரைதான் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகளை 24—11—1971-ஆம் நாள் பிற்பகல் 3-30 மணியளவில் ஒப்பந்தப்புள்ளி செய்தவர்களின் முன்னிலையில் செயற் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

| வரிசை எண். | வேலையின் விவரம். | வேலையின் சுமார் மதிப்புத் தொகை. | கட்டுத் தொகை. | நமூனுக்களின் விலை. |
|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. |
| 1 | நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கான வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் B. P./S. H. B. 61/64 என்ற வரை படத்தின்படி ஒரு வீடு கோயம்புத்தூருக்கருகாமையில் கோவைப்புதூரில் கட்டுவது ; | | | |
| | (அ) பிளாக் நெம்பர் 13 .. .. | 20,000 | 300 | 5 மற்றும் விற்பனை வரி. |
| | (ஆ) பிளாக் நெம்பர் 14 .. .. | 20,000 | 300 | ஷை |
| | (இ) பிளாக் நெம்பர் 15 .. .. | 20,000 | 300 | ஷை |
| | (ஈ) பிளாக் நெம்பர் 18 .. .. | 20,000 | 300 | ஷை |
| | (உ) பிளாக் நெம்பர் 19 .. .. | 20,000 | 300 | ஷை |
| 2 | குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கான வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் C. H. U. No. 74/68 என்ற வரைபடத்தின்படி ஒரு வீடு கோயம்புத்தூருக்கருகாமையில் உள்ள கோவைப் புதூரில் கட்டுவது : | | | |
| | (ஊ) பிளாக் நெம்பர் 13 .. .. | 10,300 | 160 | ஷை |
| | (எ) பிளாக் நெம்பர் 14 .. .. | 10,300 | 160 | ஷை |
| | (ஏ) பிளாக் நெம்பர் 15 .. .. | 10,300 | 160 | ஷை |
| | (ஐ) பிளாக் நெம்பர் 16 .. .. | 10,300 | 160 | ஷை |
| | (ஒ) பிளாக் நெம்பர் 17 .. .. | 10,300 | 160 | ஷை |

**இல. அரங்கநாத சாஸ்திரி,**
செயற்பொறியாளர், கோவை வீட்டு வசதிப்பிரிவு,
கோவை.

11/22இ, திவான் பகதூர் சாலை,
ஆ.எஸ்.புரம் (அஞ்சல்),
கோவை-2
22—10—1971.
(நு.29.)

## சமூகநலத்துறை

அறிக்கை 3/71—72.

தென்னார்க்காடு மாவட்டம், விருத்தாசலம் வட்டம் அசீசு நகர் பகுதியில் உள்ள தொழில் நிலையங்கட்கு 1971—72-ஆம் ஆண்டிற்கான பலவகைப்பட்ட நூல் ரகங்களும், மரங்களும் (Yarn and Timber) வழங்குவதற்கு முத்திரையிடப் பட்ட ஒப்பந்த விவரங்கள் (Sealed Tenders) பெயர் பெற்ற நிறுவனங்களில் இருந்தும், ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் (Contractors) இதனடியில் கையொப்பமிட்டவரால் 30—11—1971-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை பகல் 12·00 மணிவரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்த விவரங்கள் வந்து சேரவேண்டிய தேதியை ஒத்தி கொடுப்பதற்கானக் கோரிக்கை எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

2. நெய்வேலி நகரியம் கிளைக் கருவூலத்தில் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 500 (ஐநூறு மட்டும்) கட்டுத்தொகை கட்டிய சலானுடன் இணைந்து வராத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

3. ஒப்பந்த விவரங்கள் மேற்கூறப்பட்ட அதே தேதியில் பிற்பகல் 1·00 மணிக்குத் திறக்கப்படும். அப்போது ஒப்பந்த விவரங்கள் கொடுத்து இருப்பவர் அல்லது அவருடைய அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் நேரில் வந்து இருக்கலாம். ஒப்பந்த விவரங்களில் கொடுக்கப்படும் விலைப்பட்டியலை அசீசு நகர் பகுதியில் இப்பொருள்களைக் கொண்டுவந்து கொடுப்பதற்கு உடன்பட்டதாக இருத்தல் வேண்டும்.

4. குறைந்த பட்ச விலைப் பட்டியல் உள்ள ஒப்பந்த விவரங்களைத்தான் இதன் அடியில் கையொப்பமிட்டிருப்பவர் அங்கீகரிக்க வேண்டுமென்ற கட்டாயம் எதுவுமில்லை. காரணம் கூறாமல் எந்த ஒப்பந்த விவரத்தையும் அங்கீகரிக்கவோ அல்லது நிராகரிக்கவோ அவருக்கு அதிகாரமுண்டு. இந்த நிபந்தனைகட்கு உட்படாத ஒப்பந்த விவரங்கள் எதுவும் கவனிக்கப்பட மாட்டாது.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் சரக்குகளை விநியோகம் செய்வதற்கு முன்னதாகவே அவைகளின் விலை மதிப்பீட்டுத் தொகையில் 10 சதவிகிதமோ அல்லது அடியிற் கையொப்பமிட்டிருப்பவரால் நிர்ணயிக்கப்படும் மற்றெந்தத் தொகையையோ வைப்புத் தொகையாக (Deposit) செலுத்துவதுடன் ஒப்பந்தத்தைப் பூர்த்தி செய்வதற்கான உடன்படிக்கை (Agreement) ஒன்றும் எழுதி கொடுக்கவேண்டும். வைப்புத் தொகையைக் கட்டத் தவறினாலோ அல்லது உடன்படிக்கைப் பத்திரத்தை எழுதி கொடுக்காவிட்டாலோ பொருள்களை விநியோகம் செய்வதற்குக் கொடுக்கப்பட்ட உத்தரவு எந்த நேரத்திலும் ரத்துச் செய்யப்படும்.

6. தேவையான நூல் மற்றும் மர வகைகள் பற்றிய குறிப்பீடுகைகள் (Specifications) நிபந்தனைகள் (Conditions) ஆகியவற்றை இதன் அடியில் கையொப்பமிட்டிருப்பவரிடம் இருந்து விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

**எம். ஏ. கிருஷ்ணசாமி,**
மேலாளர்,
அசீசு நகர் பகுதி,
ஊமங்கலம் அஞ்சல்,
விருத்தாசலம் வட்டம்,
தென்னார்க்காடு மாவட்டம்.

(த. 22)

---

## உதகமண்டலம் நகராட்சி

ஆர்.ஓ.சி.எண்.சி. 3/11232/70
நாள் 23—10—1971.

இந்த அலுவலகத்தில் குவிந்துள்ள கழிவுக் காகிதங்களை வாங்குவதற்காக உதகமண்டலம் நகராட்சி ஆணையரால் அல்லது அவர் இல்லாத நேரத்தில் நகராட்சி அலுவலக நிர்வாகியால் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 27—11—1971 மாலை 3-30 வரை பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்த நிபந்தனைகளை இந்த அலுவலகத்திற்கு மனுச் செய்து பெறலாம்.

**ஆர். மகாலிங்கம்,**
ஆணையர் (பொறுப்பு).

உதகமண்டலம்,
23—10—1971.

(த. 26)

---

## அரசினர் தலைமை மருத்துவமனை

### தூத்துக்குடி
### திருநெல்வேலி மாவட்டம்

தூத்துக்குடி அரசினர் தலைமை மருத்துவமனைக்கும், திருநெல்வேலி மாவட்டத்தில் மற்ற வெளியூர் மருத்துவ நிறுவனங்களுக்கும் மருந்துகள் வழங்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 1—11—1971-லிருந்து 31—3—1972 வரை உள்ள காலத்துக்காக வரவேற்கப்படுகிறது.

தூத்துக்குடி அரசினர் தலைமை மருத்துவமனை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் 1—12—1971 நண்பகல் 12·00 மணி வரை ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கப்படும்.

தேவைப்படும் மருந்துகள், ஒப்பந்த நிபந்தனைகள் முதலிய விவரங்களை திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி அரசினர் தலைமை மருத்துவ மனைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து பெறலாம்.

**கண்காணிப்பாளர்,**
அரசினர் தலைமை மருத்துவமனை,
தூத்துக்குடி-3.

(த. 30)

## தொழில் வணிகத்துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கீழ்க்கண்ட வேலைகளை மேற்கொள்ளுவதற்காகத் தொழில்துறை மற்றும் இதர அரசுத்துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர் கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத்துறை அவர்களால், கீழே குறிப்பிட்டுள்ளபடி ஒப்பந்தப்புள்ளிகள் பெறும் கடைசித் தேதியன்று மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-10 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

| தொடர் எண்ணும், வேலையின் பெயர். | கட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப் பத்திரங்கள் விலை ரூ. | வேலையை முடிக்க வேண்டிய காலம். | ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் தேதி. | ஒப்பந்தப் புள்ளிகள் பெறக் கடைசி தேதி. |
|---|---|---|---|---|---|
| 1. மதுரை தொழில்பேட்டையில் ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள் வீதம் தொழிலாளர்களுக்கான 3 பிளாக்குகள் கட்டுதல். | 3,300 | 10·40 | 8 மாதங்கள். | 23—11—71 | 8—12—71 |
| 2. மதுரை தொழில்பேட்டையில் ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள் வீதம் தொழிலாளர்களுக்கான 2 பிளாக்குகள் கட்டுதல். | 2,200 | 10·40 | 6 மாதங்கள். | 23—11—71 | 8—12—71 |
| 3. திண்டுக்கல் தொழில்பேட்டையில் ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள் உள்ளதாகத் தொழிலாளர்களுக்கான ஒரு பிளாக் கட்டுதல். | 1,100 | 10·40 | 6 மாதங்கள். | 24—11—71 | 9—12—71 |

ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் (க), மதுரை டிவிஷன் தொழிற்பேட்டை, மதுரையில் மேலே குறிப்பிட்ட தேதியிலிருந்து அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற்பனை வரி உட்பட்ட தொகையான ரூபாய் 10.40ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ ''இண்டஸ்டிரீஸ் அண்டு அதர் ரசிப்ட்ஸ்'' என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), மதுரை டிவிஷன் தொழிற்பேட்டை, மதுரை அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத் தொகையை சலான் வடிவிலோ, ''கால் டிபாசிட்'' ரசீது வடிவிலோ ஷெட்யூல் வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர், (கட்டுமானம்), மதுரை டிவிஷன் அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசு கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்துக் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசியச் சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூடக் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானல் ஏற்றுக் கொள்ளப்படாது.

ஒப்பந்தப்புள்ளி அளிக்க விரும்புகின்றவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர் (கட்டுமானப் பகுதி).

சென்னை-2.

(த. 27)



16—11—70

## அறிக்கை

தமிழ்நாடு அரசு பரிசுச்சீட்டுத் திட்டத்தின் கீழ், குறிப்பிடும் பகுதிகளுக்கு பரிசுச்சீட்டுகள் விற்பனை செய்ய அவற்றிற்கெதிராகக் குறிப்பிட்டிருக்கும் முகவர்கள்இடங்கள் காலியாக உள்ளன. இந்தக் காலியிடங்களில் நியமனம் செய்வதற்கான விண்ணப்ப நமூனுக்கள் (நமூனு-1) கோரப் படுகின்றன. இந்த நமூனுக்கள் முறையாக நிரப்பப்பட்டு ஒரு ரூபாய் மதிப்புள்ள கோர்ட் ஸ்டாம்பு ஒட்டி 1971, நவம்பர் 30ஆம் தேதியன்றே அல்லது அதற்கு முன்னதாகவோ இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். முகவர்கள் குலுக்கல் மூலம் தேர்ந்து எடுக்கப்படுவர்.

| காலியிடங்கள் இருக்கும் பகுதிகள். | | காலியிடங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம் | ... | 3 |
| இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம் | ... | 4 |
| குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியம் | ... | 1 |
| திருவெட்டார் ஊராட்சி ஒன்றியம் | ... | 3 |
| கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியம் | ... ... | 1 |
| மேல்புறம் ஊராட்சி ஒன்றியம் | ... ... | 2 |
| முன்சிறை ஊராட்சி ஒன்றியம் | ... ... | 1 |
| நாகர்கோவில் நகராட்சி | ... ... | 4 |
| பத்மனுபபுரம் நகராட்சி | ... ... | 2 |
| குழித்துறை நகராட்சி | ... ... | 3 |
| கன்னியாகுமரி நகராட்சி | ... ... | 3 |

**ஏ. பி. முத்துசுவாமி,**
மாவட்ட ஆட்சித் தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில்.

(த. 64)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப் பணித்துறை காவிரி வளர்ச்சிப் பணி வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 8-12-1971 மாலை 4-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

1 வேலையின் பெயர் .. நந்தலாற்றிலிருந்து பிரியும் ஏ. 14 இடியார் கால்வாய் 0/0 கி.மீ. முதல் 7·520 கி.மீ. வரை நவீனப் படுத்துதல்.

2 ஒப்பந்த வகை ... .. கே. 2

3 பிணைப்பணம் ... ... ரூ. 3,100

4 ஒப்பந்தப் பத்திரங்களின் விலை. ரூ. 5

அரசினர் கருவூலத்தில் ''பொதுப் பணி செலுத்து தொகை III மற்ற செலுத்துத் தொகை'' எனும் தலைப்பின் கீழ் நிர்வாகப் பொறியாளர், கால்வாய் புதுப்பிக்கு கோட்டம், தஞ்சாவூர் கணக்கில் செலுத்த வேண்டும்.

5 விற்பனை வரி .. .. ரூ. 0·20

அரசினர் கருவூலத்தில் ''XII விற்பனை வரி (பி) பற்று சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி'' என்ற தலைப்பில் செலுத்துதல் வேண்டும்.

ஒப்பந்தப் பத்திர நமூனு கிடைக்க ஆரம்பிக்கும் நாள். 16-11-1971 முதல்

**அ. சேஷாத்திரி,**
தனி மேற்பார்வைப் பொறியாளர், (பொ.ப.து.
காவிரி வளர்ச்சிப் பணிகள் வட்டம்,
தஞ்சாவூர்.

(த. 46)

## ஒப்பந்தப்புள்ளி ஒத்தி வைப்பு

### பொதுப்பணித்துறை, சென்னை செங்கற்பட்டுவட்டம்

எண் டீ3/20280/71-8, தேதி 29-10-1971.

வேலையின் பெயர்.—தாம்பரத்திலுள்ள காச நோய் மருத்துவ மனையில் பணிபுரியும் 40 செவிலியர்களுக்கும் (நர்சஸ்) 5 ஸ்டாப் (ஸ்டாப் நர்சஸ்) செவிலியர்களுக்கும் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுதல்.

பார்வை.—(1) இவ்வலுவலக எண் டி.3/20280/71-1, தேதி 7-8-1971.
(2) இவ்வலுவலக எண் டி.3/20280/71-7, தேதி 27-9-1971.

மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்தப் புள்ளி பெறுவதற்கான கடைசி நாள் 25-10-1971 என்ற கெடு 30-11-1971 மாலை 3-00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம் அவர்கள் அலுவலகத்தில் 23-11-1971 முதல் எல்லா அலுவலக நாட்களிலும் வேலை நேரங்களில் கிடைக்கும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றமில்லை.

**பி. கே. கந்தசாமி,**
மேற்பார்வைப் பொறியாளர்,
25-10-1971, சென்னை, செங்கை வட்டம், சென்னை-5.

(த. 43)

## அச்சகத் துறை

சென்னை அரசினர் அச்சகத்திற்கு காமிரா ஒன்று மற்றும் ரெக்டாங்லர் ஸ்கிரீன் ஒன்றும் சப்ளை செய்வதற்காக 30-11-71 அன்று பிற்பகல் 3 மணி வரை முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்ளப்படும். மேற்கொண்டு விவரங்களுக்கு இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சகத்துறை இயக்குநர் அலுவலகம், சென்னை-1 அவர்களுக்கு எழுதவும்.

தேதி : 26-10-1971.

ஜி. ரங்காராவ்,
இயக்குநர்.

(த.55)

## பொதுப்பணித் துறை

வேலையின் பெயர் :— பூந்தமல்லி அரசினர் (போர்டு) உயர்நிலைப் பள்ளியில் பொன் விழாக் கட்டடம் கட்டுதல்—செங்கல்பட்டு மாவட்டம்.

மேற்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித் தேதி 24—11—1971 வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. 24—11—1971 மாலை 3-00 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படும். அதே நாளில் மாலை 3-15 மணிக்கு அவைகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 22—11—1971 வரை அலுவல் நேரங்களில் விற்கப்படும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றம் ஏதும் இல்லை.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
(பொ. ப. து.) செங்கல்பட்டு—வடஆர்க்காடு பெருவட்டம்,
வேலூர்-1.

(த.45)

## பொள்ளாச்சி நகராட்சி மின் துறை

கீழ்க்கண்ட வேலைக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ரூபாய் 1,500 காப்புத் தொகையுடன் நகராட்சி ஆணையர் அவர்களால் 30-11-1971-ஆம் தேதி மாலை 4 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள், வரைபடங்களுடன் கூடிய வேலை விவரங்கள் வேண்டுவோர் நகர மன்ற மின் பொறியர் அவர்களிடமிருந்து இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

வேலை விவரம்.

நகர எல்லைக்குள் மார்க்கெட் ரோடில் திருவள்ளுவர் திடலிலிருந்து ரயில்வே பாலம் வரை, சாலையின் இருமருங்கிலும் பாதரச விளக்குகள் அமைத்தல்.

ஆணையர்.

(த.62)

## கோவை நகராட்சி

கோவை நகராட்சி பொதுப் பட்டறைக்குத் தேவையான கருவிகளை வாங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 24—11—1971 மாலை 3-00 மணி வரை நகராட்சி ஆணையரால் பெற்றுக்கொள்ளப்படும். அவை அன்றைய தினமே மாலை 3-30 மணிக்கு பொதுப்பணிப் பொறியாளரால் திறக்கப்படும். கட்டுத் தொகை ரூ. 500 செலுத்த வேண்டும். மற்ற விவரங்களை ரூ. 2.06 நகராட்சிக் கருவூலத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

கி. அப்பாநாராயணன்,
ஆணையர்.

(த.61)

## காஞ்சிபுரம் நகராட்சி

நகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் தமது அலுவலகத்தில் 27-11-1971 அன்று மாலை 4-00 வரை மூடி, முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பார்கோ ( Fargo ) 109-பி6-165 வீல் பேஸ் டீசல் சாசிஸ் லாரிக்கு பாடி கட்டுவதற்கு வரவேற்கப்படுகின்றன. அவை அன்று மாலை 4-05 மணிக்குத் திறக்கப்படும். கட்டுத் தொகை ரூ. 250. மற்ற விவரங்கள் நகராட்சிப் பொறியரிடமிருந்து எழுதிக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

த. ஆ. சிவசுப்ரமணியன்,
ஆணையர்.

காஞ்சிபுரம்,
2—11—1971.

(த.60)

## திருப்பூர் நகராட்சி

நகராட்சி செவிலித் தாய், மகப்பேறு உதவியாளர்கள், ஆயாக்கள் ஆகியவர்களுக்கு 1971-72-ஆம் ஆண்டிற்குச் சீருடைகள் வழங்குவதற்கான ஜவுளி ரகங்களுக்கு மூடி அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 10—11—1971 மாலை 4-00 மணி வரை ஆணையர் அவர்களால் அல்லது அவர் அதிகாரம் பெற்றவர்களால் பெற்றுக்கொள்ளப்படும். மற்ற விவரங்கள் நகராட்சி அலுவலகத்தில் பொதுச் சுகாதாரப் பிரிவில் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

ஆர். சீனிவாசன்,
ஆணையர்.

(த.66)

## திருச்சிராப்பள்ளி நகராட்சி

2 குதிரைத் திறன் மோட்டார் பம்பு செட்டு வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 30-11-71 மாலை 4-00 மணி வரை கீழே கையொப்பமிட்டவரால் ஏற்கப்படும். ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களை நகராட்சிப் பொறியாளர் அலுவலகத்துக்கு மனுச் செய்தோ, நேரிலோ பெறலாம்.

டி. கோவிந்தராஜன்,
தனி அலுவலர்.

(த.56)

## நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

சென்னை வட்டம், சென்னை-25

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), சென்னை வட்டம், அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கிண்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 24—11—1971 அன்று மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும், வேலை விவரமும். | முன் வைப்புத் தொகை. ரூ. |
|---|---|
| 1. வடவார் கரைச் சாலையில் கி.மீ. 0/0 முதல் கி.மீ. 4/0 வரை மேம்பாடு செய்தல். | 4,250 |
| 2. வடவார் கரைச் சாலையில் கி.மீ. 4/0 முதல் கி.மீ. 8/0 வரை மேம்பாடு செய்தல். | 4,550 |
| 3. வடவார் கரைச் சாலையில் கி.மீ. 8/0 முதல் கி.மீ. 12 வரை மேம்பாடு செய்தல். | 4,550 |
| 4. வடவார் கரைச் சாலையில் கி.மீ. 12/0 முதல் கி.மீ. 16/2 வரை மேம்பாடு செய்தல். | 5,050 |
| 5. சிதம்பரநாதம்பேட்டை—சி. மானம்பதி சாலையில் கி.மீ. 0/0 முதல் கி.மீ. 5/0 வரை மேம்பாடு செய்தல். | 5,450 |
| 6. சிதம்பரநாதம்பேட்டை—சி. மானம்பதி சாலையில் கி.மீ. 5/0 முதல் கி.மீ. 10/0 வரை மேம்பாடு செய்தல். | 5,450 |

ஒப்பந்தங்கள் 24—11—1971 அன்றே மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனக்கள், வரைபடங்கள் முதலியனவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), கடலூர் அவர்கள் அலுவலகத்தில் விற்பனை வரியுட்பட ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 51-75 கட்டி 12—11—1971 முதல் 23—11—1971 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன்வைப்புத் தொகைகளைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை), கடலூர் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை), கடலூர் பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன் வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

ஜி. ஜார்ஜ் ஜேகப்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ).

சென்னை-25,
27—10—1971.

(த. 37)

## அச்சுத்துறை

சென்னை அரசினர் அச்சகத்திற்கு '' லெட்டர் பிரஸ் பவர் ஆப்பரேட்டட் சிலிண்டர் பாம்ஸ் ப்ரூப் பிரஸ் '' சப்ளை செய்வதற்காக 30—11—1971 அன்று பிற்பகல் 3-00 மணி வரை முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்ளப்படும். மேற்கொண்டு விவரங்களுக்கு இயக்குநர், எழுது பொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநர் அலுவலகம், சென்னை-1 அவர்களுக்கு எழுதவும்.

ஜி. ரங்கா ராவ்,
இயக்குநர்.

(த. 47)

## திருச்சி நகராட்சி

'' பைப் லைன் பொருட்கள் வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், கீழே கையொப்பமிட்டவரால் 30—11—1971 மாலை 4-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்த நிபந்தனைகள், மற்றும் இதர விவரங்களை நகராட்சிப் பொறியாளர் அலுவலகத்துக்கு மனுச் செய்தோ, நேரிலோ பெறலாம்.

டி. கோவிந்தராஜன்,
ஆணையர்.

(த. 40)

## ஸ்ரீரங்கம் நகராட்சி

1971-ஆம் ஆண்டு வைகுண்ட ஏகாதசி உற்சவத்தின்போது 18—12—1971 தேதி முதல் 7—1—72 முடிய 21 நாட்களுக்குச் சுங்கம் வசூலிக்கும் பாத்தியதை 3—12—71 வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அவர்களால் அல்லது அவரின் அதிகாரம் பெற்றவரால் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும். ஏலக் கட்டுத் தொகை ரூ. 100. மற்ற விவரங்கள் அலுவலக வேலை நாட்களில் அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

ஆணையர்.

(த. 50)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

உதகை, உதகமண்டலம் அரசினர் கலைக் கல்லூரிக்கு மாணவர் விடுதி கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்குஒப்பந்தப் புள்ளிகள் பெற நிர்ணயிக்கப்பட்டிருந்த கடைசித் தேதி 3–11–71 என்பது 26–11–71 மாலை 3 மணி வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப் பத்திரங்கள், நிர்வாகப் பொறியாளர் அலுவலகம், பில்டிங்ஸ் டிவிஷன், கோயம்புத்தூரில் 24–11–71வரை கிடைக்கும்.

முந்தைய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளில் மாற்றம் இல்லை.

**எம்.எஸ், கோபாலகிருஷ்ணன்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
கோயம்புத்தூர்–நீலகிரி வட்டம்,
கோயம்புத்தூர்–1.

(த. 57)

---

## ஒப்பந்தப் புள்ளி

### அரசினர் மன நல மருத்துவமனை

1–1–72 முதல் 31–3–72 வரையுள்ள காலத்தில் மருந்துகள் ( Drugs and Medicines ) வழங்குவதற்குப் புகழ் பெற்ற வட்டார நிறுவனங்களிடமிருந்து " Tender for the supply of Medicines 15–12–71 ", என்று உறையின் மீது தலைப்பிடப் பட்ட ஒப்பந்தங்கள் 15–12–71 அன்று 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் பத்திரம் அடியில் தரப்பட்ட முகவரியில் 14–12–71 வரை எல்லா வேலை நாட்களிலும் கிடைக்கும். "XXIII. Medical-J. Miscellaneous Other Receipts" என்ற தலைப்பில் ஒப்பந்தப் பத்திரத்தின் விலையான ரூ. 3-ஐ ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவில் கட்டி அந்தச் செலானைத் தந்து ஒப்பந்தப் புள்ளி பெறலாம். 11 காசுக்குத் தனியான ஒரு செலான் " XII. Sales-tax-receipts under state sales-tax Act M. G. S. T. for sale of Tender Forms" என்ற தலைப்பில் கட்டப்பட வேண்டும்.

மேற்கண்ட தலைப்பில் கட்டப்பட்ட கட்டணம் எந்தச் சூழ்நிலையிலும் ஒப்பந்ததாரர்களுக்குத் திருப்பித்தரப்படமாட்டாது.

டாக்டர் (திருமதி)
**எம். சாரதாமேனன்,**
எம்.டி., டி.பி.எம்.,
கண்காணிப்பாளர்.

20—10—71.

(த. 77)

---

## ஒப்பந்தப் புள்ளி

### வேளாண்மைத்துறை

கீழே கையொப்பமிட்டுள்ளவரால் தமிழ் நாடு மாநில ஆளுநர் சார்பில் அடியிற்கண்ட இயந்திரங்களுக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 15–12–71ம் தேதி மாலை 2-30 மணிவரை வரவேற்கப்படுகிறது.

ஒப்பந்தத்திற்கான முழு விவரங்கள் அடங்கிய பத்திரங்களும், மற்ற குறிப்புரைகளும் கீழே கையொப்பமிட்டவர் அலுவலகத்திலிருந்து 20–11–71-ம் தேதிமுதல் 10–12–71-ஆம் தேதி வரை எல்லா அலுவலக நாட்களிலும் ரூ. 10-ம் (ரூபாய் பத்து மட்டும்) விற்பனை வரியாக காசு 35-ம் (முப்பத்தைந்து காசுகள் மட்டும்) காசோலை மூலமாகவோ, அல்லது Demand Draft மூலமாகவோ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பம் செய்யும் ஒப்பந்ததாரர்கள் கீழ்க்கண்ட இயந்திரங்களில் முன் அனுபவம் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். அடியிற் கையொப்பமிட்டவருக்கு எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் காரணங்களை விளக்காமல் ஏற்கவோ அல்லது மறுக்கவோ முழு உரிமையுண்டு. கிடைக்கப் பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் விருப்பமுள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் 15–12–71-ஆம் தேதி மாலை 3 மணிக்குத் திறக்கப்படும். கீழ்க்கண்ட இயந்திரங்கள் உடனடித் தேவையாக உள்ளன.

இயந்திரங்களின் பெயர்கள். (மொத்த மதிப்பு ரூ. 1,00,000) லேத் (நடுத்தரமானது 2 nos ) 2, இயந்திர வாள் 1, யுனிவர்சல் ரேடியல் டிரில்லிங் இயந்திரம் 1, கார் கழுவும் அழுத்தக் கருவி 1, கார் அழுத்த லூபிரிக்கேட்டர் 1, மோட்டார் வாகனங்கள் கழுவ உபயோகமாகும் ஹைடிராலிக் லிப்ட் 1, சர்பேஸ் கிரைண்டர் ( Surface grinder ) 1, ஸ்விங் பிரேம் கிரைண்டர், (Swing frame grinder) 1, பிரேக் ஷூ லைனிங், ரிவெட்டிங் மற்றும் கிரைண்டிங் இயந்திரம் (Brake shoe lining reverting and grinding Machine) பிரேக் டிரம் ட்ருயிங் லேத்(Brake drum Truing lathe)1, சிலிண்டர் ரிபோரிங் இயந்திரம் 1, இஞ்சின் அனலைசர் 1, வீல் அலைன்மெண்ட் கேஜ் 1, ஹெட்லைட் பீம் சரி செய்யும் ஸ்கிரீன்—மோட்டார் வாகனங்களுக்குரியது, கௌக்டிங் அலைனர் 1, வால்வு ரிபேசர் 1, வால்வு கிரைண்டிங் இயந்திரம் 1.

வேளாண்மைத்துறைக்
கருவிகள் தொழிற் கூடம்,
இலவங்கார்குடி (அஞ்சல்),
திருவாரூர் (வழி).

(த. 91)

---

## ஏல விற்பனை

### காவல் துறை

மணிமுத்தாறு, மதராஸ் சிறப்பு காவற் படைக்குச் சொந்தமான அடியிற்கண்ட போலீஸ் வாகனங்கள் புதன்கிழமை (8–12–71 ஆம் தேதி) காலை 10 மணி அளவில் மணிமுத்தாறு மேற்படி படையின் தளவாய் அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. M.D.H. —2932—பார்கோ 1960 பெட்ரோல் திறந்த மாதிரி லாரி.
2. M.S.Y. 7965—ஸ்டுடிபேக்கர் 1955 பெட்ரோல் திறந்த மாதிரி லாரி.

மேற்கண்ட வாகனங்களை மணிமுத்தாறில் உள்ள தலைமையகத்தில் எல்லா அலுவலக வேலை நாட்களிலும் பார்வையிடலாம். மேலும் விவரம் தேவையெனில் அடியிற் கையொப்பமிட்ட அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**ந. கோவிந்தராஜ்,**
தளவாய், மதராஸ் சிறப்புக்
காவற்படை, மணிமுத்தாறு.

(த. 88)

## சிறுதொழில்கள் நிறுவனம் லிமிடெட்

35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2.

ஒப்பந்த அறிவிப்பு எண். 101504/பி.பி.1/71 நாள் 28—10—1971.

இந்த நிறுவனத்தின் தச்சுவேலைத் தொழிலகங்களுக்கு ஓராண்டுக் காலத்துக்கு கீழே குறிப்பிட்டுள்ள பொருட்களை வழங்குவதில் வருடாந்திர ஒப்பந்தத்தை வரைப்படுத்திக் கொள்வதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அவை திறக்கப்படும் நாள் பிற்பகல் 2-00 வரை பெற்றுக் கொள்ளப்படும்.

| தொடர் | பொருள் வகை. | ஒப்பந்த அறிவிப்பு எண். | ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும் தேதி. |
|---|---|---|---|
| 1 | கமர்ஷியல் பிளைவுட் ... ... .. | 101504/பிபி1/71 .. | 22—11—1971 மாலை 3-00. |
| 2 | ஒருபுறம் தேக்கு முகப்பு பிளைவுட் ... | 101505/பிபி1/71 ... | 23—11—1971 மாலை 3-00. |
| 3 | பார்ட்டிகிஸ் போர்டுகள் ... ... | 101506/பிபி1/71 ... | 24—11—1971 மாலை 3-00. |

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களை இந்த நிறுவனத்தின் துணை நிர்வாகி(கொள்முதல்)அவர்களிடமிருந்து அலுவலக நேரத்தில் பெறலாம். ஒப்பந்தப்புள்ளி வடிவத்தின் விலை ரூ. 5·25 (விற்பனை வரி உள்பட) இது திருப்பித்தரப்படமாட்டாது. ஒப்பந்தப் பத்திரங்களுக்கான கட்டணத்தை இந்த நிறுவனத்தின் தலைமைக் கணக்கருக்கு (கேஷ்) ரொக்கமாகவோ மணியார்டர் மூலமோ அனுப்பலாம்.

**நிர்வாக இயக்குநர்.**

(த.28.)

---

## காஞ்சிபுரம் நகராட்சி

நகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் தமது அலுவலகத்தில் 27–11–1971 அன்று மாலை 4-00 மணி வரை மூடி, முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க்கண்ட வேலைக்கு வரவேற்கப்படுகின்றன. அவை அன்று மாலை 4-05 மணிக்குத் திறக்கப்படும். மற்ற விவரங்கள் நகராட்சிப் பொறியாளரிடமிருந்து எழுதிக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

| வேலையின் பெயர். | வேலையின் மதிப்பு. | கட்டுத் தொகை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| நகரமன்ற நூற்றுண்டு விழா மண்டபக் கட்டடத்திற்கு சிமெண்ட் பெயிண்ட் அடிக்கவும் அழகு முகப்பு வேலை செய்யவும். | 10,500 | 525 |

**த. ஆ. சிவசுப்பிரமணியன்,**
ஆணையர்.

(த. 59)

## சிகிச்சை

ஸ்டான்லி மருத்துவ மனையில் ''செல்குழாய் நாளஞ்சார்ந்த புறநோய்ப் பகுதி நிலையம்'' அக்டோபர் திங்கள் 26-ஆம் நாள் செவ்வாய்க் கிழமையன்று காலை 11 மணியளவிலிருந்து செயல்படுகிறது. சென்னை நகரைப் பொறுத்தவரையில் இந்தப் பகுதி நிலையம் ஒரு புதிய முயற்சியாகும். இதனால் பொதுமக்கள் சிகிச்சை பெற்றுப் பயனடையலாம். மற்ற அரசு மருத்துவ மனைகளாலும், பிற மருத்துவர்களாலும் அனுப்பப் படும் நோயாளிகளும் கவனிக்கப் படுவார்கள்.

**இயக்குநர்,**
**மருத்துவக் கல்வி'**

(த. 63)

## வீட்டு வசதி வாரியம் சென்னை கிழக்குக் கோட்டம்

கோப்பு எண்.674/71.

நாள் 23—10—1971.

வியாசர்பாடியில் சுத்தக் கிரயத் திட்டத்தின் கீழ், குறைந்த வருமானப் பிரிவினருக்காக 10 வீடுகள் கட்ட ஒப்பந்தப் புள்ளி கள் பெறுவதற்குக் கடைசித் தேதி 22—11—1971 மாலை 3 மணி வரை நீட்டிக்கப்பட்டிருக் கிறது.

**டி. ஜெகதீசன்,**

நிர்வாகப் பொறியாளர்(கிழக்கு)

(த. 34)

---

## போக்குவரத்துத் துறை

ஆர்.எச். மெட்டல் ஸ்க்ரூஸ் வழங்குவதற்காக மூடி முத்திரை யிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவரால் 24—11—1971 பிற்பகல் 2 மணி வரை வரவேற்கப்படு கின்றன. ஒப்பந்த நிபந்தனை கள் மற்றும் இதர விவரங்களைக் கொள்முதல் அலுவலர், தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துத் துறை, சென்னை-2 அவர்களிட மிருந்து அலுவல் நாட்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**இயக்குநர்,**

போக்கு வரத்துத் துறை,

(த. 11)

---

## மாயூரம் நகராட்சி

மாயூரம் நகராட்சிப் பரா மரிப்பிலுள்ள நான்கு சாலை களுக்குத் தார் ரோடு போடவும் டவுன் எக்ஸ்டன்ஷன் போஸ்டா பீஸ் சாலையில் பேருந்து நிலை யத்தில் வெளி வாயிலுக்கு வட புறம் உள்ள தடுப்புச்சுவரைப் புதுப்பித்துக் கட்டவும், நகராட் சிப் பேருந்து நிலையத்தில் உள்ள டவுன்பஸ் தங்குமிடத்தை மாற்றி வடபுறம் கட்டுவதற்குமாக ரூ. 81,700 மதிப்பீடுகளுக்கான வேலைக்கு 30—11—1971 மாலை 4 மணி வரை ஆணையர் அவர்க ளால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். மேற்கண்ட 6 வேலைகளின் விவரங்களை நகராட்சிக் கருவூலத்தில் ஒவ்வொரு வேலைக்கும் ஒரு ரூபாயும், விற்பனை வரி நான்கு காசும் செலுத்திப் பெற்றுக்கொள்ள லாம்.

**சி. வீரையன்**

மாயூரம், ஆணையர்.
1—10—71.

(த. 49)

---

## போதனைப் பொருள்கள் விநியோகிக்க

செங்கற்பட்டு மாவட்டத்தி லுள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு 1971—72-ஆம் ஆண்டிற்குப் போதனைக்கான பொருள்களும் உபகரணங்களும் விநியோகிப்பதற்குக் கீழ்க் கையொப்ப மிட்டுள்ளவரால் 29—11—1971 காலை 10-30 மணி வரை முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் வரவேற்கப்படு கின்றன. நிபந்தனைகள் கொண்ட ஒப்பந்தப்புள்ளிப் பத் திரங்களைக் காஞ்சீபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள செங்கற்பட்டு மாவட்ட வளர்ச்சி அலுவலர் அவர்களிடமிருந்து பெறலாம்.

**மாவட்ட வளர்ச்சி அலுவலர், செங்கற்பட்டு மாவட்டம்.**

நாள்: 27—10—71.
காஞ்சிபுரம்.

(த. 38)

---

## உணவுப் பொருள் வழங்கு துறை.

ந.க.கே. 11—42449—71

நாள் : 26-10-71

**ஒட்டுப்போட்ட உபயோகமில்லாத சாக்குகள் விற்பனை**

தமிழக அரசுக்காகவும், தமிழக அரசின் சார்பாகவும், தென்னார்க்காடு மாவட்ட ஆட்சி யர், தென்னார்க்காடு மாவட்டத் தில் தாலுகா மத்தியிலுள்ள பல கிடங்குகளிலுள்ள ஒட்டுப் போட்ட உபயோகமுள்ளதாயும், மற்றும் உபயோகமில்லாத 43,972 (நாற்பத்து மூவா யிரத்துத் தொளாயிரத்து எழுபத் திரண்டு) சாக்குகளை விற்பனை செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரு கிறார்.

ஒட்டுப்போட்ட சாக்குகளையும் மற்றும் உபயோகமில்லாத சாக்கு களையும் விற்பனை செய்ய 29—11—1971 மாலை 2-00 மணி முடிய தென்னார்க்காடு மாவட்ட ஆட்சியர் அலு வலகத்தில் சேருமாறு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் கோரப்படுகின்றன. முத்திரை யிட்ட ஒப்பந்தங்கள் அன்றே மாலை 3-00 மணிக்குத் திறக்கப் படும்.

மேலே குறிப்பிட்ட தினம் அரசாங்க விடுமுறை நாளாக இருந்தால், மறுநாள் ஒப்பந்தங் கள் பெற்றுக்கொள்ளப்படும். ஷை தேதியில் மாலை 2-00 மணிக்குப் பின்வரும் ஒப்பந்தங்கள் கண்டிப் பாகப் பெற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஒப்பந்த சம்பந்த மான படிவங்களும், விற்பனை நிபந்தனைகளும் பெற ரூ. 5-ஐ "P. D. Accounts of the Commissioner of Civil Supplies" என்ற தலைப்பில் செலுத்தியும், 0.18 காசு விற்பனை வரிக்காக தனியே மேற்படி தலைப்பில் செலுத்தியும் சலான்களை கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் கொடுத்துப் பெற்றுக்கொள்ள லாம். இத்தொகை திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

**மாவட்ட ஆட்சித்தலைவர்,**

தென்னார்க்காடு மாவட்டம்.

கடலூர்-1,
26—10—71.

(த. 51)

---

## ஏல விற்பனை

வாரிசுதார் இல்லாத சொத்துக் கள்1971-ஆம் வருடம், நவம்பர் மாதம் 25-ஆம் தேதி, வியாழக் கிழமை காலை 10-30 மணியள வில் என்னுடைய அலுவலகத்தில் பகிரங்கமான ஏலத்தில் விற்கப் படும். பொருள்களின் பட்டியலை 23—11—1971 செவ்வாய்க் கிழமையன்றும், 24—11—1971 புதன் கிழமையன்றும் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

**காவல் ஆணையர்,**

நகரக் காவல் ஆணையர் அலுவ லகம், எழும்பூர், சென்னை-8,
1—11—1971,

(த. 53)

## ஒப்பந்தப் புள்ளி

### தாராபுரம் நகராட்சி

26–11–1971-ஆம் தேதி மாலை 4-00 மணிவரைக்கும் ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் கீழ்க்கண்ட வேலைகளுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அதே தினம் மாலை 4-15 மணிக்குத் திறக்கப்படும். விரிவான ஒப்பந்த அறிக்கையையும் ஒப்பந்த ஷெட்யூல்களையும் அதற்கான கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலையின் விவரம். | மதிப்பீட்டுத் தொகை. | கட்டுத் தொகை. | பத்திரத்தின் விலை. |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1 நஞ்சியம்பாளையம் நாடார் தெருவுக்குத் தார் ரோடு போட. | 11,000 | 275 | 2 |
| 2 மேற்குக் கச்சேரித்தெரு, புது பீமராயர் அக்ரஹாரம் உடையார் தெரு, நாராயணபிள்ளைத் தெருக்களுக்குத் தார் ரோடு போட. | 11,400 | 285 | 2 |

**வி. நாகராஜன்,**
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
தாராபுரம்,
28–10–1971.

(ந. 41)

---

## பொதுப்பணித் துறை

### செங்கல்பட்டு—வட ஆர்க்காடு வட்டம்

எண் 20913/71/வ5/தேதி 30–10–1971.

வேலையின் பெயர்:—காஞ்சிபுரம் வட்டம் தலைமை மருத்துவ மனையில் இரட்டை அறுவை நிலையக் (Twin operation theatre) கட்டடம் கட்டுதல்—செங்கல்பட்டு மாவட்டம்.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவருக்காகவும், பொதுப் பணித்துறை மற்றும் அரசினரின் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி, முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காக செங்கல்பட்டு-வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளரால் 10–12–1971 மாலை 3 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. அதே நாள் மாலை 3-15 மணிக்கு அப்பொது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் செங்கல்பட்டு-வடஆர்க்காடு பெருவட்டம் மேற்பார்வைப் பொறியாளரால் பிரிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 ஒப்பந்த முறை | ... | மொத்தத் தொகை. |
| 2 முன்வைப்புத் தொகை | .. | ரூ. 2,400. |
| 3 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை வரை படத்துடன். | | ரூ. 20·60 விற்பனை வரி 3 சதவீதம் சேர்த்து |
| 4 முடிக்க வேண்டிய காலம். | | 6 மாதங்கள். |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் செங்கல்பட்டு-வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் 22–11–1971 முதல் 8–12–1971 வரை, விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 20. (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித்தரப்படமாட்டாது). கருவூலம் அல்லது ரிசர்வ் பாங்க் ஆகியவற்றில் '' P.W.D. Remittances'' என்ற தலைப்பின் கீழ் நிர்வாகப் பொறியாளர் பொ.ப.து., காஞ்சிபுரம் கோட்டம், காஞ்சிபுரம் என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரி ரூ. 0·60 கருவூலம்அல்லது ரிசர்வ் பாங்கில் "XII Sales tax (b) receipt under state sales act general sales tax" என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படிக் கருவூல செலுத்துச் சீட்டுக்களை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன்வைப்புத் தொகைக் கருவூலச் சீட்டு வடிவிலோ, தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ அல்லது ஷெடியூல்டு பாங்குகளில் கால் ரசீது டெபாசிட் வகையிலோ அல்லது ஷெடியூல்டு பாங்குகளில் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசுக் கடன்பத்திரங்களும் தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் நடைமுறை விலையில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்தத் தபால் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். மற்ற எந்தப் படிவத்தில் செலுத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள், பெரிய கட்டட வேலைகளில் மூன்று வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
(பொ.ப.து.) செங்கற்பட்டு-வடஆர்க்காடு பெருவட்டம், வேலூர்-1.

(ந.44)

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிகால் வாரியம்.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் துறை, தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம், பொதுப்பணித் துறை அல்லது இதுபோன்ற இதர அரசுத் துறைகளில் பதிவு செய்து கொண்டுள்ள உரிய பிரிவு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர் (ம.ந.வா.பொ.) அவர்களால் கெங்குரெட்டி சாலே, சென்னே-8 என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 7—12—1971 மாலே 3 மணி வரை, துறைக்குரிய சரியான படிவத்தில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. அவை அதே நாள் மாலே 3-30 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலேயில் மேற்பார்வைப் பொறியாளர் (ம.ந.வா பொ.) த.கு.நீ. வ. வா. சென்னே-8 அவர்களால் திறக்கப்படும்.

| எண், வேலேயின் விவரம். | ஒப்பந்த வடிவம். | கட்டுத் தொகை. | வேலேயை முடிக்க வேண்டிய காலம். | ஒப்பந்தப் பத்திரங்கள் விலே. |
|---|---|---|---|---|
| 1 கும்பகோணம் புதை சாக்கடைத் திட்டம்—2வது கட்டம் (பகுதி-1 திருத்தப்பட்டது.<br>Tretutment works—Construction of 2 Nos. Anaerolic lagoons with division Box; inlet & outlet arrangements | கே. 2 | ரூ. 2,710 | 6 மாதங்கள் | ரூ. 10·35 |
| 2 கும்பகோணம் புதை சாக்கடைத் திட்டம்——2-வது கட்டம் (பகுதி 1) திருத்தப்பட்டது.<br>Construction of aerated lagoons with inlet & outlet arrangements, aerated platform scour etc. | கே. 2 | ரூ. 1,440 | 4 மாதங்கள் | ரூ. 10·35 |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்திற்குரிய கட்டணம், நிர்வாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், த.கு.நீ.வ. வாரியம் அவர்கள் கணக்கில் "PW III OR" என்ற தலேப்பிலும், விற்பனே வரியை "XII Sales Misc. 1 General Sales Tax" என்ற தலேப்பிலும். தனிச் சலான்களில் செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் கிடைக்குமிடம் : நிர்வாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், த.கு.நீ.வ. வாரியம், 28, ராஜாஜி தெரு, சீனிவாசபுரம், தஞ்சாவூர் அவர்களுக்கு மனுச் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

(ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்திற்குரிய கட்டணத்தை ரொக்கமாகவோ அல்லது பண அஞ்சல் மூலமோ செலுத்த வேண்டும்).

ஒப்பந்தப் பத்திரத்தின் விலே எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

சென்னே,
25—10—1971

மேற்பார்வைப் பொறியாளர்,
மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம்,
சென்னே-8.

(த. 94)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

**வேலையின் பெயர்** :—வடசென்னை, அரசினர் மகளிர் கலைக் கல்லூரிக்கு, பெண்கள் விடுதி (ஆஸ்டல்) கட்டுதல் (அடித் தளமும் அதன்மேல் இரண்டு அடுக்குத் தளங்களும்)

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் மேற் கூறிய வேலைக்கு மேற்பார்வைப் பொறியாளர் சென்னை செங்கல்பட்டு வட்டம், அவர்களால் சேப்பாக்கம், சென்னை 5-ல் உள்ள, அவருடைய அலுவலகத்தில் 15—12—1971 அன்று மாலை 3·00 மணிவரை, அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படு கின்றன. ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர். சென்னை- செங்கற்பட்டு வட்டம், சென்னை-5 அவர்களால் அதே நாள் மாலை 3·15 மணிக்கு அந்தச்சமயத்தில் வந்திருக் கும் ஒப்பந்தக்காரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

| | |
|---|---|
| 1. ஒப்பந்த வடிவம் .. ... | மொத்தத் தொகை. |
| 2. கட்டுத் தொகை ... ... | ரூ. 8,000. |
| 3. வேலையை முடிக்க வேண்டிய காலம். | 6 மாதங்கள். |
| 4. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை. | ரூபாய் 20 மட்டும் அரசாங்கக் கருவூலம் (அ) ரிசர்வ் வங்கியில் P. W. Remittances III other Remittances என்ற தலைப்பிட்டு நிர்வாகப் பொறியாளர், பொதுப் பணித்துறை கட்டடக் கோட்டம் எண் 2, சென்னை-5 அவர்கள் கணக்கில் செலுத்தப்படவேண்டும். |
| 5, விற்பனை வரி ... ... ... | ரூ. 0·60 (அறுபது காசுகள் மட்டும்) மேற்கூறிய தொகை அரசாங்கக் கருவூலம் (அல்லது) ரிசர்வ் வங்கியில் XII Sales Tax (b) Receipts under State Sales Tax act என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். சலானைக்கொடுத்த பின்னர்தான் ஒப் பந்தப் பத்திரங் கள் வழங்கப்படும். |
| 6. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விற்கப்படும் காலம் (அலுவலக நேரங்களில்). | 8—12—1971 முதல் 14—12—1971 வரை. |
| 7. ஒப்பந்தப்புள்ளி பெற்றுக்கொள்ளக் கடைசி நாள். | 15—12—1971 |

மற்றைய விவரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் சென்னை, செங்கற்பட்டு வட்டம் சேப்பாக்கம், சென்னை-5 அவர்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம். மேற்பார்வைப் பொறியாளர் சென்னை செங்கல்பட்டு வட்டம் சென்னை-5 அவர்கள் காரணங்கள் காட்டாமலேயே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமை உள்ளவர்,

**பி. கே. கந்தசாமி,**

மேற்பார்வைப்பொறியாளர்,
சென்னை செங்கற்பட்டு வட்டம்,
சேப்பாக்கம், சென்னை-5.

(த.80)

## ஒப்பந்தப்புள்ளி

**வீடு விற்பனை.**

கடலூர் கோட்டம், பண்ணுருட்டி கிளைக்கோட்டம், பண்ணுருட்டி மதுரா வைத்திரெட்டி பாளையம், தட்டாஞ்சாவடி ரோடு என்கிற காந்தி ரோடிலுள்ள தென்னார்க்காடு மார்க்கட் கமிட்டிக்குச் சொந்தமான வீடு, அதைச் சேர்ந்த காலிமனை, கீத்துக் கொட்டகை, குழாய்க் கிணறு உள்பட வாங்குவதற்காக மூடி, முத்திரையிட்ட ஒப் பந்தங்கள் கீழ்க் கையொப்ப மிட்டவரால் கோரப்படுகின்றன. குறித்த படிவங்களில் ஒப்பந்தங் கள் 4-12-1971 மாலை 4 மணிக்குள் வந்து சேரவேண்டும். 4-12-1971 அன்றே மாலை 4-15 மணிக்கு ஒப்பந்தங்கள் பிரிக்கப் படும். ரூ. 3,000 கட்டுத் தொகையுடன் ஒப்பந்தம் அனுப் பப்படவேண்டும். மேற்படி சொத்துக்களைப் பண்ணுருட்டி விற்பனைக் கழக கண்காணிப்பாள ரின் உதவியுடன் பார்வையிட லாம். ஒப்பந்தப் பத்திரங் களும் நிபந்தனைகளும் தென் னார்க்காடு மார்க்கட் கமிட்டி, கடலூர் செயலாளர்-பொறுப் பினரிடமிருந்து அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ள லாம்.

**செயலாளர் (பொறுப்பு.)**

(த. 67)

## ஒப்பந்தப் புள்ளி

## குடிநீர், வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழே கூறப்பட்டுள்ள வேலைக்காக, இந்தத்துறையில் அல்லது இதுபோன்ற அரசு நிறுவனங்களில் பதிவு செய்து கொண் டுள்ள உரிய பிரிவு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ் வுப் பொறியியல் வட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை-8அவர்களால், அவரது அலுவலகத்தில் 52, கெங்கு ரெட்டிசாலை, சென்னை-8-ல் 7—12—1971 மாலை 3·00 மணிவரை துறைக்குரிய சரியான படிவத்தில், மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப் படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3·30 மணிக்குப் பிறகு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்,சென்னை-8 அவர்களால் திறக்கப்படும்.

| எண். | வேலையின் விவரம். | ஒப்பந்த வடிவம். | கட்டுத் தொகை. | வேலையை முடிக்க வேண்டிய காலம். | ஒப்பந்தப் பத்திரங் களின் விலை. |
|---|---|---|---|---|---|
| | | | ரூ. | மாதங்கள். | |
| 1 | பட்டுக்கோட்டை நீர்வழங்கு திட்டம் 3-வது கட்டம். பகுதி 1—ஹெட் ஒர்க்ஸ் மற்றும் டிரீட்மெண்ட் ஒர்க்ஸ் 181840 லிட்டர் தேக்கம் திற னுள்ள தூயநீர் ரிசர்வாயர் கட்டுதல் உரிய குழாய்கள் இணைப்புகள் உள்பட. | மொத்தத் தொகை. | 885 | 6 | 10·35 |
| 2 | ஷெ பம்பு விடுதி கட்டுதல் — | கே. 2 | 695 | 6 | 10·35 |

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்திற்குரிய கட்டணம், நிருவாகப் பொறியாளர் மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம் த.கு.நீ.வ.வா. எண். 28. ராஜாஜி தெரு, ஸ்ரீனிவாசபுரம், தஞ்சாவூர் அவர்கள் கணக்கில் "P. W. III OR" என்ற தலைப்பிலும். விற்பனை வரியை "XII Sales D. Misc–I General Sales Tax" என்ற தலைப்பிலும் தனிச்சலான்களில் செலுத்தப் பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் கிடைக்குமிடம் : நிருவாகப் பொறியாளர், (ம.ந.வா) மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், த.கு.நீ.வ. வாரியம். எண். 28, ராஜாஜி தெரு, ஸ்ரீனிவாசபுரம், தஞ்சாவூர் அவர்களுக்கு மனுச்செய்து பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்திற்குரிய கட்டணத்தை ரொக்கமாகவோ அல்லது பண அஞ்சல் மூலமோ செலுத்த வேண்டும்.

ஒப்பந்தப்பத்திரக் கட்டணம், எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம்,
சென்னை-8.

சென்னை,
21—1—1971.

(த. 54)

## தமிழ்நாடு சிறு தொழில்கள் வளர்ச்சி நிறுவனம் லிமிடெட்
## (தமிழ் நாடு அரசின் நிறுவனம்)

வேலை 1 : அம்பத்தூரில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவன (சிட்கோ) பகுதியில் 90'×40' தொழிற்சாலைக் கொட்டகைகள். இரண்டு ; 80'×40' கொட்டகை ஒன்று ; 65'×30' கொட்டகை இரண்டு கட்டுதல்

வேலை 2 : அம்பத்தூர் சிட்கோ பகுதியில் 65'×30' அளவில் மூன்று தொழிற் சாலைக் கொட்டகைகள் 60'×40' அளவில் இரண்டு கொட்டகைகள் கட்டுதல்.

வேலை 3 : அம்பத்தூர் சிட்கோ பகுதியில் 60'×40' தொழிற்சாலைக் கொட்டகைகள் மூன்று ; 50'×30' கொட்டகைகள் இரண்டு; 36'×30' கொட்டகை ஒன்று.

தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் லிமிடெட்டின் பொது மேலாளரால், மத்திய மாநில அரசுகளில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக் காரர்களிடமிருந்து மேற்கண்ட வேலைகளுக்காக 9—12—1971 மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்கு தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் லிமிடெட் பொது மேலாளரால், கண்ணம்மை பில்டிங்ஸ் 7-வது தளம், 122, அண்ணா சாலை, சென்னை-6-ல் அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

| ஒப்பந்தவடிவம்: | வேலை 1 மொத்தத் தொகை. | வேலை 2 மொத்தத் தொகை. | வேலை 3 மொத்தத் தொகை. |
|---|---|---|---|
| கட்டுத் தொகை .. .. .. .. | ரூ. 5,900 | ரூ. 5,125 | ரூ. 5,435 |
| வரைபடத்துடன் ஒப்பந்தப் பத்திரங்கள் விலை. | ரூ. 20 அத்துடன் 75 காசு விற்பனை வரி. | ரூ. 20 அத்துடன் 75 காசு விற்பனை வரி. | ரூ. 20 அத்துடன் 75 காசு விற்பனை வரி. |
| வேலையை முடிக்க வேண்டிய காலம் .. | 4 மாதங்கள். | 4 மாதங்கள். | 4 மாதங்கள். |
| மேலே கண்ட அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கத் தொடங்கும் தேதி. | 15—11—71 | 15—11—71 | 15—11—71 |
| பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் உரிய பிரிவினர். | கிளாஸ் 2-ம் அதற்கு மேலும். | கிளாஸ் 2-ம் அதற்கு மேலும். | கிளாஸ் 2-ம் அதற்கு மேலும். |

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை விற்பனை வரியுடன் ரூ. 20·75 எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது. ரொக்கமாக மட்டுமே இது ஏற்கப்படும்.

கட்டுத் தொகை ஷெடியூல்'பாங்க் அல்லது தேச உடைமையாக்கப்பட்ட பாங்கின் டிமாண்ட் டிராப்ட் வடிவில் மட்டுமே ஏற்கப்படும். தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் லிமிடெட் கணக்கில் இது கட்டப்படவேண்டும்.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புவோர் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

எவ்வித காரணமும் கூறாமல் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் நிராகரிக்கத் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தலைவருக்கும் நிர்வாக இயக்குநருக்கும் உரிமை உண்டு.

பொது மேலாளர்,
தமிழ் நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் லிமிடெட்.

(த. 70)

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப்புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், வடிகால் வாரியம்), பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண். 17, சர்.பி.டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச்சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 30—11—1971 பிற்பகல் 3·00 மணிவரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3·30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவ ராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

| | |
|---|---|
| வேலையின் பெயர் ... ... ... | சி. ஐ. மேல்மட்டமூடி (C. I. Surface box) சப்ளை செய்தல். |
| ஒப்பந்த வகை ... ... ... | மொத்தத் தொகை. |
| முன் வைப்புத் தொகை ... ... | ரூ. 2,500 (ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூறு மட்டும்). இத்தொகை கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசீய வங்கிஉத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் மதுரை பொது சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிர்வாவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும். |
| வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு. | இரண்டு மாதங்கள். |
| ஒப்பந்தப் படிவங்களின் விலை ... | ரூ. 10·37 (விற்பனை வரி உள்பட). |

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் மதுரை பொது சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிர்வாகப் பொறியாளர்களிடமிருந்து 14, ராமமூர்த்தி சாலை, சின்னச் சொக்கிகுளம், மதுரை-2 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 27—11—1971 மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப்படிவம் பெற்றுக் கொள்ளலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
(பொதுச்சுகாதாரம்).

(தி,72)



## மின்சார வாரியம்

### எண்ணூர் அனல் மின் திட்டம்
### (மொத்தத் தொகை ஒப்பந்தம்)

1. மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் அதன் உறையில் தமிழ்நாடு மின்சார வாரியம், எண்ணூர் அனல் மின் திட்டம், எண்ணூர் அனல் மின் நிலைய களத்தின் அருகே 1-1-1972 முதல் ஓராண்டுக் காலத்திற்கு மரக்கறி உணவு விடுதி நடத்துதல் எனவும் மற்றும் ஒப்பந்த தாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழ்க் கையொப்பமிட்டவரால் 9-12-1971 மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அன்று மாலை 3-30 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

2. ஒப்பந்தங்களின் பிரதிகள் ஒவ்வொன்றும் ரூ. 3 (ரூபாய் மூன்று மட்டும்) கீழ்க்கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளவும். இத்தொகை எக் காரணத்தைக்கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

3. இந்த வேலைக்கான கட்டுத் தொகை ரூ. 1,000 (ரூபாய் ஆயிரம் மட்டும்) ஒப்பந்தப் பிரதியில் கூறியுள்ளபடி செலுத்தி அதற்கான ரசீதை ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் வரும் ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

4. துறையினரைச் சார்ந்த நமூனுக்களில் இல்லாத ஒப்பந்தங்களும், இறுதித் தேதிக்கும், நேரத்திற்கும் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தங்கள் ஏதாவது ஒன்றையோ, அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கக் கீழ்க் கையொப்பமிட்டவரே உரிமையுடையவர்.

5. அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணாமல்போகும் ஒப்பந்தப் பிரதிகளுக்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பத்திரங்கள் மாற்றத்தக்கவை அல்ல.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
எண்ணூர் அனல் மின்திட்டம்,
தொலைபேசி எண் : 59389, 59556 (Five lines)
தந்தி : ENTERMAL.

(த. 48)

## ஒப்பந்தப்புள்ளி

### பொதுப்பணித்துறை

வேலையின் பெயர்: சென்னை அண்ணா சாலையிலுள்ள கலைவாணர் அரங்கத்தைத் திருத்தி அமைத்தல்.

தமிழ் நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் மேற் கண்ட வேலைக்காக மேற்பார்வைப் பொறிஞர், பொதுப் பணித்துறை, சென்னை-செங்கற்பட்டு வட்டம், சென்னை-5, அவர்களால், சென்னை-5 சேப்பாக்கத்திலுள்ள அவர்கள் அலு வலகத்தில் 15—12—1971 பிற்பகல் 3 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப் படும். ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறிஞர், சென்னை, செங்கற்பட்டு வட்டம், பொதுப் பணித்துறை, சென்னை-5 அவர்களால் அதே நாளில் பிற்பகல் 3-15 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன் னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

2. கட்டுத் தொகை—ரூ. 15,000

3. வேலை முடிக்க வேண்டிய காலம்—8 மாதங்கள்.

4. ஒப்பந்தப் பத்திரங்கள் விலை—ரூபாய் 30 (ரூபாய் முப்பது மட்டும்) கருவூலத்திலோ (அ) இந்திய ரிசர்வ் பாங்கியிலோ Public works Remittances III other Remittances என்ற தலைப்பில் நிர்வாகப் பொறிஞர், கட்டடக்கோட்டம்-1 சேப்பாக்கம், சென்னை-5 அவர்கள் கணக்கில் செலுத்தப் படல் வேண்டும்.

5. விற்பனை வரி ரூ. 1·05 (ரூபாய் ஒன்றும் ஐந்து காசுகளும் மட்டும்) அதே செலானில் குறித்துக் கருவூலத் திலோ இந்திய ரிசர்வ் பாங்கிலோ "XII விற்பனை வரி" மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரவினம்" என்ற தலைப்பில் செலுத்த வேண்டும்.

6. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள்—அலுவலக நேரத்தில் விற்பனையாகும் தேதி 6—12—1971 முதல் 14—12—1971 முடிய.

7. ஒப்பந்தப் புள்ளித் தேதி—15—12—1971 (பிற்பகல் 3-00 மணி).

மேற்கண்ட விவரங்களை மேற்பார்வைப் பொறிஞர் அலு வலகம், பொதுப்பணித் துறை சென்னை—செங்கை வட்டம் சேப்பாக்கம், சென்னை-5-ல் அலுவலக நாட்களில் வேலை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். எந்த ஒப்பந்தப் புள்ளி யையும் அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் எவ்விதக் காரணமும் கூறாமல் நிராகரித்துவிட மேற்பார்வைப் பொறி ஞர் பொதுப்பணித் துறை, சென்னை—செங்கை வட்டம், சென்னை-5 அவர்களுக்கு உரிமை உண்டு.

**பி. கே. கந்தசாமி,**

மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை-செங்கை வட்டம்,
சென்னை-5.

25—10—1771

(த. 90)

## ஒப்பந்தப் புள்ளி

### உதகை நகராட்சி

1971-ஆம் வருடம் நவம்பர் மாதம் 29-ஆம் தேதி திங்கட் கிழமை மாலை 3-30 மணிக்குள் புச்சர் தெருவிலுள்ள 2" ஜி.ஐ. பழைய மெயினை மாற்று வதற்காக ஜி.ஐ. பைப்புகளும், உபகரணங்களும் விநியோகம் செய்வதற்குரிய ஒப்பந்தங்கள் உதகை ஆணையர் அவர்களால் வரவேற்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்களும், நிபந்தனைகளும் 27-11-1971 மாலை 4-00 மணிக்குள் ஒவ்வொரு பத்திரத் திற்கும் ரூ. 4-12 செலுத்தி அன்று மாலைக்குள் ஒப்பந்தப் பத்திரங்களை நகராட்சிப் பொறி யர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஒப் பந்தப் பத்திரத்தின் விலை ரூ. 4-12, 27-11-1971-ஆம் தேதிக்குள் நகராட்சி கருவூலத் தில் செலுத்தப்படவேண்டும்.

**சி. சங்கரலிங்கம்,**
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
உதகமண்டலம்,

(த. 65)

## வேலைவாய்ப்பு

மதுரை மாவட்டம், தே. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றி யத்தைச் சேர்ந்த பேரையூர் மருத்துவ மனைக்கு எல்.எம்.பி. அல்லது ஜி. சி. ஐ. எம்., அல்லது எல்.சி.எம். கல்வித் தகுதி உள்ள ஒரு மருத்துவ அதிகாரி இடத்திற்கு விருப் பமுள்ளவர்கள் 30-11-1971 மாலை 5-00 மணிக்குள் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களுக்கு விண்ணப்பிக்கக் கோரப்படுகிறார்கள்.

வயது—30 வயதுக்குட்பட்டோர்
சம்பளம்—400—15—475—20
575—25—650 மற்றும் கூடிய கிராக்கிப்படியுடன்.

விண்ணப்பத்துடன் தகுதிச் சான்றுகளின் உண்மை நகல்கள் அனுப்பிவைக்க வேண்டும்.

**த. பாலசுப்பிரமணியம்**
ஆணையர்.

ஊராட்சி ஒன்றியம்,
தே. கல்லுப்பட்டி,
நாள்: 27—10—71.

(த. 52)

## ஒப்பந்தப் புள்ளி

### வட ஆர்க்காடு மார்க்கெட் குழு—வேலூர்.

கீழ்க்கண்ட இனங்களுக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 19—11—1971 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகளுடன், கீழே குறிப்பிடப்பட்டவாறு கட்டுத் தொகை கட்டப்பெற வேண்டும். பத்திரங்கள் இதர விவரங்களைக் கீழே கையொப்பமிட்டவர்களிடமிருந்து பெறலாம்.

| விவரம். | கட்டுத் தொகை. ரூ. |
|---|---|
| 1. 4,200 புதிய பி. டிவில் கோணிகள் வழங்கல். | 375 |
| 2. திருவண்ணாமலை 3-வது டிரான்சாக்ஷன் கொட்டகைக்கு மின் வசதி. | 75 |
| 3. வந்தவாசி டிரான்சாக்ஷன் மின்வசதி | 90 |
| 4. திருவண்ணாமலை புறநீர் வழங்கும் ஏற்பாடுகளுக்கு ஜி.ஐ. பைப்புகள், ஸ்பெஷல்கள் வழங்கல். | 65 |

**டி. ஆர். தம்பு ரெட்டி,**
செயலாளர்.

(த. 96)

## பொதுப்பணித் துறை

கீழே குறிப்பிட்டுள்ள வேலையை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு ஆளுநர் சார்பில், மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை கோயம்புத்தூர்-நீலகிரி வட்டம் அவர்களால் கோயம்புத்தூரில் உள்ள அவரது அலுவலகத்தில் 8—12—1971 மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

வேலையின் பெயர்—நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் மக்கள் நல்வாழ்வு ஆய்வுக் கூடங்கள் கட்டுதல்.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—ரூ. 3,000.

வரை படத்துடன் ஒப்பந்தப் பத்திரங்கள் விலை, விற்பனை வரி உள்பட—ரூ. 10·35

வேலையை முடிக்க வேண்டிய காலம்—6 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்களை, மேலாளர், நிர்வாகப் பொறியாளர் அலுவலகம், கோயம்புத்தூர் கோட்டம், கோயம்புத்தூர் என்ற முகவரியில் எழுத்து மூலம் கேட்டும் மேல் குறிப்பிட்டுள்ள தொகையைத் தந்தும் (அது திருப்பித் தரப்படமாட்டாது) 22—11—1971 முதல் அலுவல் நாட்களில் அலுவல் நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**எம். எஸ். கோபாலகிருஷ்ணன்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
கோயம்புத்தூர்-நீலகிரி வட்டம்,
கோயம்புத்தூர்.

(த .92)

## ஏல விற்பனை

### வனத் துறை

தமிழ்நாடு வனத் துறையினரால் 6–12–1971 திங்கட்கிழமையன்று வட ஆர்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் கிடங்கில் சுமார் 525 டன்னும், 8–12–1971 புதன் கிழமையன்று கோயமுத்தூர் மாவட்டம், சத்தியமங்கலம் கிடங்கில் சுமார் 250 டன்னும் எடையுள்ள சந்தனக் கட்டைகளும், இருப்பிலுள்ள வெள்ளைக் கட்டைகளும் ஏலத்தில் விற்கப்படும்.

விவரங்கள் வட ஆர்க்காடு மாவட்டம், திருப்பத்தூர்கோட்ட மாவட்ட வன அலுவலரையும், கோவை மாவட்டம், ஈரோடு, கோவை வடக்குக் கோட்ட மாவட்ட வன அலுவலரையும் கேட்டறியலாம்.

**கி. வெங்கிடகிருஷ்ணன்,**
வனப் பாதுகாவலர்,
சேலம் வட்டம்.

(த. 97)

## சான்றிதழ்த் தேர்வு

சானிடரி இன்ஸ்பெக்டர்கள் சான்றிதழ்த் தேர்வு பாகம் 2 சப்ளிமெண்டல்—ஜனவரி, 1972.

1972 ஜனவரி 4-ல் தொடங்கும் மேற்கண்ட தேர்வில் கலந்து கொள்வதற்கான மனுக்கள், மக்கள் நல்வாழ்வுப் பணி குடும்ப நலத் திட்டம், அடிஷனல் இயக்குநர், சென்னை-6, தேர்வு நடத்தும் குழுத் தலைவர் அவர்களுக்கு 10–12–1971-க்குள் வந்து சேர வேண்டும்.

சானிடரி இன்ஸ்பெக்டர் சான்றிதழ்த் தேர்வு பாகம் 2-ல், கலந்து கொண்டவர்க்கும் தவறியவர்களுக்குமான மனுதாரர்கள் மட்டுமே, மேற்கண்ட தேர்வில் கலந்துகொள்ளஉரியவர்களாவர்.

மனு வடிவங்கள், இதர விவரங்களைப் பெற 35 காசு அஞ்சல் வில்லை ஒட்டப்பட்டதும் சுய விலாசமிட்டதுமான உறைகளை உடன் வைத்து எழுதவேண்டும்.

**அடிஷனல் இயக்குநர்,**
மக்கள் நலப்பணிகள் குடும்ப நலத் திட்டம் மற்றும் தலைவர்,
தேர்வு நடத்தும் குழு,
சென்னை—6.

(த. 58)

## இராணுவத்திற்குத் தேர்வு

இராணுவத்தில் நிரந்தரக் கமிசன்கள்—டேராடூன் இந்திய இராணுவ அகாடமி 54 ஆவது பயிற்சி 1973 ஜனவரி—சேர்ப்பதற்கான தேர்வு.

1. மத்திய அரசு ஊழியர் பணியாளர் தேர்வுக் கழகம், 1972 ஏப்ரல் 28-ல் ஆமதாபாத், அலகாபாத், பெங்களூர், போபால், பம்பாய், கல்கத்தா, கட்டாக், டில்லி, ஹைதராபாத் ஜெய்பூர், ஸ்ரீநகர், சென்னை, நாகபுரி, பாட்டியாலா, பாட்னா, சில்லாங், திருவனந்தபுரம் ஆகியவைகளில் நுழைவுத் தேர்வு தொடங்கும்.

2. வயது வரம்பு.—மனுதாரர்கள் 1952 ஜனவரி 2-க்கு முன் பிறந்தவர்களாகவோ, 1955 ஜனவரி 1-க்குப் பின் பிறந்தவர்களாகவோ இருத்தல் ஆகாது. இந்த வயது வரம்பு யாருக்கும் தளர்த்தப்படமாட்டாது.

3. குறைந்த பட்ச கல்வித் தகுதி.—இந்தத் தேர்வில் இடம் பெற இன்டர்மீடியேட், அல்லது இதற்காக அங்கீகரிக்கப்பட்ட வேறு கல்வித் தகுதி இருக்க வேண்டும். மெட்ரிகுலேஷனுக்குப் பிறகு இரண்டு ஆண்டுக்குக் குறையாத பொறியியல் டிப்ளமாப் படிப்பு, மாநில அரசினரால் வேலைக்கு அங்கீகரிக்கப்பட்டதாய் இருப்பின், அத்தகைய டிப்ளமா ஏற்கப்படும். இத்தகைய தேர்வில் எழுதியிருப்பவர்கள் அல்லது எழுத உத்தேசித்திருப்பவர்களின் மனுக்கள் பூர்வாங்கமாக ஏற்கப்படுவதற்குரியவை.

ஆனால் 1971 டிசம்பர் 1-ல் இந்தத் தேர்வில் தேர்வு பெற்றதற்குச் சான்று காட்டப் பெற வேண்டும்.

4. தேர்வு.—எழுத்துத் தேர்வில் தேர்வு பெற்றவர்கள் பணித் தேர்வுக் குழு ஒன்றின் முன் நேரடிப் பேட்டிக்கு வரவேண்டும்

5. மனுச் செய்வதற்கான படிவங்கள், இதர விவரங்களை அருகிலுள்ள படை ஆட் சேர்ப்பு அலுவலகம், இராணுவ ஏரியா, இராணுவ சப் ஏரியா தலைமை அலுவலகம், தேசிய மாணவர் படை யூனிட்டுகள் அலுவலகம், ஆகியவைகளிலிருந்து பெறலாம்.

மனு வடிவங்கள், இதர விவரங்களைச் செயலாளர், மத்திய அரசு பணியாளர் தேர்வுக் கழகம் (யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன்), டோல்பூர் இல்லம், புது டெல்லி-11-ல் ரூ. 1 செலுத்தியோ, அல்லது மணியார்டர் செய்தோ பெறலாம். அஞ்சல் ஆணைகள், காசோலைகள் தபால் மூலம் கோரிக்கைகளுடன் வரும் பண நோட்டுகள் ஏற்கப்படமாட்டா. மணியார்டர் கூப்பனில் ''Indian Military acadamic Examination—April 1972'' என்று குறிப்பிட்டுப் பெயரையும், முகவரியையும் கொட்டை எழுத்துக்களில் எழுதவேண்டும்.

6. திருமணமாகாத ஆண்கள் மட்டுமே இந்தத் தேர்வுக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

7. மனுக்கள் இந்தியாவிலுள்ள மனுதாரர்களைப் பொறுத்தவரை மத்திய அரசுப் பணியாளர் தேர்வுக் கழகத்திற்கு 1971 டிசம்பர் 6-க்குள் வந்து சேர வேண்டும். வெளிநாடுகளிலும், அந்தமான், நிக்கோபார், இலட்சத் தீவு, மினிகாய், அமின்திவி தீவுகளிலும் வசிப்பவர்களின் மனுக்கள் 1971 டிசம்பர் 20-ஆம் தேதிக்குள் வரவேண்டும்.

8. இந்திய ராணுவ அகாடமியில் பயிற்சி இலவசமாக அளிக்கப்படுகிறது. பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் வருமானம் எல்லாத் துறைகளிலிருந்தும் மாதம் ரூ. 350-க்கு மேற்படாமல் இருந்தால் அத்தகைய கேடட்களுக்கு அரசு நிதி உதவியும் அளிக்கும்.

---

## ஏல விற்பனை

---

### பொதுக் கண்காணிப்பாளர்

செங்கற்பட்டு பிராஞ்சு செட்டில்மெண்ட் அலுவலகத்தைச் சேர்ந்த அரசாங்க ஜீப் எம்.எல்.எக்ஸ். 3642 செங்கற்பட்டு உதவி செட்டில்மெண்ட் அலுவலரால் பிராஞ்சு செட்டில்மெண்ட் அலுவலகம் எண் 35, பஷீத் சாஹிப் தெரு, செங்கற்பட்டு-2ல் 22–12–1971 காலை 11 மணிக்கு பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

ஏல நேரத்தின் போது விற்பனை நிபந்தனைகள் விவரங்கள் அடங்கிய குறிப்பு தரப்படும்.

ஏலம் கோர விரும்புவோர் மேலே குறிப்பிட்ட இடத்தில் அலுவலக நாட்களில் காலை 11-லிருந்து மாலை 5 மணி வரை வண்டியைப் பார்வையிடலாம்.

ஏலம் தொடங்குவதற்கு முன்பு கட்டுத் தொகை ரூ. 100 கட்ட வேண்டும். ஏலத்தில் எடுத்து கோரப்பட்ட தொகையில் 25 சத விகிதம் உடனே கட்ட வேண்டும்.

உதவி செட்டில்மெண்ட்
அலுவலர், செங்கற்பட்டு.

(த. 82)

---

## ஒப்பந்தப்புள்ளி

### போக்குவரத்துத் துறை

சூபர் எனமல்டு வயர்கள் வழங்குவதற்காக, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவரால் 26–11–1971 பிற்பகல் 2 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்த நிபந்தனைகள் இதர விவரங்களை கொள்முதல் அலுவலர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை, சென்னை-2 அவர்களிடமிருந்து அலுவல் நாட்களில் இலவசமாகப் பெறலாம்.

(த. 89)

---

## வேலை வாய்ப்பு

உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பச்சைமலை, தென்புறநாடு கிராம மருந்தகத்தில் பணிபுரிய எல்.ஐ.எம் டாக்டர் தேவை. பணிபுரிய விருப்பமுள்ளவர்கள் திருச்சி மாவட்டத்திலுள்ள உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு விண்ணப்பிக்கக் கோரப்படுகிறது.

சி. சுப்ரமண்யம்,
ஆணையர்.

(த. 20)

---

## வேலை வாய்ப்பு.

நம்பியூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஆயுர்வேத சிரோன்மணி (R. M. P.) பயிற்சிபெற்ற ஓர் மருத்துவர் தேவை. அதுகுறித்த விவரங்களுக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நேரிலோ அல்லது தபால் மூலமோ தெரிந்து கொள்ளலாம்.

பி. எம். அப்துல் லத்தீப்,
ஊராட்சி ஒன்றியம்,
நம்பியூர்.

(த. 103)

ஒப்பந்தப் புள்ளி

## சுருளியாறு நீர் மின் திட்டம்

குறிப்பிடுகை எண் Sur 3-A, Sur 6-A, Sur 7-A, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் சார்பாகக் கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கு அரக்கு முத்திரையிட்ட தனித்தனியான ஒப்பந்தங்களை அதன் முக உறையில் எழுதப்பட்டு அவைகளை மேற்பார்வைப் பொறியாளர், கோதையாறு நீர் மின்சாரத் திட்டம் 34 எ, பெருமாள்புரம், திருநெல்வேலி-7, திருநெல்வேலி, மாவட்டம் என்று முக உறை இட்டவரால் அங்கீகரிக்கப்படுவதால் அவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அவர் பிரதிநிதியால் அவருடைய அலுவலகத்தில் 30—11—1971 அன்று மாலை 3-00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். அவைகளை அதே நாளில் பிற்பகல் 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னால் திறக்கப்படும்.

| எண். | குறிப்பிடுகை எண். | வேலையின் பெயர். | ஒப்பந்தப் பிரதிப்படி விலை உள்பட. ரூ. | கட்டுத் தொகை. ரூ. | ஒப்பந்தம் பெற்றுக் கொள்ளும் கடைசித் தேதி. |
|---|---|---|---|---|---|
| 1 | Sur 3-A | நிரந்தரமான ஒன்றாவது இரண்டாவது 2F Type கட்டடம். | 10·35 | 1,400 | 30—11—1971 |
| 2 | Sur 6-A | நிரந்தரமான 2E Type கட்டடம் இரண்டிற்கு. | 10·35 | 2,000 | 30—11—1971 |
| 3 | Sur 7-A | நிரந்தரமான AE Type கட்டடம். | 10·35 | 750 | 30—11—1971 |

ஒப்பந்த செட்டுகளின் நகல்களை (மாற்றத்தகாதவை) ஒவ்வொரு விலைக்கும் மேலே குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி, கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்திலிருந்து பெறலாம். அல்லது கோட்டப் பொறியாளர், சுருளியாறு நீர் மின் திட்டம், சின்னமனூர், மதுரை மாவட்டம் என்ற அலுவலகத்திலும் இத்தொகையைச் செலுத்தி ஒப்பந்தப் படிவத்தைப் பெறலாம். இத்தொகை எந்தச் சந்தர்ப்பத்திலும் திருப்பித் தரப்படமாட்டாது.

இவ்வலுவலகத்தின் மனுப்பாரத்தில் இல்லாத ஒப்பந்தங்களையும் குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு வரும் ஒப்பந்தங்களையும் கட்டுத் தொகையை (Earnest Money Deposit) இணைக்கப் படாத ஒப்பந்தங்களையும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். கட்டுத் தொகையைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான ரசீதைப் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும் எக்காரணத்தைக் கொண்டும் காசோலைகள் ( Cheques ) ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கட்டுத் தொகைக்கான டிமாண்ட் ட்ராப்ட்ஸ் முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்தங்களுடன் அனுப்பக்கூடாது.

மேலே குறிப்பிட்டுள்ள வேலைகளைக் காரணம் தெரிவிக்காமல் சில அல்லது எல்லா ஒப்பந்த தாரர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கவோ அல்லது ஒரு ஒப்பந்தத்தையோ சில அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்கவோ கீழே கையொப்பமிட்டவருக்குப் பூரண உரிமையுண்டு.

ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சலில் அனுப்பப்படும்போது இடையில் உண்டாகும் காலதாமதம் அல்லது காணுமல் போவது முதலியவைகளுக்கு இவ்வாரியம் பொறுப்பல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
கோதையாறு நீர் மின் திட்டம்,
34-எ, பெருமாள்புரம், திருநெல்வேலி-7.

(து. 86)

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

### பொதுப்பணித் துறை

### செங்கல்பட்டு—வடார்க்காடு வட்டம்

எண். 29214/வ2-70/நாள். 1—11—1971.

வேலையின் பெயர் — செங்கல்பட்டு மருத்துவ மனைக் கல்லூரியில் இரண்டாவது பகுதியின் முதல் மாடியும் இரண்டாம் மாடியும் கொண்ட கட்டிடம் கட்டுதல்—செங்கல்பட்டு மாவட்டம்.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும் பொதுப் பணித்துறை மற்றும் அரசின் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காக செங்கல்பட்டு—வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வையினரால் 10—12—1971 மாலை 3 மணி வரைக்கும் வரவேற்கப் படுகின்றன. அதே நாள் 3·15 மணிக்கு அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் முன்னிலையில் செங்கல்பட்டு—வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப்பொறியாளரால் பிரிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 ஒப்பந்த வடிவம் | | மொத்தத் தொகை |
| 2. முன்வைப்புத் தொகை | .. | ரூ. 18500. |
| 3. ஒப்பந்தப்புள்ளி பத்திரங்களின் விலை வரைப்படத்துடன். | ரூ. | 51·50 விற்பனை வரி 3 சதவீதம் சேர்த்து. |
| 4 முடிக்க வேண்டிய காலம்—ஒப்பந்தப் புள்ளி. | | 18 மாதங்கள் |

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் செங்கல்பட்டு வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 22—11—1971முதல் 8—12—1971 வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளி பத்திரங்களுக்கான விலைத்தொகை ரூ. 50·00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித்தரப் படமாட்டாது). கருவூலம் அல்லது ரிசர்வ் பாங்க் ஆகியவற்றில் '' P.W.D. Remittances '' என்ற தலைப்பின் கீழ் நிர்வாகப் பொறியாளர், பொ.ப.து., கட்டடங்கள் கோட்டம், காஞ்சிபுரம் என்பவர் கணக்கில் செலுத்தப்படவேண்டும். விற்பனை வரி ரூ. 1·50 கருவூலம் அல்லது ரிசர்வ் பாங்கில் '' XII Sales Tax (b) receipt under State Sales Tax Act General Sales Tax'' என்ற தலைப்பின்கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுக்களை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன்வைப்புத் தொகை கருவூலச்சீட்டு வடிவிலோ. தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ அல்லதுஷெடியூல்டுபேங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ அல்லது ஷெடியூல்டு பேங்குகளின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசு கடன் பத்திரங்களும் தமிழ்நாடு மின்வாரியப்பத்திரங்களும் நடைமுறை விலையில் 5 சதவிகிதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்தந்தத் தபால் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். மற்ற எந்தப் படிவத்தில் செலுத்தினாலும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஒப்பந்தப்புள்ளிதாரர்கள், பெரிய கட்டட வேலைகளில் மூன்று வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
பொதுப்பணித்துறை,
செங்கை—வடார்க்காடு பெருவட்டம்,
வேலூர்.

(த. 83)

---

## ஏல விற்பனை

வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பயன் இழந்த ஜீப் எம். எஸ். ஓ. 2469 கீழே கையொப்பமிட்டவரால் 26-11-1971 பிற்பகல் 2 மணிக்கு திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். விவரங்களைக் கீழ்க்கண்டவரிடமிருந்தோ, அல்லது வள்ளியூர் வட்டார வளர்ச்சி அலுவலரிடமிருந்தோ அலுவல் நாட்களில் பெறலாம்.

**கோட்டாட்சி அலுவலர்.**

(த. 95)

---

## தென்னை மரக் குத்தகை ஏலம்

திருவாரூர் பவித்திரமாணிக்கத்தில்உள்ள வேளாண்மைக் கருவிகள் தொழிற் கூடத்திற்குச் சொந்தமான 37 தென்னை மரங்களை 1-12-1971 முதல் ஓர் ஆண்டுக் காலத்திற்குக் குத்தகை விட 22-11-1971 அன்று மாலை 3-00 மணி அளவில் மேற்படி தொழிற்கூடத்தின் பொதுக் கண்காணிப்பாளரால் பகிரங்க ஏலத்தில் விடப்படும். மற்ற விவரங்களைத் தொழிற்கூட அலுவலக நேரத்தில்பெற்றுக்கொள்ளலாம்.

**பொதுக் கண்காணிப்பாளர்,**
விவசாயக் கருவிகள் தொழிற் கூடம், திருவாரூர்.

(த. 98)

## நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை

பாம்பன் வட்டம், சென்னை-15.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற் பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), பாம்பன் வட்டம் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிடப் பட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் நெம்பர் 4, ஸ்ரீநகர் காலனி, சென்னை-15-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 24—11—1971 அன்று மாலை 3·00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்.

| வரிசை எண். | வேலை. | விவரம். | முன்வைப்புத் தொகை. |
|---|---|---|---|
| 1 | கிழக்குக் கடற்கரைச்சாலையில் தேன் பாக்கம் அருகே கழிமுகத்தின் குறுக்கே சங்கிலித் தொடர் 3873·94 முதல் 6047·96 வரை மூன்று பாலங்கள் கட்டி, பாலங்களை இணைக்கும் அணுகுசாலைகள் அமைத்தல். | | ரூ. 41685 |

ஒப்பந்தங்கள் 24–11–1971 அன்றே மாலை 3·15 மணிக் குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனுக்கள் வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர், சென்னை-25 (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) ஜெமினி மேம்பாலக் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் விற்பனை வரி உட்பட ரூ. 51·75-ம் செலுத்தி 16—11—1971 முதல் 23—11—1971 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை), ஜெமினி மேம்பாலம், சென்னை-25 அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின்கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணித் துறை), ஜெமினி மேம்பாலம் பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

மாற்றிய வடிவமைப்புத் தாங்கிய ஒப்பந்தங்கள் பரி சீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

முன்வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான 'ரிசர்வ் வங்கி 'யின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்பவேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந் தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

கு. சிவானந்தம்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 73)

---

## வீட்டு வசதி வாரியம்,

## சென்னைக் கிழக்குக் கோட்டம்.

குறிப்பாணை எண்-எம்.இ.4/910/71, நாள் 21—10—71.

வடசென்னை புறநகர்த் திட்டத்தில் புதை சாக்கடை வேலை களுக்கு வியாசர்பாடியில் உள்ள செக்ஷன் ஸ்டோர்வில் வழங்குவதற்காக உறையின் மீது வேலையின் பெயரும், ஒப் பந்தப் புள்ளிதாரர் பெயரும் எழுதப்பட்டு, மூடி முத்திரை யிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், கீழே கையொப்பமிட்டவரால் 29—11—1971 மாலை 3 மணிவரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3·05 மணிக்கு ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

1. 18" C. I. manhole frame and cover (2 CWT.) 519 Nos.
2. 24" C.I. manhole frame and cover (4 CWT.) 10 Nos.
3. 20' Long 6" C.I. pipe with suitable base and C.I. Cowl 75 Nos.
4. Tarred Yarn 14 to 15 ply 4,800 Kgs.
5. Lead Wool 1,900 Nos.
6. C.I. Steps 1,580 Nos.

இந்த வேலையின் மதிப்பு சுமார் ரூ. 1,25,000.
கட்டுத் தொகை ரூ. 1,875.

மேற்கொண்டு விவரங்களையும் ஒப்பந்தப்புள்ளி விவரங் களையும் பெற, ரூ. 10-ம் அத்துடன் விற்பனை வரியையும் இந்த அலுவலகத்தில் 8—11—1971-லிருந்து அலுவல் நாட் களில் காலை 11 மணியிலிருந்து பிற்பகல் 2 மணிவரை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

டி. ஜகதீசன்,
நிர்வாகப் பொறியாளர் (கிழக்கு).

(த. 8)

## பொதுப்பணித்துறை

தமிழ்நாடு அரசு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் தனி மேற்பார்வைப் பொறியாளர், காவிரி வளர்ச்சிப் பணி வட்டம், தஞ்சாவூர் அவர்களால் 16—12—1971 மாலை 4·00 மணி வரை கீழே குறிக்கப்பட்டுள்ள வேலைகளுக்குப் பெற்றுக் கொள்ளப்படும்.

1. வேலையின் பெயர் ... ... அரசலாற்றிலிருந்து பிரியும் ஏ.28 கூத்தானூர் கால்வாயைப் புதுப்பித்தல்.
2. வேலைகளுக்கான பிணைப்பணத் தொகை. ரூ. 240.
3. ஒப்பந்தவகை ... ... கே.2.
4. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை. ரூ. 5.
5. விற்பனை வரி ... ... ... 20 காசுகள்.
6. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும் தேதி. 2—12—1971 முதல்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையை அரசினர் கருவூலத்தில் பி.டபிள்யூ. 3 ஓ.ஆர். என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், கால்வாய் புதுப்பிக்கும் கோட்டம், தஞ்சாவூர், கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரியை அரசினர் கருவூலத்தில் XII Sales Tax b. receipt under sales tax Act-General Sales tax" என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

மற்ற விதிமுறைகள் விரிவான ஒப்பந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

**அ. சேஷாத்திரி,**

தனி மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை,
காவிரி வளர்ச்சிப் பணிகள் வட்டம்,
தஞ்சாவூர்.

(த. 74)

மாநிலத்திலுள்ள அரசினர் மருத்துவ மனைகளுக்கு 1972—73ஆம் ஆண்டுக்குத் தேவைப்படும் எக்ஸ்ரே டெவலப்பர்கள், பிக்சர்கள், அப்சார்பெண்ட் காட்டன் உல் ஆகியவைகளை வழங்குதல்.

மாநிலத்தில், மருத்துவக் கல்வி இயக்குநரின் கீழ் உள்ள அரசாங்க மருத்துவ மனைகளில் 1972 ஏப்ரல் 1-லிருந்து அல்லது அதற்குப் பிற்பட்ட தேதியிலிருந்து 1973 மார்ச் 31 வரை உள்ள காலத்துக்கு எக்ஸ்ரே டெவலப்பர்கள், பிக்சர்கள், அப்சார்பென்ட் காட்டன் வுல் ஆகியவைகளை வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தலைமைக் கணக்கு அலுவலக மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகம் அவர்களால், தமிழ்நாடு ஆளுநர் சார்பில் 1972 ஜனவரி 11, செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்கள், நிபந்தனைகள், இதர விவரங்களை மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகம், சென்னை-5-க்கு 25-12-71 தேதியிலிருந்து மனுச் செய்து பெறலாம். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை ரூ. 10. இத்துடன் மூன்றரை சத விகித விற்பனை வரி செலுத்த வேண்டும். பத்திரத்துக்கான தொகை, இந்திய ரிசர்வ் பாங்க் கிளைகளிலோ, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா கிளைகளிலோ அல்லது அரசு கருவூலத்திலோ "XXIII. Medical II. Director of Medical Education—Miscellaneous" என்ற தலைப்பில் செலுத்த வேண்டும். விற்பனை வரியை "State Sales Tax Act—General Sales Tax" என்ற கணக்கில் செலுத்த வேண்டும். இந்திய ரிசர்வ் பாங்கில் செலுத்தினால், அசல் சலான்களைக் கொடுக்க வேண்டும். கருவூலங்களில் செலுத்தினால், சலானின் எண், தேதி, கட்டப்பட்ட தொகை, ஒப்பந்தப் புள்ளிதாரரின் பெயர், தொகை செலுத்தப்பட்ட பாங்க் அல்லது கருவூலத்தின் பெயர் முதலியன, ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தைக் கோரும் மனுவில் தெரிவிக்கப்பட வேண்டும். ஒப்பந்தப் பத்திரங்கள் விலை, எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

1971 அக்டோபர் 1-ந் தேதிக்குப் பிற்பட்ட சால்வன்சி நேஷுனலிட்டி சான்றிதழ், தாசில்தார் கையொப்பத்துடனும் ஒப்பந்த மதிப்பு ரூ. 10,000-ஐ மீறுவதானால் வருமான வரி வெரிபிகேஷன் சான்றும், ஒப்பந்த மதிப்பு ரூ.1,000-ஐ மீறுவதானால் விற்பனை வரி கிளீயரன்ஸ் சான்றும், அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரால் கையொப்பமிடப்பட்ட சரியான நகல்கள், ஒப்பந்தப் புள்ளியுடன் அனுப்பப்பட வேண்டும்.

**ஆர். பசுபதி,**

தலைமைக் கணக்கு அலுவலர்,
மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகம்.

சென்னை-5.
31-10-1971.

(த. 68)

## குடிநீர், வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் நகராட்சிப் பணிகள் துறை. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப்பணித் துறை அல்லது இது போன்ற இதர அரசுத் துறைகளில் பதிவு செய்து கொண்டுள்ள உரிய பிரிவு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து தலைமைப் பொறியாளர் (ம.ந.வா.பொ.) அவர்களால் சேப்பாக்கம், சென்னை-5 என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 1—12—1971 மாலை 3-00 மணி வரை, துறைக்குரிய சரியான படிவத்தில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. அவை அதே நாள் மாலை 3-30 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் தலைமைப் பொறியாளராலோ (ம. ந. வா. பொ.) அல்லது அவரால் நியமிக்கப்பட்ட அலுவலராலோ திறக்கப்படும்.

வேலையின் பெயர்—தூத்துக்குடி தொழில் மையத்துக்கான நீர் வழங்கு திட்டம், தண்ணீர் சம்பந்தப்பட்ட 95 எம்.எல்.டி. திறன் எல்லா இயந்திரக் கருவிகள் வழங்கல் டெலிவரி, நிர்மாணம் குளோரினேஷனுக்கு முற்பட்ட, பிற்பட்ட அமைப்புகள் முழுதும்.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—ரூ. 40,000 (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்).

இந்தத் தொகையைக் கருவூலச் சலான் வடிவிலோ அல்லது டிமாண்ட் டிராப்டாகவோ அல்லது நாட்டுடைமையாக்கப்பட்ட ஏதேனும் ஒரு வங்கியின் காரண்டியாகவோ, நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், சென்னை-4 அவர்கள் கணக்கில் செலுத்தி, அதை ஒப்பந்தப் புள்ளியுடன் சேர்ப்பிக்க வேண்டும். கட்டுத் தொகை இல்லாமல் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

வேலையை முடிக்க வேண்டிய காலம்—15 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை—ரூ. 20·60 (விற்பனை வரி உள்பட இது திருப்பித் தரப்படமாட்டாது).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை, நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம் எட்வர்டு, எலியட்ஸ் சாலை, சென்னை அவர்கள் அலுவலகத்திலிருந்து 6—11—1971 முதல் 30—11—1971 வரை பெற்றுக் கொள்ளலாம்.

**எம். மியாகான்,**
தலைமைப் பொறியாளர்,
மக்கள் நல்வாழ்வுப் பொறியியல்,
மற்றும் நகராட்சிப் பணிகள்.

சென்னை-5,
1—11—1971.

(கு. 85)

## பொதுப்பணித் துறை

கீழே குறிப்பிட்டுள்ள வேலையைமேற்கொள்வதற்காகதமிழ்நாடு ஆளுநர் சார்பில்மேற்பார்வைப் பொறியாளர்,பொதுப்பணித் துறை, கோயம்புத்தூர், நீலகிரி சர்க்கிள் அவர்களால் கோயம்புத்தூரில் உள்ள அவரது அலுவலகத்தில் 30—11—1971 மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

வேலையின் பெயர்—கோயம்புத்தூரில் உள்ள கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் ஜிம்னுசியம் மற்றும் விளையாட்டுத் திடல் ஓட்டத்திடல்கள் அமைத்தல்.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—ரூ. 4,000

வரைபடத்துடன் ஒப்பந்தப் பத்திரங்கள் விலை—ரூ. 10·35.

வேலையை முடிக்க வேண்டிய காலம்—6 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை மேலாளர், நிர்வாகப் பொறியாளர், அலுவலகம், கட்டடக் கோட்டம்,கோயமுத்தூர் என்ற முகவரியில் எழுத்து மூலம் கேட்டும் மேலே குறிப்பிட்டுள்ள கட்டணத்தைத் தந்தும் (அது திருப்பித்தரப்படமாட்டாது) 18—11—1971 முதல் அலுவல் நாட்களில் அலுவல் நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**எம். எஸ். கோபாலகிருஷ்ணன்,**
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
கோயம்புத்தூர்—நீலகிரி வட்டம்,
கோயம்புத்தூர்-1.

(த.84)

எலெக்ட்ரானிக்ஸ் மற்றும் நுண் கருவித் தொழில்கள் அமைப்பதற்காக அடையாறு எலக்ட்ரானிக்ஸ் மற்றும் நுண் கருவிகள் ஃபங்ஷனல் தொழில் பேட்டையில் வசதியான, தவணை—கொள்முதல் திட்டத்தில், குறிப்பிட்ட வடிவமைப்புத் தரப்பட்ட தொழிற்சாலைக் கொட்டகைகள் உள்ளன.

இந்தத் தொழில் பேட்டை, விஞ்ஞானத் தொழில் ஆராய்ச்சி மையக் கவுன்சில், இந்தியத் தொழில் நுட்ப நிறுவனம், மற்றும் இதர உயர்தரத் தொழில் நுட்ப நிறுவனங்களுக்கு மிக அருகாமையில் உள்ளது.

மேற்கொண்டு விவரங்களுக்கு அணுகுக :
தொழில் வணிக (வணிக) துணை இயக்குநர்,
சேப்பாக்கம், சென்னை-5,
தொலைபேசி : 84314—13

(த. 71)

## வேலை வாய்ப்பு

### கல்லூரிக் கல்வித் துறை.

அரசு கலைக் கல்லூரிகளில் தற்காலிகமாக நியமனங்கள் : உதவிப் பேராசிரியர்கள், ட்யூடர்கள், டெமான்ஸ்ட்ரேட்டர்கள் ஆகிய வேலைகளுக்காக.

தமிழ்நாடு சபார்டினேட் பணியில் கீழ்க்கண்ட பாடங்களில் உதவிப் பேராசிரியர்கள், ட்யூடர்கள், டெமான்ஸ்ட்ரேடர்கள் வேலைக்கு தற்காலிகமாக நியமனங்களுக்காக மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

பாடங்கள் :

| | | |
|---|---|---|
| 1. பௌதிகம் | .. | (தகுதி—பெண்கள் கல்லூரிகளுக்கு எம்.எஸ்.ஸி, பௌதிகம் அல்லது பி.எஸ்.சி. பௌதிகம் முதல் அல்லது இரண்டாம் வகுப்பு. ஆண்கள் கல்லூரிகள் எம்.எஸ்சி., பௌதிகம்.) |
| 2. இரசாயனம் | .. | (தகுதி—ஆண்கள் கல்லூரிகள் எம். எஸ்சி., இரசாயனம். பெண்கள் கல்லூரிகள் எம்.எஸ்.சி., இரசாயனம் அல்லது பி.எஸ்சி., முதல் அல்லது இரண்டாம் வகுப்பு). |
| 3. வரலாறு .. | .. | எம்.ஏ. |
| 4. பூகோளம் | .. | எம்.ஏ. அல்லது எம்.எஸ்சி. |
| 5. உயிரியல் .. | .. | எம்.எஸ்சி. |
| 6. ஆங்கில இலக்கியம் | | எம்.ஏ. |
| 7. வணிக இயல் | .. | எம்.காம். |
| 8. தமிழ் இலக்கியம் | | எம்.ஏ. |
| 9. தாவர இயல் | | எம்.எஸ்சி. |
| 10. கணிதம் .. | .. | எம்.எஸ்சி. |
| 11. மலையாள இலக்கியம் | | எம்.ஏ. |
| 12. புவியியல் | .. | எம்.எஸ்சி. |
| 13. சம்ஸ்கிருதம் | .. | எம்.ஏ. |

இந்த வேலைகளுக்குரிய மனுதாரர்கள் சிறப்புக்குழு அமைப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். கல்லூரிக் கல்வித் துறை இயக்குநர், அலுவலகம், சென்னை-6-ல் மனுக்களைப் பெற்றுக் கொள்ள இறுதி நாள் 22—11—1971

மனுதாரர்கள் தங்கள் மனுக்களில் பெயர், வயது, தகுதி கிரேடுகள், விண்ணப்பித்துள்ள வேலைகள் குறித்துச் சரியான தகவல்கள் குறிப்பிட வேண்டும்.

சான்றிதழின் நகல்கள் மட்டுமே இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

இயக்குநர்,
கல்லூரிக் கல்வித்துறை.

கல்லூரிக் கல்வித் துறை,
இயக்குநர், அலுவலகம்,
(த.93) சென்னை-6.

---

## ஒப்பந்தப் புள்ளி

### திண்டுக்கல் நகராட்சி

கீழ்க்கண்ட வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகராட்சி ஆணையரால் அல்லது அவருடைய அங்கீகாரம் பெற்றவரால் 30—11—1971-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். வந்த ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகளின் விவரங்களடங்கிய அறிக்கைகளை நகராட்சிப் பொறியர் அலுவலகத்திலிருந்து அலுவலக நேரத்தில் நேரிலாவது தபால் மூலமாவது அதற்குரிய கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் பத்திரங்களுக்கு மனு 26—11—1971 தேதிக்கு முன் கொடுக்கப்பட வேண்டும்.

| வரிசை எண்ணும், வேலையின் விவரமும். | மதிப்புப் பட்டியல் தொகை. | கட்டுத் தொகை. | முடிக்கும் காலம். |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | |
| 1. திண்டுக்கல் நகரத்தில் குறிப்பிட்ட இடங்களில் 3 கல்தளம் பாவி தார்த்தளம் போடும் வேலை. | 33,200 | 830 | ஆறு மாதம். |
| 2. திண்டுக்கல் நகராட்சியில் குறிப்பிட்டுள்ள இடங்களில் தார்த்தளம் புதுப்பிக்கும் வேலை. | 31,390 | 785 | ஷை. |
| 3. திண்டுக்கல் நகராட்சியில் குறிப்பிட்டுள்ள இடங்களில் 3'' கல் தளம் புதுப்பித்துத் தார்த்தளம் போடும் வேலை. | 28,780 | 720 | ஷை. |

(த. 99) ஆணையர்.

ஒப்பந்தப் புள்ளி

கடித எண் 244—த.வ.—71,

தேதி : 4—11—1971

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்றும் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க் கண்ட பணிகளுக்காக உறையின் மீது வேலையின் பெயர், ஒப்பந்ததாரரின் பெயர் எழுதப் பெற் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து நிர்வாகப் பொறியாளர், குடிசைப் பகுதி மாற்று வாரியம், கோட்டம் எண் 1 35—37, ஜகாங்கீர் தெரு, இரண்டாவது கடற்கரைச் சாலை, சென்னை-1. அவர்களால் 2—12—1971 மாலை 3-மணி வரை வரவேற்கப்படுகின்றது. ஒப்பந்தப் புள்ளிகள் அடியில் கையெழுத் திட்டவரால் அன்றே மாலை 3-05 மணிக்கு அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் பிரிக்கப்படும்.

| | வேலையின் பெயர். | ஒப்பந்த விவரம். | வேலையின் தோராய மதிப்பீடு. | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் பத் திரங்களின் விலை (திருப்பித் தரப்படமாட் டாது.) |
|---|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. | ரூ. |
| 1 | தண்டையார்பேட்டை வ.உ.சி. நகரில் 2·73 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல் நீர் நிலைத் தேக்கம், 21 மீட்டர் உயர கீழ் நீர் அடிமட்டத்திற்குக் கட்டுதல். | முழுத் தொகை. | 1,48,000 | 2,220 | ரூ. 15-ம் விற்பனை வரியும். |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிர்வாகப் பொறியாளர், குடிசைப்பகுதி மாற்று வாரியம், கோட்டம் எண் 1, 35—37, ஜகாங்கீர் தெரு, இரண்டாவது கடற்கரைச் சாலை, சென்னை-1, அலுவலகத்திலிருந்து 19—11—1971 முதல் 1—12—1971 வரை எல்லா அலுவலக நாட்களி லும் காலை 11-மணியிலிருந்து மாலை 3 மணி வரை, விற்பனை வரியுடன் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்திற்குப் பணம் கட்டிய செலானைத் தந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்திற்கான விலையினை சென்னை, சைதாப்பேட்டை ஸ்டேட் பாங்கில் Personal Deposit Account (P. D. Account) of the Executive Engineer, Slum Clearance Board, Division No. 1 என்ற தலைப்பில் கட்டப்பட வேண்டும். விற்பனை வரி XII–Sales Tax B receipt under Sales Tax Act" என்ற தலைப்பில் கட்டப்பட வேண்டும்.

ஏதாவது ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ, அல்லது எல்லாவற்றையுமோ, எந்த விதக் காரண மும் காட்டாமல் தள்ளிவிடும் உரிமை உண்டு.

**எம். ஆத்மநாதன்,**

நிர்வாகப் பொறியாளர், கோட்டம்-1
குடிசைப் பகுதி மாற்று வாரியம்.

(த. 69)

## ஒப்பந்தப் புள்ளி

### தொழில் வணிகத் துறை

வேலையின் பெயர்—தூத்துக்குடியில் உப்புக்கடல் ரசாயனங்கள் ஆராய்ச்சிநிலையத்திற்கு முக்கியக் கட்டடமும் பணிமனையும் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற்கூறப்பட்ட வேலையை மேற்கொள்வதற்காக தொழில்துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர் கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத்துறை அவர்களால் 14—12—1971 அன்று மாலை 3·00 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதேநாள் மாலை 3·10 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில்துறை 35/2, உட்ஸ்ரோடு, சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1. ஒப்பந்த வடிவம் | .. .. | மொத்தத் தொகை. |
| 2. கட்டுத் தொகை | .. .. | ரூ. 4,800. |
| 3. மாதிரி வரை படத்துடன் ஒப்பந்தப் புள்ளிப்பத்திரங்களின் விலையும், ஒப்பந்தப்புள்ளிப்பத்திரங்களின் விலைக்குரிய விற்பனை வரியும் சேர்த்து. | | ரூ. 10·40. |
| 4. வேலையை முடிக்க வேண்டிய காலம். | | 8 மாதங்கள். |

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) அலுவலகம், தெற்கு டிவிஷன், மதுரை தொழில்பேட்டை, மதுரையில் 24—11—1971 முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற்பனை வரி உட்பட்ட தொகையான ரூபாய் 10·40-ஐ (எக்கரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது) அரசு கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ XXIX Industries other receipts என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) தெற்குக் கோட்டம் மதுரை தொழில்பேட்டை, மதுரை அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத்தொகை சலான் வடிவிலோ, 'கால் டிபாசிட்' ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும்.

நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), தெற்குக்கோட்டம் மதுரை அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்ட் வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசு கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின் வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்து கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும்.

தேசிய சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளி அளிக்க விரும்புகின்றவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**சி. பி. மாத்யூ,**

சென்னை-2. மேற்பார்வைப் பொறியாளர்,
கட்டுமானப்பகுதி.

(த. 78)

## ஒப்பந்தப் புள்ளி

### சின்கோனாத் துறை

ஆனைமலை அரசினர் சின்கோனா தோட்டம், ஆனைமலை அரசினர் கொய்னா தொழிற்சாலை ஆகியவைகளில் தொழிலாளர், பணியாளர்கள் குடியிருப்புகள் கட்டுவதற்காக, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்கு கடைசித் தேதி 30-11-1971 மாலை 3-00 மணி வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப் புள்ளிகள் மேலொப்பமிட்டவராலோ அல்லது அவரது அரசிதழ் பதிவு உதவியாளராலோ அதே நாள் மாலை 3-30 மணிக்குப் பிரிக்கப்படும்.

**இயக்குநர்,**

சின்கோனாத் துறை.

(த. 100)

ஒப்பந்தப் புள்ளி

## நெடுஞ்சாலை இராமப் பணித் துறை

### பாம்பன் வட்டம்

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்காக, தமிழ்நாடு ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலைகள், பாம்பன் வட்டம்) அவர்களால், எண் 4, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை-15-ல் அவரது அலுவலகத்தில், மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 24-11-1971 மாலை 3 மணி வரை பெற்றுக்கொள்வார்.

| தொடர் எண்ணும், வேலையின் விவரமும். | கட்டுத் தொகை. ரூ. | ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் இடம். |
|---|---|---|
| 1. சென்னை கல்கத்தா சாலை தே. நெ. 5 (மைல் 24/8) கி.மீ.39.10-ல் சிறு பாலம் கட்டுதல், நுழை வழிகள் அமைப்பது உட்பட. | 2,250 | கோட்டப் பொறியாளர் (நெ.கி.பொ. ப.து. ஜெமினி ஃபிளைஓவர் பாலக் கோட்டம். |
| 2. சென்னை கல்கத்தா சாலை தே.நெ. 5 (மைல் 25/1) கி.மீ. 40.2-ல் சிறு பாலம் கட்டுதல். நுழை வழிகள் அமைப்பது உட்பட. | 3,400 | ஷை. |

ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் 24-11-1971 மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர், பாம்பன் பாலம் வட்டம், சைதாப்பேட்டை, அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்த நிபந்தனைகள், பத்திரங்கள், வரை படங்கள், முதலியவைகளைக் கோட்டப் பொறியாளர் அலுவலகம், (நெ. கி.பொ. ப.), ஜெமினி ஃபிளை ஓவர் பாலக் கோட்டம், சென்னை-25-ல் ஒவ்வொரு வேலைக்கும் தனித்து எழுதியும், விற்பனை வரி உட்பட ரூ. 25.90 கட்டியும், 16-11-1971 லிருந்து 23-11-1971 முடிய எல்லா அலுவல் நாட்களிலும் அலுவல் நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு வேலைக்கும் ஒப்பந்தப் பத்திரங்கள் விலை ரூ. 25·90 (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது).

மேலே சொல்லப்பட்டுள்ள கட்டுத் தொகையை, கோட்டப் பொறியாளர், (தேசிய நெடுஞ்சாலைகள்) ஜெமினி ஃபிளை ஓவர்பாலக் கோட்டம் அவர்களின் அலுவல் வரம்புக்குட்பட்ட பகுதிகளில் ஏதாவது ஒரு அரசுக் கருவூலத்தில் " ரெவின்யூ டிபாசிட் " என்ற தலைப்பில் கோட்டப் பொறியாளர், (நெடுஞ்சாலைகள்), தேசீய நெடுஞ்சாலைகள், ஜெமினி ஃபிளை ஓவர் பாலக் கோட்டம் அவர்கள் கணக்கில் கட்டி, சலானை ஒவ்வொரு வேலைக்கும் உரிய ஒப்பந்தப் புள்ளியுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். கட்டுத் தொகையானது, ஷெட்யூல் பாங்கிடமிருந்து பெற்ற பாங்க் உத்தரவாதத்துடன் தரப்படுமானால், அந்த உத்தரவாதம், ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் ஒப்புதலுடன் வர வேண்டும்.

உரிய கட்டுத் தொகை இல்லாமல் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் கவனிக்கப்பட மாட்டா.

துறை குறிப்பிட்டதற்கு மாறுபடாது உள்ள டிசைன்களின் அடிப்படையில் உள்ள ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கப்படமாட்டா.

ஜி. சிவானந்தம்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(கு.81)

---

## பொதுப்பணித் துறை

மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப் பணித்துறை தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 9-12-1971 மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| 1. வேலையின் பெயர் .. | தஞ்சை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், நாகரெத்தினம் பள்ள கிராமத்தருகில் வெள்ளாற்றின் வலது பிரிவின் குறுக்கே வண்டிப் பாலம் கட்டுதல். | |
| 2. ஒப்பந்த வகை ... | கே. 2. | |
| 3, பிணைப்புப் பணம் (செலுத் துச் சீட்டு மூலம் பெற்றுக் கொள்ளப்படும்). | ரூ. 2,400 (ரூபாய் இரண்டாயிரத்து நானூறு மட்டும்). | |
| 4. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை, அரசினர் கருவூலத்தில் பொ.ப. செலுத்துத் தொகை III மற்றைய செலுத்துத் தொகைஎனும் தலைப்பில் செயற் பொறியாளர், பட்டுக் கோட்டைக் கோட்டம், பட்டுக் கோட்டை அவர்கள் கணக்கில் செலுத்துதல் வேண்டும். | | ரூ. 10 (ரூபாய் பத்து மட்டும்) |
| 5. விற்பனை வரி .. அரசினர் கருவூலத்தில் XII விற்பனை வரி 'பி' பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ்ப் பொது விற்பனை வரி எனும் தலைப்பில் செலுத்துதல் வேண்டும். | | 0·35 காசு. |
| 6. ஒப்பந்த விவர அட்டவணை கிடைக்க ஆரம்பிக்கும் நாள். | | 20-11-1971. |

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(கு. 102)

## குடிநீர், வடிகால் வாரியம்

எண்: 16480/எஸ்.டி.2/71 நாள் 27—10—1971.

தமிழ்நாடு குடிநீர் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம், கோயம்புத்தூர் அவர்களால் 25-1, மூன்றாவது தெரு, டாட்டாபாத், கோயம்புத்தூர்-12 என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 29—11—1971 அன்று மாலை, 3·00 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 4·00 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஏதேனும் ஒரு அலுவலர் அவர்களால் திறக்கப்படும்.

வேலையின் பெயர்—ஈரோடு மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம் பல்வேறு வேலைகளுக்காக :

Piglead of 99.8./· purity confirming to I.S.S. 27/65 and 782/66 and as amended upto date.

பொருட்கள் வழங்குதல் டெலிவரி.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—ரூபாய் 5,000 (ரூபாய் ஐயாயிரம் மட்டும்).

வழங்குதல் முழுவதையும் முடிக்க வேண்டிய காலம்—இரண்டு மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூபாய் 5·18(விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நிர்வாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், 18, சாமியப்ப கவுண்டர் தெரு, திருநகர் காலனி. ஈரோடு-3, அவர்கள் அலுவலகத்தில் ரொக்கமாகவோ, மணியார்டர் மூலமாகவோ கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கட்டுத்தொகை, நாட்டுடமையாக்கப்பட்ட ஏதேனும் ஒரு வங்கியிலிருந்து பெறப்பட்ட 'டிமாண்ட் டிராப்ட்டு' வடிவிலோ அல்லது பாங்க் உத்தரவாத வகையிலோ நிர்வாகப் பொறியாளர், ஈரோடு—3, அவர்கள் கணக்கில் ஏற்கப்படும். பி.டபிள்யூ.-3 ஓ.ஆர். என்ற கணக்குத் தலைப்பில் நிர்வாகப் பொறியாளர் (ப.ந.பொ.டி.) ஈரோடு-3, கணக்கில கருவூலச் சலான் வடிவிலும் கட்டுத் தொகை ஏற்கப்படும். கட்டுத்தொகை செலுத்தாமல் வரப்பெறும் ஒப்பந்தப் புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும்.

எவ்விதக் காரணமும் கூறாமல், எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் நிராகரித்துவிட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களுக்கு உரிமை உண்டு.

மேற்பார்வைப் பொறியாளர்.

(த.42)

## ஸ்ரீ கலியுக வரதராஜப் பெருமாள் கோயில், கல்லங்குறிச்சி

மேற்படி கோயில் ஆதீன பரம்பரை தருமகர்த்தா அவர்களால் கீழ்க்காணும் வேலையைச் செய்ய 23—11—1971ஆம் தேதி மாலை 4 மணிவரை முத்திரையிட்ட ஷெட்யூல்டு ஒப்பந்தப் புள்ளிகள் பொதுப்பணித்துறை,ஹைவேஸ் மற்றும் இதர இலாக்காக்களில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழே குறிப்பிட்டுள்ள கட்டுத்தொகையுடன் கோரப்படுகிறது.

| வேலையின் விவரம். | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் பத்திரத்தின் விலை. | வேலையை முடிக்க வேண்டிய காலம். |
| --- | --- | --- | --- |
| கல்லங்குறிச்சி ஸ்ரீ கலியுக வரதராஜப் பெருமாள் கோயிலின் வடபுறம் 3 சேவார்த்திகள் குவார்ட்டர்ஸ் கட்டுதல். | (2½·/·) ரூ. 900 | ரூ. 10-ம் தமிழக அரசின் விற்பனை வரியும் 3½·/. | ஆறு மாதங்கள். |

மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் 23—11—1971-ஆம் தேதியன்று மாலை 4-15க்கு திறக்கப்படும்.

ஒப்பந்தப் படிவம் முழுத்தொகை.

ஒப்பந்த ஷெட்டியூல்டு பாரம், ஒப்பந்த விதிகள் முதலியன 12—11—1971-ஆம் தேதி முதல் 22—11—1971-ஆம் தேதி வரை கோயில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கு ரூ. 10 (பத்து) மட்டும் அதற்குண்டான விற்பனைவரி 3½ சத வீதத்துடன் (திருப்பிக் கொடுக்க முடியாது) எழுத்து மூலமாக விண்ணப்பித்து ஒப்பந்தப் பாரம் வாங்கிக் கொள்ளவேண்டும். ஷை கட்டடத்தின் வரைபடத்தை மேற்கண்ட நாட்களில் அலுவலக நேரங்களில் பார்த்துக் கொள்ளலாம்.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகையைக் கோயில் அலுவலக நேரத்தில் ரொக்கமாகக் கட்டி ரசீதை ஒப்பந்தத்துடன் சேர்த்து அனுப்ப வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகைக்கான ரசீதை இணைக்காமல் அனுப்பும் ஒப்பந்தங்கள் ஏற்கப்படமாட்டாது. ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வது ஆதீனப் பரம்பரை தருமகர்த்தா அவர்களின் முடிவைப் பொறுத்தது.

கல்லங்குறிச்சி,
3—11—1971.

கோ. கோவிந்தசாமி படையாட்சி,
ஆதீன பரம்பரை தருமகர்த்தா.

(த. 75)

## ஒப்பந்தப் புள்ளி

### வீட்டுவசதி வாரியம்

### கிழக்குக் கோட்டம்

பார்வை எண்—எம்: இ. 7/1025/71.

கீழ்க்கண்ட வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், உறையின் மீது வேலையின் பெயரும், ஒப்பந்தப் புள்ளிதாரரர் பெயரும் குறிப்பிடப்பட்டு 13—12—1971 மாலை 3-00 மணிக்குள் கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3-05 மணிக்கு, அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| வரிசை எண், வேலையின் பெயர். | வேலையின் சுமார் மதிப்பு. ரூ. | கட்டுத் தொகை. ரூ. | ஒப்பந்த வடிவம். | ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை. |
|---|---|---|---|---|
| 1 லாயிடு எஸ்டேட்டில் ஒவ்வொன்றும் நான்கு அடுக்குகள் கொண்ட (1-ல் 8) flats பிளாக்குகள் இரண்டும் (1-ல் 16) பிளாக்குகள் இரண்டும், (1-ல் 24) பிளாக்கு ஒன்றும் கட்டுதல். | 5,68,000 | 8,525 | மொ. தொகை | ரூ. 20 இத்துடன் விற்பனை வரி. (திருப்பித் தரப்பட மாட்டாது.) |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மற்றும் இதர விவரங்களை நிர்வாகப் பொறியாளர் அலுவலகம், கிழக்குக் கோட்டம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை-35-ல் 22—11—1971 லிருந்து எல்லா அலுவல் நாட்களிலும் காலை 11 மணி முதல் மாலை 2 மணி வரை ரொக்கம் கொடுத்துப் பெறலாம்.

86, அண்ணா சாலை,
சென்னை-35.
(த. 79)

டி. ஜெகதீசன்,
நிர்வாகப் பொறியாளர்
(கிழக்கு).

---

## வேலை வாய்ப்பு

### அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

தமிழ்நாடு வனத்துறைப் பணியில், வனத்துறை உதவி கன்சர்வேட்டர் வேலைக்காக எமர்ஜன்சி கமிசண்டு அலுவலர்கள்—குறுகிய சர்வீஸ்—ரெகுலர் கமிசண்டு அலுவலர்கள் இடையே இருந்து எடுத்தல்.

தமிழ்நாடு வனத்துறைப் பணியில் நேரடி நியமன முறையில் வனத்துறை உதவி கன்சர்வேட்டர் ஒரு நியமனத்திற்காக எமர்ஜன்சி கமிசண்டு அலுவலர்கள் குறுகிய சர்வீஸ்—ரெகுலர் கமிசண்டு அலுவலர்கள், ஏற்கனவே விடுவிக்கப்பட்டு வந்தவர்கள் அல்லது 31-3-1972-க்குள் விடுவிக்கப்படுமென எதிர் பார்ப்பவர்களிடையே இருந்து பேச்சலர் பட்டத் தரத்தில் 1971 டிசம்பரில் சென்னையில் எழுத்துத் தேர்வு ஒன்றிலும் பின்னர் வாய்மொழித் தேர்விலும் கலந்து கொள்வதற்காக மனுக்கள் 1971 டிசம்பர் 2-ஆம் தேதி மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

சம்பளம்.—575—25—600—40—1,000 மாதம் ஒன்றுக்கு.

தகுதி.—(கல்வி) பல்கலைக் கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் அல்லது நிறுவனம் ஒன்றிலிருந்து தாவர இயல், விலங்கியல், பௌதிகம், இரசாயனம், கணிதம், புள்ளியல், பூவியல் அல்லது பொருளாதாரம் பாடங்களில் குறைந்த பட்சம் இரண்டாம் வகுப்புப்பட்ட மேற்படிப்பு அல்லது வேளாண்மை, பொறியியல் (மெக்கானிக்கல், சிவில் அல்லது கெமிக்கல்) இரண்டாம் வகுப்புப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். கணிதம், புள்ளியியல், அல்லது பொருளாதாரத்தில் பட்ட மேற்படிப்பு உள்ளவர்கள் என்றால் அவர்கள் புகுமுகத் தேர்வுக்கு (அ) உயிரியல், (ஆ) பௌதிகம், (இ) இரசாயனம், ஆகிய மூன்றில் ஏதாவது ஒன்று எடுத்திருக்க வேண்டும்.

உடலளவு.—(1) உயரம் 163 செ.மீ.க்குக் குறையாமலும்.

(2) மார்புச் சுற்றளவு 79 செ.மீ.க்குக் குறையாமலும்.

(3) மார்பு விரிவு குறைந்த பட்சம் 5 செ.மீ இருக்க வேண்டும்.

...குடியினர், பிற்பட்ட வகுப்பினர்களாயிருப்பின் உச்ச வயது வரம்பு 29 ஆண்டுகள்.

எமர்ஜன்சி கமிசன் அலுவலராக—குறுகிய சர்வீஸ்—ரெகுலர் கமிசண்டு அலுவலராகப் பணியாற்றிய காலம் பயிற்சிக் காலத்துடன் சேர்த்து—வயதைக் கணக்கிடும்பொழுது விலக்கிடப்படும்.

இத்துடன் வயது விசயத்தில் கீழ்க்கண்ட சலுகைகளும் அனுமதிக்கப்படும்.

(அ) செட்யூல்டு வகுப்பு, செட்யூல்டு பழங்குடி, பிற்பட்ட வகுப்பு ஆகியவைகளைச் சாராதவர்கள் விசயத்தில் 1-4-1972-ல் அவர்கள் 40 வயதை மீருத நிலை இருக்குமானல்—5 ஆண்டுகள் வரை.

(ஆ) செட்யூல்டு வகுப்பினர், செட்யூல்டு பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர் விசயத்தில் 1-4-1972-ல் அவர்கள் 45 வயதை மீருதவர்களாயிருப்பின் 10 ஆண்டுகள் வரை.

முழு விவரங்களையும், மனு வடிவத்தையும் பெற, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்கு வேலையின் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி, 50 காசு அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட தங்களது முகவரி உள்ள 23 செ.மீ. நீளமுள்ள உறையில் நூல் அஞ்சல் என எழுதிக் கடிதத்துடன் வைத்து அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். இப்படி உறை இல்லாமல் வரும் கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டா.

(இ. 87)

## பெயர் மாற்றம்

தமிழக அரசின் செய்தி விளம்பரத் துறை 6—11—1971 முதல் "செய்தி—மக்கள் தொடர்புத் துறை" என்னும் பெயர் பெறுகிறது.

**ஒப்பந்தப் புள்ளி**

**எண்ணூர் அனல் மின்திட்டம் (இயக்குதல், பேணுதல் பிரிவு)**

குறிப்பு எண். PT 4/71—72.

தமிழக மின் வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் அதன் உறையில் "தமிழக மின் வாரியம்—எண்ணூர் அனல் மின்திட்டம்—(இயக்குதல், பேணுதல் பிரிவு).

குறிப்பு எண் PT 4/71—72 எனவும், மற்றும் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழ்க் கையொப்பமிட்டவரால் 30—11—1971—மாலை 3·30 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அன்று மாலை 4·00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

தேவையான பொருட்கள்:

| Description | Quantity |
| --- | --- |
| High grade Bunnt lime with not less than 80./· cao content. | 60 Tonnes. |

ஒப்பந்தத்தின் பிரதிகள் ஒவ்வொன்றிற்கும் ரூபாய் 5 (ரூபாய் ஐந்து மட்டும்) கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளவும்.

இந்த வேலைக்கான முன் பணம் ரூபாய் 400 (நானூறு மட்டும்). இந்தத் தொகையை ஒப்பந்தப் பிரதியில் கூறியுள்ளபடி முன் செலுத்த வேண்டும்.

துறையினரைச் சார்ந்த நமூனுக்களில் இல்லாத ஒப்பந்தங்களும், இறுதித்தேதிக்கும் நேரத்திற்கும், பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தங்கள் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ, காரணங் காட்டாது நிராகரிக்கவும், வேலையை ஒப்பந்ததாரர்களிடையே பிரித்துக் கொடுக்கவும் கீழ்க்கையொப்பமிட்டவர் உரிமையுடையவர்.

அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணாமல் போகும் ஒப்பந்தப் பிரதிகளுக்கு மின்சாரவாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பத்திரங்கள் மாற்றத்தக்கவை அல்ல.

**மேற்பார்வைப் பொறியாளர்.**
எண்ணூர் அனல் மின்திட்டம்,
எண்ணூர்,
சென்னை-57.

எண்ணூர்,
சென்னை-57.

தொலைபேசி எண்—59569
தந்தி—Entermal (Operation)

(இ. 76)

ஆசிரியர், வெளியிடுபவர்; செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால் சென்னை அண்ணா சாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-2

117